



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
# ஆற்றிய உரைகள்
## (12.05.2021 முதல் 10.05.2022 வரை)

1 ஆண்டு ஆட்சி

ஓயா உழைப்பின் ஓராண்டு

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள்

(12.05.2021 முதல் 10.05.2022 வரை)

சிறப்பு வெளியீடு எண். 57

# தமிழரசு

இலவச வெளியீடு

மே 2022

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
No.5, இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

# பொருளடக்கம்


| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களைப் பாராட்டி ஆற்றிய உரை – 12.05.2021 | 1 |
| 2. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், ஒன்றிய அரசு நிறைவேற்றியுள்ள மூன்று வேளாண் சட்டங்களையும், குடியுரிமை திருத்தச் சட்டத்தையும் திரும்பப் பெற வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படும் என உறுதியளித்து ஆற்றிய உரை – 22.06.2021 | 8 |
| 3. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், ‘ஒன்றிய அரசு’ என்று அழைப்பது குறித்து பதிலளித்து ஆற்றிய உரை – 23.06.2021 | 10 |
| 4. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 10.5 சதவிகித உள் ஒதுக்கீடு தொடர்பாக திரு.ஜி.கே.மணி அவர்கள் பேசியதற்கு, பதிலளித்து ஆற்றிய உரை – 23.06.2021 | 12 |
| 5. | மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்திற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பதிலளித்து ஆற்றிய உரை – 24.06.2021 | 14 |

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 6. | *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழக சட்டமன்றப் பேரவையின் நூற்றாண்டு விழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திறப்பு விழாவில் ஆற்றிய உரை – 02.08.2021* | *37* |
| 7. | *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், அரசுப் பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்ததையொட்டி ஆற்றிய உரை – 14.08.2021* | *44* |
| 8. | *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், விவசாயக் கடன் மற்றும் நகைக் கடன்கள் குறித்த விவாதத்திற்கு, பதிலளித்து ஆற்றிய உரை – 16.08.2021* | *49* |
| 9. | *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பது குறித்த விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை – 17.08.2021* | *53* |
| 10. | *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், ஒன்றிய அரசு நிறைவேற்றியுள்ள மூன்று வேளாண் சட்டங்களையும், குடியுரிமை திருத்தச் சட்டத்தையும் திரும்பப் பெற வலியுறுத்தி தமிழ்நாடு தீர்மானம் நிறைவேற்றப்படும் என உறுதியளித்து ஆற்றிய உரை – 18.08.2021* | *55* |

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 11. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 'நீட்' விவகாரம் குறித்து சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதற்கு பதிலளித்து ஆற்றிய உரை – 18.08.2021 | 58 |
| 12. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்களது கோரிக்கைக்கு பதிலளித்து ஆற்றிய உரை – 18.08.2021 | 60 |
| 13. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களது 50 ஆண்டு காலச் சட்டமன்றப் பணியினைப் பாராட்டும் வகையில் தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை – 23.08.2021 | 62 |
| 14. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், விதி 110இன்கீழ், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் அமைத்தல் தொடர்பாக ஆற்றிய உரை – 24.08.2021 | 68 |
| 15. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மதுரையில் கலைஞர் நூலகம் அமைப்பது தொடர்பாக மதுரை (மேற்கு) தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.செல்லூர் கே. ராஜூ அவர்கள் பேசியதற்கு, பதிலளித்து ஆற்றிய உரை – 25.08.2021 | 74 |

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|


*16.* *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலைத் தொழிற்கல்விப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம் தொடர்பான சட்ட முன்வடிவினைச் சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தி ஆற்றிய உரை – 26.08.2021.................................75*

*17.* *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன் தொடர்பாக விதி 110இன்கீழ் ஆற்றிய உரை – 27.08.2021..................................79*

*18.* *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்டங்களை இரத்து செய்யக் கோரும் அரசினர் தனித் தீர்மானத்தினை முன்மொழிந்து ஆற்றிய உரை – 28.08.2021....................................86*

*19.* *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாடு ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்டங்களை இரத்து செய்வது தொடர்பான அரசினர் தனித் தீர்மானத்தின்மீது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பேசியபோது, குறுக்கிட்டு பதிலளித்து ஆற்றிய உரை – 28.08.2021..................................................................92*

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|


*20.* *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*வினா–விடை நேரத்தில், தடை செய்யப்பட்ட*
*போதைப் பொருட்கள் விற்பனை தொடர்பாக*
*உறுப்பினர் திரு. ஜி.கே.மணி அவர்கள் எழுப்பிய*
*வினாக்களுக்கு பதிலளித்து ஆற்றிய உரை – 31.08.2021..........95*

*21.* *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*'தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்' என்பது*
*'தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்'*
*எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் என*
*அறிவித்து ஆற்றிய உரை – 01.09.2021. ............................................97*

*22.* *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது*
*திருவுருவச் சிலையை அண்ணா சாலையில்*
*அமைப்பது குறித்து தி.மு.க. சட்டமன்ற*
*உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள்*
*வைத்த கோரிக்கைக்கு, பதிலளித்து*
*ஆற்றிய உரை – 01.09.2021..................................................................99*

*23.* *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*பொதுச் சொத்துக்களைத் தனியார்மயமாக்கும்*
*ஒன்றிய அரசின் நடவடிக்கை தொடர்பான*
*கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் போது,*
*ஆற்றிய உரை – 02.09.2021.................................................................101*

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|


24. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
1987ஆம் ஆண்டு இடஒதுக்கீடு போராட்டத்தில்
காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான
21 சமூகநீதிப் போராளிகளுக்கு ரூபாய் 4 கோடி
மதிப்பீட்டில், விழுப்புரம் மாவட்டத்தில்
மணிமண்டபம் அமைக்கப்படும் என விதி 110இன்கீழ்,
அறிவித்து ஆற்றிய உரை – 02.09.2021 ........ 102

25. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
அயோத்திதாசர் அவர்களின் 175ஆவது ஆண்டு
விழாவின் நினைவாக வடசென்னைப் பகுதியில்
மணிமண்டபம் அமைக்கப்படும் என விதி 110இன்கீழ்
அறிவித்து ஆற்றிய உரை – 03.09.2021 ........ 106

26. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய 150ஆவது
பிறந்த நாள் விழாவினையொட்டி, 14 அறிவிப்புகளை
வெளியிட்டு ஆற்றிய உரை – 03.09.2021 ........ 109

27. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
விதி 110இன்கீழ் தொழில்முனைவோர்
மற்றும் நெசவாளர்களின் நீண்ட நாள்
கோரிக்கையினையேற்று, பஞ்சு,
கழிவு பஞ்சு மீதான ஒரு விழுக்காடு வரி
(சந்தைக் கட்டணம்) இரத்து என அறிவித்து
ஆற்றிய உரை – 04.09.2021 ........ 112

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 28. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், விதி 110இன்கீழ், தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17ஆம் நாளை ஆண்டுதோறும் 'சமூகநீதி நாள்' ஆகக் கொண்டாடுவோம் என அறிவித்து ஆற்றிய உரை – 06.09.2021 | 115 |
| 29. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் தொடர்பாகச் சட்டமன்ற உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு பதிலளித்து ஆற்றிய உரை – 07.09.2021 | 120 |
| 30. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019–ஐ இரத்து செய்யக் கோரும் அரசினர் தனித் தீர்மானத்தினை முன்மொழிந்து ஆற்றிய உரை – 08.09.2021 | 123 |
| 31. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், விதி 110இன்கீழ் 'தமிழ்நாடு ஆதிதிராவிடர்–பழங்குடியினர் நல ஆணையம்' உருவாக்குதல் உள்ளிட்ட அறிவிப்புகளை வெளியிட்டு ஆற்றிய உரை – 08.09.2021 | 128 |
| 32. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், விதி 110இன்கீழ் அகழ்வாராய்ச்சிக்களுக்கான அறிவிப்புகளை வெளியிட்டு ஆற்றிய உரை – 09.09.2021 | 132 |

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|


33. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
சட்டமன்ற உறுப்பினர்கள்
திரு. நயினார் நாகேந்திரன் மற்றும்
திரு. ஜி.கே. மணி ஆகியோரது பேச்சுகளுக்கு
பதிலளித்து ஆற்றிய உரை – 09.09.2021........................................140

34. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்
ஆற்றிய உரையினிடையே
பதிலளித்து ஆற்றிய உரை – 09.09.2021........................................142

35. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 'நீட்' தேர்வுப் பிரச்சினை
தொடர்பாக, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் எழுப்பிய
வினாவிற்கு, பதிலளித்து ஆற்றிய உரை – 13.09.2021...............144

36. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
வாணியம்பாடி பகுதியில் நடைபெற்ற
கொலை சம்பவம் குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித்
தலைவர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்
எழுப்பிய கேள்விக்கு, பதிலளித்து
ஆற்றிய உரை – 13.09.2021..................................................................146

37. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
'நீட்' தேர்வு குறித்த சட்டமுன்வடிவினை
முன்மொழிந்து, ஆற்றிய உரை – 13.09.2021..................................148

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|


38. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
விதி 110இன்கீழ் நகைக் கடன் தள்ளுபடி
தொடர்பாக ஆற்றிய உரை – 13.09.2021........................................154

39. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், காவல்துறை மற்றும்
தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக்
கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு
பதிலளித்து ஆற்றிய உரை – 13.09.2021........................................157

40. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 'நீட்' தேர்வு
தொடர்பான சட்டமுன்வடிவினை ஆய்வுக்கு
எடுத்துக்கொண்டபோது, ஆற்றிய உரை – 13.09.2021...............177

41. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்டங்களை
இரத்து செய்வது தொடர்பான அரசினர் தனித்
தீர்மானத்தின்மீது எதிர்க்கட்சித் துணைத் தலைவர்
திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பேசியபோது,
குறுக்கிட்டு பதிலளித்து ஆற்றிய உரை – 28.09.2021.................180

42. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள், சென்னை
மெட்ரோ இரயில் சேவையை மீனம்பாக்கம் விமான
நிலையத்திலிருந்து, பல்லாவரம் மற்றும் குரோம்பேட்டை
வழியாக வண்டலூர் வரை நீட்டிப்பது தொடர்பாக,
பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர்
திரு. இ. கருணாநிதி அவர்கள் எழுப்பிய கேள்விக்கு,
பதிலளித்து ஆற்றிய உரை – 06.01.2022........................................183

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|


43. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
விதி 110இன்கீழ் 'நீட்' தேர்வு தொடர்பாகவும்,
சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள்
கூட்டம் கூட்டுவது குறித்தும்,
ஆற்றிய உரை – 06.01.2022 ........ 184

44. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
தமிழகத்திலே ஆன்லைன் சூதாட்டத்திற்கு
விரைவிலே முற்றுப்புள்ளி வைக்கப்படும் என
அறிவித்து ஆற்றிய உரை – 06.01.2022 ........ 189

45. மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின்
பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது
நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்,
பதிலளித்து ஆற்றிய உரை – 07.01.2022 ........ 190

46. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நீட் தேர்வு
விலக்கு தொடர்பான சட்டமுன்வடிவின் மீதான
விவாதத்தில் ஆற்றிய உரை – 08.02.2022 ........ 218

47. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாட்டில்
சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கான உரிய
வழிகாட்டுதல்கள் தொடர்பான வினாவிற்கு,
பதிலளித்து ஆற்றிய உரை – 21.03.2022 ........ 240

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 48. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மேகதாது அணை தொடர்பான தீர்மானத்தில், ஆற்றிய உரை – 21.03.2022 | 243 |
| 49. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 'தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிச்சயமாக நிறைவேற்றப்படும்' என பதிலளித்து ஆற்றிய உரை – 22.03.2022 | 245 |
| 50. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தேர்தல் வாக்குறுதிகள் குறித்தும், அரசு நிறைவேற்றி வரும் திட்டங்கள் குறித்தும் விதி 110இன்கீழ் ஆற்றிய உரை – 23.03.2022 | 246 |
| 51. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், நேரமில்லாத நேரத்தில், சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை குறித்த கேள்விக்கு, பதிலளித்து ஆற்றிய உரை – 23.03.2022 | 259 |
| 52. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களது உரையினிடையே, பதிலளித்து ஆற்றிய உரை – 23.03.2022 | 263 |

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 53. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் ஆகியோரின் பதிலுரைக்குப் பின்னர், ஆற்றிய உரை – 24.03.2022 | 266 |
| 54. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், விதி 110இன்கீழ், தொழில் முதலீடுகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து, பதிலளித்து ஆற்றிய உரை – 06.04.2022 | 269 |
| 55. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சொத்து வரி சீராய்வு தொடர்பான கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது ஆற்றிய உரை – 06.04.2022 | 276 |
| 56. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மருத்துவம் மற்றும் தொழிற்கல்வி படிப்பில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீதம் முன்னுரிமை அடிப்படையிலான ஒதுக்கீடு மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாக ஆற்றிய உரை – 07.04.2022 | 279 |
| 57. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், வன்னியர் சமுதாயத்திற்கு 10.5 விழுக்காடு சிறப்பு ஒதுக்கீடு தொடர்பாக ஆற்றிய உரை – 07.04.2022 | 282 |

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|


58. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
மக்கள் நலப் பணியாளர்கள் குறித்த கேள்விக்கு,
பதிலளித்து ஆற்றிய உரை – 08.04.2022........................................285

59. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
இளங்கலைப் படிப்புகளுக்கு–பொது நுழைவுத்
தேர்வு தொடர்பாக தீர்மானத்தை
முன்மொழிந்து ஆற்றிய உரை – 11.04.2022..................................289

60. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், இளங்கலை உள்ளிட்ட
பல்வேறு படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வு
தொடர்பாக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீது
நன்றி தெரிவித்து ஆற்றிய உரை – 11.04.2022............................292

61. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
மாண்புமிகு உறுப்பினர்
திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்
எழுப்பிய பிரச்சினைக்கு, குறுக்கிட்டு
பதிலளித்து ஆற்றிய உரை – 12.04.2022 .......................................293

62. மாண்புமிகு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
விதி 110இன்கீழ் 'அண்ணல் அம்பேத்கர்
பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் தேதி
'சமத்துவ நாள்' என்று கொண்டாடப்படும்'
என அறிவித்து ஆற்றிய உரை – 13.04.2022................................295

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 63. | மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், விதி 110இன்கீழ் ஆளுநர் விவகாரம் தொடர்பாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்து ஆற்றிய உரை – 18.04.2022 | 298 |
| 64. | மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தொழில் துறையில் முதலீடுகள் குறித்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை – 19.04.2022 | 302 |
| 65. | மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெற்ற போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான விவாதம் குறித்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், பதிலளித்து ஆற்றிய உரை – 20.04.2022 | 307 |
| 66. | மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110இன்கீழ் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை தொடர்பான அறிவிப்புகளை வெளியிட்டு ஆற்றிய உரை – 21.04.2022 | 314 |
| 67. | மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 'மாற்றுத்திறனாளிகள் தொடர்பான கோரிக்கைகளை ஆய்வு செய்து, அவற்றைப் படிப்படியாக நிச்சயம் நிறைவேற்றுவோம்' என உறுதியளித்து ஆற்றிய உரை – 21.04.2022 | 319 |

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|


68. மாண்புமிகு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110இன்கீழ்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தொடர்பாக
அளித்த அறிக்கை – 22.04.2022........................................................321

69. மாண்புமிகு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
பல்கலைக்கழகத் துணை வேந்தர்களை மாநில அரசே
நியமிக்கும் வகையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
கொண்டுவரப்பட்ட சட்டமுன்வடிவின்மீது,
ஆற்றிய உரை – 25.04.2022.................................................................328

70. மாண்புமிகு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
'கலைஞர் அவர்கள் பிறந்துதித்த நாளான
ஜூன் 3ஆம் நாள், அரசு விழாவாக இனி
கொண்டாடப்படும்' – 'வரும் ஜூன் 3 அன்று சென்னை
ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில்
கம்பீரக் கலைஞரின் கலைமிகு சிலை நிறுவப்படும்'
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன்கீழ்
அறிவித்து ஆற்றிய உரை – 26.04.2022 ..........................................332

71. மாண்புமிகு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
சென்னையைச் சேர்ந்த விக்னேஷ் என்பவரது மரணம்
குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
கொண்டுவரப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு
பதிலளித்து ஆற்றிய உரை – 26.04.2022.........................................338

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 72. | மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தஞ்சாவூர் மாவட்டம், களிமேடு கிராமத்தில் இன்று அதிகாலை தேர் மின் கம்பியில் உரசியதால் ஏற்பட்ட விபத்து தொடர்பாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை – 27.04.2022 | 342 |
| 73. | மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பெட்ரோல்–டீசல் விலை தொடர்பான விவாதத்தின்போது, ஆற்றிய உரை – 28.04.2022 | 345 |
| 74. | மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், இலங்கையில் கடும் இன்னலுக்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து, ஆற்றிய உரை – 29.04.2022 | 349 |
| 75. | மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், இலங்கையில் கடும் இன்னலுக்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தின்மீது அனைத்துக் கட்சித் தலைவர்களும் பேசி முடித்ததற்குப் பின்னர், ஆற்றிய உரை – 29.04.2022 | 355 |

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|


76. *மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*நீட் விலக்கு தொடர்பான சட்டமுன்வடிவினை மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்கு ஏதுவாக, ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக, மாண்புமிகு ஆளுநர் அலுவலகத்திலிருந்து செய்தி வரப்பெற்றது எனத் தெரிவித்து ஆற்றிய உரை – 04.05.2022*............................................................*357*

77. *மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சென்னையைச் சேர்ந்த விக்னேஷ் மரணம் மற்றும் ஈரோடு, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற குற்றச் சம்பவங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் பேசியதற்கு, பதிலளித்து ஆற்றிய உரை – 06.05.2022*......................................*359*

78. *மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெறுவதையொட்டி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன்கீழ் அறிவித்து ஆற்றிய உரை – 07.05.2022*........................................*363*

79. *மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் அறிவியல்வழி ஆய்வுகளில் கிடைத்த முடிவுகள் தொடர்பாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன்கீழ் அறிவித்து ஆற்றிய உரை – 09.05.2022*..............................................................*391*

| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| *80.* | *மாண்புமிகு முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், கோவிந்தசாமி நகர், இளங்கோ தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவது தொடர்பான விவாதத்தின்போது, பதிலளித்து ஆற்றிய உரை – 09.05.2022* | *397* |
| *81.* | *மாண்புமிகு முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை – 10.05.2022* | *399* |


***

# "சட்டமன்ற ஜனநாயகத்தை பேணிப்பாதுகாப்போம்"



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" – என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வரிகளுக்கு இலக்கணமாக விளங்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மைப் பெற்று ஆட்சி அமைக்க ஆதரவுக் கரம் நீட்டிய தமிழக மக்கள் அனைவருக்கும் தங்கள் மூலமாக எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

"செந்தமிழால் செய்த உடல், செங்கோலால் செய்த விரல், வெண்கலத்தால் செய்த குரல், வெற்றிகளால் செய்த கழல், சங்கநூல் செரித்த குடல், சரித்திரத்து ஞானக் கடல், நெஞ்சமெல்லாம் தமிழ் அன்னை, நினைப்பதெல்லாம் தமிழன்னை" என்று கவிஞர் தணிகைச் செல்வனால் போற்றப்பட்ட முத்தமிழ் அறிஞர் நம் நெஞ்சமெல்லாம் அன்றும், இன்றும், என்றும் வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன்.

தாங்கள் இந்த இருக்கையில் அமர்ந்திருப்பதைப் பார்க்கும்போது என் நெஞ்சம் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எந்த அளவுக்கு தாங்கள் உணர்ச்சிமயமாக இப்போது அமர்ந்திருக்கிறீர்களோ அதைவிட அதிகமாக நான் உணர்ச்சியும், பெருமையும், பூரிப்பும் அடைந்துகொண்டிருக்கிறேன். இங்கே எல்லோரும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அனைத்து தொலைக்காட்சி விவாத மேடைகளிலும் கம்பீரமாக உட்கார்ந்து, பல்வேறு விவாதங்களில் பங்கெடுத்து, கருத்தோடும், சுவையோடும் பேசக்கூடிய தங்களது விவாதங்களைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருக்கக்கூடியவன் நான். அந்தவகையில் ஆக்கப்பூர்வமான விவாதத்திற்குப் புகழ்பெற்ற ஜனநாயக மன்றமாக விளங்கிக்கொண்டிருக்கக்கூடிய இந்த சட்டமன்றத்தினுடைய பேரவைத் தலைவராக தாங்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது எங்களுக்கெல்லாம் மிகுந்த பெருமை அளிப்பதாக இருக்கின்றது.

தாங்கள் ஏற்றிருக்கும் பேரவைத் தலைவர் பொறுப்பு ‘‘நாட்டின் சுதந்திரம் மற்றும் விடுதலையின் சின்னம்’’ என்று இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னார்கள். ‘‘அவைத் தலைவர் பேரவையைக் குறிப்பவர். அவையினுடைய கண்ணியம், சுதந்திரத்தன்மை ஆகியவற்றின் அடையாளம் பேரவைத் தலைவர்’’ என்று நேரு அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்த சுதந்திரத்தின், ஜனநாயகத்தின் அடையாளமாக தாங்கள் வீற்றிருக்கிறீர்கள். கதர் ஆடையில் அமர்ந்து நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். தூய்மையின் அடையாளமாக, வெள்ளை உள்ளத்தின் அடையாளமாக இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்கு எல்லாம் நீங்கள் இன்றைக்கு காட்சி தந்துகொண்டிருக்கிறீர்கள். இந்த 16ஆவது சட்டமன்றத்தில் தாங்கள் பேரவைத் தலைவராக அமர்ந்திருப்பது இந்த மாபெரும்

மன்றத்திற்கு பெருமை அளிப்பதாக அமைந்திருக்கின்றது. இந்த மாமன்றத்தில் இருந்த பேரவைத் தலைவர்கள் அனைவரும், இந்த அவைக்குப் பல்வேறு பெருமைகளைச் சேர்த்து தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றுச் சொன்னால், தென் மாவட்டத்தைச் சார்ந்தவர்களே அதிகமாக பேரவைத் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். தென் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். மரியாதைக்குரிய திரு.எஸ்.செல்லப்பாண்டியன் அவர்கள், திரு.சி.பா.ஆதித்தனார் அவர்கள், திரு.பி.எச்.பாண்டியன் அவர்கள், முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள், திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள், திரு.பி.டி.ஆர்.பழனிவேல் ராசன் அவர்கள், திரு.கா.காளிமுத்து அவர்கள், திரு.இரா.ஆவுடையப்பன் அவர்கள். தற்போது தாங்கள் பேரவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்தப் பேரவையை ஜனநாயக மாண்புடன் நடத்திடும் திறமை படைத்தவர்களாக பேரவைத் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். தாங்களும் இந்தப் பேரவையை ஜனநாயக ரீதியில், அந்த மரபு வழி நின்று நிச்சயம் நடத்துவீர்கள் என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகமில்லை. இந்திய நாட்டினுடைய விடுதலைக்குப் பிறகு 1952ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களைக் கொண்ட முதல் சட்டமன்றம் கூடிய இடம்தான், இந்த இடம்.

மொழி வாரியாக மாகாணங்கள் பிரிப்பதற்கு முன்னதாக 375 உறுப்பினர்கள் சென்னை ராஜதானியில் இருந்ததால் அனைவரும் உட்காரக்கூடிய வசதியுடன் புதிய பேரவைக் கட்டடம் அரசினர் தோட்டத்தில் அப்போது கட்டப்பட்டது. அதில்தான் முதல் ஐந்தாண்டு காலம் பேரவை நடந்திருக்கிறது. மொழி வாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான உறுப்பினர் தொகை குறைந்த பிறகு செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மீண்டும் சபை நடவடிக்கைகள் நடந்தன. அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் கூட்டப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் தாங்கள் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்திருப்பது உள்ளபடியே

பாராட்டுக்குரியது, மகிழ்ச்சிக்குரியது, பெருமைக்குரியது. உள்ளத்தால், அறிவாற்றலால், செயல் திறத்தால் வளர்ந்த தங்கள் தலைமையிலான இந்த அவையிலே நாங்கள் செயல்படுவதை ஒரு பொற்காலமாகக் கருதிக்கொண்டிருக்கிறோம்.

நெல்லை மாவட்டம், காவல்கிணறு என்ற ஊருக்கு அருகில் இருக்கக்கூடிய லெப்பைகுடிகாடு என்ற ஊரில் பிறந்த தாங்கள் பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறீர்கள். காவல்கிணறு திருஇருதய மேல்நிலைப் பள்ளியில் கணிதம் மற்றும் ஆங்கில ஆசிரியராக இருந்து, அரசியல் ஈடுபாட்டின் காரணமாக ஆசிரியர் வேலையை விட்டு விலகி, அரசியல் பணிக்கு வந்திருக்கிறீர்கள். மாணவர்களுக்கு ஆசிரியராக இருந்த தாங்கள், இப்போது 234 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட இந்தப் பேரவைக்குத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, நான்காவது முறை வெற்றி பெற்றுள்ள தங்களுக்குச் சூட்டப்பட்டிருக்கிறது இந்த மகுடம்.

நாங்கள் உங்கள் உத்தரவுகளுக்கு, கட்டளைகளுக்கு, கண்ணசைவுக்குக் கட்டுப்பட்டு நிச்சயமாகச் செயல்படுவோம். 'சட்டசபையை அதிகார அமைப்பாக இல்லாமல், சமூகத்துக்கு நன்மை செய்யும் அமைப்பாகக் கருத வேண்டும்'. இதை யார் சொன்னது? தந்தை பெரியார் அவர்கள். எனவே, அவர் வழிவந்திருக்கக்கூடியவர்கள் நாங்கள்!

இங்கேகூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். 'ஜனநாயக நாட்டில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பவை ஒரு நாணயத்தினுடைய இரு பக்கங்கள். இதில் ஒரு பக்கம் சரியாக இருந்து, மறுபக்கம் சிதைந்து போயிருக்குமென்று சொன்னால், அந்த நாணயம் செல்லாக் காசாகி விடும்'. இதே பேரவையில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவருடைய தம்பிமார்கள்தான் நாங்கள்.

‘ஒரு மனிதனின் முகத்தில் உள்ள நிறைகளை மட்டுமல்ல, குறைகளையும் காட்டுவதுதான் கண்ணாடி. அதுபோல் ஆளுங்கட்சியினுடைய நிறை குறைகளைக் காட்டுவதுதான் சட்டமன்றம்’ என்று சொன்னவர் யார் தெரியுமா? எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கருத்துகளைக் கருத்துகளால் எதிர்கொள்ளும் வல்லமை எங்களுக்கு உண்டு. ஆனால், அதில் கர்வமோ, ஆணவமோ இருக்காது. ஜனநாயகமும், மரபுகளும் நிச்சயமாக அதிலே இருக்கும். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆணவம் இருக்காது; கர்வம் இருக்காது. ஜனநாயகம்தான் இருக்கும். மரபுகளும் கடைப்பிடிக்கப்படும் என்பதை உறுதியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தோல்வியில் துவள்வதும், வெற்றியில் இறுமாப்பு கொள்வதும் எங்களுடைய வழக்கமல்ல. அப்படி எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் எங்களை வளர்க்கவும் இல்லை. ஆகவே, தமிழக மக்கள் அளித்திருக்கக்கூடிய இந்த மாபெரும் வெற்றி, எங்களை மேலும் மேலும் அடக்கமுள்ளவர்களாக ஆக்கி இருக்கிறது. கட்டுப்பாடோடு இருப்பதோ, அடக்கத்தோடு இருப்பதோ சட்டமன்றத்தினுடைய ஜனநாயகத்தைக் காப்பாற்றிடவே. அதை எந்தவிதத்திலும் பலவீனமாக யாரும் கருதிடக் கூடாது. இவை அனைத்தையும் அறிந்த தாங்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பேதம் பார்க்காமல், அனைவருக்கும் பொதுவானவராக இருந்து, பழம்பெருமை வாய்ந்த மிகத் தொன்மையான இந்த அவையை அதற்குரிய மாண்புடன் நடத்திடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல, இங்கிருக்கக்கூடிய எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே, இங்கிருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நிச்சயமாக இருக்கும். அதில், எந்த மாறுபாடும் இருக்க வாய்ப்பே கிடையாது. அதன் சாட்சிதான் மாண்புமிகு அவை முன்னவரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் தங்களை இந்தப் பெருமைமிகு இருக்கையில் அழைத்து வந்து அமர வைத்தார்கள்.

“லார்டு வெலிங்டன்” அவர்களும், அவரது துணைவியாரும் இணைந்து, இப்பேரவைக்கு பரிசாக வழங்கிய அந்த அழகிய நாற்காலியில் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். அவையினுடைய மாண்பு கெடாது, எவ்வித விரோத உணர்ச்சிக்கும் இடம் தராமல், ஜனநாயக மரபுகளைக் காக்கக்கூடிய வகையில் ஆளுங்கட்சி செயல்படும் என்ற உறுதியை நான் உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், பேரவைத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு திரு.கு.பிச்சாண்டி அவர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். திருவண்ணாமலை நகர் மன்ற உறுப்பினராக 1986ஆம் ஆண்டு மக்கள் பணியாற்றிய அவர், ஆறு முறை சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்வு செய்யப்பட்ட பெருமைக்குரியவர் திரு.கு.பிச்சாண்டி அவர்கள். கடந்த சட்டமன்றப் பேரவையில் பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு துணை கொறடாவாக அவர் சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறார். அனைத்து விவாதங்களிலும் முழுமையாகப் பங்கெடுத்த பெருமை அவருக்குண்டு. மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் சொல்லக்கூடிய கருத்துகளை எல்லாம் ஆழமாக உள்வாங்கக்கூடியவர். அவை முன்னவர் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். பேரவை அலுவல் நேரம் நிறைவு பெறுகிற வரையிலே, ஏன் சில நேரம் மதிய உணவைக்கூட மறந்து இந்தப் பேரவையிலே அமர்ந்து அந்தப் பேரவை நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவர் நம்முடைய திரு.பிச்சாண்டி அவர்கள். அனைவருடனும் அன்போடு பழகக்கூடியவர். பாசத்தோடு பழகக்கூடியவர் மாண்புமிகு திரு.பிச்சாண்டி அவர்கள். எனவே, பேரவைத் துணைத் தலைவராக அவரை நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அவரையும் மனமார நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

பேரவைத் தலைவருக்கு இந்த அவையின் மாண்பைக் காப்பாற்ற நிச்சயமாக துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு.பிச்சாண்டி அவர்கள் இருப்பார்; இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் தனிப்பட்ட எனக்குள்ள ஒரு வருத்தம், அவைத் தலைவர் ஆனதன் மூலமாக தங்களது அரசியல் பணிகளை நாங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழல் இப்போது எங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இதே அவையில் திரு.கே.ஏ.மதியழகன் அவர்களை பேரவைத் தலைவர் பொறுப்பில் அமர வைத்தபோது சொன்னார். “எங்கள் உடன்பிறப்பாக இருந்து எங்களோடு இந்த மாபெரும் இயக்கத்தை வளர்க்கக் காரணகர்த்தாவாக இருந்த தாங்கள் இன்று அந்தப் பணியிலிருந்து, அறுத்துக் கொண்டீர்கள் என்று நான் சொல்ல மாட்டேன், ஒதுங்கியிருக்கிறீர்கள்” என்று வாழ்த்தியதைத்தான் உங்களுக்கு நான் நினைவுபடுத்துகிறேன். ஆகவே, கழகப் பணி செய்ய முடியாமல் போகிறதே என்ற வருத்தம் எனது உள்ளத்தில் ஒரு ஓரத்தில் இருந்தாலும், இந்த இடத்துக்கு பொருத்தமானவர் தாங்கள்தான் என்பதை எண்ணி அந்த வகையிலே நான் மனநிறைவு அடைகிறேன். தங்களுக்கும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சியினர் உட்பட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களை, வாழ்த்துகளை நன்றியோடு தெரிவித்துக்கொண்டு, வாருங்கள் நாம் அனைவரும் சேர்ந்து நமக்கும் நாட்டு மக்களுக்குமான நல்லதோர் எதிர்காலத்தை அமைக்க இந்தச் சட்டமன்ற ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்போம் என்று கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*

*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*

*மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களைப்*

*பாராட்டி ஆற்றிய உரை –* ***12.05.2021***

# மூன்று வேளாண் சட்டங்களை திரும்பப்பெற இந்த அவையில் தீர்மானம் நிறைவேற்றப்படும்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி அவர்கள், மூன்று வேளாண் சட்டங்கள் குறித்து எடுத்துச் சொல்லி, அவற்றைத் திரும்பப் பெறக்கூடிய வகையில், ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள்.

இந்த வேளாண் சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட நாள் முதல், உழவர் நலனுக்கு எதிரான இந்தச் சட்டங்களை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு தருணங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருப்பதை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். அந்த வகையில், தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியா முழுவதும் உள்ள உழவர் பெருமக்களின் உணர்வுகளையும், விருப்பத்தையும் இந்த மன்றம் முழுமையாகப்

பிரதிபலிக்கக்கூடிய வகையில், இந்த மூன்று சட்டங்களையும் திரும்பப் பெற வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்தி, இந்த அவையிலே ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்ற இந்த அரசு தெளிவாக முடிவு செய்திருக்கிறது. அதில் எந்த மாற்றமும் கிடையாது.

ஆனால், இந்த அவையினுடைய முதல் கூட்டத் தொடர் என்ற முறையில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது, இத்தகைய தீர்மானங்களை முன்மொழிந்து நிறைவேற்றுவது உகந்ததாக இருக்காது என்று கருதுகிற காரணத்தினால்தான், வரவிருக்கக்கூடிய வரவு–செலவு திட்டக் கூட்டத்தொடரின்போது, அந்த உரிய தீர்மானத்தைக் கொண்டுவந்து, நிச்சயமாக ஒன்றிய அரசினுடைய வேளாண் சட்டங்களுக்கு எதிரான தமிழ்நாடு அரசினுடைய எதிர்ப்பை முழு மூச்சோடு பதிவு செய்து, அவற்றைத் திரும்பப்பெற ஒன்றிய அரசை வலியுறுத்துவோம் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதைப்போலவே, இன்னொன்று, ஒன்றிய அரசு கொண்டுவந்திருக்கக்கூடிய குடியுரிமை திருத்தச் சட்டமும் நாடு முழுவதும் இருக்கக்கூடிய சிறுபான்மையினரின் நலனை வெகுவாகப் பாதித்து, அவர்களிடத்திலே ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ள சூழ்நிலையில், அதனையும் ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டுமென்று வலியுறுத்துவதற்கான தீர்மானத்தையும் வரவிருக்கக்கூடிய பட்ஜெட் கூட்டத்தொடரின்போது நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்பதையும் தெரிவித்து, அமைகின்றேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், ஒன்றிய அரசு நிறைவேற்றியுள்ள மூன்று வேளாண் சட்டங்களையும், குடியுரிமை திருத்தச் சட்டத்தையும் திரும்பப் பெற வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படும் என உறுதியளித்து ஆற்றிய உரை –* ***22.06.2021***

## ‘ஒன்றியம்’ என்பது மாநிலங்கள் ஒன்று சேர்ந்தது என்பதுதான் பொருள்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘ஒன்றிய அரசு’ என்று சொல்வதை, ஏதோ சமூகக் குற்றம்போல யாரும் நினைக்க வேண்டாம். அப்படி சிலர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். அது உள்ளபடியே முழுக்க முழுக்கத் தவறு. சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ, அதைத்தான் நாங்கள் சொல்கிறோம்.

நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் வரி, “இந்தியா, அதாவது பாரதம், மாநிலங்களைக் கொண்ட ஓர் ஒன்றியமாய் இருக்கும்” என்றுதான் உள்ளது. “India, that is Bharat, shall be a Union of States” என்றுதான் இருக்கிறது. அதைத்தான் பயன்படுத்துகிறோமே தவிர, சட்டத்தில் இல்லாததை நாங்கள் பயன்படுத்தவில்லை. ‘ஒன்றியம்’ என்பது தவறான சொல் அல்ல; ‘மாநிலங்கள் ஒன்று சேர்ந்தது’ என்பதுதான் அதனுடைய பொருள். இன்னும் சிலர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லாததை, எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லாததை நாங்கள்

சொல்லி வருவதாகக் குறிப்பிட்டு, அதை விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய 1957ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலேயே 'இந்திய யூனியன்' என்றுதான் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. 1963 ஜனவரி 25, நாடாளுமன்ற மாநிலங்களவையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசுகிறபோது, குறிப்பிட்டார்கள், "அரசினுடைய இறைமை என்பதற்கு நாம் மேற்கொள்ளும் பொருள் என்ன? அரசியல் இறைமையானது, பொதுமக்களிடம் நிலைத்துள்ளது என அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது. சட்டம் சார்ந்த இறைமையானது, கூட்டாட்சி ஒன்றியத்துக்கும், அதன் அங்கங்களுக்கும் இடையே, அதாவது மாநிலங்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளது" என்றுதான் பேசியிருக்கிறார்.

'சமஷ்டி' என்ற வார்த்தையை மரியாதைக்குரிய ம.பொ.சி. அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். 'வெளியேறுக மிகுதியான அதிகாரக் குவிப்பு – வருக உண்மையான கூட்டாட்சி' என்று மூதறிஞர் இராஜாஜி அவர்களே எழுதியிருக்கிறார்கள். எனவே, ஒன்றியம் என்ற வார்த்தையைப் பார்த்து யாரும் மிரளத் தேவையில்லை. அந்த ஒரு வார்த்தையில் கூட்டாட்சித் தத்துவம் அடங்கியிருக்கிறது. அதற்காகத்தான் அதை நாங்கள் பயன்படுத்துகிறோம், பயன்படுத்துவோம், பயன்படுத்திக் கொண்டேயிருப்போம்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*'ஒன்றிய அரசு' என்று அழைப்பது குறித்து*
*பதிலளித்து ஆற்றிய உரை – 23.06.2021*

# 10.5 சதவிகித உள் ஒதுக்கீடு தொடர்பாக நல்ல முடிவு எடுக்கப்படும்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் உள்ள 20 விழுக்காடு ஒதுக்கீட்டில், வன்னியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 10.5 விழுக்காடு உள் இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.ஜி.கே.மணி அவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்.

ஏற்கெனவே, இரண்டு நாட்களுக்கு முன்பு, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் டாக்டர் அவர்கள், இவர் மூலமாக ஒரு கடிதத்தையும் எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதிலே அவர் பல்வேறு பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி, இதனுடைய

முக்கியத்துவத்தை, இதிலுள்ள பிரச்சினைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, நிறைவாகக் குறிப்பிடுகிறபோது, தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் வன்னியர்களுக்கு **10.5** சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவதற்கான தமிழ்நாடு சட்டம் எண் **8/2021–**ஐ விரைந்து செயல்படுத்தும்படியும், அதற்குத் தேவையான அரசாணைகள் மற்றும் வழிகாட்டுதல்களை உடனடியாகப் பிறப்பிக்கும்படியும் கேட்டிருக்கிறார்.

நான் இதையெல்லாம் அடிப்படையாக வைத்து இங்கே சொல்ல விரும்புவது, ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து கொரோனா தொற்றைக் குறைப்பதற்காக இரவு பகல் பாராது கவனம் செலுத்தி, இப்போதுதான் கொஞ்சம் மூச்சு விட ஆரம்பித்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய துறையினுடைய அதிகாரிகளோடு விரிவாக ஆலோசனையும், ஆய்வும் நடத்தி, நிச்சயமாக ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்ற அந்த உறுதியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
***10.5*** *சதவிகித உள் ஒதுக்கீடு தொடர்பாக*
*திரு.ஜி.கே.மணி அவர்கள் பேசியதற்கு,*
*பதிலளித்து ஆற்றிய உரை –* ***23.06.2021***

# நான் முத்தமிழறிஞர் கலைஞருடைய கொள்கை வாரிசு



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தடியால் தட்டி தமிழினத்தை எழுப்பிய தந்தை பெரியாரையும், அன்பெனும் உயிராய் ஒருங்கிணைத்த பேரறிஞர் அண்ணா அவர்களையும், தனித்தனி ஊரில் பிறந்தவர்களையும் ‘உடன்பிறப்பு’ என்ற ஒற்றைச் சொல்லால் ஈர்த்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் நெஞ்சில் தாங்கி எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கடந்த 21ஆம் தேதி, இந்த மாபெரும் சட்டமன்றத்தில் தமிழ்நாடு அரசின் நோக்கங்களையும், எண்ணங்களையும் எடுத்துக்காட்டக்கூடிய நல்லதோர் உரையை ஆற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசின் முதலமைச்சர் என்ற முறையிலும், தனிப்பட்ட நிலையிலும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்களது உரை மீதான விவாதத்தில் உரையாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து, எனது உரையைத் தொடங்கும் அதேவேளையில், என்னை இந்த மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கக்கூடிய கொளத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற மகத்தான வெற்றிக்குக் காரணமான அனைத்து கழக உடன்பிறப்புகளுக்கும், தோளோடு தோள் நின்று பணியாற்றிய தோழமைக் கட்சியினருக்கும், பெரும் எதிர்பார்ப்புகளுடன் தங்களுக்குச் சேவை செய்வதற்கான பெரும் வாய்ப்பினை எங்கள் மீது நம்பிக்கை வைத்து வழங்கியிருக்கக்கூடிய அருந்தமிழ்நாட்டு மக்களுக்கும், முதற்கண் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

“தமிழ்நாடு முதலமைச்சர்” என்ற இந்த அரிய ஆசனத்தைப் பார்க்கும்போதும், அதிலே அமரும்போதும், என்னுடைய எண்ணங்கள், கடந்த ஒரு நூற்றாண்டு வரலாற்று நிகழ்வுகளையும், முதலமைச்சராகப் பொறுப்பேற்று, அந்த வரலாற்றைப் படைத்த தனிப்பெரும் நாயகர்களையும் சுற்றிச் சுழல்கின்றன. அதன் காரணமாக மெய்சிலிர்ப்பும், பிரமிப்பும், வியப்பும், உண்டாகின்றன.

குறிப்பாக, திராவிட இயக்கத்தின் முன்னோடியான நீதிக் கட்சி, 1920ஆம் ஆண்டு முதல் 1937ஆம் ஆண்டுவரை சுமார் 17 ஆண்டுகள் தமிழ்நாட்டை ஆட்சி செய்தது. முதன்முதலாக சமூக நீதிக்கான ஆணைகளை வழங்கி, வடமொழி ஆதிக்கத்தைத் தகர்த்து, மகளிருக்கான உரிமைகளை அங்கீகாரம் செய்து, அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் தந்து, கல்வித் துறையில் சீர்திருத்தங்களைப் புகுத்தி, சமுதாய மாற்றங்களுக்கான விதைகளை விதைத்து, சமூக நீதியை நீர் ஊற்றி வளர்த்த கட்சி. ஆங்கிலேயரின் இரட்டை ஆட்சி முறையில், மிகவும் குறைவான சட்ட அதிகாரங்களை வைத்துக் கொண்டு, தொலைநோக்குத் திட்டங்களையும் அக்காலத்தில் எவரும் சிந்தித்திராத சீர்திருத்தங்களையும் நிறைவேற்றிய கட்சி. திராவிட

இயக்கத்தின் தாய்க் கழகமான நீதிக் கட்சி, சென்னை மாகாணத்தில் ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்து 100 ஆண்டுகள் கடந்துவிட்டது.

அன்றைக்கு இருந்த மிகக் குறைவான அதிகாரங்களைக் கொண்டே வகுப்புவாரி உரிமையை நிலைநாட்டியது நீதிக் கட்சி; பட்டியலின மக்களது நலனைப் பேணியது நீதிக் கட்சி; திருக்கோயில்களைக் காத்தது நீதிக்கட்சி; அத்தகைய நீதிக் கட்சி ஆட்சிக்கு வந்து 100 ஆண்டுகளைக் கடந்துவிட்ட இந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்திருப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

தியாகராயரும், நடேசனாரும், டி.எம். நாயரும் போட்ட சமூகநீதி, சமத்துவ சமுதாயம் காணும் அடித்தளத்தில் அமைந்துள்ள ஆட்சிதான் இன்றைய தி.மு.க. ஆட்சி. 1967ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பில் முதன்முதலாக திராவிட முன்னேற்றக் கழகம் அமர்ந்தபோது, ''நீதிக் கட்சி ஆட்சியின் தொடர்ச்சிதான் இந்த ஆட்சி'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதேவழியில், எங்களது ஆட்சியும் நீதிக் கட்சியின் தொடர்ச்சிதான் என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நீதிக்கட்சியின் தொடர்ச்சி பேரறிஞர் அண்ணா! பேரறிஞர் அண்ணாவின் தொடர்ச்சி முத்தமிழறிஞர் கலைஞர்! முத்தமிழறிஞர் கலைஞரின் தொடர்ச்சி நான்! ஏன், இந்த அரசு! தமிழினத்தை நம்மால்தான் வாழ வைக்க முடியும், தமிழினத்தை நம்மால்தான் வளர்ச்சி பெற வைக்க முடியும் என்ற நம்பிக்கையோடு தி.மு.கழகத்தை ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள் தமிழ்நாட்டு மக்கள்! இந்த அரசின் கொள்கைகளை, தமிழ்நாடு எட்டவேண்டிய இலக்கை, எமது தொலைநோக்குப் பார்வையைத்தான் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அன்று நீதிக்கட்சியின் முதலாவது (First Prime Minister) பிரதம அமைச்சராக இருந்த கடலூர் ஏ. சுப்பராயலு ரெட்டியார்

அவர்கள், காங்கிரஸ் கட்சியின் சார்பில் முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து, ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி, முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், **5** முறை முதலமைச்சர் பொறுப்பேற்று **19** ஆண்டுகள் ஆட்சி செய்த சாதனைச் செல்வர், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆகியோரையும், முதலமைச்சராக இருந்த தகுதிமிக்க ஏனைய சான்றோர்களையும், இந்த நேரத்தில் நினைவுகூர்வது என்னுடைய கடமை ஆகும். நமது முன்னோர்களை நினைவுகூர்வது என்பது, தமிழர் பண்பாட்டின் தவிர்க்க முடியாத முக்கியமான கூறு என்பதை மறந்துவிட முடியாது.

கடந்த **2** நாட்களாக இந்த அவையிலே நடந்திருக்கக்கூடிய விவாதத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, பாரதிய ஜனதா கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க., மனித நேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்த **22** மாண்புமிகு உறுப்பினர்கள், ஆளுநர் உரையின் மீது, தங்களுடைய சீரிய கருத்துகளை மையப்படுத்தி இங்கே உரையாற்றி இருக்கிறார்கள். உரையாற்றிய உங்கள் அனைவரது கருத்துகளையும் இந்த அரசுக்கு நீங்கள் சொல்லும் ஆரோக்கியமான ஆலோசனைகளாகவே நான் எடுத்துக் கொள்கிறேன்.

ஏனென்றால் நான் பேரறிஞர் அண்ணாவினுடைய அரசியல் வாரிசு. முத்தமிழறிஞர் கலைஞருடைய கொள்கை வாரிசு. சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது முன்வைத்த கோரிக்கைகள், தொகுதி சார்ந்த பிரச்சினைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களால் குறித்து வைக்கப்பட்டுள்ளன. துறை

அதிகாரிகளோடு கலந்தாலோசித்து நிச்சயமாக, உறுதியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஐந்து ஆண்டுகால ஆட்சி உரிமை கொண்ட அரசு இது. இதில் செயல்படுத்தக்கூடிய திட்டங்கள், கொள்கைகள், கோரிக்கைகள் ஆகிய அனைத்தையும் ஆளுநர் உரையில் மட்டுமே முழுமையாகச் சொல்லிவிட முடியாது. ஆளுநர் உரை என்பது, அரசாங்கத்தின் ஓராண்டுக்கான கொள்கை விளக்கச் சுருக்கம். அதில் அரசாங்கத்தின் ஐந்தாண்டுகளுக்கான நோக்கம், திட்டம், அணுகுமுறை, செயல்பாடுகள் என அனைத்தையும் அடக்கிவிட முடியாது. ஆளுநர் உரை ஒரு முன்னோட்டம்தான். அனைவருக்கும் எளிதில் புரியும்படி சொல்லவேண்டும் என்றால், இது ஒரு "ட்ரெய்லர்" மாதிரி. "முழு நீளத் திரைப்படத்தை விரைவில் வெள்ளித்திரையில் காண்க" – என்று முன்பெல்லாம் சொல்லப்பட்டு வந்ததைப்போல, இந்த அரசு வகுத்திருக்கும் பாதை, அதில் மேற்கொள்ள உள்ள பயணம், பயணத்தில் எதிர்கொள்ளவிருக்கிற இடர்ப்பாடுகள், அந்த இடர்ப்பாடுகளைக் களைந்தெறியும் சூட்சுமங்கள், சவால்கள், அவற்றைச் சந்திப்பதற்கான சாதுரியங்கள் என அனைத்தும் விரைவில் இந்தப் பேரவையிலே வைக்கப்படவுள்ள நிதிநிலை அறிக்கையில் விரிவாக இடம்பெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"பொறுத்தார் பூமி ஆள்வார்" என்பது பழமொழி. நாங்கள் 10 ஆண்டுகள் பொறுத்திருந்தோம்; இப்போதுதான் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருக்கிறோம். கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றிக் காட்டுவோம். அதில் உங்களுக்கு ஒரு துளி கூட சந்தேகம் வேண்டாம்.

"தேர்தல் அறிக்கையில் 505 வாக்குறுதிகளை கொடுத்தார்கள். அதில் எதையும் நிறைவேற்றவில்லை" என்று மாண்புமிகு

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்து இன்றோடு 49 நாட்கள்தான் ஆகி இருக்கின்றன. ஆனாலும், என் மீதும், திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீதும் இருக்கின்ற நம்பிக்கையின் காரணமாக, இப்போதே அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி இருக்கலாமே என்ற எதிர்பார்ப்பை வெளிப்படுத்தியிருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு முதலில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்களின் எதிர்ப்பார்ப்புகள் அனைத்தும் நிச்சயமாக நிறைவேற்றப்படும். அதில் எந்தவிதமான சந்தேகமும், யாரும் படவேண்டிய அவசியமில்லை.

ஆட்சிக்கு வந்த முதல் நாளில் இருந்து நாங்கள் மக்களுக்கு கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதிகளில் ஒவ்வொன்றாக நிறைவேற்றிக்கொண்டுதான் வருகிறோம். அதற்கான பணிகளில்தான் எங்களை நாங்கள் ஒப்படைத்துக் கொண்டிருக்கிறோம்.

பல்வேறு ஊடகங்களில் தி.மு.க. அரசினுடைய முதல் முப்பது நாட்கள் எப்படி இருக்கிறது என்று கேள்வி கேட்டு, அதற்கு பொதுமக்கள் அளித்த பதில்களை அனைவரும் பார்த்திருப்பீர்கள். தி.மு.க.வுக்கு வாக்களிக்கவில்லையே என்று பலரும் தங்களது வருத்தத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். எங்களுக்கு வாக்களித்தவர்கள், இவர்களுக்கு வாக்களித்தோமே என்று மகிழ்ச்சி அடையக்கூடிய வகையிலும், வாக்களிக்கத் தவறியவர்கள், இவர்களுக்கு வாக்களிக்க தவறிவிட்டோமே என்று வருத்தப்படக்கூடிய வகையிலும், எனது பணி இருக்கும்'' என்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவிடத்தில் தி.மு.க. வெற்றி பெற்றவுடன் ஊடகங்கள் வாயிலாக நான் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்தேன். அந்த வகையில், நம்முடைய பணிகள் சிறப்பாக அமைந்திருக்கிறது என்று எண்ணி, இன்னும் சிறப்பாகச் செயல்பட உத்வேகம் கொள்கிறேன்.

ஆளுநர் மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டவுடன், தலைமைச் செயலகத்திற்குச் சென்று நான் பொறுப்பேற்றேன். பொறுப்பேற்றவுடனே, கொரோனா நிவாரண நிதியாக 4,000 ரூபாய் வழங்க உத்தரவிட்டேன். முதல் தவணையான 2,000 ரூபாய் மே மாத்திலேயே வழங்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜூன் 3 அன்று மேலும் 2,000 ரூபாய் வழங்கப்பட்டது. மொத்தம் 8,393 கோடி ரூபாய் செலவில் 2 கோடியே 11 இலட்சம் குடும்பங்கள் இதனால் பயனடைந்திருக்கின்றன. ஆவின் பால் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் குறைத்துள்ளோம். அது 16.05.2021 முதலே செயல்பாட்டுக்கு வந்தது. அனைத்து மகளிரும் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்யலாம் என உத்தரவிட்டோம். திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கும் இந்தச் சலுகை நீட்டிக்கப்பட்டது. என்னிடம் தரப்பட்ட மனுக்களை 100 நாட்களில் தீர்த்து வைக்க 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தைத் தொடங்கினேன். இன்றுவரை, இன்றைக்குக் காலையிலே வரை, ஆதாரத்தோடு புள்ளிவிவரங்களோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால், 75 ஆயிரத்து 546 மனுக்களுக்கு இதுவரை தீர்வு காணப்பட்டுள்ளது.

தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் கொரோனா நோயாளிகளுக்கான கட்டணத்தை முதலமைச்சர் காப்பீடு திட்டத்தின் மூலம் அரசே செலுத்த உத்தரவிட்டோம். இதனால் 20 ஆயிரத்து 520 பேர் பயனடைந்துள்ளனர். கருப்புப் பூஞ்சை நோய் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கக்கூடிய 330 பேருக்கு 77 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனாவைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த கட்டளை மையம் (War Room) உருவாக்கப்பட்டது. தடுப்பூசிதான் உயிர்க்கவசம் என்பதால், தடுப்பூசி போடுவது மக்கள் இயக்கமாகவே மாற்றப்பட்டது. இதன் விளைவாக மக்கள் மத்தியில் மாபெரும் விழிப்புணர்வு ஏற்பட்டு, இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து 47

நாட்களில் 65 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. ஏற்கெனவே போடப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கையைவிட இது இருமடங்கு அதிகமாகும்.

இன்னும் சொல்லவேண்டுமென்றால், கொரோனாவைப் பற்றி அனைவரும் பேசினார்கள். நாங்கள் ஆட்சிக்கு வரும்போது கொரோனா உச்சத்தில் இருந்தது. மே 7ஆம் நாள், தமிழ்நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை நாளொன்றுக்கு 26 ஆயிரமாக இருந்தது. அது 36 ஆயிரமாக உயர்ந்து கொண்டு இருந்தது. மருத்துவ வல்லுநர்களை விசாரித்தபோது, 'இது 50 ஆயிரம் ஆகும் – ஏன், அதைவிட தாண்டிக்கூட போகும்' என்றெல்லாம் சொன்னார்கள். தொடக்கத்தில் கடும் சவாலாகத் தெரிந்தது. ஆனால், அரசு எடுத்த போர்க்கால நடவடிக்கைகளின் காரணமாக, அப்படியே படிப்படியாகக் குறைந்து 7,000க்கும் கீழ் வந்துவிட்டது. இன்னும் படிப்படியாக குறைந்து விடும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. படுக்கைகள் இல்லை, ஆக்சிஜன் வசதி இல்லை என்ற சூழலில்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். "இல்லை, இல்லை" என்ற சொல்லை இல்லாமல் ஆக்கியிருக்கிறோம் இந்த ஆட்சியிலே.

புதிய படுக்கைகள் உருவாக்கப்பட்டன. ஆக்சிஜன் வசதி கொண்டவையாக, தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளாக உருவாக்கப்பட்டன. கடந்த ஒன்றரை மாத காலத்தில் மட்டும் 89 ஆயிரத்து 618 படுக்கைகள் தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை இந்த மன்றத்தின் வாயிலாகப் பொதுமக்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கொரோனா மூன்றாவது அலை வரக்கூடாது. வந்தாலும், அதனைத் தாங்கி எதிர்கொள்ளும் சக்தி இன்றைய அரசுக்கு இருக்கிறது. அரசு எடுத்த நடவடிக்கை காரணமாகத்தான் தொற்று குறைந்தது. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

அவர்கள், தங்கள் ஆட்சியிலே அதிகபட்சமாக 7,000 பேர் மட்டுமே பாதிக்கப்பட்டதாகவும், தி.மு.க. ஆட்சியில் 26 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டதாகவும் சொல்லி இருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் **26**ஆம் தேதி தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதை வைத்து இப்படிச் சொல்கிறார். மே **6**ஆம் தேதி வரைக்கும் முதலமைச்சராக இருந்தது அவர்தான். கடந்த **22**ஆம் தேதி அவையில் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட **26.02.2021**ஆம் தேதியுடன் தனது கடமையும் பொறுப்பும் முடிந்ததைப் போல பேசினார்கள். "தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட **26.02.2021** அன்று **481** பேருக்குத்தான் கொரோனா பாதிப்பு இருந்தது. அப்போது, தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்தது. அதனால், அதிகாரிகளுடன் பேச முடியவில்லை. இருந்தாலும், தலைமைச் செயலாளருடன் பேசி மாவட்ட கலெக்டர்கள், மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தக் கூறினேன். ஆனால், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால், தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெற வேண்டும் என்று தலைமைச் செயலாளர் கூறினார். இதுகுறித்து, தேர்தல் ஆணையத்துக்கு நான் கடிதம் எழுதினேன். ஆனால், தேர்தல் ஆணையத்தில் இருந்து பதில் கடிதம் தலைமைச் செயலாளருக்குத்தான் வந்தது. தலைமைச் செயலாளர்தான் ஆலோசனை நடத்தினார். நான் முதலமைச்சராக இருந்தபோது கொரோனா தடுப்புப் பணியில் தமிழகம் முதலிடத்தில் இருந்தது" என்று பேசினார்கள். **26.02.2021**க்குப் பிறகு அன்றைய முதலமைச்சர் அவர்கள் எந்த அரசுப் பணிகளையும் பார்க்கவில்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**12.04.2021** அன்று கொரோனா தடுப்புப் பணிகள் குறித்து கோட்டையில் மூத்த அமைச்சர்கள், அரசு அதிகாரிகளோடு அன்றைய முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள். அப்போது, தமிழ்நாட்டில் இருந்த பாதிப்பு **6,618. 17.04.2021** அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் ஆலோசனை நடந்தது. இந்த

ஆலோசனை அனைத்தும் அன்றைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதாக அரசு செய்திக் குறிப்பு கூறுகிறது. அன்றையதினம் கொரோனா பாதிப்பு **8,449. 18.04.2021** அன்று உயர் அதிகாரிகளை அழைத்து அன்றைய முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை நடத்தி இருக்கிறார். அதற்கு மறுநாள் தமிழ்நாட்டில் பாதிப்பு **10,941. 26.04.2021** அன்று அதிகளவிலான தடுப்பூசிகளை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு பிரதமருக்கு அன்றைய முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார். அன்றையதினம் தமிழ்நாட்டில் பாதிப்பு **15,659** ஆகிவிட்டது. **28.04.2021** தடுப்பூசி கொள்முதல் குறித்து அன்றைய முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அரசின் செய்திக் குறிப்பு சொல்கிறது. அன்றைய பாதிப்பு **16,665.** இதுதான் உண்மையான நிலைமை.

அதாவது, ஏப்ரல் மாதத்தில் முழுமையாக அன்றைய முதலமைச்சர் மேற்பார்வையில்தான் பணிகள் நடந்துள்ளன. ஆனால் கொரோனா கட்டுப்படுத்தப்படவில்லை என்பதுதான் உண்மை. மே **2**ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டன. அன்றையதினம் ஏற்பட்ட பாதிப்பு **19,588.** இவை அனைத்துக்கும் முந்தைய அ.தி.மு.க. அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். மார்ச் **6** ஆம் தேதியில் இருந்தே தமிழ்நாட்டில் கொரோனா ஆதிக்கம் அதிகமாகிவிட்டது. மார்ச் **30**ஆம் தேதியே தமிழ்நாட்டில் கொரோனா இரண்டாவது அலை வீசி வருகிறது என்று குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், தமிழ்நாடு கல்வித் துறைக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. ஏப்ரல் **6** முதல் அதிகமாக பரவத் தொடங்கிவிட்டது. பாதிப்பு எண்ணிக்கை **5,000**த்தில் இருந்து **19** ஆயிரம் ஆக ஆனது. எனவே, கொரோனாவை அ.தி.மு.க. அரசு கட்டுப்படுத்திவிட்டது என்ற வாதம் மிகமிகத் தவறானது. அவரை யாராவது கொரோனா தடுப்புப் பணிகளில் ஈடுபடக்கூடாது என்று கையை கட்டிப் போட்டு வைத்திருந்தார்களா எனத் தெரியவில்லை. 'நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்'

என்று ஒரு திரைப்படம் வந்தது. அதைப்போல பிப்ரவரி **26** முதல் மே **6** வரையிலான இரண்டு மாத ஆட்சியை அ.தி.மு.க. மறந்து விட்டதா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆட்சிக்கு வரப்போவதில்லை என்று தெரிந்ததும் அலட்சியமாக இருந்ததன் விளைவுதான் பாதிப்பு எண்ணிக்கை **26** ஆயிரம் எனக் கூடியது. இத்தகைய மோசமான சூழலைக் கட்டுப்படுத்தியதுதான் தி.மு.க. அரசின் மகத்தான சாதனை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கொரோனா வந்தபோது அதுபற்றி எதுவும் தெரியவில்லை, மருத்துவர்களுக்கேத் தெரியவில்லை, மருந்தும் இல்லை, தடுப்பூசியும் இல்லை என்று இப்போதிருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழப்பமான சூழலில்தான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டச் சொன்னேன். பலமுறை நான் சொன்னேன். “ஸ்டாலின் என்ன டாக்டரா ?” என்று இப்போதிருக்கிற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். நான் உள்ளபடியே கோபப்படவில்லை.

உண்மை என்னவென்றால், கொரோனாவுக்குப் பிறகு தமிழ்நாட்டில் அனைத்து பொதுமக்களும் டாக்டர் ஆகிவிட்டார்கள். அதுதான் உண்மை. எல்லோருமே பாதி டாக்டராகத்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இனிமேல் நாம் யாருமே, யாரையுமே நீங்கள் டாக்டரா என்று கேட்க முடியாது. அந்த அளவுக்கு நிலைமை ஆகிவிட்டது.

நான் எதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டச் சொன்னேன் என்றால், அனைத்துத் தரப்பினரது ஆலோசனையையும் கேட்கவேண்டும் என்பதற்காகத்தான். கழக ஆட்சி அமைந்ததும், அனைத்து சட்டமன்றக் கட்சிக் குழுவை உள்ளடக்கி ஒரு குழுவை நியமித்தோம். அ.தி.மு.க. சார்பிலேகூட முன்னாள் அமைச்சர் மருத்துவர் மாண்புமிகு விஜயபாஸ்கர் அவர்கள்கூட அதில் இடம்பெற்றிருக்கிறார். இந்தக்

குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுதான் இன்றைய அரசு செயல்படுகிறது. எனவே, கொரோனா தடுப்புப் பணிகள் குறித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரது கோரிக்கைகளையும், ஆலோசனைகளையும் தங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மூலமாக அரசுக்கு நீங்கள் தொடர்ந்து சொல்ல வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் உரிமையோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால், இது அரசியல் பிரச்சினை அல்ல; கட்சிப் பிரச்சினையும் அல்ல; ஆட்சியின் பிரச்சினையும் அல்ல; மக்கள் பிரச்சினை. மக்கள் நலன் சார்ந்திருக்கக்கூடிய பிரச்சினை. எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது, 'நான் தவறாகச் சொல்லவில்லை, அனைவரும் சேர்ந்து செயல்பட வேண்டும்' என்று சொன்னார்கள். அதற்காக அவருக்கு நான் மீண்டும் மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அனைவரும் சேர்ந்து செயல்பட்டு, அனைத்து தரப்பினரது ஆலோசனையையும் பெற்று கொரோனாவுக்கு முழுமையான முற்றுப்புள்ளியை இந்த அரசு வைக்கும் என்று நான் உறுதிபட இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தி.மு.க. அரசு செய்துள்ள சாதனைகளைத் தொடர்ந்து சொல்லவேண்டுமானால், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப் போராடியவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் – மக்களுக்காகக் குரல் கொடுத்த அரசியல் கட்சித் தலைவர்கள் மீதான வழக்குகள், அனைத்தும் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்டெர்லைட் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுகள், அதாவது 17 பேருக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ற வேலை வழங்கப்பட்டிருக்கிறது. ஸ்டெர்லைட் போராட்டத்தில் தாக்கப்பட்டு, காயமடைந்த 94 பேருக்குத் தலா 1 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்க அனைத்து சட்டமன்றக் கட்சி உறுப்பினர்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

செங்கல்பட்டில் இருக்கும் தடுப்பூசி மையத்தையும், ஊட்டியில் உள்ள பாஸ்டர் நிறுவனத்தையும் செயல்பட வைக்க மாண்புமிகு பிரதமரை வலியுறுத்தியிருக்கிறோம். ஊடகவியலாளர்கள் கொரோனா தொற்றால் இறக்க நேரிட்டால் 10 இலட்சம் ரூபாய் நிவாரணம் என அறிவித்து அதையும் செயல்படுத்தியிருக்கிறோம். சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட மத்தியக் கிழக்கு நாடுகளில் இருந்து ஆக்சிஜன், ரெகுலேட்டர்கள், ஆக்சிஜன் நிரப்ப சிலிண்டர்கள் வாங்கப்பட்டன.

கொரோனா தொற்றால் பெற்றோர்கள் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதி மற்றும் மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை ரூ.3,000, பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு உடனடி நிவாரணமாக ரூ.3 இலட்சம், கல்வி மற்றும் விடுதிக் கட்டணத்தை அரசே ஏற்கும் என இப்படி பல்வேறு சலுகைகளை அறிவித்துச் செயல்படுத்தியிருக்கிறோம்.

திருக்கோயில்களில் மாத ஊதியமின்றிப் பணியாற்றக்கூடிய அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகளுக்கு ரூ.4 ஆயிரம், மருத்துவ முன்களப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை, காவலர் முதல் ஆய்வாளர் வரைக்கும் ரூ.5 ஆயிரம் ஊக்கத்தொகை, திருநங்கையருக்கு நிவாரண உதவி அளித்திருக்கிறோம்.

கொரோனா தடுப்புப் பணியில் இறந்த மருத்துவர்கள், காவல்துறையினர் ஆகியோரின் குடும்பத்துக்கு ரூ.25 இலட்சம் நிதி வழங்கப்பட்டது. சென்னையில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவமனை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாபெரும் நூலகம் அமைக்கப்பட அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் எழுத்தாளர்களுக்கு இலக்கிய மாமணி விருது, அவர்கள் வாழ கனவு இல்லம் அறிவிக்கப்பட்டது. தமிழின்

தலைசிறந்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களது நினைவைப் போற்ற கோவில்பட்டியில் சிலை அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் 30 கோடி ரூபாய் செலவில் நெல்சேமிப்புக் கிடங்குகள், உலர்களங்கள் அமைக்கப்படும். நீட் தேர்வு தாக்கம் குறித்து ஆராய்வதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் ஆணையம், தொழிற்கல்வியில் அரசுப் பள்ளி மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்க ஓய்வுபெற்ற தலைமை நீதியரசர் முருகேசன் தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவுக்கு பேராசிரியர் ஜெயரஞ்சன் உள்ளிட்ட 8 ஆளுமைகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பதினான்கு வகையான மளிகைப் பொருட்கள் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 977 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளது. அரியலூர், கடலூர் மாவட்டங்களில் ஓ.என்.ஜி.சி அனுமதி கேட்ட 15 எண்ணெய்க் கிணறுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

மேட்டூர் அணை ஜூன் 12ஆம் நாள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, 4061 கிலோ மீட்டர் தொலைவிலான காவிரி கால்வாய்கள் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்குத் தேவையான 25 முக்கியக் கோரிக்கைகளோடு மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து அவற்றை விளக்கமாக எடுத்து வைத்திருக்கிறோம். மேகதாது அணை கட்டும் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும் கருநாடக அரசுக்குக் கண்டனம் தெரிவித்தோம். டவ்தே புயலில் காணாமல் போன 21 மீனவர்களின் குடும்பங்களுக்குத் தலா 20 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. மின்னகம் என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையத்தைத் தொடங்கி வைத்திருக்கிறோம்.

அதுமட்டுமின்றி, மூன்று நாட்களுக்கு முன்பு ஆளுநரின் உரை மூலமாக ஏராளமான கொள்கை அறிவிப்புகளைச் செய்திருக்கிறோம். இந்த ஆட்சி எதுவும் செய்யவில்லை என்று கூறுவோர்க்கு இதுதான் என்னுடைய பதில்.

இதுவரை ஐம்பது நாட்களுக்குள் செய்திருக்கக்கூடிய மிக முக்கியமான சாதனைகளில் சிலவற்றைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறேன். இவற்றை எதிர்க்கட்சிகள் வேண்டுமானால் மறைக்கலாம். ஆனால் மக்களுக்கு நிச்சயமாக நன்கு தெரியும்.

ஆளுநர் உரை குறித்துப் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், “யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே என்பார்கள். இந்த அறிக்கையில் மணியோசையும் இல்லை. யானையும் இல்லை” என்று சொன்னார்கள். யானை என்று சொன்னதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். அடக்கப்பட்ட யானைக்குத்தான் மணி கட்டுவார்கள். தி.மு.க. என்பது யாராலும் அடக்க முடியாத யானை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான்கு கால்கள்தான் யானையினுடைய பலம். ‘சமூகநீதி, சுயமரியாதை, மொழி–இனப்பற்று, மாநில உரிமை’ ஆகிய நான்கின் பலத்தில்தான் தி.மு.க.வும் நிற்கிறது; இந்த அரசும் நிற்கிறது. இந்த ஆளுநர் உரையைப் படிப்பவர் கண்களுக்கு சமூகநீதியும், சுயமரியாதையும், தமிழுக்கும், தமிழர்க்கும் நாங்கள் செய்ய இருக்கும் நன்மைகளும், மாநில உரிமைகளுக்கான எங்களது முழக்கங்களும் நிச்சயம் தெரியும்.

தமிழ்நாட்டின் கருவூலம் எப்படி திசைமாறி, உருமாறி, தேய்ந்து, ஓய்ந்து கிடக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். அதைச் சீர்படுத்துவதே எங்களுடைய முதல் வேலை. அதையெல்லாம் மனதிலே வைத்துத்தான் இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பேராசிரியர் ரகுராம் ராஜன் அவர்கள் உள்ளிட்ட

பொருளாதார அறிஞர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்திருக்கிறோம். இன்றைய நிதி நிலைமையில், ஏழை, எளிய, நடுத்தர மக்களும், பாட்டாளி வர்க்கத்தினரும் வாழ்வாதாரத்தை இழந்து நிற்பதால், அவர்களுக்கு நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளித்து வருகிறோம். இருப்பதை எப்படிப் பெருக்குவது, பெருக்கியதை எப்படிப் பகிர்ந்தளிப்பது, மாநிலத்தின் வளத்தையும், நலத்தையும் எப்படிப் பேணுவது, உயர்த்துவது என்பதை, ஆழ்ந்து, ஆராய்ந்து, "சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்" செயலாற்றுவோம் என்ற என்னுடைய உறுதியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கோருகிறேன்.

அவசரப்பட்டு, ஆளுநர் உரையிலே அது இல்லையே, இது இல்லையே என்றெல்லாம் சொன்னீர்களே! தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள வாக்குறுதிகள் ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ளன. அவற்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

- வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கை,
- மீண்டும் உழவர் சந்தைகள்,
- இந்திய அலுவல் மொழிகளில் ஒன்றாகத் தமிழ் இருக்க வேண்டும்,
- சிறு குறு தொழில்கள் மீட்டெடுப்பு,
- வட மாவட்டங்களில் தொழில் பெருக்கம்,
- புதிய துணை நகரங்கள்,
- தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு நிறுவனங்களிலும் பொதுத் துறை நிறுவனங்களிலும் தமிழர்க்கு முன்னுரிமை,
- 69 விழுக்காடு இடஒதுக்கீட்டுக்குப் பாதுகாப்பு,
- மேகதாது அணைக்கு எதிர்ப்பு,

- கச்சத்தீவு மீட்பு,
- நீட் தேர்வு ரத்து,
- உள்ளாட்சித் தேர்தல்,
- பட்டியலினத்தவர் பணியிடம் நிரப்புதல்,
- சென்னைப் பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக் குழு அமைக்கப்படும்,
- திருக்கோயில்களின் பராமரிப்பைச் செம்மைப்படுத்த ஆலோசனை வழங்க மாநில அளவில் உயர்மட்ட ஆலோசனைக் குழு,
- பணிபுரியும் மகளிருக்கு மாவட்டந்தோறும் மகளிர் விடுதிகள்,
- சச்சார் குழுவின் பரிந்துரைகளை இந்த அரசு திறம்பட செயல்படுத்தும்,
- சேவைகள் உரிமைச் சட்டம் அறிமுகப்படுத்தப்படும்,
- நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை,
- பொருளாதாரத்தை மீட்க வல்லுநர் குழு

– இப்படி எத்தனையோ அறிவிப்புகள் ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் இருப்பவைதான்.

ஆளுநர் உரையிலே இருப்பதை எல்லாம் விடுத்து, இது இதெல்லாம் இல்லையே என்று ஆதங்கப்படுபவர்களுக்கு, “திருச்சியிலே நின்றுகொண்டு, அங்கே இருக்கும் மலைக்கோட்டையையும், கரைபுரண்டோடும் காவிரியையும், கல்லணையையும் காணாமல், “தில்லை நடராசர் எங்கே ?” என்று கேட்பவர்களைப் பற்றி என்ன நினைப்பீர்கள் ?” என்று பேரறிஞர்

அண்ணா அவர்கள் சொன்னதையே நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எங்களது பழைய கொள்கைகளுக்கு மாறுபாடு இருந்தால் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு அதைக் குறிப்பிடவில்லை, இதைக் குறிப்பிடவில்லை என்பது சரியான குற்றச்சாட்டாக இருக்க முடியாது. ஒரு புத்தகத்தில் அனைவருடைய பெயரும் இருக்க வேண்டுமென்றுச் சொன்னால், அது டெலிபோன் டைரக்டரியாகத்தான் இருக்க முடியும். இந்த ஆளுநர் உரை என்பது தி.மு.க. அரசாங்கம் போகும் பாதையை டைரக்ட் பண்ணும் புத்தகம்.

இந்த உரைமீது கருத்து சொன்ன, ஆலோசனைகள் சொன்ன அத்தனை பேருக்கும், அதேபோன்று, நன்றி சொல்லிப் பாராட்டிய அத்தனை பேருக்கும், ஒருவேளை நன்றி தெரிவிக்க மறந்த அனைவருக்கும் நான் இந்த நேரத்திலே நன்றி சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல், ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ள சில முக்கிய கருத்துகளுக்குச் செயல்வடிவம் கொடுத்திடுவதற்கான சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

கொரோனா நோய்த் தொற்று குறைந்துள்ளபோதும், அந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களுக்கு சில பிரச்சினைகள் (Complications) வருவதாகப் பலரும் தெரிவித்துள்ளனர், தொடர்ந்து தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தொடர்ந்து சிகிச்சை பெறுவதற்கு அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் சிறப்பு சிகிச்சை மையங்கள் (Post COVID Clinics) தொடங்கப்படும். தேவைப்படும் உயர்சிகிச்சை மருத்துவர்களோடு (Specialist Doctors) இந்த மையங்கள் செயல்படும்.

நம் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் தகுந்த வேலைவாய்ப்பு கிடைப்பதே அவர்களின் முன்னேற்றத்திற்கும்

நம் தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமையும் என நான் உறுதியாக நம்புகிறேன். இந்த நோக்கத்தோடுதான் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள வட மாவட்டங்களில் அதிக வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடிய தொழிற்சாலைகளை அமைப்போம் என்று அறிவித்திருக்கிறோம். இதன் முதற்கட்டமாக, செய்யாறில் 12,000 பேருக்கும், திண்டிவனத்தில் 10,000 பேருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய பெரும் தொழிற்சாலைகள் அமையவுள்ளன.

கடந்த ஆட்சியில் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக ஊடகங்கள் மீது அரசு தொடர்ந்த வழக்குகள், மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராகப் போராடிய விவசாயிகள் மீதான வழக்குகள், குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடியவர்கள் மீதான வழக்குகள், மீத்தேன், நியூட்ரினோ, கூடங்குளம் அணு உலை, சேலம் எட்டுவழிச் சாலை ஆகிய திட்டங்களுக்கு எதிராக அறவழியில் போராடிய மக்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும்.

ஏற்றத்தாழ்வை இடித்து, சமூகத்தை சமப்படுத்தப் போராடிய தந்தை பெரியார் பெயரால் 240 சமத்துவபுரங்களைக் கட்டினார் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அந்த சமத்துவபுரங்கள் சரியாக பராமரிக்கப்படாத அவல நிலையில் இப்போது இருக்கின்றன. அந்த சமத்துவபுரங்கள் உடனடியாக சீரமைக்கப்படும். அதுமட்டுமல்ல, தமிழகத்தில் மேலும் புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், திருக்கோயில்களின் புனரமைப்புக்காக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்ற வாக்குறுதி இருந்தது. அதற்கு முதற்கட்டமாக இந்த நிதியாண்டில் 100 கோடி ரூபாய் செலவில் திருக்கோயில்களைத் தொன்மை மாறாமல் புதுப்பிக்க, திருக்குளங்களைச் சீரமைத்திட, திருத்தேர்களைப் புதுப்பித்து திருவிழாக்கள் நடத்திடத் தேவையான பணிகள் 100 திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படும்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், ஆளுநர் உரையைப் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்தும், ஒரு சிலர்—குறிப்பாக, எதிர்கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் குறைகள் என சிலவற்றைச் சுட்டிக்காட்டியும் பேசி இருக்கிறார்கள். ஆளுநர் உரையில் எதுவுமே இல்லை என்பதைப்போல பேசுவது, உண்மையான நிலை என்று ஆகிவிடாது; மக்களும் அப்படிக் கருதிவிட மாட்டார்கள்; அவர்கள் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, அதிகாரிகளிடையே நான் பேசும்போது முதல் கூட்டத்திலே நான் சொன்னேன். “எனக்குப் புகழுரை வேண்டாம்; உண்மைகளைச் சொல்லுங்கள்” என்று வலியுறுத்தி இருக்கிறேன். அப்படி நான் சொன்னது ஆக்கப்பூர்வமான கருத்துகளை எடுத்துரைக்க வேண்டும் என்கிற அந்த நல்லெண்ணத்தில்தான். ஆனால், நிறைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, இல்லாத குறைகளை உருவாக்கி, ஓங்கி உரைப்பது ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு வழிகாட்டுவது ஆகாது. எனினும், எதிர்கட்சிகளைச் சார்ந்தவர்கள் குறைகளைத் தேடிக் கண்டுபிடித்துச் சொல்லத்தான் செய்வார்கள்; அதனால்தான் அவர்கள் எதிர்கட்சி; மாற்றுக் கருத்துகளை, வேறுபட்ட எண்ணங்களை வெளிப்படுத்த ஜனநாயகம் இடம் அளித்திருக்கிறது. புகழுக்கு மயங்கவும் மாட்டேன். குறைகூறுவதால் குன்றிவிடவும் மாட்டேன். ஏனென்றால், இரண்டையுமே அதிகளவு எனது வாழ்க்கையில் நான் பார்த்துவிட்டேன்.

புகழுரைகள், என்னை அதிகளவு அடக்கமானவனாகவும், புகழுரைக்கும்போது அது என்னை மேலும் பக்குவப்படுத்துவதற்கு நான் பயன்படுத்துவேன். எச்சரிக்கை உள்ளவனாகவும் அது ஆக்கி இருக்கிறது. ஏன், என் மீது இதுவரை சொல்லப்பட்ட பழிகள், அவமானங்கள் ஆகியவை என்னை மேலும் மேலும் உழைக்கவும், உண்மையாக இருக்கவும்தான் தூண்டுகிறது. அப்படித்தான் நான் பயன்படுத்தப்போகிறேன்.

ஏனெனில், இந்த மன்றத்தில் வைக்கப்பட்டப் புகழுரை, இகழுரை இரண்டையும் எனக்கான உரமாகவேக் கொண்டு எனது அரசியல் பயணத்தை நான் தொடர்கிறேன். ஒரு மாபெரும் தலைவரின் மகனாக இருந்தாலும், அந்தப் பகட்டோடு நான் என்றைக்கும் நடந்துகொண்டது கிடையாது. அந்தத் தலைவருக்கு கடைசித் தொண்டனாகத்தான் நான் நடந்துகொண்டேன். இது எனது இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தெரியும். அந்தத் தலைவருக்கும் தெரியும்.

என்னுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் அந்த அன்புத் தலைவர் வங்கக் கடலோரத்தில் அல்ல; கோடிக்கணக்கான மக்களுடைய இதயத்தில் குடிகொண்டிருக்கிறார். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மறைவுக்குப் பிறகு, அவர் இடத்தில் தலைமைத் தொண்டனாகத்தான் நான் உட்கார்ந்திருக்கிறேனேத் தவிர, பேரறிஞர் அண்ணாவின் இடத்தில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் இடத்தில் உட்கார்ந்துவிட்டேன் என்ற கர்வம் எனக்கு ஒரு துளியும் கிடையாது. இன்றல்ல, அது என்றும் இருக்காது. இத்தகைய மனநிலை கொண்ட நான் இந்த அவைக்குச் சொல்ல விரும்புவது, அரசியல் எல்லைகளைக் கடந்து, விருப்பு வெறுப்புகளைக் கடந்து, தமிழ்நாட்டு மக்களுக்காக நம்மை நாமே ஒப்படைத்துக்கொள்வோம் என்பதுதான்.

ஆறாவது முறையாக, கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், தமிழ்நாட்டு மக்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் அளித்திடும் வகையில், எப்படி நானும், அமைச்சர் பெருமக்களும் ஓயாது, ஓடியாடிப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோமோ, இதையெல்லாம் இந்த நாடறியும்; நல்லவர்கள் அறிவார்கள்.

நோபல் பரிசு பெற்ற அபிஜித் பானர்ஜி முதல் ‘இந்து’ என். ராம் வரை; பொருளாதார நிபுணர் கவுசிக் பாசு, ஒன்றிய அரசின் முன்னாள் நிதி அமைச்சரும் பொருளியல் சிந்தனையாளருமான ப. சிதம்பரம்

தொடங்கி, நடுநிலை நாளேடுகள் மற்றும் இதழ்கள் வரை, கழக அரசு குறுகிய காலத்தில் நிகழ்த்தியிருக்கக்கூடிய இந்தச் சாதனைகளை வரவேற்றுப் பாராட்டி இருக்கிறார்கள். கழக அரசின் சாதனைகளுக்கு அவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் மனமுவந்து வழங்கி இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் என்னுடைய நன்றிக்குரியவர்கள்.

எங்களைப் பொருத்தவரையில், தேர்தல் கால வாக்குறுதிகளை, வாக்குகளை ஈர்ப்பதற்கான காந்தம் எனக் கருதாமல், நாட்டின் மேம்பாட்டுக்கு, நாட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உறுதியாகச் செய்தே தீர வேண்டிய செயல்கள் என்றே நாங்கள் கருதுகிறோம்; "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்பது, முத்தமிழறிஞர் கலைஞர் எங்களுக்குத் தந்த ஆரம்பக் கல்வி அது.

கழகம் மகத்தான வெற்றிபெற்று ஆறாவது முறை ஆட்சி அமைக்கக் காரணமான தமிழ்நாட்டு மக்களை இருகரம் கூப்பி, என்னுடைய தலை தாழ்த்தி, எனது பணிவு அனைத்தையும் ஒருங்கே திரட்டி மீண்டும் வணங்குகிறேன்; மனமும், வாயும் மணக்க மணக்க, பல்லாயிரம் முறை நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றத்தைப் படைத்த தமிழ்நாட்டு மக்களை மறந்துவிட முடியுமா ? இராமலிங்க அடிகள் மனம் உருகிச் சொன்னதைப்போல, "பெற்ற தாய்தனை மக மறந்தாலும், பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும், உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும், உயிரை மேவிய உடல் மறந்தாலும், கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும், கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்" எங்கள் இதயத்தின் இயங்கு சக்தியாக இருக்கும் தமிழ்நாட்டு மக்களை என்றைக்கும் நாங்கள் மறக்க மாட்டோம்.

ஆறாவது முறையாக அமைந்துள்ள கழக ஆட்சியின் முதலாவது ஆளுநர் உரை என்பதால், அரசியல், கட்சி, இந்த வேறுபாடுகளை எல்லாம் மறந்து, குறை எதுவும் இருப்பின் பொருட்படுத்தாமல்,

அதையும் மறந்து, மாண்புமிகு உறுப்பினர் உதயசூரியன் அவர்கள் முன்மொழிந்து, மாண்புமிகு உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் வழிமொழிந்த இந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை அனைவரும் ஆதரித்து, புதியதொரு வரலாறு படைத்திடும் எனது முயற்சிக்கு ஊக்கமளித்திடுவீர் என்று அன்புடன், பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிற அதேநேரத்தில், மக்களுக்குப் பணியாற்ற வேண்டியது ஒரு அரசினுடைய கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு இந்த மாமன்றத்தில் கூடியிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இந்த விளக்கங்களுக்குப் பிறகு என்னுடைய விளக்கங்களை ஏற்று நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது திருத்தங்களைக் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டும் எனக் கேட்டு விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

---

*மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்திற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பதிலளித்து ஆற்றிய உரை – **24.06.2021***

# தமிழ்நாட்டின் முதலமைச்சராக மகிழ்கிறேன், கலைஞரின் மகனாக நெகிழ்கிறேன்



தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா, கோடிக்கணக்கான தமிழ் மக்களின் நெஞ்சங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழா, ஆகிய விழாக்களுக்குத் தலைமை விருந்தினராக வருகைபுரிந்து விழாப் பேருரை ஆற்றவிருக்கின்ற மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் அவர்களே!

விழாவுக்குத் தலைமை வகித்து தலைமையுரை ஆற்றவிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்களே! சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதியரசர் மாண்புமிகு திரு.சஞ்சிப் பானர்ஜி அவர்களே!

தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று உரையாற்றிய மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு அவர்களே!

மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! நன்றியுரை ஆற்றவிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு.கு.பிச்சாண்டி அவர்களே! தலைமைச் செயலாளர் அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! சிறப்பு அழைப்பாளர்களே, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்களே, முக்கியப் பிரமுகர்களே, சட்டமன்றப் பேரவைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே, அரசு ஊழியர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க நாளாக இந்த ஆகஸ்ட் 2ஆம் நாள் இனி வரும் காலங்களில் சிறப்புப் பெறவிருக்கிறது என்பதை நான் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் மட்டுமல்ல, இந்திய வரலாற்றிலும் மிக முக்கியப் பங்கு வகிக்கும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் இன்றைக்கு வருகை புரிந்திருக்கிறார்கள்.

நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் நலனை முன்னிறுத்தி, வாதாடுவதில், போராடுவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்; இந்திய ஆட்சிப் பணி கிடைத்தும், அதனை ஏற்காமல், வழக்கறிஞராகப் பணியாற்றியவர். சமூகநீதியைத் தனது வாழ்வின் இலக்காகக் கொண்டவர். இத்தனைப் பெருமைகளுக்குரிய அவர், இன்றைக்கு நம்முடைய

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு வருகை தந்திருப்பது, நாமெல்லாம் பெருமைப்படத்தக்க ஒன்றாகும்.

பழமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட இந்தச் சட்டமன்றம், கடந்த ஒரு நூற்றாண்டில் பல புதுமையான சட்டங்களை, முன்னோடித் திட்டங்களை உருவாக்கி, சமதர்ம சமூகத்தைப் படைத்திட வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது.

**1919**ஆம் ஆண்டில் 'மாண்டேகு – செம்ஸ்போர்டு' சீர்திருத்தங்களின் அடிப்படையில் இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டத்தின் மூலம்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்நாளைய மாகாண சட்டமன்றங்களில் முதன்முதலில் இடம்பெறத் தொடங்கினர். அச்சட்டமே பின்னர் மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் உருவாவதற்கு வழிகோலியது. அந்தச் சட்டத்தின்படி, சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு **1920**ஆம் ஆண்டு முதன்முதலாகத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் திராவிட இயக்கத்தின் தலைமகனான நீதிக்கட்சி வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தது.

**1921**ஆம் ஆண்டு கன்னாட் கோமகன் அவர்களால் முதல் மாகாண சுயாட்சி சட்டமன்றம் தொடங்கி வைக்கப்பட்டதன் பவளவிழா நிகழ்ச்சியும், அதேபோல **1935**ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் முதன்முதலாக **1937**ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏற்படுத்தப்பட்ட சென்னை சட்டமன்றப் பேரவையின் வைரவிழா நிகழ்ச்சியும், **1997**ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசால் சிறப்புடன் கொண்டாடப்பட்டதை, நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற இந்த வேளையில் நான் நினைவுகூர விரும்புகிறேன்.

அதேவேளையில், இந்தப் பெருமைமிகு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு சில சட்டங்களை எடுத்துச் சொல்லவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே மகளிருக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டத்தை முதன்முதலாக நிறைவேற்றியப் பெருமை சென்னை மாகாணச் சட்டமன்றத்திற்கு உண்டு. அதோடு, தேவதாசி ஒழிப்புச் சட்டம், மகளிருக்கு உள்ளாட்சிப் பதவிகளில் உரிய இடஒதுக்கீடு, பெண் குழந்தைகளைப் பாதுகாக்க சிறப்புத் திட்டம் என மகளிர் நலன் காப்பதில் நாட்டிற்கே முன்னோடித் திட்டங்களை உருவாக்கித்தந்த பெருமை கொண்டது.

அதுமட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மாநிலத்திற்கு ‘‘தமிழ்நாடு’’ எனப் பெயர் சூட்டி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தனித் தீர்மானம் நிறைவேற்றியது; சுயமரியாதை மற்றும் சீர்திருத்தத் திருமணத்தை செல்லுபடியாக்கிடச் சட்டம் வகுத்தது; நிலச் சீர்திருத்தச் சட்டம் உருவாக்கியது; மே தினத்தை அரசு விடுமுறை ஆக்கிட வழிவகுத்தது; மாநில சுயாட்சிக்கான தீர்மானம் நிறைவேற்றியது; பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்கிட சட்டம் கண்டது; டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைத்திட சட்டம் நிறைவேற்றியது; தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது என பார் போற்றும் பல்வேறு சட்டங்களை, தீர்மானங்களை நிறைவேற்றியப் பெருமை இந்தச் சட்டமன்றத்திற்கு உண்டு. சீர்மிகு இந்தச் சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவில் இன்றைக்கு நாமெல்லாம் பங்கேற்றுள்ளோம் என்பதே நாம் எண்ணிப் பெருமிதம் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை நிலைநாட்டப்பட்ட மாபெரும் வளாகம் இது. அரசு முத்திரையில் ‘‘வாய்மையே வெல்லும்’’

எனத் தமிழ்மொழி அரியணையில் அமர்ந்து அலங்கரிப்பதையும் கண்டு மகிழ்கிறோம் நாம். மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர், ஏழை, எளியவர் என விளிம்பு நிலை மக்களின் நலன் காக்க இந்தச் சட்டமன்றம் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது.

நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்தச் சட்டமன்றத்தில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக தனது ஜனநாயகக் கடமையை செம்மையாக நிறைவேற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நினைவுகூர்ந்து, அவரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்திருப்பது அனைத்திற்கும் முத்தாய்ப்பானதாகும்.

1957ஆம் ஆண்டு இந்த மன்றத்திற்கு முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, தனது கன்னிப்பேச்சில் நங்கவரம் உழவர்கள் பிரச்சினை குறித்துப் பேசி, அனைவரது கவனத்தையும் ஈர்த்து முத்திரை பதித்தவர் கலைஞர் அவர்கள். முதலமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, அமைச்சராக, உறுப்பினராகப் பல்வேறு பொறுப்புகளில் மக்கள் பணியாற்றி, பலரது பாராட்டுகளையும், அன்பையும் பெற்றவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

சமூகநீதிக்கு அடித்தளம் அமைத்த மண்டல் ஆணைய அறிக்கையைச் செயல்படுத்த தீர்மானம், தமிழ்நாட்டின் காவிரி நதிநீர் உரிமையை நிலைநாட்ட காவிரி நடுவர் மன்றத்தை அமைக்கக் கோரும் தீர்மானம், தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை நீக்கிட, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம், மாணவர்கள் உயர்கல்வி பெறுவதில் இருந்த இடர்களை நீக்க நுழைவுத் தேர்வை ஒழிக்கும் சட்டம் போன்ற பல்வேறு புரட்சிகர சீர்திருத்தத் தீர்மானங்களையும், சட்டங்களையும் இயற்றி, தமிழர்களின் வாழ்வில் ஒளியேற்றியத் தலைவர் கலைஞர்

அவர்களை, அவரது 50 ஆண்டுகால சட்டமன்றப் பணிகளைப் பாராட்டி நடைபெற்ற பொன்விழாவில் பங்கேற்று சிறப்புரை ஆற்றிய பொதுவுடைமைப் போராளியும், முன்னாள் மக்களவைத் தலைவருமான திரு.சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள், “கொள்கைகளுக்காகவும், இலட்சியங்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, அதற்குத் தீங்கு வரும்போது எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருந்தவர் கலைஞர்” – என்று பாராட்டிப் பேசியதை நினைத்துப் பார்க்கும்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் எத்தகையதொரு மாபெரும் தலைவராக விளங்கினார் என்பது தெள்ளத் தெளிவாக விளங்கும்.

‘உடன்பிறப்பே! உன் இயல்பு என்மீது அன்பைப் பொழிவது!
என் இயல்பு உன் அன்புக்குக் கட்டுப்படுவது!
நம் இயல்பு கழகத்தைக் கட்டிக் காப்பது!’

– என்று தனது காந்தக் குரலால் தமிழ்நாட்டு மக்களைக் கட்டிப் போட்டு வைத்திருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அவரது திருவுருவப் படத்தைப் பார்க்கும்போது, சர் பிட்டி தியாகராயர், டி.எம். நாயர், டாக்டர் நடேசனார் தொடங்கி இனமானப் பேராசிரியர் வரையிலான பல மாபெரும் தலைவர்களின் முகங்களை நான் காண்கிறேன்.

முன்னாள் முதலமைச்சரான அவரது திருவுருவப் படத்தைப் பார்க்கும்போது, இன்றும் நம் முன்னால் இருந்து வழிநடத்தும் ஒரு முதலமைச்சராக அவரைக் காண்கிறேன்.

இந்தியாவின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் அவர்கள், தமிழன்னையின் தலைமகனான கலைஞர் அவர்களின்

திருவுருவப் படத்தைத் திறந்துவைத்ததை எண்ணி, தமிழ்நாட்டின் முதலமைச்சராக மகிழ்கிறேன் – கலைஞரின் மகனாக நெகிழ்கிறேன்.

I take this opportunity to thank our Honourable President for gracing this house with his presence and making this historic event more special.

I also like to express my sincere gratitude to our Honourable Governor of Tamil Nadu for presiding over.

ஜனநாயக மாண்பைக் காக்கும் தமிழ்நாடு சட்டமன்றம் இன்னும் பல நூற்றாண்டு விழாக்களைக் கண்டு, அடித்தட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில் பல்வேறு சட்டங்களை இயற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நன்றி, வணக்கம்!

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. மு.க.**ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், தமிழக சட்டமன்றப் பேரவையின் நூற்றாண்டு விழா மற்றும் மாண்புமிகு தமிழக முன்னாள் முதல்வர் திரு.மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப்படத்திறப்பு விழாவில் பங்கேற்று ஆற்றிய உரை – **02.08.2021***

## நாட்டுக்காக
## நாள்முழுக்க உழைக்கிறோம்...



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து இன்றோடு 100 நாட்கள் ஆகிறது.

அந்தப் பெருமையின் அடையாளமாக, கழக ஆட்சியையும் என்னையும் பாராட்டி உரையாற்றி இருக்கக்கூடிய, முன்வரிசையில் அமர்ந்திருக்கக்கூடிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள், உறுப்பினர்கள் அத்தனைப் பேருக்கும் முதலில் எனது இதயப்பூர்வமான நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

100 நாட்கள் கடந்ததைப்பற்றி இங்கே நீங்கள் எல்லாம் பெருமையோடு பேசினீர்கள். ஆனால், எனக்கு அடுத்து வரும் காலத்தைப்பற்றிய நினைப்பாகவே இருந்துகொண்டிருக்கிறது. தேர்தலுக்கு முன் கழகத்துக்கோ, எனக்கோ இருந்த எதிர்பார்ப்பை விட இந்த 100 நாட்களில் எதிர்பார்ப்பு மேலும் அதிகமாகி இருக்கிறது.

நீங்கள் எல்லாம் இப்போது பாராட்டினீர்கள் என்றால் பணியை முடித்துவிட்டதற்காக அல்ல, இன்னும் பணியைச் செய்ய வேண்டும் என்று ஊக்கப்படுத்தியிருக்கிறீர்கள், உற்சாகப்படுத்தியிருக்கிறீர்கள். அதைத்தான் நான் உணர்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வாக்களிக்காதவர்கள் கூட, இப்போது தேர்தல் நடந்தால் வாக்களிக்கத் தயாராக இருக்கிறார்கள். அந்தளவுக்கு ஒரு சிறப்பை, பெயரைப் பெற்றிருக்கிறோம். அந்தப் பெயரைக் காலம் எல்லாம் காப்பாற்ற வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணமாக இருக்கிறது.

என்னுடைய பணிக்குத் தோளோடு தோள் நிற்கும் நம்முடைய அமைச்சர் பெருமக்கள், பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அத்தனைப் பேருக்கும் நான் மீண்டும் மீண்டும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நீங்கள் குறிப்பிட்டீர்கள். ஆட்சிக்கு வரும்போது, கொரோனா என்ற ஒரு பெருந்தொற்று நம்மைச் சூழ்ந்திருந்தது. அதனை எதிர்கொள்ள போர்க்கால அடிப்படையில் நாம் எல்லாம் ஒருங்கிணைந்து செயல்பட்டோம். முதல் ஒரு மாத காலம் ஆம்புலன்ஸ் சத்தம்தான். அந்தச் சத்தம் நம்மை நிம்மதியாக இருக்கவிடவில்லை. அதையும் தாண்டி, மருத்துவமனையில்

இடம் இல்லை, ஆக்சிஜன் பற்றாக்குறை இப்படி ஏதாவது ஒரு செய்தி வந்து நம் மனதை வாட்டி வதைத்துக்கொண்டே இருந்தது. இதையெல்லாம் சமாளிக்கத்தான் உடனடியாக ஒரு War Room–ஐ நாம் ஏற்படுத்தினோம். மக்களின் கோரிக்கைகளைக் காதுகொடுத்துக் கேட்டோம். அதை முடிந்த வரைக்கும் நாம் நிவர்த்தி செய்தோம். இன்னும் சொல்லப்போனால் கோரிக்கைகளே வராத, வர முடியாத ஒரு சூழ்நிலையை இப்போது உருவாக்கியிருக்கிறோம். இலட்சக்கணக்கான மக்களைக் காப்பாற்றியதும் அவர்களுக்கு அரவணைப்பாக இருந்ததும்தான், என்னைப் பொறுத்தவரை, இந்த 100 நாளில் செய்த சாதனையில் பெரிய சாதனையாக நான் கருதுகிறேன்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரைப்போல இந்த அரசு நடவடிக்கை எடுத்தது என்று வருங்காலத் தலைமுறை சொல்லவேண்டும் நம்மைப் பற்றி.

தேர்தல் வாக்குறுதிகளை இப்போது நான் முழுதாக எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்லி உங்களையும் ஏமாற்றி என்னையும் ஏமாற்றிக்கொள்ள நான் தயாராக இல்லை, படிப்படியாக நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறோம். நிறைவேற்றுவோம்! அதில் எந்த மாற்றமும் கிடையாது. அது உறுதி.

நேற்றைய தினம், முதல் நிதிநிலை அறிக்கையை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கே தாக்கல் செய்திருக்கிறார்கள். நமது அரசின் நூறாவது நாளில், தமிழகத்தின் வரலாற்றில் பதிவாகக்கூடிய வகையில், நீங்கள் எல்லாம் பெருமையோடு சொன்ன அடிப்படையில், வேளாண்துறையின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அனைத்துத் துறைகளுக்கும் தாயுள்ளத்தோடு திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரி இல்லாத

நிதிநிலை அறிக்கையைக் கொடுத்துள்ளோம். இப்போதுதான் தொடங்கி இருக்கிறோம். படிப்படியாக அனைத்து வாக்குறுதியையும் நிச்சயமாக நிறைவேற்றிக் காட்டுவோம். யாருக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம்!

இங்கே படமாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னது என்னுடைய மனதில் இன்னும் ஆழமாக இருக்கிறது, ‘சொன்னதைச் செய்வோம் – செய்வதைச் சொல்வோம்’. அவர் இருந்து செய்ய வேண்டியதை அவர் மகன் நிச்சயம் செய்வான் என்ற உறுதியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஐந்து ஆண்டு கால ஆட்சியில் 100 நாட்கள் என்பது பதினெட்டில் ஒரு சதவிகிதம்தான். ஆனால், இந்த 100 நாட்களில் இந்த அரசு செய்த சாதனைகளை நான் இங்கே பட்டியல் போட்டால் மூன்று மணிநேரம் ஆகும். அதனால் அதைப் பட்டியல் போட விரும்பவில்லை. நேரம் கிடைக்கும்போதெல்லாம் அமைச்சர்களும் சொல்வார்கள், நானும் சொல்லக் காத்திருக்கிறேன்.

நாள் முழுக்க நாட்டுக்காக உழைக்கிறோம். ஒவ்வொரு நொடியும் மக்களுக்காகச் சிந்திக்கிறோம். தமிழ்நாட்டின் இழந்த பெருமையை மீட்டெடுக்க எங்களால் முடியும் என்ற நம்பிக்கை தரும் நாட்களாக இந்த 100 நாட்கள் அமைந்துள்ளது. நிதி நிலைமை மட்டும்தான் கொஞ்சம் கவலை தரக்கூடிய வகையில் இருக்கிறது. அதையும் விரைந்து சீர் செய்வோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது; உங்களின் ஒத்துழைப்போடுதான். சீர்மிகு தமிழ்நாட்டை உருவாக்குவோம். இந்தப் பெரும் பொறுப்பை நான் என் தோளில் சுமக்கத் தயாராகி விட்டேன். நீங்கள் அனைவரும் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையோடு எனது பயணத்தைத் தொடர்வேன்.

எனது அரசாகத்தான் முதலில் இது உருவானது. இப்போது நான் சொல்கிறேன், எனது அரசு அல்ல, நமது அரசு! இதுதான் என்னுடைய கொள்கை. ஆக, எமது அரசு, நமது அரசு என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் இந்த ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. எனவே வாழ்த்திய அனைவருக்கும் எனது நன்றிகள்! வாழ்த்த மனமில்லாதவர்களையும் வென்றெடுக்க அடுத்த 100 நாட்களில் இரண்டு மடங்காக நாங்கள் உழைப்போம், உழைப்போம், உழைப்போம்!

நன்றி, வணக்கம்!

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில்,*
*அரசுப் பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்ததையொட்டி*
*ஆற்றிய உரை – 14.08.2021*

# உறுதிமொழிகளை நிறைவேற்றுவதுதான் எங்களுடைய இலட்சியமே...



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் மாண்புமிகு உறுப்பினர் திரு.உதயகுமார் அவர்கள், இங்கே பல கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றிற்குரிய விளக்கங்களை நம்முடைய அமைச்சர் பெருமக்கள் இங்கே தந்திருக்கிறார்கள். எனவே, நான் அதிகம் விளக்கம் சொல்ல விரும்பவில்லை.

ஒரே வரியிலே சொல்லவேண்டுமென்றால், வெள்ளை அறிக்கை என்பது ஏதோ தேர்தல் நேரத்தில், தி.மு.க. வழங்கியிருக்கக்கூடிய உறுதிமொழிகள் எல்லாம் நிறைவேற்ற முடியாத நிலையிலே, பின்வாங்குவதற்கான முயற்சி என்ற பொருள்பட அவர் ஒரு கருத்தை எடுத்துப் பேசினார். நேற்றைக்கு முன்தினம் 100ஆவது நாள் காணக்கூடிய இந்த ஆட்சிக்குப் பாராட்டுத் தெரிவித்துப் பலர் இந்த அவையிலே பேசியபோது, நான் ஏற்புரை ஆற்றிப்

பேசுகிறபோதுகூட சொன்னேன். எந்தக் காரணத்தைக் கொண்டும், நாங்கள் அளித்திருக்கக்கூடிய வாக்குறுதிகளிலிருந்து என்றைக்கும் பின்வாங்க மாட்டோம்.

நீங்கள் கேட்கலாம், விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்வோம்; நகைக் கடனைத் தள்ளுபடி செய்வோம் என்றெல்லாம் சொன்னீர்களே! அதற்கெல்லாம் மழுப்பலான பதிலைச் சொல்லியிருக்கின்றீர்களே! என்ற அந்த அடிப்படையிலே உறுப்பினர் திரு.உதயகுமார் அவர்கள் இங்கே பேசியிருக்கலாம்.

உறுதியாகச் சொல்கிறேன். வெள்ளை அறிக்கையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையிலேகூட, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நகைக்கடன் வழங்க வேண்டுமென்று நாங்கள் கருதினாலும், அதில் பல முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. விவசாயிகளுடைய பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்வதைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, அதிலும் பல கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. அதையெல்லாம் முறையாக சரிசெய்து, அதற்குப் பிறகு நிச்சயமாக அது வழங்கப்படும் என்ற உறுதிமொழியைச் சொல்லியிருக்கிறோம்.

உங்கள் ஆட்சி நடைபெற்ற நேரத்தில், நீங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, நீங்கள் தந்த வாக்குறுதிகளை, உறுதிமொழிகளை நாங்களும் மறக்கவில்லை, நாட்டு மக்களும் மறக்கவில்லை. அவற்றில் சிலவற்றை நிறைவேற்றியிருக்கிறீர்கள், பலவற்றை நீங்கள் நிறைவேற்றவில்லை. அதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், இலவச செல்போன் தரப்படும் என்று சொன்னீர்கள்; தந்தீர்களா ? ஆவின் பால் பாக்கெட் விலை 25 ரூபாய் என்று சொன்னீர்கள்; கொடுத்தீர்களா ?

ஏழை மக்களுக்கு அம்மா மினரல் வாட்டர் இலவசமாகத் தரப்படும் என்று சொன்னீர்களே? யாருக்காவது கொடுத்திருக்கிறீர்களா? குறைந்த விலையிலே, அவசியமான மளிகைப் பொருட்கள் தரப்படும் என்று வாக்குறுதி கொடுத்தீர்கள். அது கொடுக்கப்பட்டதா?

அனைவருக்கும் அம்மா வங்கி அட்டை கொடுப்போம் என்று உறுதி கொடுத்தீர்கள். அந்த வாக்குறுதி என்ன ஆயிற்று? கோ–ஆப்டெக்ஸ் துணிகள் வாங்க 500 ரூபாய் கூப்பன் தரப்படும் என்று சொன்னீர்கள், அதைக் கொடுத்தீர்களா? பண்ணை மகளிர் குழுக்கள் அமைப்போம் என்றீர்கள், அதை அமைத்திருக்கிறீர்களா? அனைத்துப் பழங்களுக்குமான சிறப்பு அங்காடிகளை உருவாக்குவோம், கட்டித் தருவோம் என்று சொன்னீர்கள். எங்கேயாவது கட்டிக் கொடுத்திருக்கிறீர்களா?

அனைத்துப் பொது இடங்களிலும் wi-fi வசதி ஏற்படுத்தித் தருவோம் என்று சொன்னீர்கள், அப்படி வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிற இடத்தை எங்கேயாவது காட்டுங்கள். டாக்டர் அம்பேத்கர் பவுன்டேஷன் அமைக்கப்படும் என்று சொன்னீர்கள். அதை அமைத்தீர்களா? பட்டு–ஜவுளிப் பூங்காவை உருவாக்குவோம் என்று சொன்னீர்களே, அதை எங்கேயாவது உருவாக்கியிருக்கிறீர்களா? சென்னையிலே மோனோ–இரயில் விடப்படும் என்று சொன்னீர்கள். அதற்குப்பிறகு தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த மெட்ரோ இரயில் திட்டத்தைத்தான் நிறைவேற்றினீர்கள். இப்படி பெரிய பட்டியலே இருக்கின்றது.

விவசாயிகளுடைய பயிர்க் கடனைப் பொறுத்தவரையில், அதேபோன்று நகைக் கடனைப் பொறுத்தவரையில், எங்கெங்கு முறைகேடு நடந்திருக்கிறது, எங்கெங்கு தவறுகள் நடந்திருக்கின்றன என்பது குறித்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய துறை மானியக் கோரிக்கை

விவாத்திற்குப் பதிலளித்துப் பேசுகிறபோது, நிச்சயமாக அவை குறித்து ஆதாரப்பூர்வமாக உங்களிடத்திலே எடுத்துச் சொல்வார் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

உங்கள் ஆட்சியில் இதைச் செய்யவில்லையே, செய்யவில்லையே என்று நான் கேட்டதற்கு, அதேபோன்று நாங்களும் செய்யாமல் இருப்பதற்காக இதைச் சொல்கிறோம் என்று யாரும் கருத வேண்டாம். நிச்சயமாக, உறுதியாக, அதிலேயிருக்கக்கூடிய முறைகேடுகளை எல்லாம் களைந்து, இருக்கக்கூடிய நிதிப் பற்றாக்குறையையும் சரிசெய்து, உறுதியாக தேர்தல் நேரத்தில் வழங்கியிருக்கக்கூடிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதுதான் எங்களுடைய இலட்சியம், அதுதான் எங்களுடையப் பணி. எனவே, யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் வரவேண்டிய அவசியம் இல்லை.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்,*
*விவசாயக் கடன் மற்றும் நகைக் கடன்கள் குறித்த விவாதத்திற்கு,*
*பதிலளித்து ஆற்றிய உரை –* ***16.08.2021***

# நடைமுறைக்கு வந்த அனைத்து சாதியினரும் அர்ச்சகர் சட்டம்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், ஒரு விளக்கத்தை இங்கே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஆனால், ஒன்றை மட்டும் உறுதியோடு சொல்கிறேன். நம்மை ஆளாக்கிய நம்முடைய ஈரோட்டுச் சிங்கம், பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார் அவர்களுடைய நெஞ்சிலே தைத்த முள் இது. அந்த முள்ளை எடுத்திட வேண்டுமென்பதற்காக தலைவர் கலைஞர் அவர்கள், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருந்தார்கள். ஆனால், அது நடைமுறைக்கு வரமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால், இப்போது அதனை

நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்; அதற்கான பணி ஆணைகளை நாம் வழங்கியிருக்கிறோம்.

ஆனால், சிலர், அதைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள், இங்கேகூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, 'ஊடகத்திலே' என்று சொன்னார்கள். ஊடகத் துறையினரை நான் குறை சொல்ல விரும்பவில்லை. ஆனால், அதைப் பயன்படுத்திக்கொண்டு, சமூக வலைதளங்களில், இதை எப்படியாவது சீர்குலைக்க வேண்டும் என்ற எண்ணத்திலே சிலர் திட்டமிட்டு, சில காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். யாரையும், எந்தப் பணியிலிருந்தும் விடுவித்து இந்தப் பணி நியமன ஆணை வழங்கப்படவில்லை. அப்படி எங்கேயாவது வழங்கப்பட்டிருந்தால், அவர்கள் ஆதாரத்தோடு சொல்வார்களென்று சொன்னால், அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு நிச்சயமாக எடுக்கும். அதிலே எந்தவிதமான சந்தேகமும் படவேண்டிய அவசியமில்லை. ஆகவே, வேண்டுமென்றே அதைக் கொச்சைப்படுத்தி, அரசியலுக்காகவோ அல்லது சமூக நீதியைப் பாழடிக்க வேண்டுமென்ற நோக்கத்திலே சிலர் திட்டமிட்டு செய்து கொண்டிருப்பதை மக்கள் நன்றாக அறிவார்கள் என்பதை மாத்திரம் நான் தங்கள் மூலமாக இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பது குறித்த விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை – **17.08.2021***

# சட்டத்தின் ஆட்சியை இந்த அரசு நிச்சயமாக நடத்தும்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்கிற அடிப்படையிலே பேசி, இங்கே ஒரு பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார். அதற்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது.

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதை நிரூபித்துவிட்டு, இங்கேயிருந்து வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். கொடநாடு கொலை, கொள்ளை விசாரணையைப் பொறுத்தமட்டிலே, தேர்தல் காலத்திலே கொடுத்திருந்த வாக்குறுதியைத்தான் இப்போது இந்த அரசு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறதேத் தவிர, வேறல்ல.

நள்ளிரவிலே நடைபெற்ற அந்தக் கொள்ளைச் சம்பவத்திலே, அடுத்தடுத்து நடைபெற்றிருக்கக்கூடிய மரணங்கள், விபத்து

மரணங்கள் போன்றவை அப்போதே மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. அதனால்தான் அந்தக் கொள்ளை, கொலை வழக்குகள் விசாரிக்கப்பட்டு, உண்மைக் குற்றவாளிகள் சட்டத்தின்முன்பு நிறுத்தப்படுவார்கள் என்று ஏற்கெனவே தேர்தல் நேரத்திலே நாங்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

அதனடிப்படையிலே, முறைப்படி நீதிமன்றத்திலே அனுமதி பெற்றுத்தான் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அரசியல் நோக்கத்தோடு அல்ல; முறைப்படி நீதிமன்றத்திலே அனுமதியைப் பெற்று, நீதிமன்றத்தினுடைய அனுமதியோடுதான் இந்த விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, இதில் அரசியல் தலையீடோ, பழிவாங்குகிற எண்ணமோ நிச்சயமாக இல்லை. விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதிலே கிடைக்கக்கூடிய தகவலின் அடிப்படையில், நிச்சயமாக உண்மைக் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமேத் தவிர, வேறு யாரும் இதற்கு அச்சப்பட வேண்டிய பயமோ, அவசியமோ இல்லை.

இந்த அரசு நிச்சயமாகச் சட்டத்தின் ஆட்சியை நடத்தும். ஆகவே, கொடநாடு வழக்கிலே, நீதிமன்றத்தின் அனுமதியோடு நடக்கும் விசாரணைக்கு, ‘அரசியல் நோக்கத்தோடு’ என்று ஒரு களங்கத்தைச் சுமத்தியிருக்கிறார்கள். அப்படியல்ல என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகத்தான், நான் இந்த விளக்கத்தை இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கிறேன்.

நான் தொடக்கத்திலேயே சொன்னேன். அரசியல் நோக்கத்தோடு, பழிவாங்குகிற நோக்கத்தோடு எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல. நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்; தேர்தல் நேரத்திலே சொன்ன உறுதிமொழிகள் என்னவாயிற்று ? எதையும் நிறைவேற்றவில்லை, நிறைவேற்றவில்லை என்று தொடர்ந்து நீங்கள்

கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதிலே ஒன்றுதான் இது. இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. எனவே, நீதிமன்றத்தினுடைய direction–படி, நீதிமன்றத்தினுடைய உத்தரவின் அடிப்படையில்தான், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதேத் தவிர, தனிப்பட்ட முறையில், அரசியல் நோக்கத்தோடு எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல என்பதை நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர், மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு.ஜி.கே.மணி அவர்களுக்கும் நான் இதை வலியுறுத்திக் குறிப்பிட்டுக் காட்டிட விரும்புகிறேன்.

பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள், இது ஒரு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்கிறார். மடியிலே கனமிருந்தால்தான் வழியிலே பயம் இருக்கும். எனவே, யாரும் பயப்பட வேண்டியதில்லை; அச்சப்பட வேண்டிய அவசியமில்லை.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ஒன்றிய அரசு நிறைவேற்றியுள்ள மூன்று வேளாண் சட்டங்களையும், குடியுரிமை திருத்தச் சட்டத்தையும் திரும்பப் பெற வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் வரவு–செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது தீர்மானம் நிறைவேற்றப்படும் என உறுதியளித்து ஆற்றிய உரை –* ***18.08.2021***

## ‘நீட்’ பிரச்சினை தொடர்பாக சட்டமுன்வடிவு கொண்டுவரப்படும்...

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்கு முன்னால், தன்னுடைய கன்னிப் பேச்சைப் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய வகையிலே பல வினாக்களை எல்லாம் தொடுத்து, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.உதயநிதி அவர்கள் பேசியிருக்கிறார்கள். எனவே, அந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் சம்பந்தப்பட்டிருக்கிற துறையினுடைய அமைச்சர்களிடமிருந்து, மானியக் கோரிக்கை விவாதங்களின்போது, அதற்குரிய விளக்கங்களைப் பெறலாம். ஆனால், முக்கியமான ஒன்று; ‘நீட்’ பிரச்சினை குறித்து அவர் இங்கே அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டுச் சொன்னார்.

நீட் பிரச்சினையைப் பொறுத்தவரையில், கட்சிப் பாகுபாடுகளை எல்லாம் மறந்து, அனைவரும் ஒன்று சேர்ந்து, அதற்காகக் குரல் கொடுக்க வேண்டுமென்ற நிலையிலே நாம் இருக்கிறோம். அதில் எந்த மாற்றமும் கிடையாது. அந்த அடிப்படையிலேதான், தேர்தல் நேரத்திலே நாங்கள் உறுதிமொழி தந்தோம். ‘திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடன், ‘நீட்’ தேர்விலிருந்து விலக்கு பெறுவதுதான் நம்முடைய இலட்சியமாக இருக்கும். அதுகுறித்து நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுப்போம்’ என்று உறுதிமொழி தந்திருக்கிறோம்.

அதனால்தான், நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே, இதுபற்றி அலசி ஆராய்ந்து, பொதுமக்களுடைய கருத்துகளையெல்லாம் கேட்டு, ஆய்வு அறிக்கையை அரசுக்கு வழங்கிட வேண்டுமென்று சொல்லி, ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.ஏ.கே.இராஜன் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, அவரும் அந்தப் பணியை நிறைவேற்றி, ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். தற்போது அந்த அறிக்கை சட்டரீதியாகப் பரிசீலிக்கப்பட்டு, இந்தக் கூட்டத் தொடரிலேயே அதற்குரிய சட்டமுன்வடிவு கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்து, அமர்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 'நீட்' விவகாரம் குறித்து*
*சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்*
*பேசியதற்கு பதிலளித்து ஆற்றிய உரை – **18.08.2021***

# கோவை, மதுரை மெட்ரோ இரயில் திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகிறபோது, மெட்ரோ இரயில் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டுக் காட்டி, 'கோவைக்கு மத்திய அரசோடு கலந்து பேசி முடிவு செய்யப்படும் என்று ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறீர்களே, அது வேதனை அளிக்கிறது என்ற பொருள்பட இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் அதற்கு விளக்கம் தந்திருக்கிறார்கள்.

மெட்ரோ இரயில் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒன்றிய அரசினுடைய உதவியோடு, ஒன்றிய அரசின் நிதியுதவியைப் பெற்றுத்தான் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிட முடியும். அப்படித்தான் இதுவரையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நேற்றைக்குக்கூட ஒன்றிய அரசிடமிருந்து எங்களுக்கு வந்திருக்கிற செய்தி; இன்றைக்கு இரண்டாம் கட்டத்திற்கான அனுமதியை ஒன்றிய அரசு, தமிழக அரசுக்கு வழங்கியிருக்கிறது என்ற செய்தி எனக்குக் கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதுபோல், நான் ஏற்கெனவே டெல்லிக்குச் சென்று பிரதமரைச் சந்தித்தபோது, இதுகுறித்து நான் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்; அழுத்தம் கொடுத்துப் பேசியிருக்கிறேன். அந்த அழுத்தத்தின் அடிப்படையில்தான், நேற்றைக்கு அதற்கான அனுமதி கிடைத்திருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

சொன்னதுபோல, கோவைக்கும் நிச்சயமாக அழுத்தம் கொடுப்போம். கவலைப்பட வேண்டாம். கோவைக்கு மட்டுமல்ல; மதுரைக்கும் அறிவித்திருக்கிறோம். ஆகையால், எங்கெங்கு அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட வேண்டுமோ, அந்தந்த முறையிலே நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசுகிறபோது, கோவையில் இருக்கக்கூடிய மத்திய சிறையை மாற்றி, அங்கு ஒரு பூங்காவை உருவாக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்தார்கள். செம்மொழி மாநாட்டை திராவிட முன்னேற்றக் கழக அரசு நடத்தியபோதே, ஏற்கெனவே கலைஞர் அவர்கள் இதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், அதற்குப்பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப்பிறகு, 10 ஆண்டுக் காலம் அவர்கள் அதைப்பற்றி யோசிக்கவில்லை; சிந்திக்கவில்லை. எனவே, உங்களுடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும் இந்த ஆட்சியில் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டமன்ற உறுப்பினர்*
*திருமதி வானதி சீனிவாசன் அவர்களது கோரிக்கைக்கு*
*பதிலளித்து ஆற்றிய உரை –* ***18.08.2021***

# அவையின் மாண்பைக் காப்பதில் ஒரு நல்ல வழிகாட்டி



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கை ஆகிய இரண்டும் இந்தப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு, அவற்றின்மீது ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற்று, இரண்டு அறிக்கைகளும் பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து துறை வாரியாக மானியக் கோரிக்கைகள் இன்று முதல் தாக்கல் செய்யப்படவுள்ளன. முதல் நாளான இன்று நீர்வளத்துறை மானியக் கோரிக்கையை இங்கே அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்யவிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து இங்கே விவாதங்கள் நடைபெற இருக்கின்றன.

முதல் மானியக் கோரிக்கையாக நீர்வளத்துறை மானியக் கோரிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் துறையினுடைய

அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கக்கூடியவர் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளராகவும், இந்த அவையினுடைய முன்னவராகவும் இருக்கும், என்னுடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அண்ணன் துரைமுருகன் அவர்களுடைய துறையின் மானியக் கோரிக்கை இன்று தாக்கல் செய்யப்பட இருக்கிறது. இந்த அவையிலே முதன்முதலில் இந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்படுவது மகிழ்ச்சிக்குரியது, பெருமைக்குரியது. அதற்காக என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நூறாண்டு வரலாறு கொண்டிருக்கக்கூடிய இந்தச் சட்டப்பேரவைக்கு, அரை நூற்றாண்டுக்கும் முன் வந்தவர்தான் இங்கே அமைச்சராக இருக்கக்கூடிய அண்ணன் துரைமுருகன் அவர்கள். 50 ஆண்டுகளாக இந்த அவை நடவடிக்கைகளில் பங்கேற்றுக்கொண்டிருக்கக் கூடியவர் அவர். இந்த மன்றத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கக்கூடியவர்களில் முக்கிய உறுப்பினராக, மூத்த உறுப்பினராக இருக்கக்கூடியவர்தான் நம்முடைய அமைச்சர் துரைமுருகன் அவர்கள். அதனால்தான் அவர் இந்த அவையினுடைய முன்னவராக இருந்து வழிகாட்டிக்கொண்டிருக்கிறார்.

தனிப்பட்ட முறையில் சொல்லவேண்டுமென்று சொன்னால், தலைவர் கலைஞர் அவர்களும், இனமான பேராசிரியர் அவர்களும் மறைந்த பிறகு, ஒரு மாபெரும் அரசியல் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்துகொண்டு, எனக்கு வழிகாட்டியாக இருந்துகொண்டிருக்கக்கூடியவர்தான் அண்ணன் துரைமுருகன் அவர்கள். அவர் அடிக்கடி பொதுக்கூட்டங்களில், பல நிகழ்ச்சிகளில் ஒன்றைச் சுட்டிக்காட்டுவார். என்னைப்பற்றிச் சொல்கிறபோதெல்லாம், ‘இளம் வயது பையனாக நான் ஸ்டாலினைப் பார்த்திருக்கிறேன்’ என்று சொல்லியிருக்கிறார். இதனை அவர் பல மேடைகளில் சொல்லியிருக்கிறார்.

‘தமிழகம் மீட்போம்’ என்ற தலைப்பில் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக வேலூர் பொதுக்கூட்டத்தில் நான் உரையாற்றுகின்றபொழுது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னேன். என்னை இளைஞராகப் பார்த்ததாக அடிக்கடி அண்ணன் அவர்கள் சொல்வார்; நான் அவரை, கலைஞர் இடத்தில், பேராசிரியர் இடத்தில் வைத்துப் பார்க்கிறேன். அதுதான் உண்மை, அதை நான் இந்த அவையில் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

எதுவாக இருந்தாலும் மனதில் எதையும் வைத்துக்கொள்ள மாட்டார். மனதில் பட்டதை அப்படியே எடுத்துச் சொல்லி, கட்சிக்கும், ஆட்சிக்கும் துணையாக இருக்கக்கூடியவர். அவருடைய ஊர் பெயர் என்னவென்று கேட்டீர்களென்றால், கே.வி. குப்பம். கே.வி. குப்பம் என்பது ஒரு காலத்தில் ‘கீழ்வழி துணையான் குப்பம்’ என்று அழைக்கப்பட்ட ஊராகும். அப்படி எனக்கு வழித் துணையாக இருப்பவர்தான் நம்முடைய அருமை அண்ணன் துரைமுருகன் அவர்கள். அப்படித்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் அவர் வழித் துணையாக இருந்திருக்கிறார்.

கலைஞர் அவர்கள் எப்போதுமே அண்ணன் துரைமுருகன் அவர்களை, ‘துரை, துரை, துரை’ என்றுதான் பாசமாக அழைப்பார். அவரோடு இனிமையாகப் பேசுவார், பழகுவார். இரண்டு பேரும் பேச ஆரம்பித்தால், மணிக்கணக்கில், நேரம் போவதேத் தெரியாமல் பேசிக்கொண்டிருப்பார்கள். உண்மையைச் சொல்லப்போனால், எங்களுக்கெல்லாம்கூட பொறாமை ஏற்படும். தலைவர் அவர்கள் இவரிடம் மட்டும் இவ்வளவு சகஜமாகப் பேசுகிறாரே, என்றெல்லாம்கூட நாங்கள் நினைப்பது உண்டு. என்றைக்காவது ஒரு நாள் அண்ணன் துரைமுருகன் அவர்கள், தலைவர் அவர்களுடைய வீட்டிற்கு வரவில்லையென்றால், இல்லை கொஞ்சம் தாமதமானால், உடனே போன் செய்து, துரைமுருகன் எங்கே இருக்கின்றார் என்று பாருங்கள் என்று சொல்லி அவரை வரச்சொல்லுவார்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், 2007ஆம் ஆண்டு அவரது உடல்நலம் கொஞ்சம் பாதிக்கப்பட்டு, அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். அப்போது தலைவர் கலைஞர் அவர்களுடைய உள்ளம் எந்த அளவிற்குத் துடித்தது என்பதை நான் பக்கத்தில் இருந்து பார்த்தவன். மறுநாள் காலை அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கு அறுவை சிகிச்சை நடக்கப்போகிறது. அதற்கு முதல்நாள் இரவு அண்ணன் துரைமுருகன் அவர்களுக்குப் போன் செய்து 'என்ன துரை, தூங்கிட்டியா?' அப்படியென்று கேட்கிறார். 'இல்லை அண்ணா, இன்னும் நான் தூங்கவில்லை' என்கிறார். 'காலையில் ஆபரேஷன் அதை நினைத்துப் பயந்துகொண்டிருக்கிறாயா?' என்று கேட்டார் தலைவர். 'இல்லை அண்ணா, இல்லை அண்ணா' என்று அவர் சமாளித்தார். உன்னைப்பற்றி எனக்குத் தெரியும்பா, நானே மருத்துவமனைக்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டு, அங்கே போய் இரவு முழுவதும் மருத்துவமனையிலே உட்கார்ந்துவிட்டு, காலையில்தான் வீடு திரும்பினார் தலைவர் கலைஞர் அவர்கள்.

அந்தப் பாசத்தைத்தான் நான் பெருமையோடு சொல்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல, 'ஒரு தாய் வயிற்றில் பிறக்க வயிறு தாங்காது என்ற காரணத்தால், தனித்தனித் தாயின் வயிற்றில் பிறந்தவர்கள் நாம்' என்பதை இந்தப் பாசமும், நெகிழ்ச்சியும்தான் நமக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. அந்த அளவிற்கு தலைவர் கலைஞர் அவர்களுடைய அன்பைப் பெற்றவர் அண்ணன் துரைமுருகன் அவர்கள்.

கலைஞர் அவர்களுடைய பக்கத்திலே அல்ல; அவருடைய இதயத்திலேயே ஆசனம் போட்டு அமர்ந்திருந்தவர்தான் அண்ணன் துரைமுருகன் அவர்கள். அத்தகைய இடம் எல்லோருக்கும் கிடைத்துவிடாது.

1971ஆம் ஆண்டு காட்பாடித் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு அண்ணன் துரைமுருகன் அவர்கள், அதே தொகுதியில் 8 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், இராணிப்பேட்டை தொகுதியிலே 2 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் வென்று இந்த அவைக்கு வந்து தன்னுடைய ஆழமான கருத்துக்களைப் பதிவு செய்து, சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொண்டிருக்கிறார். இது இங்கே இருக்கக்கூடிய யாருக்கும் கிடைக்காத ஒரு பெருமை அண்ணன் துரைமுருகன் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதற்காக அவரை நான் மனம் திறந்து பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். அதேபோன்று அவரிடம் எந்தத் துறையைக் கொடுத்தாலும், அதிலே ஒரு முத்திரைப் பதிப்பார். இப்போது சொல்லச்சொன்னால்கூட, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து ஆறுகளின் பெயர்களை அவர் மடமடவென்று அப்படியே சொல்வார். அந்த அளவிற்குப் புலமை பெற்றவர். 1925ஆம் ஆண்டு காவிரிப் பிரச்சினை தொடர்பான ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து, இன்றுவரை எல்லாத் தகவலையும் தன் மனதிலே சேகரித்து வைத்திருக்கிறார். இன்னும் அவரிடத்திலே இருக்கிற ஒரு credit என்னவென்றால், இந்தக் கூட்டத்தை அழ வைக்க வேண்டுமென்று நினைத்தால் அழ வைத்துவிடுவார். அதே நேரத்தில், இந்தக் கூட்டத்தைச் சிரிக்க வைக்க வேண்டுமென்று நினைத்தாலும், சிரிக்க வைத்துவிடுவார். உங்களையெல்லாம் உணர்ச்சிவசப்பட வைக்கப்பட வேண்டுமென்றாலும், அதையும் செய்வார். ‘அமைதியாக இருங்கள் அண்ணா’ என்றாலும், இருந்துவிடுவார். அந்த அளவிற்கு ஆற்றல் பெற்ற ஒருவர், இன்றைக்கு நம்முடைய கழக அரசிலே நீர்வளத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருப்பது, இந்தக் கழகத்திற்கும், கழக அரசுக்கும் கிடைத்திருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய பெருமை. இந்த அவையினுடைய முன்னவராக அவரைப் பெற்றிருப்பது, இந்த அவைக்குக் கிடைத்திருக்கக்கூடிய பெருமை.

தமிழ்நாடு சட்டமன்றத்திலே 50 ஆண்டுகள் பங்கெடுத்து, பொன் விழா நாயகராக மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எப்பொழுது பார்த்தாலும், அவர் பொன் போன்று பளபளவென்று சட்டைபோட்டுக் கொண்டு வருவார். புன்னகையும் அவரிடத்திலே எப்பொழுதும் இருக்கும். அத்தகைய சட்டமன்றப் பொன்விழா நாயகருக்குப் பாராட்டு தெரிவிக்கின்ற வகையிலே, இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன். இதனை நீங்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

'தமிழ்நாடு சட்டமன்றத்திலே, 1971 முதல் தற்பொழுது வரை, 10 முறை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பல்வேறு துறைகளில் அமைச்சராகச் செயல்பட்டு, மாநிலத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டிருக்கிறார்; பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். அவையின் மாண்பைக் காப்பதிலே ஒரு நல்ல வழிகாட்டியாகச் செயல்பட்டு வருகிறார். மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களை இந்தப் பேரவை மனதாரப் பாராட்டுகிறது' என்னும் இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன். அனைத்து உறுப்பினர்களும், கட்சி எல்லைகளைக் கடந்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சரும், என்னுடைய ஆருயிர் அண்ணனுமான திரு.துரைமுருகன் அவர்களை மனதார வாழ்த்துகிறேன்; வாழ்த்துகிறேன்; வாழ்த்துகிறேன். நன்றி, வணக்கம்!

---

*மாண்புமிகு தமிழ்நாடு*
*முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு நீர்வளத்துறை*
*அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களது*
***50*** *ஆண்டு காலச் சட்டமன்றப் பணியினைப்*
*பாராட்டும் வகையில் தீர்மானத்தை முன்மொழிந்து*
*ஆற்றிய உரை –* ***23.08.2021***

# முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110இன்கீழ் இந்த அரசின் முதல் அறிவிப்பினை உங்கள் அனுமதியோடு இந்த அவைக்கு அறிவிக்க விரும்புகிறேன். விதி 110இன்கீழ் அறிவிக்கும் முதல் அறிவிப்பே 'தமிழினத் தலைவர்', 'முத்தமிழறிஞர்', 'எண்பதாண்டு காலம் இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்கு உழைத்தப் போராளி'கலைஞர் அவர்களது புகழுக்குப் பெருமை சேர்க்கும் அறிவிப்பாக அமைந்துள்ளதை நினைத்து நான் மட்டுமல்ல, இந்த அரசே பெருமைப்படுகிறது.

உலகெங்கிலும் தமிழர்களுக்கெல்லாம் தமிழினத் தலைவர், இலக்கியத் துறையைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் முத்தமிழறிஞர், கலையுலகத்தினருக்கு என்றும் கலைஞர், தமிழ்நாட்டின் தலைவர்களுக்கெல்லாம் தலைவர், இந்திய அரசியலை வழிநடத்திய அரசியல் ஞானி, இந்த அவைக்கு என்றும் நிரந்தர உறுப்பினர், எங்களையெல்லாம் உருவாக்கியத் தலைவர், கோடிக்கணக்கான

உடன்பிறப்புகளின் உள்ளத்தில் குடியிருக்கும் மாண்பாளர். இது மட்டுமல்ல; இன்னும் சொல்லிக்கொண்டேப் போகலாம்! ‘‘என் பாதை, சுயமரியாதைப் பாதை, தமிழின நலன் காக்கும் பாதை, தமிழ் நெறி காக்கும் பாதை, தந்தை பெரியாரின் பாதை, பேரறிஞர் அண்ணாவின் பாதை, அறவழிப் பாதை, அமைதிப் பாதை, ஜனநாயகப் பாதை, இதில் பயணித்தால் மரணமே வரும் எனப் பயமுறுத்தினாலும், அந்தப் பாதையிலிருந்து மாற மாட்டேன்’’ என்று இறுதிவரை உறுதியோடு வாழ்ந்தவர்தான் கலைஞர் அவர்கள்.

எண்பது ஆண்டு பொதுவாழ்க்கை, எழுபது ஆண்டுகள் திரைத்துறை, எழுபது ஆண்டுகள் பத்திரிகையாளர், **60** ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினர், **50** ஆண்டுகள் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் பேரியக்கத்தினுடைய தலைவர் என்று வாழ்ந்த காலம் முழுவதும் வரலாறாக வாழ்ந்தவர் கலைஞர் அவர்கள்.

நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர் அவராக மட்டும்தான் இருக்க முடியும். குளித்தலையில் போட்டியிட்டு **13** சட்டமன்றத் தேர்தல்களிலும் குனியாத தலை, கலைஞருடைய தலை. **1957, 1962, 1967, 1971, 1977, 1980, 1989, 1991, 1996, 2001, 2006, 2011, 2016** என மொத்தம் **13** முறை இந்தச் சட்டமன்றத்துக்குப் போட்டியிட்டு, **13** முறையும் வெற்றி வாகை சூடிய வெற்றி நாயகர் கலைஞர் அவர்கள். தோல்வி அவரைத் தொட்டதே இல்லை! வெற்றி அவரைக் கைவிட்டதே இல்லை! அவர்தான் கலைஞர்!

இந்தியாவில் இப்படி ஒருவர் இருந்தது கிடையாது; இனி ஒருவர் அவர் இடத்தை அரசியல் களத்தில் பிடிக்க முடியாது என்று போற்றத்தக்கப் பெருமையுடையவர் கலைஞர் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு **10.02.1969** அன்று முதன்முதலில் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றார் கலைஞர். அதன்பின்னர், **15.03.1971, 27.01.1989, 13.05.1996, 13.05.2006** என மொத்தம் ஐந்து முறை தமிழ்நாட்டின்

முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழ்மொழியின் மேன்மைக்கும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய மக்களின் கல்வி, அறிவியல், சமூகப் பொருளாதார அரசியல் எழுச்சிக்கும் வழிவகுக்கும் மகத்தானத் திட்டங்களையும், சட்டங்களையும் உருவாக்கி, ஒட்டுமொத்த இந்தியாவிலும், தமிழ்நாட்டை வளர்ச்சி பெற்ற முன்னணி மாநிலமாக்கியதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பங்கு ஈடு இணையற்றது.

இன்று நாம் பார்க்கும் நவீனத் தமிழ்நாடு என்பது கலைஞர் உருவாக்கிய தமிழ்நாடு ஆகும். கனவு நகரங்களைச் சிலர் உருவாக்குவார்கள். கலைஞர் அவர்கள்தான், கனவு மாநிலத்தையே உருவாக்கிய மகத்தான சிற்பி. "நான் முதலமைச்சராகக் கோட்டையில் இருந்தாலும், அங்கிருந்தபடியே குடிசைகளைப் பற்றியே சிந்திப்பவன்" என்று முதல் முறை ஆட்சிக்கு வந்தபோது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். 'சமுதாயச் சீர்திருத்தத் தொண்டு, வளர்ச்சிப் பணிகள், சமதர்ம நோக்கு' இவை மூன்றையும்தான் தன்னுடைய ஆட்சியின் இலக்கணமாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் ஆட்சியை நடத்தினார்கள். அனைத்துத் துறைகளும் ஒருசேர வளர்ந்தன.

அன்னைத் தமிழ்மொழிக்குச் செம்மொழித் தகுதி; ஒன்றிய அரசில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு உரிமை; அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் சட்டம்; மகளிருக்குச் சொத்தில் சம உரிமை என்ற சட்டம்; பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களுக்கான சமூகநீதி உரிமைகள்; விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்; கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்பட்ட 7 ஆயிரம் கோடிக் கடன் ரத்து; சென்னைத் தரமணியில் டைடல் பார்க்; சென்னைக்கு மெட்ரோ ரயில் திட்டம்; சிப்காட், சிட்கோ, தொழில் வளாகங்கள் உருவாக்கம்;

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கியது; நமக்கு நாமே திட்டம்; அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்; அவசர ஆம்புலென்ஸ் 108 சேவை அறிமுகம்; இலவச மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்; மினி பஸ்களை கொண்டு வந்தது; உழவர் சந்தைகள் அமைத்தது; ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி; கைம்பெண்கள் மறுமண நிதி உதவி; கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி ஆகிய திட்டங்கள்; பல்லாயிரம் கோயில்களுக்குத் திருப்பணிகள்; அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு; உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்காக 33 விழுக்காடு இடஒதுக்கீடு; இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்குதல்; மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல்; அனைவரும் இணைந்து வாழ சமத்துவபுரங்கள்; இஸ்லாமிய சமூகத்தினருக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியது; உருது பேசும் இஸ்லாமியர்களைப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இணைத்தது; நுழைவுத் தேர்வு ரத்து; மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கியது; சேலம் உருக்காலை, சேலம் புதிய ரயில்வே மண்டலம்; நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; தெற்காசியாவிலேயே பெரிய அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆகியவை உருவாக்கம்; மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் ஆகியோருக்கு மறுவாழ்வு; ஏராளமான பல்கலைக்கழகங்கள், மருத்துவக் கல்லூரிகள், கலை, அறிவியல் கல்லூரிகள் உருவாக்கியது; இப்படி நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பிதான் முதலமைச்சர் கலைஞர்!

திருக்குவளை என்ற குக்கிராமத்திலிருந்து கிளம்பிய ஒரு இளைஞனுக்குத் தமிழ்நாட்டை எப்படி வடிவமைக்க வேண்டும் என்ற கனவு இருந்தது; ஒரு தொலைநோக்குப் பார்வை இருந்தது. திருவள்ளுவர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய மூவரும் அவருக்கு மூச்சுக்காற்றாக இருந்து செயல்பட வைத்தார்கள்.

இந்த மூவரது கனவுகளை நிறைவேற்றும் மாமனிதராகக் கலைஞர் செயல்பட்டார்கள்.

இலக்கியத்துக்குள் போனால், அவரது குறளோவியமும், சங்கத் தமிழும், தொல்காப்பியப் பூங்காவும் தென்றலாய் வீசுகிறது. கதைக்குள் பயணித்தால், பொன்னர் சங்கரும், தென்பாண்டிச் சிங்கமும் உறுமுகிறது. திரையுலகைப் பார்த்தால், அவரது பராசக்தியும் மனோகராவும் பூம்புகாரும் மின்னுகிறது. நாடகத்துக்குள் நுழைந்தால், தூக்குமேடையும் சாக்ரடீசும், சேரன் செங்குட்டுவனும் ஒலிக்கிறது. அவரது சிற்பத் திறமைகளுக்குச் சான்றாக வள்ளுவர் கோட்டம், குமரியில் 133 அடி வள்ளுவர் சிலையும் எழுந்து நிற்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாடப்புத்தகம் வேண்டுமா? அவரது உரைகள் இருக்கின்றன. பத்திரிகையாளர்களுக்கு இலக்கணம் வேண்டுமா? அவர் நடத்திய முரசொலி விரிகிறது. அரசியல்வாதிகளுக்கு அரிச்சுவடி வேண்டுமா? அவரது கடிதங்களும், நெஞ்சுக்கு நீதியும் இருக்கிறது. அரசியல் களத்தில் பார்த்தால் அவரால் உருவாக்கப்பட்ட நாங்கள் இருக்கிறோம். அதுமட்டுமல்ல; தன்னை வசைபாடியவர்களையும் வாழ்த்தியவர் அவர்.

இப்படி, கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தின் நிரந்தரத் தலைப்புச் செய்தியாக இருந்த கலைஞர் அவர்கள், 2018 ஆகஸ்ட் 7ஆம் நாள் நிரந்தர ஓய்வுக்குச் சென்றுவிட்டார். ஓய்வெடுக்கச் சென்றார் என்று நான் சொன்னாலும்கூட, அவர் இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்கு ஏராளமானவற்றைக் கொடுத்துவிட்டுத்தான் ஓய்வெடுக்கச் சென்றிருக்கிறார்.

தான் மறைந்தால், ‘ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்’ என்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே எழுதச் சொன்ன மக்கள் தொண்டர் அவர். ‘அண்ணா! நீ இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில், இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா!

நான் வரும்போது கையோடு கொணர்ந்து அதை உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா!' என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் உறுதிமொழி எடுத்தவர் அவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சோப இலட்சம் தொண்டர்களின் எஃகு இதயத்தை நம்பி, நாம் கொடுத்த வாக்கை நம்முடைய உடன்பிறப்புகள் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு உறுதிமொழி தந்த உடன்பிறப்புகளின் தலைவர் அவர். அவர் பேரறிஞர் அண்ணாவுக்குக் கொடுத்த வாக்கை அவரது தம்பிமார்களாகிய நாங்கள் காப்பாற்றினோம்.

இப்படி தன்னைத் தந்து, இந்தத் தாய்த் தமிழ்நாட்டை உருவாக்கிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் விதமாக, அவரது வாழ்வின் சாதனைகளை, சிந்தனைகளை மக்களும், வருங்காலத் தலைமுறையும் அறியக்கூடிய வகையில், நவீன விளக்கப் படங்களுடன் சென்னை, காமராஜர் சாலை, அண்ணா நினைவிட வளாகத்தில் **2.21** ஏக்கர் பரப்பளவில் ரூபாய் **39** கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என இந்த மாமன்றத்தில் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

---

*மாண்புமிகு தமிழ்நாடு*
*முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன்கீழ்,*
*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் அமைத்தல்*
*தொடர்பாக ஆற்றிய உரை – **24.08.2021***

# ஆதாரத்துடன் சொல்லுங்கள் நிச்சயம் நாங்கள் அதை மாற்றுவோம்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் திரு.செல்லூர் ராஜு அவர்கள், பென்னிகுயிக் நினைவிடத்தினை மாற்றி, அப்புறப்படுத்தி, அந்த இடத்திலே கலைஞர் பெயரால் அமையவிருக்கக்கூடிய நூலகம் கட்டப்படவிருக்கிறது என்ற ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே இது சட்டமன்றத்திற்கு வெளியிலேயும் பேசப்பட்டிருக்கிறது, அப்பொழுதும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக விளக்கம் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் சொல்கிறேன்; நீங்கள் சொல்வதற்கு ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள். நிச்சயமாக அதை நாங்கள் மாற்றுவதற்கு எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறோம். அதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது. ஒரு தவறான பிரச்சாரத்தினைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அது சட்டமன்றத்திலும் பதிவாகக் கூடாது என்பதற்காகத்தான் இந்த விளக்கத்தினை நான் சொல்லியிருக்கிறேன்.

இப்படிச் சொல்கிறார்கள் என்று சொல்லும் நீங்கள் ஒரு முன்னாள் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தற்போது மூன்றாவது முறையாக அவைக்கு வந்திருப்பதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். எனவே, அப்படி நீங்கள் சொல்வது உங்களுடைய பெருந்தன்மையைக் குறைப்பதாக இருக்கிறது. எனவே, ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மதுரையில் கலைஞர் நூலகம் அமைப்பது தொடர்பாக மதுரை (மேற்கு) தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்கள் பேசியதற்கு, பதிலளித்து ஆற்றிய உரை – **25.08.2021***

# இளநிலை தொழிற்கல்விப் படிப்புகளும் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு...



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்விப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம் தொடர்பான சட்ட முன்வடிவினை நான் இந்த அவையிலே அறிமுகப்படுத்த விழைகிறேன்.

தொழிற்கல்விப் படிப்புகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில், நகர்ப்புறங்களிலுள்ள தனியார்ப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களைவிட, கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் சேர்க்கை பெறுவதைக் கருத்திலே கொண்டு, 1997ஆம் ஆண்டு, கிராமப்புறப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்குத் தொழிற்கல்விப் படிப்புகளில் 15 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது. முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குக் கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டது.

கிராமப்புற மாணவர்கள் மற்றும் பின்தங்கியப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் சிரமங்களைக் கருத்திலேகொண்டு, **2006**ஆம் ஆண்டு, தொழிற்கல்விப் படிப்புக்கான நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டு, **2007–2008**ஆம் ஆண்டு முதல், +**2** தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இருப்பினும், கடந்த பல ஆண்டுகளாக நமது மாநிலத்தில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள், தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுடன் போட்டியிட்டு, அவர்கள் விரும்பக்கூடிய உயர் கல்வியினைப் பெறுவதும், தொழிற்கல்விப் படிப்புகளில் சேருவதும் மிகவும் கடினமாக இருக்கிறது. பல்வேறு சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி பெறுவதில் சமவாய்ப்புக் கிடைக்கப்பெறவில்லை. ஏற்கெனவே, அரசுப் பள்ளியில் படித்த மாணாக்கர்களுக்கு மருத்துவ மாணவர் சேர்க்கையில் தேசிய தகுதித் தேர்வில் (NEET) பெற்ற மதிப்பெண் அடிப்படையில், **7.5** விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. மருத்துவப் படிப்பைப் போன்றே, கால்நடை மருத்துவம், வேளாண் கல்வி, பொறியியல், சட்டம் போன்ற இதரத் தொழிற்கல்விகளிலும், அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவில் இருக்கிற காரணத்தால், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் சமூகப் பொருளாதார நிலைகள், அத்தகைய மாணவர்கள் அனுபவித்தக் குறைபாடுகள் ஏதேனும் இருப்பின், மற்றும் பல்வேறு வகைகளிலான தொழிற்கல்விப் படிப்புகள், கல்வி நிறுவனங்களில் அவர்களின் முந்தைய சேர்க்கை தொடர்பான சிக்கல்களை ஆய்வுசெய்து மற்றும் அவர்களது குறைந்த பிரதிநிதித்துவத்திற்கு மேற்கூறப்பட்ட காரணங்கள் வழிவகுத்திருந்தால், அவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான தீர்வு நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க டெல்லி உயர்நீதிமன்ற ஓய்வுபெற்றத் தலைமை நீதிபதி, மாண்புமிகு நீதியரசர் திரு.த.முருகேசன் அவர்களின் தலைமையில்,

மூத்த அலுவலர்களைக்கொண்ட ஓர் ஆணையமானது அரசால் அமைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் பலவகையான பள்ளிகளில் ஏறக்குறைய **1.3** கோடி மாணவர்கள் பயின்று வருகின்றனர். **2019–2020**ஆம் கல்வியாண்டில் மேல்நிலைக் கல்வி இரண்டாம் ஆண்டு பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை **8.5** இலட்சம் ஆகும். அவர்களுள் **3.45** இலட்சம் மாணவர்கள் அரசுப் பள்ளி மாணவர்கள் ஆவார்கள்.

பொறியியல் கல்வியில், **2020–2021**ஆம் கல்வியாண்டு அண்ணா பல்கலைக்கழகத்தில் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை விகிதம் **0.83** விழுக்காடு ஆகும். இதேபோன்று, அரசுப் பொறியியல் கல்லூரிகளில் மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் முறையே, **6.31** விழுக்காடு மற்றும் **0.44** விழுக்காடு மட்டுமே சேர்க்கை பெற்றுள்ளனர். மற்ற தொழிற்கல்விப் படிப்புகளான, கால்நடை மருத்துவப் படிப்பிலும் **2020–2021**ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளி மாணாக்கர்களின் சேர்க்கை விகிதம் **3** விழுக்காடு மட்டுமே உள்ளது. இது கடந்த ஆண்டுகளைக்காட்டிலும் குறைவு. இதே நிலையே மீன்வளம் தொழிற்கல்விப் படிப்பிலும் நிலவுகிறது.

கடந்த ஆண்டில், **3.7** விழுக்காடு அரசுப் பள்ளி மாணவர்களே இப்படிப்பில் சேர்ந்துள்ளனர். வேளாண்மை தொழிற்கல்விப் படிப்பில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை **4.89** விழுக்காடாக உள்ளது. திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசியச் சட்டப் பல்கலைக்கழகத்திற்கான மாணவர் சேர்க்கையானது, பொது நுழைவுத் தேர்வின் அடிப்படையில் நடைபெறுகிறது. அதில், அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை ஒரு விழுக்காட்டுக்கும் குறைவாகவே உள்ளது. இவ்வாறு தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர்களோடு போட்டியிட்டுச் சேர்க்கை பெறுவதில் அரசுப் பள்ளி மாணவர்கள் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். ஏழ்மை நிலை, அறியாமை, போதிய வழிகாட்டுதல் இன்மை காரணமாக, அரசுப் பள்ளிகளில் பயிலக்கூடிய மாணவர்களின் பெற்றோர்கள்

தொழிற்கல்விப் படிப்புகள் குறித்த விழிப்புணர்வினைக் குறைவாகப் பெற்றுள்ளனர். எனவே, இதனை நன்கு ஆய்வுசெய்து, அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்தப் பல தீர்வுகளைப் பரிந்துரைத்ததோடு மட்டுமல்லாமல், தொழிற்கல்விப் படிப்புகளுக்கு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 10 விழுக்காட்டிற்குக் குறையாமல் முன்னுரிமை வழங்கலாம் என ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

ஏற்கெனவே, மருத்துவப் படிப்பில் அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு 7.5 விழுக்காடு முன்னுரிமை வழங்கியுள்ளது போல, பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு அனைத்து இடஒதுக்கீட்டுப் பிரிவுகளிலும், ஏழரை விழுக்காடு இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டு, அதற்கான சட்டமுன்வடிவு இந்த அவையிலே கொண்டுவரப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்விப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம் தொடர்பான சட்ட முன்வடிவினை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்,*
*2021ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசுப் பள்ளி*
*மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில்*
*இளநிலைத் தொழிற்கல்விப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம்*
*தொடர்பான சட்ட முன்வடிவினை அறிமுகப்படுத்தி*
*ஆற்றிய உரை – 26.08.2021*

# முகாம் வாழ் இலங்கைத் தமிழர் நலனுக்காக ரூ.317.40 கோடி ஒதுக்கீடு



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால், கடல் கடந்து வாழும் தமிழர்களின் கண்ணீரால்” என்று எழுதினார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அத்தகைய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழி நடக்கக்கூடிய இந்த அரசின் சார்பில், கடல் கடந்து வந்த இலங்கைத் தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைக்கக்கூடிய வகையில் சில அறிவிப்புகளைச் சட்டப்பேரவை விதி 110இன்கீழ் இன்று வெளியிட நான் விரும்புகிறேன்.

இலங்கை நாட்டில் வாழும் தமிழ் மக்கள் 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்திற்குப் பிறகு, கடல் கடந்து தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கினார்கள். அத்தகைய தமிழ் மக்களை அன்று முதல் இன்று வரையிலும் நாம் அரவணைத்துக் காப்பாற்றி வருகிறோம்; அவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கி வருகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றத் தருணங்களில் எல்லாம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இலங்கைத் தமிழர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, கடந்த 1997–1998ஆம் ஆண்டில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு, 2 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3 ஆயிரத்து 594 புதிய வீடுகள், தலா 5 ஆயிரத்து 750 ரூபாய் செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டன. மேலும், இதர உட்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைப்பதற்கு 2 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

1998–1999ஆம் ஆண்டில், தலா 7 ஆயிரத்து 700 ரூபாய் மதிப்பீட்டில், 3 ஆயிரத்து 826 வீடுகள், 2 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டன. கடந்த 02.11.2009 அன்று ‘‘இலங்கை அகதிகள் முகாமில் உள்ள அடிப்படைத் தேவைகள்’’ குறித்த ஒரு ஆய்வுக் கூட்டத்தை முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடத்தினார்கள். அதனடிப்படையில், அப்போது துணை முதலமைச்சராக இருந்த என்னையும், அமைச்சர்களையும் இலங்கை அகதிகள் முகாம்களுக்கு அனுப்பி ஆய்வு நடத்தி, அறிக்கை தர உத்தரவிட்டார்கள். அப்படி ஆய்வு செய்துவிட்டு, திரும்பி வந்து நாங்கள் அப்போது கொடுத்த அறிக்கையினை ஏற்று, இலங்கை அகதிகள் முகாம் வீடுகள் பழுதுபார்ப்பது, புதுப்பிப்பது, புதிய கைப்பம்புகள், கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துவது உள்ளிட்ட இலங்கை அகதிகள் முகாம்களில் இருக்கும் தமிழர்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான 14 அடிப்படைப் பணிகளை நிறைவேற்ற 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிக்கொடுத்த முதலமைச்சர்தான் கலைஞர் அவர்கள் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

1983ஆம் ஆண்டு முதல் இதுவரை 3 இலட்சத்து 4 ஆயிரத்து 269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். இவர்களில், 18 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சார்ந்த 58 ஆயிரத்து

822 பேர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் அமைந்துள்ள 108 முகாம்களில் (இரண்டு சிறப்பு முகாம்கள் உள்பட) தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், 13 ஆயிரத்து 540 குடும்பங்களைச் சார்ந்த 34 ஆயிரத்து 87 நபர்கள் காவல் நிலையங்களில் பதிவுசெய்து, வெளிப்பதிவில் வசித்து வருகிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக அகதிகளாக முறையான அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்துவரக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்கு, இனி பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்துத் தருவதை இந்த அரசு உறுதிசெய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக, அவர்கள் தங்கியிருக்கும் முகாம்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், பின்வரும் அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்:

இலங்கைத் தமிழர்களது முகாம்களில், மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7 ஆயிரத்து 469 வீடுகள், 231 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டித்தரப்படும். இதில் முதற்கட்டமாக, 3 ஆயிரத்து 510 புதிய வீடுகள் கட்டுவதற்கு, நடப்பு நிதி ஆண்டில் 108 கோடியே 81 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்களில் உள்ள மின் வசதி, கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்திட 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதைத் தவிர, ஆண்டுதோறும், இதுபோன்ற வசதிகளைச் செய்துதர ஏதுவாக, இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதியாக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த அடிப்படை வசதிகள் மட்டுமல்லாமல், அவர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பட, வாழ்வு சிறக்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பொறியியல் படிப்பு பயிலுவதற்குத் தேர்ச்சிபெற்ற மாணவர்களில் மதிப்பெண் அடிப்படையில், முதல் 50 மாணவர்களுக்கு, அனைத்துக்

கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் ஆகியவற்றை அரசே ஏற்கும். மேலும், வேளாண் / வேளாண் பொறியியல் பட்டப் படிப்பிலும் மதிப்பெண் அடிப்படையில் முதல் 5 மாணவர்களுக்கும், மேற்சொன்ன கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ளும். அதுமட்டுமின்றி, முதுநிலைப் பட்டப்படிப்புப் பயிலும் அனைத்து முகாம்வாழ் மாணவர்களையும் ஊக்குவிக்கும் வகையில், அவர்களின் கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ளும். இதற்காக ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களில் ஆண்டொன்றுக்குத் தோராயமாக, 750 மாணவர்கள் அரசு மற்றும் பிற கல்லூரிகளில் கலை, அறிவியல் மற்றும் பட்டயம் உள்ளிட்ட தொழிற்படிப்புகள் படித்து வருகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படக்கூடிய கல்வி உதவித்தொகை (Scholarship) போதுமானதாக இல்லை என அறியப்பட்டுள்ளது. இவர்களுக்குப் பாலிடெக்னிக் படிப்பிற்கு 2,500 ரூபாய், இளநிலை கலை மற்றும் அறிவியல் படிப்பிற்கு 3,000 ரூபாய், இளநிலை தொழில்சார்ந்த படிப்புகளுக்கு 5,000 ரூபாய் கல்வி உதவித்தொகையாக ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. இனி, இதை உயர்த்தி, பாலிடெக்னிக் படிப்பிற்கு 10 ஆயிரம் ரூபாய்; இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பிற்கு 12 ஆயிரம் ரூபாய்; இளநிலை தொழில்சார்ந்த படிப்புகளுக்கு 20 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். இதற்காக, 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தகுதியினை உயர்த்திக்கொள்ளவும், வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக, ஐந்தாயிரம் முகாம் வாழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், சிறு குறு தொழில்கள் செய்திட ஏதுவாகவும், முகாம்களில் உள்ள 300 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதியாக, ஒவ்வொரு சுயஉதவிக் குழுவுக்கும் தலா ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். அதுமட்டுமின்றி, கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 321 சுயஉதவிக் குழுக்களுக்கு, ஏற்கெனவே வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபாயுடன், மேலும் 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இதற்காக நடப்பு நிதி ஆண்டில் 6 கோடியே 16 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு, மாதந்தோறும் அவர்களுடைய வாழ்வாதாரத்திற்காகப் பணக்கொடை வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையானது, குடும்பத் தலைவருக்கு ஆயிரம் ரூபாயும், இதர பெரியவர்களுக்கு 750 ரூபாயும், 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 400 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பணக்கொடை, கடந்த பத்தாண்டு காலமாக உயர்த்தப்படாத நிலையில், இனி குடும்பத் தலைவருக்கு மாதந்தோறும் 1,500 ரூபாய், இதர பெரியவர்களுக்கு 1,000 ரூபாய் மற்றும் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 500 ரூபாய் என்று உயர்த்தி வழங்கப்படும். இதனால், அரசிற்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 21 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவாகும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின்கீழ் இவர்களுக்கு எரிவாயு இணைப்புப் பெற இயலாத நிலை உள்ளது. எனவே, ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு மற்றும் இலவச அடுப்பு வழங்கப்படும். இதற்காக அரசிற்கு ஒருமுறை 7 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும். அதைத் தவிர, குடும்பத்திற்கு 5 எரிவாயு உருளைக்குத் தலா 400 ரூபாய்

வீதம் மானியத் தொகை வழங்கப்படும். இதற்காக 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும். முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு தற்போது 20 கிலோவிற்கு மேல் வழங்கப்படும் அரிசிக்கு, கிலோ ஒன்றிற்கு 57 பைசா வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதனை இனி இரத்து செய்து, அவர்கள் பெறும் முழு அரிசி அளவும் விலையில்லாமல் வழங்கப்படும். இதற்கான செலவுத் தொகையான 19 இலட்சம் ரூபாயையும் அரசே ஏற்றுக்கொள்ளும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கோ–ஆப்டெக்ஸ் மூலம் ஒவ்வோர் ஆண்டும் இலவச ஆடைகளும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இலவசப் போர்வைகளும் வழங்கக்கூடிய திட்டத்தில் ஒன்றிய அரசு நிருணயித்த விலையில் ஆடைகள் வாங்கி வழங்க இயலாத நிலையில், நடப்பு ஆண்டிற்குப் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் குடும்பம் ஒன்றிற்கு 1,790 ரூபாயிலிருந்து, குடும்பம் ஒன்றுக்கு, 3,473 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக, அரசிற்கு ஆண்டொன்றுக்கு 3 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஒன்றிய அரசு நிருணயித்துள்ள 250 ரூபாய் மதிப்பில் 8 வகையான சமையல் பாத்திரங்களை ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக வழங்க இயலாத நிலையில், 1,296 ரூபாய் மதிப்பில் சேலம் இந்திய உருக்காலை நிறுவனம் மூலம் உயர்த்தப்பட்ட வீதத்தில் பாத்திரங்கள் வழங்கப்படும். இதனால், அரசுக்கு ஒரு கோடியே 97 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவினம் ஏற்படும்.

இதைத்தவிர, முகாம்களில் வசிக்கக்கூடிய இலங்கை அகதிகளுக்கும், வெளிப்பதிவில் உள்ள அகதிகளுக்கும் உரிய உதவிகளை வழங்கிடவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், குடியுரிமை வழங்குதல் மற்றும் அவர்களில் இலங்கை திரும்பும்

அகதிகளுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் போன்ற நீண்டகாலத் தீர்வினைக் கண்டறிய ஏதுவாகவும், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், பொதுத்துறைச் செயலாளர், மறுவாழ்வுத்துறை இயக்குநர் மற்றும் பிற அரசு உயர் அலுவலர்கள், அரசு சாரா உறுப்பினர்கள், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுடைய பிரதிநிதி மற்றும் வெளிப்பதிவில் வசிக்கக்கூடிய அகதிகளுக்கான பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு ஆலோசனைக் குழு நிச்சயமாக விரைவில் அமைக்கப்படும்.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர் நலனைப் பேணிட இந்த அரசு வீடு மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தலுக்கு **261** கோடியே **54** இலட்சம் ரூபாய், அவர்களது கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை உறுதி செய்திட **12** கோடியே **25** இலட்சம் ரூபாய் மற்றும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட **43** கோடியே **61** இலட்சம் ரூபாய், மொத்தம் **317** கோடியே **40** இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திடும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்குள்ள தமிழர்களை மட்டுமல்ல; கடல் கடந்து வாழக்கூடிய தமிழர்களையும் காக்கக்கூடிய அரசுதான் இந்த அரசு என்பதைக் கூறி அமர்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், முகாம் வாழ்*
*இலங்கைத் தமிழர்கள் நலன் தொடர்பாகத்*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி **110**இன்கீழ்*
*ஆற்றிய உரை – 27.08.2021*

# மூன்று வேளாண் சட்டங்களையும் இரத்து செய்யக் கோரும் தனித் தீர்மானம்



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் வாழ்க்கையில் மட்டுமல்ல; தமிழ்நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான நாளாக இந்த நாள் மாறப்போகிறது. அத்தகைய ஒரு தீர்மானத்தை நான் இன்றையதினம் இந்த அவையிலே நிறைவேற்றுவதற்கு ஏதுவாக முன்மொழிகிறேன்.

இந்த மண்ணையும் மக்களையும் காக்கும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசால் திட்டமிடப்பட்டுள்ள தீர்மானம் இன்றைய நாள் நிறைவேறப்போகிறது. பொதுவாக பல்வேறு மக்கள் சட்டங்களை நிறைவேற்றிக் காட்டிய இந்த மாமன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசால் கொண்டுவரப்பட்டுள்ள மூன்று வேளாண் சட்டங்களை இரத்து செய்யவேண்டும் என்பதற்கான தீர்மானத்தை நாம் நிறைவேற்றப் போகிறோம். இத்தகைய நெருக்கடியான சூழலை ஒன்றிய அரசுதான் உருவாக்கியது.

வேளாண்மையை மேம்படுத்தவும், உழவர்களைக் காப்பாற்றுவதற்காகவும் கொண்டுவரப்பட்டதாக ஒன்றிய அரசால் சொல்லப்படும் மூன்று வேளாண் சட்டங்களும் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதாக இல்லை; வேளாண்மையை அழிப்பதாக இருக்கிறது என்றே வேளாண் பெருங்குடி மக்கள் சொல்லி வருகிறார்கள். அதனை உணர்த்துவதற்காகக் கடந்த ஆண்டு முதல் போராட்டத்தையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திர இந்தியாவில் இப்படி ஒரு எழுச்சிமிகுப் போராட்டம் நடந்தது கிடையாது; இவ்வளவு நீண்ட காலம் நீடித்ததும் இல்லை என்று சொல்லத்தக்க அளவிலே உழவர்கள் போராட்டம் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. 'மக்களாட்சி காலத்திலே மக்கள் குரலுக்கு அளிக்கும் மரியாதை இதுதானா?' என்ற கேள்வி ஒருபக்கம் எழுந்து நிற்கிறது. இத்தகைய சூழலில் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்டுள்ள மூன்று வேளாண் சட்டங்களை முழுமையாக எதிர்க்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

உழவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நம் நாட்டில் வைத்துள்ளோம். இதன் நோக்கத்தையும் செயல்பாட்டையும் சிதைக்கும் நோக்கத்தோடு, இந்தச் சட்டங்களை ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது.

மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஒரு துறைக்கு எந்த மாநில அரசுடனும் ஆலோசனை நடத்தாமல், தன்னிச்சையாக ஒன்றிய அரசு சட்டம் கொண்டுவந்திருப்பது கூட்டாட்சித் தத்துவத்துக்கு விரோதமானது. அதனால்தான், அந்தச் சட்டங்களை நிராகரிக்க வேண்டியதாக இருக்கிறது. இதனால் மாநில அரசின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன; பறிக்கப்படுகின்றன; கூட்டாட்சித் தத்துவம் கேள்விக்குள்ளாகிறது. ஜனநாயக அமைப்புகளின்

மாண்பு சிதைகிறது. இதனால்தான், இந்த மூன்று சட்டங்களையும் நிராகரிக்க வேண்டியதாக இருக்கிறது.

ஒன்றிய அரசு கடந்த 2020ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்களில் பின்வரும் மூன்று வேளாண் சட்டங்களை இயற்றியிருக்கிறது:

(i) விவசாயிகள் உற்பத்தி வர்த்தகம் மற்றும் வாணிபம் (ஊக்குவிப்பு மற்றும் உதவுதல்) சட்டம், 2020.

(ii) விவசாயிகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாத்தல்) விலை உறுதி மற்றும் பண்ணை சேவைகள் ஒப்பந்தச் சட்டம், 2020.

(iii) அத்தியாவசியப் பொருட்கள் (திருத்தம்) சட்டம், 2020.

இந்த மூன்று சட்டங்களுமே வேளாண்மைக்கும், உழவர்களுக்கும் எதிரானவைதான்.

உழவர்கள் இந்த நாட்டிலிருந்து எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான்; நெற்றி வியர்வை சிந்தி, தாம் விளைவிக்கும் பொருளுக்கு உரிய விலை கிடைக்கவேண்டும் என்பதுதான் அவர்களது ஒரே கோரிக்கை. ஆனால், குறைந்தபட்ச ஆதார விலை என்பதைக் குறைந்தபட்சம் வாய் வார்த்தைக்குக்கூட பேசாத சட்டங்கள்தான் இந்த மூன்று சட்டங்களும்.

ஒன்றிய அரசின் வேளாண் விவசாயிகள் உற்பத்தி வர்த்தகம் மற்றும் வாணிபச் சட்டமானது, பல ஆண்டுகளாக உழவர்களின் விளைபொருட்களை விற்பனை செய்துகொடுப்பதில் பெரும் பங்காற்றி வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் சந்தைப் பகுதியை உள்நோக்கத்துடன் குறைக்கிறது. அதாவது, மாநில அரசின் அதிகாரத்துக்குட்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள். அவர்கள் சொல்லும் வர்த்தகப் பகுதி என்பது தெளிவான வரையறைக்கு உட்பட்டதாக இல்லை. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு

இது பெருமளவிலே வருவாய் இழப்பை ஏற்படுத்தும்; இதனால், உழவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க முடியாத சூழலும் ஏற்படும். ஒன்றிய அரசின் இந்தச் சட்டத்தினால் மாநில விவசாயிகளுக்கு எந்தவிதமான பயனும் இல்லை என்பது உறுதியாகிறது.

இரண்டாவதாக, "விவசாயிகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாத்தல்) விலை உறுதி மற்றும் பண்ணைச் சேவைகள் ஒப்பந்தச் சட்டம், 2020" என்ற ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமானது, தனியார் கூட்டாண்மை நிறுவனங்களை மாநில அரசின் கண்காணிப்பிலிருந்து விடுவிப்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பது நன்கு உறுதியாகின்றது. இந்தச் சட்டத்தினால், இலாபகரமான விலையை உழவர்கள் கேட்டுப்பெற முடியாத நிலை உருவாகும். அதுமட்டுமல்ல; தங்களின் நில உடைமை உரிமைகள் பறிபோகும் என்றும் உழவர்கள் அஞ்சுகின்றார்கள். இச்சட்டத்தின்படி, ஒப்பந்த நிபந்தனைகள், உழவர்களைவிட, விளைபொருளை வாங்கும் தனியாருக்கே சாதகமாக இருக்கும். அதுமட்டுமல்ல; இடுபொருட்களின் விலையும், விளைபொருளுக்கான விற்பனை விலைக்கு இணக்கமாக இருக்காது. மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளைத் தடுக்கவும் இச்சட்டத்தின்கீழ் வழியில்லை. இச்சட்டம் விளைபொருளைக் கொள்முதல் செய்யும் தனியார் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு மட்டுமே சாதகமாக இருக்கும் வகையில் இயற்றப்பட்டுள்ளது என்பது நடுநிலையாளர்கள் கருத்து.

மூன்றாவதாக, "அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டம், 2020" என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது; இதன்படி, விளைபொருள்களின் சேமிப்புக் கட்டுப்பாடுகள் விலக்கப்பட்டுள்ளன. குறைந்தபட்ச ஆதார விலை நிறுத்தப்படும்; விளைபொருட்களுக்கு உரிய விலை உழவர்களுக்குக் கிடைக்காது, ஆனால் சந்தையில்

செயற்கையான விலையேற்றம் ஏற்படும்; இந்தத் திருத்தச் சட்டம் மூலம் விவசாயிகள் எவ்விதப் பயனும் அடையப்போவதில்லை.

இப்படி இந்த மூன்று சட்டங்களுமே வேளாண்மைக்கு எதிரானதாகவும், உழவர்கள் மற்றும் நுகர்வோருக்குப் பாதகமானதாகவும் அமைந்திருக்கின்றன. எனவே, இந்த அரசு கண்ணில் வைத்துப் போற்றும் நம் உழவர்களின் நலன்களை என்றென்றும் பாதுகாத்திடவும், அவர்தம் வாழ்வு செழிக்கவும், வேளாண்மை என்பது பெருநிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்குச் சென்றுவிடாமல் தடுக்கவும், அரசியலமைப்புச் சட்டத்தின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக அமைந்துள்ள ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்டங்களும் இரத்து செய்யப்பட வேண்டும் எனக் கோரி ஒன்றிய அரசை வலியுறுத்தி, ஒருமனதாக இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த **2020**ஆம் ஆண்டு, ஆகஸ்ட் **9**ஆம் தேதி தொடங்கி, இன்றுவரை **385**ஆவது நாளாக உழவர்கள் இந்த மூன்று வேளாண் சட்டங்களையும் எதிர்த்து, தொடர்ந்து கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அறவழிப் போராட்டத்திற்கு மதிப்பளிக்கும் இந்த அரசு இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறது:

## தீர்மானம்

"வேளாண் தொழில் பெருகவும், விவசாயிகள் வாழ்வு செழிக்கவும் இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து, இம்மாநிலத்தின் வரலாற்றில் முதன்முறையாக வேளாண்மைக்கு எனத் தனி நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து, வேளாண்மைத் துறையின் பெயரினை, 'வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை' என மாற்றி ஒரு உயர்ந்த குறிக்கோளோடு செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், கடந்த ஆண்டு ஒன்றிய அரசு விவசாயிகள் நலனுக்கு எதிராகக் கொண்டுவந்த சட்டங்கள் முறையே;

(i) விவசாயிகள் உற்பத்தி வர்த்தகம் மற்றும் வாணிபம் (ஊக்குவிப்பு மற்றும் உதவுதல்) சட்டம், 2020;

(ii) விவசாயிகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாத்தல்) விலை உறுதி மற்றும் பண்ணைச் சேவைகள் ஒப்பந்தச் சட்டம், 2020;

(iii) அத்தியாவசியப் பொருட்கள் (திருத்தம்) சட்டம், 2020

ஆகிய மூன்று சட்டங்களும் நமது நாட்டின் வேளாண் வளர்ச்சிக்கும், விவசாயிகளின் நலனுக்கும் உகந்ததாக இல்லை என்பதால், அவை ஒன்றிய அரசினால் இரத்து செய்யப்படவேண்டும் என இந்தச் சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது''.

மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை மீண்டும் கேட்கிறேன்; இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ஒன்றிய அரசின்*
*மூன்று வேளாண் சட்டங்களை இரத்து செய்யக் கோரும்*
*அரசினர் தனித் தீர்மானத்தினை*
*முன்மொழிந்து ஆற்றிய உரை –* ***28.08.2021***

# ஒன்றிய அரசு மூன்று வேளாண் சட்டங்களை உடனடியாக திரும்பபெற வேண்டும்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘ஏதோ எங்களை வெளியேற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு நீங்கள் அந்தக் கருத்தைச் சொல்கிறீர்களா’ என்ற ஒரு சந்தேகத்தை எழுப்பினார். இந்தத் தீர்மானத்தில்கூட ‘ஒருமனதாக’ என்றுதான் போட்டிருக்கிறோம். நீங்களும் அதை ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடுதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் அந்தத் தீர்மானத்தில் உள்ள வாசகத்தைக்கூடப் பார்க்கலாம். அந்தத் தீர்மானத்தினுடைய வாசகத்தில் ‘ஒருமனதாக நிறைவேற்றப்பட வேண்டும்’ என்றுதான் சொல்லியிருக்கிறோம். ஆனால், இருந்தாலும் பி.ஜே.பி. உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துவிட்டு, வெளிநடப்பு செய்துவிட்டார்கள். அதனால், சபையில் இருக்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வைத்துத்தான், ‘ஒருமனதாகவா’ அல்லது ‘பெரும்பான்மையாகவா’ என்று கணக்குப் போடமுடியும். ஆதலால், இதை ஏற்றுக்கொள்கிறீர்களா, இல்லையா என்பதை மாத்திரம் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் எப்போதும் உழவர் பக்கம்தான் இருப்போம்; உழவர்களுக்காகப் போராடுகிறோம்; பாடுபடுகிறோம் என்றெல்லாம் சொன்னீர்கள். ஏற்றுக்கொள்கிறேன். பிறகு, நீங்கள் ஆட்சியில் இருந்தபோது, ஏன் இதை எதிர்த்து அல்லது திரும்பப்பெற

வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவில்லை? பல மாநிலங்களில் இருக்கக்கூடிய சட்டமன்றங்களில் தீர்மானம் போட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், உழவர்கள் பக்கம் நாங்கள் எப்போதும் இருப்போம், இருப்போம் என்று சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய நீங்கள், இந்தச் சட்டங்களைத் திரும்பப் பெறவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு ஏன் தயங்கினீர்கள்? அதில் என்ன தயக்கம்? ஆதலால், நீங்கள் செய்ய முடியாததை, இப்போது நாங்கள் செய்கிறோம். அதனால் இதை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

அண்மையில் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, டெல்லிக்குச் சென்று பிரதமரைச் சந்தித்தபோது, இதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதில், எந்தவித மாற்றமும் கிடையாது. அப்போதே சொல்லியிருக்கிறோம். இதுவரை அதற்கு எந்தவிதமான பதிலும் கிடையாது. ஆகவே, இதற்கிடையில்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவோம் என்று தேர்தல் நேரத்தில் நாங்கள் மக்களிடத்தில் வாக்குறுதி அளித்திருந்தோம். எங்களது வாக்குறுதிகளில் அதுவும் ஒன்று. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தவுடன், விவசாயிகளுக்காகச் சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டுவருவோம்; போராடுகிற விவசாயிகளே எங்கள்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே, இந்த மூன்று வேளாண் சட்டங்களையும் உடனடியாக ஒன்றிய அரசு திரும்பப்பெற வேண்டுமென்று தீர்மானத்தைச் சட்டமன்றத்திலே கொண்டுவருவோம் என்று தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். நாங்கள் அளித்த உறுதிமொழிகளைத்தான் தொடர்ந்து படிப்படியாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்.

எனவே, இதற்கு நீங்கள் ஆதரவு தரவேண்டுமென்று மீண்டும், மீண்டும் வலியுறுத்தி, வற்புறுத்தி, பணிவோடு, உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை ஆதரித்து நன்றி தெரிவித்துப் பேசிய திரு.தி.வேல்முருகன் அவர்கள் ஒரு கோரிக்கையை எடுத்துவைத்தார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே, ஒன்றிய அரசு கொண்டுவந்த மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறக்கோரி தமிழ்நாடு முழுவதும் அறவழியில் போராடிய விவசாயிகள், அரசியல் கட்சித் தலைவர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்,*
*ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்டங்களை*
*இரத்து செய்வது தொடர்பான அரசினர் தனித் தீர்மானத்தின்மீது*
*எதிர்க்கட்சித் துணைத் தலைவர்*
*திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பேசியபோது,*
*குறுக்கிட்டு பதிலளித்து ஆற்றிய உரை –* ***28.08.2021***

# போதைப் பொருள் விற்பனை முற்றிலும் தடுக்கப்படும்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து, 29.08.2021 வரை தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் விற்பனை தொடர்பாகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனை விற்பவர்கள், கடத்துபவர்கள் ஆகியோர் மீது 10 ஆயிரத்து 673 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன; 11 ஆயிரத்து 247 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து 149.43 டன் குட்கா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 113 நான்கு சக்கர வாகனங்களும், 106 இரு சக்கர வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 15 பேர் குண்டர் சட்டத்திலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை விற்றது மற்றும் கடத்தியது தொடர்பாக 2,458 வழக்குகள் போதைப் பொருள் தடுப்புப் பிரிவில் பதிவு செய்யப்பட்டு, 5,793 கிலோ கஞ்சா மற்றும் இதர போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 3,413 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களில் 81 பேர் குண்டர் சட்டத்திலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். போதைப் பொருட்கள் விற்பனை செய்வோர் மற்றும் கடத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, போதைப் பொருள் விற்பனை முற்றிலும் தடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஏற்கெனவே போதை மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடைச் சட்டம் **1985**இன்கீழ், நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தாலும், பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகிலே போதைப் பொருட்கள் விற்பனை செய்வோருக்குக் கடுமையான தண்டனைகள் வழங்க அந்தச் சட்டத்திலே புதிய திருத்தங்கள் கொண்டுவரப்படும். புதிய திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் .

காவல்துறையினரை ஊக்குவிக்க நிச்சயம் இந்த அரசு தயங்காது. இதுகுறித்து பரிசீலித்து, ஆராய்ந்து, என்னென்ன வகையிலே அவர்களுக்குச் சிறப்புச் செய்ய வேண்டுமோ, அதைப் பரிசீலித்து, அவர்களுக்குரிய ரிவார்டு நிச்சயம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், வினா–விடை நேரத்தில்,*
*தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் விற்பனை தொடர்பாக*
*உறுப்பினர் திரு. ஜி.கே.மணி அவர்கள் எழுப்பிய*
*வினாக்களுக்கு பதிலளித்து ஆற்றிய உரை –* ***31.08.2021***

# ‘தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்’, ‘தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்’ எனப் பெயர் மாற்றம்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளில் குடிசை மாற்று வாரியமும் இணைந்திருக்கிற காரணத்தால், அது சம்பந்தமாக ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

கோட்டையிலே இருந்தாலும் குடிசை வாழ் மக்களின் வாழ்க்கைக்காக, அவர்களுடைய முன்னேற்றத்திற்காகச் சிந்தித்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். முதன்முறையாக ஆட்சிக்கு வந்தபோது, அந்த மக்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்காகக் குடிசை மாற்று வாரியம் என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கினார். அதன்மூலமாக, பல்லாயிரக்கணக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்தார். அன்றைக்கு மத்தியிலே

அமைச்சராக இருந்த 'பாபுஜி' என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படக்கூடிய திரு.பாபு ஜெகஜீவன்ராம் அவர்களே, அந்தத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டுப் பாராட்டி, புகழ்ந்து பேசியிருக்கிறார். மேலும், இது தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களிலும் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற அவரது எண்ணத்தையும் அன்றைக்கு வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார். அந்தளவிற்கு இந்தக் குடிசை மாற்று வாரியம் மிகச் சிறப்பாக தன்னுடைய கடமையைச் செய்திருக்கிறது; செய்துகொண்டு வருகிறது.

ஏழை, எளிய மக்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த வாரியம், இனிமேல் 'தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்' (TAMILNADU URBAN HABITAT DEVELOPMENT BOARD) என்ற பெயரிலே அழைக்கப்படும் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல; குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும் உயர்த்திட வேண்டும்; அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது என்பதை நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றத்தில், 'தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்' என்பது 'தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் என அறிவித்து ஆற்றிய உரை – **01.09.2021***

# சென்னை, அண்ணாசாலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு திருவுருவச் சிலை

**மா**ண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.நீலமேகம் அவர்கள், தன்னுடைய உரையை முடிப்பதற்கு முன்பு ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார். தந்தை பெரியார் அவர்கள் எண்ணிய எண்ணத்தை நிறைவேற்றும் வகையில், திராவிடர் கழகத்தின் சார்பிலே சென்னை, அண்ணா சாலையிலே, தலைவர் கலைஞர் அவர்களுடைய திருவுருவச் சிலையை அமைக்க வேண்டுமென்று, அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அதற்காக முறையாக அனுமதியும் பெற்று, அந்தச் சிலை வைக்கப்பட்டது. ஆனால், அந்தச் சிலை ஏன் அங்கிருந்து அகற்றப்பட்டது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். நான் அந்த விஷயத்திற்குள்ளே சென்று, நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை.

இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்புகூட, திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் அய்யா திரு.கி.வீரமணி அவர்கள் என்னைச் சந்தித்து, அவரும் இந்தக் கோரிக்கையை என்னிடம் எடுத்து வைத்திருக்கிறார். இது பெரியார் நினைத்தது; பெரியார் எங்களுக்குக் கட்டளையிட்டு, நாங்கள் அதை வைத்தது. எனவே, மீண்டும் அந்த இடத்திலே அதை வைக்கவேண்டுமென்று அவரும் என்னிடத்திலே வற்புறுத்தியிருக்கிறார். நான் அப்போது சொன்னேன்; பொதுவான இடங்களிலே, போக்குவரத்திற்கு இடையூறாக இதுபோன்று சிலைகள் வைக்கப்படக்கூடாது என்று நீதிமன்றத்தால்

தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அவரிடம் அந்தச் சட்டச் சிக்கல்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். 'நாங்கள் ஏற்கெனவே அனுமதி வாங்கியதுதான்; எனவே, புதிதாக அனுமதி வாங்க வேண்டிய அவசியமில்லை' என்று அவர் சொன்னார். எனவே, அதை வைக்கவேண்டுமென்று ஆசிரியர் அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல; அண்ணா சாலையிலே தந்தை பெரியார் சிலை இருக்கிறது; அதேபோல, பேரறிஞர் அண்ணா சிலை இருக்கிறது; மறைந்த எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை இருக்கிறது. ஏற்கெனவே, கலைஞர் அவர்களுடைய சிலையும் இருந்தது. எனவே, அந்த இடத்திலே நீங்கள் அதை வைக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார். அண்ணா சாலையில் அதை வைப்பது குறித்து நான் சட்ட வல்லுநர்களோடு ஆலோசனை செய்வது உகந்ததாக இருக்கும். நீதிமன்றம் பிறப்பித்திருக்கிற உத்தரவிற்கும் நாம் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். நிச்சயமாகக் கலைஞர் அவர்களுடைய சிலை அண்ணா சாலையிலே வைக்கப்படும் என்பதை உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், முத்தமிழறிஞர்*
*கலைஞர் அவர்களது திருவுருவச் சிலையை அண்ணா சாலையில்*
*அமைப்பது குறித்து தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்*
*திரு. டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு,*
*பதிலளித்து ஆற்றிய உரை –* ***01.09.2021***

# பொதுத்துறை நிறுவனங்கள் நம் அனைவருடைய பொதுச் சொத்து

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத்துறை நிறுவனங்கள் பிரச்சினை குறித்த நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்றி, அதற்கு மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். எனவே, நானும் அதுகுறித்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நம் நாட்டினுடைய பொதுத்துறை நிறுவனங்கள், நம் அனைவருடைய பொதுச்சொத்தாகும். நமது நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பிற்கும் சிறு, குறு தொழில்களின் ஆணிவேராக விளங்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கக்கூடிய பெருந்தொழில் நிறுவனங்கள் அவை என்பது எல்லோருக்கும் தெரியும். இலாப நோக்கம் மட்டுமே குறிக்கோளாக இல்லாமல், மக்கள் நலன்கருதி இயங்கிவரக்கூடிய பொதுத்துறை நிறுவனங்களை விற்பதோ, குத்தகைக்கு விடுவதோ தேச நலனுக்கு உகந்தது அல்ல என்பது நம்முடைய கருத்து.

எனவே, ஒன்றிய அரசினுடைய பொதுச்சொத்துக்களைத் தனியார்மயமாக்கும் போக்கினை எதிர்க்கக்கூடிய வகையிலே, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் இதைச் சுட்டிக்காட்டி, நம்முடைய எதிர்ப்பைத் தெரிவிக்கக்கூடிய வகையில் கடிதம் எழுதவிருக்கிறேன் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பொதுச் சொத்துக்களைத் தனியார்மயமாக்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கை தொடர்பான கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் போது, ஆற்றிய உரை –* ***02.09.2021***

# விழுப்புரத்தில்,
# ரூ.4 கோடியில் 21 சமூகநீதிப் போராளிகளுக்கென மணிமண்டபம்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 110 விதியின்கீழ் இந்த அறிவிப்பினை நான் வெளியிட விரும்புகிறேன். சமூக நீதிக் கொள்கையின் தாய்மடியாக விளங்கக்கூடிய மாநிலம் நம்முடைய தமிழ் மாநிலம். வகுப்புரிமை, வகுப்புவாரி உரிமை, இடஒதுக்கீடு, சாதிரீதியான ஒதுக்கீடு என்று எந்தப் பெயரைச் சொல்லி அழைத்தாலும், அதற்குச் சமூகநீதி என்ற ஒற்றைச் சொல் கொடுக்கும் பொருளை வேறு எந்தச் சொல்லும் தருவது கிடையாது. அத்தகைய சமூகநீதிக் கொள்கைதான் திராவிட இயக்கம், இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்குக் கொடுத்த மாபெரும் கொடையாகும். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இந்திய ஒன்றியத்துக்கே அந்தத் தத்துவத்தைத் திராவிட இயக்கம் கொடையாக வழங்கியது.

வகுப்புரிமை (Communal G.O.) எனும் இடஒதுக்கீட்டு முறையை நூறாண்டுகளுக்கு முன் நடைமுறைக்குக் கொண்டுவந்தது நீதிக் கட்சிதான். மூடப்பட்டுக் கிடந்த கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரப் பதவிகள் அனைத்தும் அதன்மூலமாக அனைவருக்குமானது. சுதந்திர இந்தியாவில் அதற்குச் சட்டரீதியான இடர்ப்பாடு வந்தபோது, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இருந்து முன்னெடுத்த போராட்டம்தான் அது. அந்தப் போராட்டம் இந்தியத் துணைக் கண்டத்தையே கவனிக்க வைத்தது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், அதனை அன்றைய பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்களிடத்திலே வலியுறுத்தியதன் காரணமாக, இந்திய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டின் சமூகநீதிக் கொள்கைக்கு இந்திய அரசியல் சட்ட அங்கீகாரம் கிடைத்தது. அப்படி சமூகநீதியை அடைய, பல்வேறு போராட்டங்களை நடத்திய இயக்கம்தான் திராவிட இயக்கம்.

பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்குரிய இடஒதுக்கீட்டினை உறுதிப்படுத்தியதும், காலத்தின் தேவைக்கேற்ப அளவு மாற்றம் பெற்றுத் தந்ததும், கடந்த அரை நூற்றாண்டுக் கால வரலாற்றிலே இருக்கக்கூடிய சரித்திரச் சான்றாகும். அது யாராலும் மறைக்க முடியாத சாசனமாக அமைந்திருக்கிறது.

சமூகநீதிக்கான தொடர்ச்சியான போராட்டங்களின் வரிசையில், 1987ஆம் ஆண்டு நடைபெற்ற 20 விழுக்காடு தனி இடஒதுக்கீடு கோரி வடதமிழகத்தில் நடந்த போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்தப் போராட்டத்தில், அன்றைய அரசின் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்கள் 21 பேர். சமூகநீதிப்

போராளிகளான அவர்களுடைய உயிர்த் தியாகத்திற்கும், போராட்டத்திற்கும் நியாயம் வழங்கிடும் வகையில், 1989ஆம் ஆண்டு அமைந்த முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசு, இந்தியாவிலேயே முதன்முறையாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை அமைத்துக் கொடுத்து, அவர்களுக்கு 20 விழுக்காடு இடஒதுக்கீட்டினை வழங்கி, கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் சம வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அது அவர்களுடைய முன்னேற்றத்திற்கான பாதையை வகுத்துத் தந்தது.

சமூகநீதிக் கொள்கையின் தொடர்ச்சியாக, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில் செயல்படக்கூடிய நம்முடைய அரசு, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் 20 விழுக்காடு இடஒதுக்கீட்டில் வன்னிய சமுதாயத்தினருக்கான 10.5 விழுக்காடு தனி ஒதுக்கீட்டினை சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தியிருக்கிறது. ஒடுக்கப்படும் சமுதாயம் எதுவாக இருந்தாலும், அதன் உரிமைகள் காக்கப்பட வேண்டும்; மீட்கப்படவேண்டும் என்பதே திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய உயர்ந்த நோக்கமாகும். அத்தகைய தியாகிகளின் பங்களிப்பை நினைவுகூர்ந்து, 1987ஆம் ஆண்டு இடஒதுக்கீடுப் போராட்டத்தில் காவல்துறையினுடைய துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூகநீதிப் போராளிகளின் தியாகத்தை மதிக்கக்கூடிய வகையிலே, ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலே, விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலின்போது நான் அளித்த வாக்குறுதி இது. யார் மறந்திருந்தாலும், நிச்சயம் நான் மறக்கவில்லை; யாரையும் மறக்கமாட்டேன்.

“நான் சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். மிகவும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் என் வகுப்புக்கு ஓர் இடம் உண்டு. நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதால், பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக என் உயிரையேப் பணயமாக வைத்துப் போராடுவேன்” என்று தமிழ்நாடு சட்டமன்றத்திலே அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் சொன்ன வாசகம் இது. அந்த உறுதிமொழியை நானும் ஏற்றுக் கொண்டுள்ளதன் அடையாளம்தான் இந்த அறிவிப்பு என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், **1987**ஆம் ஆண்டு*
*இடஒதுக்கீடு போராட்டத்தில் காவல்துறையின் துப்பாக்கிச்*
*சூட்டுக்குப் பலியான **21** சமூகநீதிப் போராளிகளுக்கு*
*ரூபாய் **4** கோடி மதிப்பீட்டில், விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம்*
*அமைக்கப்படும் எனவிதி **110**இன்கீழ், அறிவித்து*
*ஆற்றிய உரை – **02.09.2021***

# வடசென்னையில் அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு மணிமண்டபம்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர், அவ்வையார், கபிலர், வள்ளலார் வரிசையிலே தமிழ்ச் சிந்தனை மரபை வளர்த்தெடுத்த மாபெரும் ஆளுமையான அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் பெருமையைப் போற்றக்கூடிய அறிவிப்பு ஒன்றை, 110 விதியின்கீழ் இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

தமிழ்நாட்டு அரசியலைப் பொறுத்தவரையில், இரண்டு சொற்கள் இல்லாமல் யாரும் அரசியல் நடத்த முடியாது. ஒன்று, தமிழன்; இன்னொன்று, திராவிடம். இந்த இரண்டு சொற்களையும் அரசியல் களத்தில் அடையாளச் சொல்லாக மாற்றியவர்தான், அறிவாயுதம் ஏந்தியவர்தான் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள்.

1881ஆம் ஆண்டே மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் ‘பூர்வத் தமிழர்’ என்று பதியச் சொன்னவர் பண்டிதர் அவர்கள். 1891ஆம் ஆண்டு அவர் தொடங்கிய அமைப்பின் பெயர் ‘திராவிட மகாஜன சபை’ என்பதாகும். 1907ஆம் ஆண்டு ‘ஒரு பைசாத் தமிழன்’ என்ற இதழைத் தொடங்கி, அதையே ‘தமிழன் என்ற இதழாக நடத்தி வந்தவர் அவர். ‘பூர்வீக சாதிபேதமற்ற திராவிடர்காள்’ என்று அழைத்தவர் அவர். அதனால்தான் தமிழன், திராவிடம் ஆகிய இரண்டு சொற்களையும் அறிவாயுதமாக அவர் ஏந்தினார் என்று குறிப்பிட்டேன். அவர் போட்டுக்கொடுத்த பாதையில்தான் தமிழ்நாட்டு அரசியல் செயல்பட்டு வருகிறது.

எழுத்தாளர், ஆய்வாளர், வரலாற்று ஆசிரியர், மானுடவியல் சிந்தனையாளர், பதிப்பாளர், பத்திரிகையாளர், மருத்துவர், பேச்சாளர், மொழியியல் வல்லுநர், பன்மொழிப் புலவர், புதிய கோட்பாட்டாளர், சிறந்த செயல்பாட்டாளர், சளைக்காத போராளி எனப் பன்முக ஆற்றலைக் கொண்டவர்தான் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள். அவரது தாத்தா திரு.கந்தப்பன் அவர்கள், தன்னிடம் இருந்த திருக்குறள் ஓலைச் சுவடிகளை திரு.எல்லீஸ் அவர்களிடம் கொடுத்து, திருக்குறளை அச்சுப் பதிப்பாகக் கொண்டுவந்ததை நினைக்கும்போது, குறளுக்கு அவருடைய குடும்பம் ஆற்றிய தொண்டுக்காக நாம் அனைவரும் தலைவணங்க வேண்டும்.

தந்தை பெரியார் அவர்களே, “என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும், சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடி அயோத்திதாசப் பண்டிதர்தான்” என்று குறிப்பிட்டிருக்கிறார். அதனால், அவர் சொன்னதைத் தாண்டி நான் எதுவும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. “இந்திய நாட்டின் முன்னேற்றத்துக்கு சாதியும் மதமுமே தடை” என்று சொன்ன அயோத்திதாசர்,

“மனிதர்களை மனிதர்களாகப் பார்ப்பவர் எவரோ, அவர்தான் மனிதர்” என்று முழங்கினார்.

1845 முதல் 1914 வரை வாழ்ந்த அயோத்திதாசர் அவர்களுடைய 175ஆவது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவரது அறிவை வணங்கும் விதமாகவும், வடசென்னைப் பகுதியில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிடுவதில் இந்த அரசு பெருமைப்படுகிறது.

மகான் புத்தரை ‘இரவு பகலற்ற ஒளி’ என்று சொன்ன அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுடைய சிந்தனைகளும், இரவு பகலற்ற ஒளியாக இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டும் என்று சொல்லி அமர்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், அயோத்திதாசர் அவர்களின்*
*175ஆவது ஆண்டு விழாவின் நினைவாக வடசென்னைப் பகுதியில்*
*மணிமண்டபம் அமைக்கப்படும் என விதி 110இன்கீழ் அறிவித்து*
*ஆற்றிய உரை – **03.09.2021***

## ‘வ.உ.சி. அவர்கள் மறைந்த நாள் தியாகத் திருநாள்’

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசியிருக்கக்கூடிய பல்வேறு கட்சியினுடைய தலைவர்கள், அயோத்தியதாசர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்புக்கு வாழ்த்து சொல்லியிருக்கிறீர்கள்; நன்றியும் தெரிவித்திருக்கிறீர்கள்; பாராட்டும் தெரிவித்திருக்கிறீர்கள்.

அதேநேரத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.ஈஸ்வரன் அவர்கள், வ.உ.சி. அவர்களுடைய 150ஆவது பிறந்த நாள் வருகின்றது. எனவே, அதனை அரசு விழாவாக, அவரைப் பெருமைப்படுத்தக்கூடிய வகையில் நாம் செயலாற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, என்னுடைய முதல் சுதந்திர தின உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். வ.உ.சி. அவர்களுடைய 150ஆவது பிறந்த நாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று நான் அறிவித்திருக்கிறேன். அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு அவரது 150ஆவது ஆண்டாக வருகிற காரணத்தால், 14 அறிவிப்புகளை நான் இப்போது அறிவிக்க விரும்புகிறேன்.

- சென்னை காந்தி மண்டபத்தில் உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு, அங்கு அன்னாரது மார்பளவு சிலை திறந்து வைக்கப்படும்.

- தூத்துக்குடி மாநகரில், முதன்மைச் சாலையான மேலபெரிய காட்டன் சாலை, இனி ‘வ.உ.சிதம்பரனார் சாலை’ என அழைக்கப்படும்.

- தனது வாழ்நாளின் முக்கிய நாட்களைக் கோவைச் சிறையிலே கழித்த வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய முழு உருவச் சிலையானது, கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில் அமைக்கப்படும்.
- செய்தித்துறையின் பராமரிப்பிலுள்ள ஒட்டப்பிடாரம் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த நினைவு இல்லமும், திருநெல்வேலியில் உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய மணிமண்டபமும் புனரமைக்கப்பட்டு, அவ்விடங்களில் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயனடையும் வகையில், ஒலி, ஒளி காட்சி அமைக்கப்படும்.
- வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்க்கை வரலாற்றினைச் சித்தரிக்கும் திரைப்படத்தினை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில், நவீன டிஜிட்டல் முறையிலே அது வெளியிடப்படும்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பெயரில் புதிய ஆய்விருக்கை ஒன்று அமைக்கப்படும்.
- வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதியுள்ள அனைத்துப் புத்தகங்களும் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு பாட நூல் கழகத்தின் மூலம் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.
- திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் படித்த பள்ளிக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், கலை அரங்கம் மற்றும் நினைவு நுழைவு வாயில் 1.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.
- கப்பல் கட்டுமானம், தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய கப்பல் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு, சிறந்த பங்காற்றிவரும்

தமிழர் ஒருவருக்கு 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' ஆண்டுதோறும் வழங்கப்படும். விருதுத் தொகையாக 5 இலட்சம் ரூபாய் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் மறைந்த நவம்பர் 18ஆம் தேதி, தியாகத் திருநாளாக அறிவித்துக் கொண்டாடப்படும்.
- இந்த ஆண்டு, செப்டம்பர் 5, 2021 முதல் செப்டம்பர் 5, 2022 வரை, தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் உருவாகும் அரசுக் கட்டடங்களுக்கு கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் பெயர் சூட்டப்படும்.
- பள்ளி,கல்லூரி மாணவர்கள் அறிந்து பயனடையும் வகையில், போக்குவரத்துத் துறையின் சார்பில் பேருந்து ஒன்றில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து புகைப்படக் கண்காட்சி ஏற்பாடு செய்து பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்பப்படும்.
- தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணையவழிக் கருத்தரங்கம் நடைபெறும்.
- தமிழ் நிகர்நிலைக் கல்விக் கழகத்தின் வாயிலாகக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை முழுவதும் இணையத்திலே மின்மயப்படுத்தி வெளியிடப்படும்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்,*
*வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய 150ஆவது பிறந்த நாள்*
*விழாவினையொட்டி, 14 அறிவிப்புகளை வெளியிட்டு*
*ஆற்றிய உரை – **03.09.2021***

# பஞ்சு, கழிவு பஞ்சு மீதான ஒரு விழுக்காடு வரி இரத்து



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களின் நலனுக்காகப் பல்வேறு அறிவிப்புகளையும், நலத் திட்டங்களையும் வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதன் தொடர்ச்சியாக, இப்போது நெசவுத் தொழிலை நம்பியிருக்கக்கூடிய நெசவாளர் தோழர்கள் மற்றும் சிறு குறு தொழில் நிறுவனங்களின் நன்மையைக் கருத்தில்கொண்டு, ஓர் முக்கிய அறிவிப்பினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, 110 விதியின்கீழ் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியத் துணித் தொழில் வணிகத்தில் மூன்றில் ஒரு பங்கு தமிழ்நாடு துணித் தொழில் வகிக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள

நூற்பாலைகளின் எண்ணிக்கை 1,570 ஆகும், இவ்வாலைகள் மூலம் நூற்கப்படும் நூல், நாட்டின் மொத்த நூற்புத்திறனில் 45 விழுக்காடு ஆகும், தமிழ்நாட்டில் அமைந்துள்ள நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சின் அளவில் 95 விழுக்காடு பிற மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண் பொருட்கள் விற்பனை (ஒழுங்குமுறை) சட்டம் 1987, பிரிவு 24–இன்படி, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சின் விற்பனை மதிப்பு மீது சந்தை நுழைவு வரியாக 1 விழுக்காடு விதிக்கப்படுகிறது. மேற்படி சட்டத்தின்படி, பருத்திப் பொதி, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சு ஆகியவை வேளாண் பொருட்களாகக் கருதப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள சந்தைப் பகுதிகளில் கொள்முதல் அல்லது விற்பனை செய்யப்படும் பொழுது 1 விழுக்காடு வரி (சந்தைக் கட்டணம்) விதிக்கப்படுகிறது. சந்தை நுழைவு வரி என்பது, பருத்திப் பொதிகள் மீது மட்டுமே விதிக்கப்பட வேண்டும். மாறாக, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சு போன்ற உற்பத்திப் பொருட்கள் மீதும் 1 விழுக்காடு சந்தை நுழைவு வரி விதிக்கப்படுகிறது.

இதனால் வெளி மாநிலங்களிலிருந்து பஞ்சு கொள்முதல் செய்யப்படும்பொழுது சிறு, குறு நூற்பாலைகள் போக்குவரத்துக் கட்டணம் செலுத்துவதிலே பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பஞ்சின்மீது விதிக்கப்படும் சந்தை நுழைவு வரியை நீக்க வேண்டுமென்பது தொழில் முனைவோர் மற்றும் நெசவாளர்களின் நெடுநாள் கோரிக்கையாக இருக்கிறது. இதனால், மாநிலத்தில் இந்தியப் பருத்திக் கழகம் பஞ்சு நூல் விற்பனையை மேற்கொள்ளும்பொழுது, நூற்பாலைகள் பெரிய அளவிலான பஞ்சு இருப்பினைப் பராமரிக்க வேண்டியதில்லை.

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நெசவாளர்களுடன் நடைபெற்ற கருத்துக் கேட்புக் கூட்டங்களில், இந்த வரியினை நீக்க வேண்டுமென்று தங்களது கோரிக்கையாக அவர்கள் தெரிவித்தனர். இதனைக் கருத்திற்கொண்டு, தொழில் முனைவோர் மற்றும் நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு வரி (சந்தைக் கட்டணம்) இரத்து செய்யப்படுகிறது. இதற்கான உரிய சட்டதிருத்தம் இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரிலே கொண்டுவரப்படவிருக்கிறது என்பதைக் கூறி, அமைகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு*
*சட்டமன்றத்தில் விதி 110இன்கீழ் தொழில்முனைவோர் மற்றும்*
*நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினையேற்று,*
*பஞ்சு, கழிவு பஞ்சு மீதான ஒரு விழுக்காடு வரி (சந்தைக் கட்டணம்)*
*இரத்து என அறிவித்து ஆற்றிய உரை – 04.09.2021*

# ‘தந்தை பெரியார் பிறந்த நாள் சமூகநீதி நாள்’



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முறையாக 1967ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, ‘இந்த ஆட்சியே தந்தை பெரியாருக்குக் காணிக்கை’ என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள். ஆறாவது முறை ஆட்சிக்கு வந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு, அந்தப் பகுத்தறிவுப் பகலவனின் அறிவுச்சுடரைப் போற்றும் விதமாக, வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு ஒன்றை விதி 110இன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, இந்த மாமன்றத்தில் வெளியிடுவது என் வாழ்வில் கிடைத்ததற்கரிய நல்வாய்ப்பு என்பதை எண்ணி மகிழ்கிறேன்.

“ஈ.வெ. இராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை

மேற்போட்டுக்கொண்டு அதேப் பணியாய் இருப்பவன். இதைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணியைச்செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக்கொண்டு தொண்டாற்றி வருகிறேன்'' என்று அறிவித்துக்கொண்டு, **95** வயது வரை மூத்திரச் சட்டியைத் தூக்கிக்கொண்டு இந்த இனத்துக்காக, நாட்டுக்காகப் போராடியவர்தான் தந்தை பெரியார் அவர்கள்.

'மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு' என்பதையே அடிப்படையாகக்கொண்டு சுயமரியாதை இயக்கம் தொடங்கிய தந்தை பெரியார் அவர்கள் மானமும் அறிவும் உள்ள மனிதர்களாக ஆக்குவதற்கு அறிவுலக ஆசானாக இந்த நாட்டை வலம் வந்தார். அவர் நடத்திய போராட்டங்கள் யாராலும் 'காப்பி' அடிக்க முடியாத போராட்டங்கள்; அவர் எழுதிய எழுத்துகள் யாரும் எழுதத் தயங்கும் எழுத்துக்கள்; அவர் பேசியப் பேச்சுக்கள், யாரும் பேசப் பயப்படும் பேச்சுகள்; தமிழர் நலமெல்லாம் தன்னுடைய நலமாகக் கருதினார்; தமிழர்க்கு எதிரானது எல்லாவற்றையும் தனது எதிரியாகக் கொண்டு எதிர்த்திருக்கிறார். அவர் நடந்த நடை, அவர் நடத்திய சுற்றுப்பயணங்கள், அவர் நடத்திய மாநாடுகள், அவர் நடத்திய போராட்டங்களைச் சொல்லத் தொடங்கினால், இந்த மாமன்றத்தையே பத்து நாட்களுக்கு ஒத்திவைத்துப் பேச வேண்டும்.

''மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வு இல்லை; ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்'' – இவை இரண்டும்தான் அவரது அடிப்படைக் கொள்கைகள். சாதி ஒழிப்பு, பெண்ணடிமைத்தனம் ஒழிப்பு ஆகிய இரண்டும்தான் அவரது இலக்குகளாக இருந்திருக்கின்றன. அந்த இரண்டுக்கும் எவையெல்லாம் தடையாக இருக்குமோ, அவை அனைத்தையும் கேள்வி கேட்டார்; அறிவியல்பூர்வமாகக் கேள்வி கேட்டார்; தன்னைப் போலவே சிந்திக்கத் தூண்டினார்.

அவரது சுயமரியாதைச் சிந்தனையால் தமிழினம் சுயமரியாதைச் சிந்தனையைப் பெற்றது; அவர் உருவாக்கிய பகுத்தறிவின் கூர்மையால் தமிழினம் சிந்தனைத் தெளிவு பெற்றது. சாதியால் அடக்கி ஒடுக்கப்பட்ட மனிதர்கள் கல்வி, வேலைவாய்ப்பில் மேன்மையை அடைவதற்கான சமூகநீதிக் கதவைத் திறந்து வைத்தது அவரது கைத்தடியே ஆகும். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இன்று இந்தியா முழுமைக்கும் சமூகநீதிக் கருத்துகள் விதைக்கப்பட்டுள்ளன என்றால், அதற்கு அவர் போட்ட அடித்தளமே காரணம்.

நாடாளுமன்றத்தின் வாசலுக்கேப் போகாத அவரால்தான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் முதல் முதலாகத் திருத்தம் செய்யப்பட்டது. சட்டமன்றத்துக்குள் வர ஆசைப்படாத அவரது சிந்தனை கொண்ட சட்டங்கள் ஏராளமாக இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தனது சிந்தனையை அடுத்தவர் மூலமாகச் செய்ய வைக்கும் அபூர்வமான ஆற்றல் அவருக்குத்தான் இருந்தது.

‘என் வாழ்வில் வசந்த காலம் என்பது தந்தை பெரியாரோடு நான் இளைஞராக இருந்து வலம்வந்த காலம்தான்’ என்று நம்மையெல்லாம் உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

“பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம்
ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்”

என்று எழுதினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். பேரறிஞர் பெருந்தகையும், தலைவர் கலைஞர் அவர்களும் உருவான குருகுலம் பெரியாருடைய குருகுலமாகும். இந்தக் குருகுலத்துப் பயிற்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி, அரசியல் புரட்சிகரக் கருத்துக்களைத் தமிழ்நாட்டில் விதைத்து, ஆட்சிக்கு வந்து அதே கொள்கையை நிறைவேற்றிவரும் அந்தக் காட்சியை நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். இது உலகில் எந்த சீர்திருத்த

இயக்கத்துக்கும் கிடைக்காத புகழாகும். சீர்திருத்தவாதிகள் பேசிவிட்டுப் போயிருப்பார்கள்; ஆட்சியாளர்களுக்கு அதன் வாசனையே இருக்காது. தமிழ்நாட்டில் மட்டும்தான் ஒரு சீர்திருத்த இயக்கம், அரசியல் இயக்கமாக மாறி, அந்த இயக்கம் சீர்திருத்தக் கருத்துக்களை நடைமுறைப்படுத்தி, சட்டமாகவும் ஆக்கி அந்தச் சமுதாயத்தை மேன்மை அடைய வைத்திருக்கிறது.

அவரால் கல்வி பெற்றவர்கள், அவரால் வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள், அவரால் அதிகாரத்தைப் பெற்றவர்கள், அவரால் பெண்ணினம் அடைந்த வளர்ச்சிகள், ஒடுக்கப்பட்ட மக்கள் அடைந்த எழுச்சிகள் ஆகியவற்றுக்கு இன்றைய தமிழ்நாடே சாட்சி. இந்த விதை தந்தை பெரியார் போட்ட விதை; பேரறிஞர் அண்ணா அதற்கு எருவூட்டினார்; கலைஞர் அவர்கள் வளர்த்தார்கள். அதனை மாபெரும் விருட்சமாகக் காப்பாற்ற வேண்டியக் கடமை நமக்கு இருக்கிறது.

சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமூகநீதி, இன உரிமை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட கொள்கையைத் தந்தை பெரியார் அவர்கள் உருவாக்கினார்கள். அதுதான் கடந்த நூற்றாண்டில் இந்தச் சமூகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது; எதிர்காலத்துக்குப் பாதை அமைத்துத் தரப்போகிறது.

இந்த உணர்வை, உணர்ச்சியை, எழுச்சியை, சிந்தனையை விதைக்கும் அடையாளமாக அறிவாசான் தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17ஆம் நாளை ஆண்டுதோறும் 'சமூகநீதி நாள்' ஆகக் கொண்டாடுவது என்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. தந்தை பெரியாரின் அறிவு வெளிச்சத்தில் வளர்ந்த நாம், நமது நன்றியின் அடையாளமாக இந்த நாளைக் கொண்டாடுவோம்; சாதிய ஏற்றத் தாழ்வுகள், தீண்டாமைக் கொடுமைகளை, மத வேறுபாடுகளை உதறித் தள்ளுவோம்; பெண்களைச் சமநிலையில் மதிப்போம். அந்த எண்ணத்தை விதைக்கும் விதமாக இந்த

உறுதிமொழியைத் தயாரித்துள்ளோம். ஆண்டுதோறும் செப்டம்பர் 17ஆம் நாளன்று தலைமைச் செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் கீழ்க்கண்ட உறுதிமொழியை அனைவரும் எடுத்துக்கொள்வோம்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியும்
யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியும்

எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைப்பிடிப்பேன்!

சுயமரியாதை ஆளுமைத் திறனும், பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!

சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக்கொள்வேன்!

மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்!

சமூகநீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன்!"

என்ற உறுதிமொழியை எடுத்துக்கொள்வோம் என்று இந்த மாமன்றத்துக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தந்தை பெரியார் மறைந்தபோது, 'தந்தை பெரியார் தனது சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டார், நாம் தொடர்வோம்' என்றார் அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள். எனவே, நாம் தொடர்வோம்! தொடர்வோம்! தொடர்வோம்!

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றத்தில் விதி 110இன்கீழ், தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17ஆம் நாளை ஆண்டுதோறும் 'சமூகநீதி நாள்' ஆகக் கொண்டாடுவோம் என அறிவித்து ஆற்றிய உரை – **06.09.2021***

# விநாயகர் சதுர்த்தியை தங்களது இல்லங்களிலே கொண்டாடலாம்...



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள், விநாயகர் சதுர்த்தியையொட்டி, அதற்கு அனுமதி தரவேண்டுமென்று ஒரு கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார். நான் ஒரு விளக்கத்தை அவருக்கு மட்டுமல்ல; இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய அனைவருக்கும் – ஏன், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைவருக்கும் தெரிவிக்க விரும்புகிறேன்.

கொரோனா நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்த, அதிகளவில் மக்கள் கூடுவதைத் தவிர்க்கத் தேவையான கட்டுப்பாடுகளை **30.09.2021** வரை தொடர்ந்து நடைமுறைப்படுத்த, ஒன்றிய அரசின்

உள்துறை அமைச்சகம் மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. நீதிமன்றமும் அதைத்தான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

கேரள மாநிலத்திலே, ஓணம் மற்றும் பக்ரீத் பண்டிகை கொண்டாட்டங்களுக்கு, அதிக அளவில் மக்கள் கூடுவதற்கு அனுமதி அளித்த காரணத்தினால்தான், அங்கே கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது. தமிழ்நாட்டிலும் இன்றுவரை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை முழுமையாகத் தடுக்கப்படவில்லை; அங்குமிங்கும் கொஞ்சம் இருக்கிறது. அந்த எண்ணிக்கை ஒரு நாளைக்கு 50 ஏறுகிறது; 50 குறைகிறது. இப்படி ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான், பொது மக்களுடைய பாதுகாப்பு மற்றும் நலனைக் கருத்திலேகொண்டு, 15.09.2021 வரை அனைத்து சமய விழாக்களைக் கொண்டாட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இது விநாயகர் சதுர்த்தி விழாவிற்கும் பொருந்தும்.

பொது இடங்களில் விநாயகர் சதுர்த்தி உள்ளிட்ட சமய விழாக் கொண்டாட்டங்களுக்கு மட்டுமே கட்டுப்பாடுகளேத் தவிர, தனி நபர்களைப் பொறுத்தவரையில், கொரோனா பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி, தங்கள் இல்லங்களில் கொண்டாடலாம் என்று அரசு சார்பில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே,இதையெல்லாம் மனதிலே கொண்டுதான் தடை விதிக்கப்பட்டிருக்கிறதேத் தவிர, யாரும் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம்.

அதையொட்டி, இன்னொரு அறிவிப்பையும் நான் இங்கே வெளியிட விரும்புகிறேன்.

நமது மாநிலத்தில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு வரக்கூடிய சுமார் 12 ஆயிரம் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு, மழைக்

காலங்களில் தொழில் செய்ய இயலாத நிலையிலே, அவர்களுக்கு நிவாரணமாக 5 ஆயிரம் ரூபாய் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுள், சுமார் 3 ஆயிரம் தொழிலாளர்கள் திருவிழாக் காலங்களில் விநாயகர் சிலைகளைச் செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக, பொது இடங்களில் விழாக்களைக் கொண்டாட தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தங்களது தொழிலை மேற்கொள்ள இயலாத நிலையில், அவர்களது வாழ்வாதாரம்கூட பாதிக்கப்பட்டிருக்கிறது.

இதனையெல்லாம் இந்த அரசு கருத்திலேகொண்டு, இந்த 3 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மழைக்காலப் பாதிப்பு நிவாரணத் தொகை போக, கூடுதலாக மேலும் 5 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையாக அளிக்கப்பட்டு, மொத்தம் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் தொடர்பாகச் சட்டமன்ற உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு பதிலளித்து ஆற்றிய உரை – **07.09.2021***

# இந்திய ஒருமைப்பாட்டை கேள்விகுறியாக்கும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை இரத்து செய்யவேண்டும்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியுரிமை என்பது ஒவ்வொரு மனிதனின் சட்டப்பூர்வமான உரிமை. இந்திய நிலப்பரப்புக்குள் தங்கள் இருப்பிடத்தைக்கொண்ட அனைவருக்கும் குடியுரிமை வழங்கிட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 14ஆவது பிரிவின்படி, இந்திய நிலப்பரப்புக்குள் எந்த நபருக்கும், எந்தக் குடிமகனுக்கும் சட்டப்படியான சமத்துவம், அனைவருக்கும் சட்டப்படியான பாதுகாப்பு ஆகிய அம்சங்களை அரசு மறுக்க முடியாது. 1955ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின்படி, குடியுரிமை பெற மதம் ஒரு அடிப்படையாக இல்லை. ஆனால், இன்றைய ஒன்றிய அரசு கொண்டுவந்த திருத்தத்தில், மதத்தை ஒரு அடிப்படையாக மாற்றுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், இந்தியாவை மதச்சார்பற்ற அரசு என்கிறது. அதன்படி பார்க்கும் போது, மதத்தை அடிப்படையாகக் கொண்டு எந்தச் சட்டத்தையும் கொண்டுவர முடியாது. அதனால்தான் இந்தச் சட்டத்தை எதிர்க்க வேண்டியுள்ளது. இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம், இந்திய நாடாளுமன்றத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது. இதற்கு இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019 {Citizenship (Amendment) Act, 2019} என்று பெயர் சூட்டப்பட்டது.

பாகிஸ்தான், வங்க தேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் இந்தியாவிற்குள் புலம்பெயர்ந்து குடியேறிய இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறித்தவர்கள் ஆகியோருக்கு இந்தச் சட்டம் குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. இசுலாமியர் இதில் திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டுள்ளனர். இது மக்களை மதரீதியாகப் பிரிக்கிறது என்பதால், இந்தச் சட்டத்தை ஆரம்ப நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தது.

இந்தச் சட்டமானது, நமது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு, குறிப்பாக மதச்சார்பற்ற தன்மைக்கு, முற்றிலும் எதிரானதாகும் என்ற காரணத்தினாலும், அது நாட்டு நலனுக்கு உகந்ததல்ல என்பதாலும் எதிர்ப்பைத் தெரிவித்தோம். இச்சட்டத்தினை எதிர்க்கும் வகையில், அது நிறைவேற்றப்படுவதற்கு முன்பே, அதனை எதிர்த்து இந்த மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கவேண்டும் எனக் கோரிக்கை வைத்தோம். ஆனால், அக்கோரிக்கை முந்தைய அரசால் ஏற்கப்படவில்லை. எனினும், இது தொடர்பாக, இச்சட்டத்திற்கு எதிராக நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும், தோழமைக் கட்சிகளும் வாக்களித்திருக்கின்றன.

அகதிகளாக வருபவர்களைச் சக மனிதர்களாகப் பார்க்கவேண்டும், மத ரீதியிலோ, இன ரீதியிலோ, எந்த நாட்டிலிருந்து வருபவர்கள் என்ற ரீதியிலோ அவர்களைப் பிரித்துப் பார்க்கக்கூடாது என்பதுதான் சரியான பார்வையாக இருக்கும். வாழ்க்கையை இழந்து, சொந்த நாட்டில் வாழ முடியாமல், வேறு நாட்டுக்கு வருபவர்களிடம் பாகுபாடு காட்டுவது அகதிகளுக்கு நன்மை செய்வது ஆகாது. இது ஏற்கெனவே துன்பப்பட்ட மக்களை மேலும் துன்பத்துக்கு ஆளாக்கிப் பார்ப்பதாகும். அரசியல்ரீதியான பாகுபாட்டை, சட்டரீதியான பாகுபாடாக உறுதிப்படுத்துவது மிகமிகத் தவறானது ஆகும். அதிலும் குறிப்பாக, இலங்கைத் தமிழர்கள் இந்தச் சட்டத்தின் மூலமாக வஞ்சிக்கப்படுகிறார்கள். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்க தேசத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் வரலாமென்றால், இலங்கையைச் சேர்ந்தவர்கள் வருவதற்குத் தடை விதித்தது ஏன்? இதுதான் இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகம். இதனால்தான் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறோம். இலங்கைத் தமிழர்கள் அந்த நாட்டில் வாழ முடியாமல் தமிழகம் தப்பிவந்து முகாம்களிலும், வெளியிலும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் மீண்டும் இலங்கைக்குத் திரும்ப நினைக்காதவர்கள், இங்கு குடியுரிமை பெற்று வாழலாம் என்று நினைப்பவர்களது உரிமையை இந்தச் சட்டம் பறிக்கிறது. ஒன்றிய அரசு இலங்கைத் தமிழர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை என்பதைவிட வஞ்சனையுடன் செயல்படுகிறது. அதனால்தான் இதனை எதிர்க்க வேண்டி உள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்கு மாறானது இந்தச் சட்டத் திருத்தம். இந்தச் சட்டத் திருத்தம், இந்தியாவில் மொழி, இனம், மதம், நிறம், வாழ்விடச் சூழல் எனப் பல்வேறு வகைகளில் வேறுபட்டிருந்தாலும், இணைந்து வாழும் மக்களைப் பிரித்து வைக்கும் ஒன்றாக அமைந்திருக்கிறது.

உலகில் மிகப்பெரிய மக்களாட்சி நாடாக இன்றும் இந்தியா மிளிர்வதற்குக் காரணம் “வேற்றுமையில் ஒற்றுமை” எனும் தத்துவம்தான். பல்வேறு மொழிகள், பல்வேறு இனங்கள், பல்வேறு மதங்கள், பல்வேறு கலாச்சாரங்கள் கொண்ட நாடாக இருந்தாலும், நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வோடு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். மதம், இனம், மொழி, மாநில வேற்றுமைகளைக் கடந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தியாவின் சுதந்திரம் என்பது, அனைவரும் சேர்ந்து போராடியதால் கிடைத்தது. இமயம் முதல் குமரி வரையிலான ஒற்றுமையால் அடைந்த வெற்றியாகும். இத்தகைய உன்னதமான நல்லிணக்க மரபிற்கு ஊறுவிளைவிக்கும் வகையில், இந்திய மக்களிடையே பேதத்தைத் தோற்றுவிக்க வழிவகை செய்யும் இந்தச் சட்டத் திருத்தம் தேவையற்றது; இரத்து செய்யப்பட வேண்டியது என நாம் கருதுகிறோம். மேலும், இச்சட்டத்தின் நீட்சியாக தேசிய மக்கள் தொகைப் பதிவேடு (National Population Register) தயாரிக்கும் பணியினையும், அதனடிப்படையில் தேசிய குடிமக்கள் பதிவேடு (National Register of Citizens) தயாரிப்பதையும் ஒன்றிய அரசு முழுவதுமாகக் கைவிடவேண்டும் எனவும் நாம் கருதுகிறோம்.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில், இணக்கமாக ஒன்றிணைந்து வாழும் இந்திய மக்களிடையே மத, இன ரீதியான பாகுபாடுகளை ஏற்படுத்தி, இந்திய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் கேள்விக்குறியாக்கும், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டுமென ஒன்றிய அரசை இம்மாமன்றம் வலியுறுத்தி பின்வரும் தீர்மானத்தினை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் இந்தத் தீர்மானத்தைத் தற்போது அவையில் முன்மொழிகிறேன்.

## தீர்மானம்

“ஒன்றிய அரசு கடந்த 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019, இந்திய நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் வகுத்தளிக்கப்பட்டுள்ள மதச்சார்பின்மைக் கோட்பாட்டிற்கும், நம் நாட்டில் நிலவி வரும் மத நல்லிணக்கத்திற்கும் உகந்ததாக இல்லை என்று இப்பேரவை கருதுகிறது. மக்களாட்சித் தத்துவத்தின்படி ஒரு நாட்டின் நிருவாகம் என்பது அந்நாட்டில் வாழும் அனைத்து மக்களின் கருத்தினையும் உணர்வுகளையும் உணர்ந்து அமைந்திருக்க வேண்டும். ஆனால், இந்தக் குடியுரிமைத் திருத்தச் சட்டமானது அகதிகளாக இந்நாட்டிற்கு வருபவர்களை அவர்களின் நிலை கருதி அரவணைக்காமல், மத ரீதியாகவும், எந்த நாட்டிலிருந்து வருகிறார்கள் என்பதைப் பொறுத்தும் பாகுபடுத்திப் பார்க்கும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

எனவே, இந்திய நாட்டின் ஒற்றுமையையும், மத நல்லிணக்கத்தையும் போற்றிப் பாதுகாக்கவும், அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதச்சார்பின்மை கோட்பாட்டினை நிலைநிறுத்தவும், ஒன்றிய அரசின் இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019–ஐ, இரத்து செய்திட ஒன்றிய அரசினை இப்பேரவை வலியுறுத்துகிறது.” எனும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இந்தியக் குடியுரிமைத்*
*திருத்தச் சட்டம், 2019–ஐ இரத்து செய்யக் கோரும்*
*அரசினர் தனித் தீர்மானத்தினை முன்மொழிந்து*
*ஆற்றிய உரை – 08.09.2021*

## ‘தமிழ்நாடு ஆதிதிராவிடர்–பழங்குடியினர் நல ஆணையம்’ உருவாக்கம்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எப்போது அமைகின்றதோ, அப்பொழுதெல்லாம் ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும், ஒதுக்கப்பட்டவர்களுக்காகவும் பாடுபடுகிற அரசாக விளங்கியிருக்கிறது. சமூகத்தில் சதிகளாலும், சாதிகளாலும் புறக்கணிப்பட்டவர்களை அன்புக்கரம் கொண்டு அரவணைத்து, அவர்கள் தங்களிடம் தேங்கிக் கிடக்கும் திறமைகளையும், அவர்களால் சமூகம் பெறத்தக்க பங்களிப்புகளையும் வெளிக்கொண்டு வருவதில் அதிக அக்கறையை எப்போதும் காட்டி வரும் கொள்கைப் பிடிப்பைக் கொண்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்தியாவிலேயே முதன்முறையாக ஆதிதிராவிடர்களுக்குக் கான்கிரீட் கூரையிலான தொகுப்பு வீடுகள், இரட்டைக் குவளை முறை ஒழிப்பு, சமத்துவபுரங்கள், சமத்துவ மயானத்திற்கு ஊக்கத்தொகை, உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தவே முடியாமலிருந்த பாப்பாரப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டகச்சியேந்தல் ஆகிய இடங்களுக்கு உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, சமத்துவப் பெருவிழா கொண்டாடியவை போன்ற எண்ணற்றச் செயல்பாடுகளை இதற்கு எடுத்துக்காட்டாக இயம்ப இயலும்.

முதலமைச்சர் தலைமையில் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டுமென்பது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் இடம்பெற்றிருக்கும் முக்கிய விதி. இதில் முன்பெல்லாம் ஆளுங்கட்சி மக்கள் பிரதிநிதிகளையும், ஆதரவுக் கட்சி மக்கள் பிரதிநிதிகளையும் மட்டுமே அழைத்து நடத்தப்பட்ட கூட்டம்போல் இல்லாமல், அனைத்து இயக்கங்களையும் சார்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களைக் குழு உறுப்பினர்களாக அமைத்து, ஐம்பதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய அரசாணையை நாங்கள் வெளியிட்டோம். அவர்களையெல்லாம் அழைத்து ஆகஸ்டு மாதம் 19 ஆம் நாள் கூட்டம் நடத்தப்பட்டது.

அனைத்துத் தரப்புக் கருத்துகளையும் உள்ளடக்கி, ஒருங்கிணைந்த பார்வையை மக்கள் பிரச்சினைகளில் செலுத்தித் தீர்வுகாண வேண்டும் என்பதே நம்முடைய நோக்கம். பேரறிஞர் அண்ணா 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று சொல்லியதை இதயத்தில் ஏற்றி, ஏற்றுக்கொள்ளத்தக்கக் கருத்து எங்கிருந்து வந்தாலும் அதை வரவேற்றுச் செயல்படுத்தி, எளிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதுதான் நம்முடைய நோக்கம். அந்த அடிப்படையில், அந்தக் கூட்டத்திலே பல நல்ல கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. முதல் கட்டமாக, அவற்றில் சிலவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்று எண்ணி இம்மாமன்றத்தில் அறிவிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, மாநில அளவில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருடைய சட்டப்பூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், 'தமிழ்நாடு ஆதிதிராவிடர்–பழங்குடியினர் நல ஆணையம்' என்கிற புதிய அமைப்பு ஒன்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் இந்த அரசு உருவாக்கச் சட்டம் இயற்றும். அதற்கான சட்டமுன்வடிவ வரைவு இந்தச் சட்டமன்றத் தொடரிலேயே தாக்கல் செய்யப்படும்.

இரண்டாவதாக, அக்கூட்டத்தில் ஆதிதிராவிட நலத்துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளைப் பொது நீரோட்டத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்கிற ஒரு கருத்தும் முன்வைக்கப்பட்டது. முதற்கட்டமாக, அப்பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள், அறிவுத்திறன் வகுப்பு, கணினிப் பயிற்சி போன்றவை பள்ளிக் கல்வித்துறையின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தப்படும். ஆனால், பள்ளிகளை நிருவகிப்பது தொடர்ந்து ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் கைவசமே இருக்கும். பள்ளிகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல், பணி அமைப்பை நிருவகித்தல், நிருவாகப் பணிகளைக் கையாளுதல் போன்றவற்றை அத்துறையே செயல்படுத்தும். பள்ளிக் கல்வித்துறை அவற்றில் தலையிடாது.

மூன்றாவதாக, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகளை விரைவாக இறுதி செய்வதற்குத் தற்சமயம் தமிழ்நாட்டில் 18 சிறப்பு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மேலும், நான்கு புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகஸ்டுத் திங்கள் நடைபெற்ற மாநில அளவிலான விழிப்புணர்வுக் கூட்டத்தைத் தொடர்ந்து இன்னும் நான்கு புதிய நீதிமன்றங்களைச் சேலம், கிருஷ்ணகிரி, மதுரை, திருநெல்வேலி என வழக்குகள் அதிகம் நிலுவையில் உள்ள மாவட்டங்களில் நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மதுரையிலும், திருநெல்வேலியிலும் ஏற்கெனவே சிறப்பு நீதிமன்றங்கள் இருந்தாலும், இந்த நான்கு மாவட்டங்களில் அதிக அளவில் வழக்குகள் நிலுவையில் இருப்பதால் கூடுதல் நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

நான்காவதாக, வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி, முறையான நிவாரணம், வளமான எதிர்காலத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதற்குத் தேவையான விழிப்புணர்வுப் பயிற்சிகள் 'சமத்துவம்

காண்போம்' என்கிற தலைப்பில் காவல்துறை, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு நடத்தப்படும்.

ஐந்தாவதாக, தமிழ்நாட்டில் பல கிராமங்களில் சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் பயன்பாட்டில் உள்ளன. இறுதிப் பயணத்திலும் பிரிவினைகள் இருக்கக் கூடாது என்பதில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் இத்தகைய சிற்றூர்களுக்கு ஊக்கத்தொகையாக வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த அரசு சார்பில் 10 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்படும்.

ஆறாவதாக, வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு, 85,000 ரூபாயிலிருந்து 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வரை தற்சமயம் வழங்கப்பட்டு வருகிறது. இனி இத்தொகை பாதிக்கப்பட்டவர்களுக்குக் குறைந்தபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயும், அதிகபட்சமாக 12 இலட்சம் ரூபாயாகவும் மாநில அரசு நிதி மூலம் உயர்த்தி வழங்கப்படும்.

விழிப்புணர்வுக் கூட்டமே தேவையில்லை என்கிற நிலையை அடைவதே நம் இலக்கு. தமிழ்நாட்டு மக்களின் மனதில் மடைமாற்றத்தை ஏற்படுத்தி, நாம் அனைவரும் அய்யன் திருவள்ளுவர் கூறியதற்கேற்பப் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற ஒப்பற்றத் தத்துவத்தின்படி இணைந்து வாழ அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்று உங்கள் அனைவரையும் கேட்டு அமைகிறேன். வணக்கம்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன்கீழ்*
*'தமிழ்நாடு ஆதிதிராவிடர்–பழங்குடியினர் நல ஆணையம்' என்கிற*
*புதிய அமைப்பினை உருவாக்குதல் உள்ளிட்ட அறிவிப்புகளை*
*வெளியிட்டு ஆற்றிய உரை* ***– 08.09.2021***

# திருநெல்வேலியில் ‘பொருநை அருங்காட்சியகம்’



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘வீழ்வது நாமாக இருந்தாலும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்’ என்ற உணர்வை நமக்கெல்லாம் ஏற்படுத்திய தமிழினத் தலைவர் கலைஞர் போற்றிய செம்மொழியாம் தமிழ்மொழியின் பெருமையை, உலகத்துக்கு நாகரிகத்தையும், பண்பாட்டையும் கற்றுக்கொடுக்க, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வலம்வந்த தமிழினத்தின் சிறப்பைப் பறைசாற்றும் அறிவிப்பு ஒன்றை, விதி 110இன்கீழ் இந்த மாமன்றத்தில் தங்களுடைய அனுமதியோடு பெருமையாக நான் வெளியிடுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதெல்லாம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதோ; அப்போதெல்லாம் அது தமிழின் ஆட்சியாக, தமிழினத்தின் ஆட்சியாகத்தான் இருந்துள்ளது.

தமிழ் மாநிலத்துக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியது; நூற்றாண்டுக் கனவான செம்மொழித் தகுதியைத் தமிழுக்குப் பெற்றுத்தந்தது; 'மெட்ராஸ்' என்ற பெயரைச் 'சென்னை' என மாற்றியது; தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை நிறைவேற்றியது; ஸ்ரீ, ஸ்ரீமதி என்ற சொற்களுக்கு மாற்றாக திரு, திருமதி ஆகிய சொற்களைச் சட்டப்பூர்வமாக ஆக்கியது; தலைநகரில் வள்ளுவர் கோட்டமும், குமரிமுனையில் **133** அடியில் வள்ளுவர் சிலையும் அமைத்தது; திரும்பிய பக்கமெல்லாம் திருக்குறளைத் தீட்டியது; 'தமிழ் வாழ்க' என எழுத வைத்தது; சிலம்பின் பெருமையைக் காட்டும் பூம்புகார் கோட்டம் அமைத்தது; தமிழில் வழிபாடு செய்யும் உரிமையை வழங்கியது; ஆட்சிமொழியாய்த் தமிழை முழுமைப்படுத்தியது; தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் அனைத்துப் பாடங்களையும் தமிழில் மொழிபெயர்த்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடப் புத்தகங்களை வெளியிட்டது; தமிழைக் கணினிமொழி ஆக்கியது; பிற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இணையானவர்களாகத் தமிழாசிரியர்களை ஆக்கியது; தமிழாசிரியர்களும் தலைமையாசிரியர் ஆகலாம் என உயர்த்தியது; உலகம் முழுவதும் தமிழைப் பரப்பியது; உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியது; உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்தியது; தமிழறிஞர் நூல்களை எல்லாம் நாட்டுடைமை ஆக்கியதும், அவர்களது குடும்பத்துக்கு இலட்சக்கணக்கில் நிதி உதவி செய்ததும் என, 'தமிழ் அரசை' நடத்தியதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு.

கடந்த நான்குமாத காலமாக, தி.மு.க. அரசு ஆற்றி வரும் தமிழ்ப் பணியை மீண்டும் நான் உங்களுக்கு நினைவூட்டத் தேவையில்லை. மாமன்னர்கள் பலர் இந்தியாவைத் தங்கள் குடையின்கீழ் கொண்டு வந்து ஆண்டபோதும், தனிக்குடையின்கீழ் ஆளுகை செலுத்திய

மண் இந்தத் தமிழ் மண். பண்டைய நாகரிகம் கொண்டது தமிழ் மண் என்பதற்கு சான்றுகள் பல உள்ளன. இவையெல்லாம் ஏதோ சில இலக்கிய ஆதாரங்களை வைத்து மட்டும் நான் சொல்லவில்லை. அசைக்க முடியாத தொல்லியல் சான்றுகள் இருக்கின்றன. இவை அனைத்தும் யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத சான்றுகள் ஆகும்.

முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், தனது ஆட்சிக் காலத்தில் தொல்லியல், ஆழ்கடல் கள ஆய்வை விரிவாக மேற்கொள்ளப் பெருமுயற்சி எடுத்தார். கடந்த 1990ஆம் ஆண்டு கடல்சார் ஆய்வுக்குப் பெருந்திட்டம் தீட்டியதும், பின்னர் கடலில் மூழ்கிய பூம்புகார் நகரத்தினைக் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட ஆழ்கடல் அகழாய்வில் சில கட்டுமானப் பகுதிகள் கண்டறியப்பட்டதும், முத்தமிழறிஞர் கலைஞருடைய பெருமுயற்சியால்தான் என்பதை அனைவரும் நன்றாக அறிவோம்.

அந்த வரிசையில், சிவகங்கை மாவட்டம், கீழடியில் தற்போது நடைபெற்றுவரும் அகழ்வாராய்ச்சி உலக அரங்கில் அனைவரது கவனத்தையும் பெற்றிருக்கிறது. தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை அள்ளிக்கொடுக்கும் கீழடியில் நடைபெற்று வந்த அகழ்வாராய்ச்சியை ஒன்றிய அரசு பாதியிலேயே கைவிட்டபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதற்கு எதிராக, தனது கடுமையான கண்டனத்தைப் பதிவுசெய்தார். நானும் கடந்த 2019ஆம் ஆண்டு, கீழடிக்கு நேரடியாகச் சென்று, அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த அகழாய்வுப் பணிகளைப் பார்வையிட்டேன். வியக்கவைக்கும் செங்கல் கட்டுமானங்கள், கருப்பு மற்றும் சிவப்பு வண்ணம் தாங்கிய பானை ஓடுகள், அரிய கல்மணிகள், தங்க அணிகலன்கள், சிந்துவெளி நாகரிகக் காலத்தில் காணப்பட்ட அதே திமில் கொண்ட காளையின் எலும்புகள், விளையாட்டுப் பொருட்கள்,

தொழிற்பகுதிகள் என ஒரு செழுமைமிக்க சமூகமாக, சங்ககாலத் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் மட்டுமல்ல; உலகமே அறிந்துகொண்டது.

அதுமட்டுமல்ல; கரிமப் பகுப்பாய்வு (Carbon Dating) முடிவுகளின்படி, கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே எழுத்தறிவு பெற்ற சமூகமாகச் சங்ககாலத் தமிழர்கள் விளங்கினர் என்பதும் உறுதியானதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். அந்தவகையில், 'கீழடி' என்ற ஒற்றைச் சொல் உலகத் தமிழர்களை ஒன்றிணைத்தது என்றே சொல்லவேண்டும். அதே உணர்வைத் தாங்கி தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்டசோழபுரம் ஆகிய இடங்களில் தற்போது அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அப்போது கிடைத்த பல்வேறு பழமைவாய்ந்தப் பொருட்கள் குறித்து, அகில இந்திய அளவில் புகழ்பெற்ற தொல்லியல் ஆய்வாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களைத் தமிழ்நாடு தொல்லியல் துறை கலந்தாலோசித்தது. அதன்படி, கீழ்க்கண்ட முக்கிய முடிவுகளை வெளியிடுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

- கீழடியில் சூரியன், நிலவு மற்றும் வடிவியல் குறியீடுகள் கொண்ட முத்திரைகளுடன் கூடிய வெள்ளிக் காசு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதை ஆய்வுசெய்த தலைசிறந்த நாணயவியல் அறிஞரும், கொல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியருமான சுஷ்மிதா பாசு மசும்தார், இந்த வெள்ளிமுத்திரைக் காசு, கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கு, அதாவது, மௌரியப் பேரரசர் அசோகர் காலத்திற்கும் முற்பட்டது என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

- ஏற்கெனவே, கரிமப் பகுப்பாய்வு முடிவுகளின்படி, கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தமிழி எழுத்துக்களின் காலம், கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அதை வலுப்படுத்தும் விதமாக, தற்போது பெறப்பட்ட இரண்டு கரிம மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகளிலும், கீழடி நாகரிகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தது எனத் தெரியவந்துள்ளது என்ற செய்தியை நான் பெருமையோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- முந்தைய அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற கரிமப் பகுப்பாய்வுகளின் காலக் கணக்கீட்டு முடிவுகளின்படி, கி.மு. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பாகவே, கொற்கை ஒரு துறைமுகமாகச் செயல்பட்டு வந்தது என்பது ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது, கொற்கையில் நடைபெற்றுவரும் அகழாய்வில் கருப்பு வண்ணப்பூச்சு பெற்ற கங்கைச் சமவெளியைச் சார்ந்த பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவற்றைக் கவனமாக ஆய்வுசெய்த இந்தியத் தொல்லியல் துறையின் முன்னாள் தலைமை இயக்குநர் முனைவர் ராகேஷ் திவாரி மற்றும் பனாரஸ் இந்து பல்கலைக்கழகப் பேராசிரியர் ரவீந்திரநாத் சிங் ஆகியோர், கொற்கைத் துறைமுகமானது கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னரே வெளிநாடுகளுடனும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

- இவற்றுக்கெல்லாம் மகுடம் சூட்டும் வகையில், ஒரு முக்கிய ஆய்வு முடிவை இங்கு நான் வெளியிட விரும்புகிறேன். தமிழ்நாடு தொல்லியல் துறையால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வின்போது

ஆதிச்சநல்லூருக்கு அருகே, சிவகளைப் பறம்புப் பகுதியில் வெளிப்பட்ட முதுமக்கள் தாழி ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட நெல்மணிகள் அமெரிக்க நாட்டின் மயாமி நகரத்தில் அமைந்திருக்கும் உலகப்புகழ் பெற்ற Beta Analytical Laboratory–க்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. அதன் ஆய்வு முடிவுகள் சமீபத்தில் கிடைத்துள்ளன. AMS Carbon Dating முறையில் ஆய்வு செய்ததில், முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட நெல்மணிகளின் காலம் கி.மு. **1155** எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, 'தண்பொருநை' என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் **3,200** ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிசெய்ய முடிகிறது என்பதைத் தமிழ்கூறும் நல்லுலகம் அறியும் வகையில், இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் அளவிட முடியாத பெருமிதமும், மனமகிழ்ச்சியும் நான் கொள்கிறேன்.

பண்டைய தமிழர்களின் செழுமையான பண்பாடு, கடல்வழி வணிகம், நீர் மேலாண்மை, இரும்பு உருக்குதல், அரிய மணிகள் தயாரித்தல், முத்துக் குளித்தல் போன்ற தொழில்நுட்பங்களை உலகம் அறிந்துகொள்ளத் தேவையான சான்றுகளைச் சேகரிக்கும் வகையில், இந்தியாவில் வேறெந்த மாநிலத்தை விடவும் அதிக அளவு நிதியாக ஐந்து கோடி ரூபாய் நடப்பு நிதியாண்டில் அகழ்வாராய்ச்சிப் பணிக்காகவும், ஆழ்கடல் அகழாய்வுக்காகவும் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருப்பதை, மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

அதன் தொடர்ச்சியாக, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்போது கிடைத்த அரிய பொருட்களை அழகுறக்

காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளோடு அருங்காட்சியகம் அமைக்கப்படும். இது 'பொருநை அருங்காட்சியகம்' என அழைக்கப்படும்.

இதுமட்டுமல்ல; தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடி, இந்தியத் துணைக்கண்டமெங்கும்; அதேபோல் கடல்கடந்து பயணம் செய்து தமிழர்கள் வெற்றித்தடம் பதித்த வெளிநாடுகளிலும்; தமிழ்நாடு தொல்லியல் துறை உரிய அனுமதிகள் பெற்று இனி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

முதற்கட்டமாக, சங்ககாலத் துறைமுகமான முசிறி, தற்போது பட்டணம் என்ற பெயரில் கேரள மாநிலத்தில் அமைந்துள்ளது. சேரநாட்டின் தொன்மையினையும், பண்பாட்டினையும் அறிந்துகொள்ளும் வகையில், கேரள மாநிலத் தொல்லியல் வல்லுநர்களுடன் இணைந்து அங்கு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படும். அதேபோல், ஆந்திர மாநிலத்திலுள்ள வேங்கி, கருநாடக மாநிலத்தின் தலைக்காடு மற்றும் ஒடிசா மாநிலத்திலுள்ள பாலூர் ஆகிய வரலாற்றுச் சிறப்புடைய இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ள உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

அன்றைய ரோமப் பேரரசின் ஒருபகுதியாக விளங்கிய எகிப்து நாட்டிலுள்ள குசிர்–அல்–காதிம் மற்றும் பெர்னிகா, மேலும் ஓமான் நாட்டின் கோர் ரோரி ஆகிய இடங்களில் பழந்தமிழகத்தோடு இருந்த வணிகத் தொடர்பை உறுதிசெய்யும் வகையில், தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. அந்தப் பகுதிகளில், அந்தந்த நாட்டின் தொல்லியல் வல்லுநர்களோடு இணைந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

மாமன்னர் இராசேந்திர சோழன் வெற்றித் தடம் பதித்த தென்கிழக்காசிய நாடுகளான இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அந்தந்த நாட்டுத் தொல்லியல் வல்லுநர்கள் துணையோடு, உரிய அனுமதி பெற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என உலகிற்கு அறிவித்த தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடி, இனி உலகெங்கும் பயணம் செய்வோம். இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, இனி, தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில், அறிவியல் வழிநின்று நிறுவுவதே நமது அரசினுடைய தலையாயக் கடமை என்பதை இம்மாமன்றத்தின் மூலம் உலகிற்கு அறிவிப்பதில், உலகிற்கு எடுத்துக்காட்டாக எடுத்துச் சொல்வதில் பெருமிதம் கொண்டு, அந்தப் பெருமையோடு அமைகிறேன். வணக்கம்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி **110**இன்கீழ்*
*அகழ்வாராய்ச்சிக்களுக்கான அறிவிப்புகளை வெளியிட்டு*
*ஆற்றிய உரை – **09.09.2021***

## சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு ஒய்வூதியம் உயர்த்தி வழங்க சட்டமுன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு.ஜி.கே.மணி அவர்கள், வழக்குகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லி, அவற்றிலிருந்து விடுதலை பெற, அவற்றைத் திரும்பப் பெறவேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்தார்கள். ஏற்கெனவே, இதே மன்றத்திலே நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். பல உறுப்பினர்களும் அதுகுறித்துப் பேசியிருக்கிறீர்கள். ஏற்கெனவே, பல கட்டங்களில் கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டு, அப்போது போடப்பட்ட வழக்குகளெல்லாம் திரும்பப் பெறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் சில வழக்கினுடைய தன்மையைப் பொறுத்தவரையிலே, அதை ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். வழக்குகள் நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினாலே, பல சட்ட சிக்கல்கள் எல்லாம் இருக்கின்றன. அதுகுறித்து ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், எப்படியும், முடிந்தவரையில் எல்லா வழக்குகளையும் வாபஸ் வாங்க வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம் என்பதை நான் திரு.மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள் பேசுகிறபோது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படக்கூடிய ஒய்வூதியத்தை உயர்த்தித் தரவேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே, 20 ஆயிரம் ரூபாயிலிருந்து, 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

ஆனால், உயர்த்தப்பட்டது வெறும் அறிவிப்போடு நின்றுவிட்டது. அந்த அறிவிப்புதான் இன்றுவரையில் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு முறைப்படி சட்டமன்றத்திலே சட்டமுன்வடிவு கொண்டு வந்து நிறைவேற்றியிருக்க வேண்டும். ஆனால், அதை நிறைவேற்றவில்லை. கடந்த ஆட்சி அதைச் செய்யவில்லை. ஆனால், தி.மு.க. ஆட்சி அமைந்ததற்குப்பிறகு, இன்னும் ஒரு நாள்தான் சட்டமன்றம் நடைபெறவிருக்கிறது. திங்கட்கிழமையுடன் அவைக் கூட்டம் முடியவிருக்கிறது. திங்கட்கிழமை அன்று, 25 ஆயிரம் ரூபாய் உயர்த்தி வழங்கிடும் வகையில், சட்டமுன்வடிவினை இந்த அவையிலே கொண்டுவந்து, நிறைவேற்றித் தரப்போகிறோம் என்ற செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டமன்ற உறுப்பினர்கள்*
*திரு. நயினார் நாகேந்திரன் மற்றும் திரு. ஜி.கே. மணி ஆகியோரது*
*பேச்சுகளுக்கு பதிலளித்து ஆற்றிய உரை – **09.09.2021***

## ‘உங்கள் சொந்த இல்லத்திட்டம்’ காவலர்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் இன்னும் சிறப்பாக நிறைவேற்றுவோம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முழுமையாகப் பேசி, அதை நான் முழுமையாகக் குறிப்பெடுத்துக்கொண்டு, பதிலுரை ஆற்றுகிறபோது, அவற்றிற்கெல்லாம் விளக்கமாக நான் பதில் சொல்லப் போகிறேன். இருந்தாலும், நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சி குறித்தும் சொன்னார். நாங்கள் ஒரு முறை அல்ல, பல ஆண்டு காலமாகத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தோம். 10 ஆண்டு காலமாக ஆட்சியில் இருந்த நீங்கள், அதைச் செய்யவில்லை. ஆனால், தேர்தல் அறிக்கையிலே நாங்கள் சொல்லியிருக்கிறோம். சட்டமன்றக் கூட்டத் தொடர் கலைவாணர் அரங்கத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், அந்த முயற்சியிலே இன்றைக்கு இறங்க முடியவில்லை. நிச்சயமாக, உறுதியாக சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இருக்கக்கூடிய நம்முடைய சட்டமன்றத்தில் கூட்டத் தொடர் நடைபெறுகிறபோது, நிச்சயம் நேரடியாக நிகழ்ச்சிகளை ஒளிபரப்பக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவோம்.

அதேபோல, தொடக்கத்திலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, உங்கள் சொந்த இல்லத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, நாங்கள் கொண்டுவந்து நிறைவேற்றினோம்; அதைத் தொடர வேண்டும் என்றும் எடுத்து வைத்தார். ஆனால், உண்மை நிலை என்னவென்றுக் கேட்டால், எங்களிடம் கேட்பதைவிட, காவல்துறை அதிகாரிகளிடம் கேட்டால் தெரியும், அதன் இலட்சணம்

என்னவென்று. இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் எல்லாம் தரமற்றவையாக இருக்கின்றன. போதிய அடிப்படை வசதிகள் இல்லை. விண்ணப்பங்கள் செய்தும், முன்பணம் செலுத்தியும், வெகுநாட்களாகக் காத்திருக்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது.

இன்னும் சொல்லவேண்டுமென்றால், அதில் விண்ணப்பித்தவர்கள் பல பேர் ஓய்வு பெற்றுச் சென்று விட்டார்கள். இதுதான் இருக்கக்கூடிய சூழ்நிலை. ஆனாலும், இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், நீங்கள் கொண்டுவந்தத் திட்டம் என்பதற்காக நாங்கள் கைவிட மாட்டோம். அதை இன்னும் சிறப்பாக, காவலர்கள் மகிழ்ச்சி அடையக்கூடிய வகையிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்*
*திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரையினிடையே*
*பதிலளித்து ஆற்றிய உரை* ***– 09.09.2021***

## நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு நீட் தேர்வை இரத்து செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோம்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வைத் தடுத்து நிறுத்தி, 12ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மாணவர்களை மருத்துவக் கல்வியில் சேர்த்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். ஏன், மறைந்த முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள்கூட நீட் தேர்வை நடத்த அனுமதிக்கவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய இவர், முதலமைச்சராக இருந்தபோதுதான் நீட் தேர்வு தமிழ்நாட்டில் முதன்முதலில் நடத்தப்பட்டது. 'நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்க வேண்டும்' என்று இதே சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட மசோதா நிராகரிக்கப்பட்டதும், எதிர்க்கட்சித் தலைவரான இவர், முதலமைச்சராக இருந்தபோதுதான்.

நீட் தேர்வு அச்சத்தில், அனிதா உள்பட மாணவ, மாணவிகள் தற்கொலை செய்துகொண்டது உங்கள் ஆட்சியில்தான். குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்ட நீட் மசோதாவை இந்த அவைக்குச் சொல்லாமல் மறைத்ததும் அ.தி.மு.க. ஆட்சிதான். அதாவது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான். இப்போது உயிரழந்த மாணவர் தனுஷ் இருமுறை நீட் தேர்வில் தோல்வி அடைந்ததும் நீங்கள், அதாவது, திரு.எடப்பாடி பழனிசாமி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான்.

ஒன்றிய அரசுடன் கூட்டணியாக இருந்தீர்கள். இப்போதும் இருக்கிறீர்கள். சி.ஏ.ஏ. மற்றும் வேளாண் சட்டங்களுக்கு ஆதரவாக ஓட்டுப் போடவேண்டும் என்ற நிலை வந்தபோது, பா.ஜ.க. கூறியபோது, நீட் தேர்விற்கு விலக்குத் தரவேண்டுமென்று அ.தி.மு.க. நிபந்தனை விதித்து இருக்கலாம். அந்தத் தெம்பு, திராணி அ.தி.மு.க.விற்கு இல்லை. அதைச் செய்திருந்தால், நீட் தேர்வுக்கு ஓரளவிற்கு விலக்கு கிடைத்திருக்கும். ஆனால், நீட் தேர்வால் மாணவச் செல்வங்கள் மடிந்தபோது மரண அமைதி காத்து, ஆட்சி நடத்தியதுதான் அ.தி.மு.க.

ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்வை இரத்து செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோம். சட்ட மசோதாவை இன்று நான் அறிமுகப்படுத்தவிருக்கிறேன். ஆகவே, நீட் தேர்வை இரத்து செய்து, 12ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவக் கல்வியில் மாணவர்களைச் சேர்க்க இந்த அரசு அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டிற்குப் பதிலாகச் சொல்லி அமைகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 'நீட்' தேர்வுப் பிரச்சினை*
*தொடர்பாக, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்*
*திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் எழுப்பிய வினாவிற்கு,*
*பதிலளித்து ஆற்றிய உரை –* ***13.09.2021***

# குற்றச் சம்பவங்களை இந்த அரசு இரும்பு கரம் கொண்டு ஒடுக்கும்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு பிரச்சினைகளை இந்த அவையிலே கிளப்பி, அவற்றின் நிலை என்ன என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள்.

வாணியம்பாடி பகுதியில் நடைபெற்ற அந்தச் சம்பவத்தைப் பற்றி அவர் சொல்கிறபோது, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்லிவிட்டு, சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற அந்தச் செய்தியையும் சொல்லி, அவர் இங்கே ஒப்புதல் தந்திருக்கிறார். எனவே, அதுகுறித்து நான் விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 26.07.2021 அன்று, வாணியம்பாடி ஜீவா நகரைச் சார்ந்த இம்தியாஸ் என்பவருக்குச் சொந்தமான கிடங்கில் கஞ்சா இருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து, காவல்துறையினர் ரெய்டு செய்திருக்கிறார்கள். அதில் 9 கிலோ கஞ்சா, மூன்று கத்திகள், 10 கைபேசிகள் ஆகியவற்றைக் கைப்பற்றி, பைசல் உள்ளிட்ட மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கஞ்சா குறித்த தகவலை வசீம் அக்ரம்தான் காவல்துறையினருக்குக் கூறியது என்று இம்தியாஸ் கருதியுள்ளார். இந்நிலையில், 10.09.2021 அன்று மாலை சுமார் 6:30 மணியளவில் வசீம் அக்ரமை வழிமறித்து,

அரிவாளால் வெட்டியதால், அதே இடத்தில் அவர் உயிரிழந்துள்ளார். இந்தக் கொலை வழக்கில் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரைச் சார்ந்த பிரசாத் மற்றும் மண்ணிவாக்கத்தைச் சார்ந்த டெல்லி குமார் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வாணியம்பாடி பகுதியில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற சம்பவங்களை இரும்புக்கரம் கொண்டு இந்த அரசு ஒடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், வாணியம்பாடி பகுதியில்*
*நடைபெற்ற கொலை சம்பவம் குறித்து சட்டமன்ற*
*எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்*
*எழுப்பிய கேள்விக்கு, பதிலளித்து ஆற்றிய உரை* ***– 13.09.2021***

# நீட் தேர்விலிருந்து நிரந்தர விலக்கு பெறுவதற்கான மசோதா



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் என்னும் தேர்வைக் கொண்டுவந்து மருத்துவக் கல்விக் கனவைச் சிதைத்து வரும் ஒன்றிய அரசுக்கு எதிராகக் கடந்த நான்காண்டு காலமாகத் தமிழ்நாட்டில் மிகக் கடுமையானப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. விலைமதிக்க முடியாத மாணவ, மாணவியர் தங்களது இன்னுயிரை இந்தப் போராட்டத்துக்குத் தாரைவார்த்து மறைந்து போயிருக்கிறார்கள். தொடக்கத்தில் இருந்தே இந்த நீட் தேர்வைத் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்து வருகிறது. ஏனென்றால் மாணவர்களுக்குக் கல்வித் தடையை ஏற்படுத்தக்கூடிய நுழைவுத் தேர்வுக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைத்த அரசுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு.

இதன் தொடர்ச்சியாக நீட் தேர்வை இரத்து செய்ய, கழக அரசு அமைந்தவுடன் முதல் சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே சட்டம் இயற்றப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறோம். அதை நிறைவேற்றும் வகையில் மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகிய இளநிலை மருத்துவக் கல்விச் சேர்க்கைகளை, இனிமேல் 12ஆம் வகுப்புத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் நடத்துவதற்கு ஏதுவாக, வலிமையான சட்டமுன்வடிவினை இப்பேரவையில் நான் முன்மொழிகிறேன்.

கழக அரசு பொறுப்பேற்றவுடன் நீட் தேர்வுக்கு எதிரான சட்டப் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறோம். ஒன்றிய அரசால் நடத்தப்படும் நீட் தேர்வால் சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்திட ஓய்வுபெற்ற நீதியரசர் டாக்டர் ஏ.கே.இராஜன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தோம். அரசாணை எண் 283, மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை, நாள் 10.06.2021 அன்று இந்தக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவிலே பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இடம்பெற்று இருந்தார்கள். இந்த உயர்மட்டக் குழுவின் ஆய்வு வரம்புகளும் வெளியிடப்பட்டன. பொதுமக்கள் அனைவரிடம் இருந்தும் கருத்துக்களை இக்குழு கேட்டுப் பெற்றது. மின்னஞ்சல், கடிதங்கள் மற்றும் ஆணையத்தில் வைக்கப்பட்டிருந்த கருத்துக் கேட்புப் பெட்டியில் போடப்பட்ட மனுக்கள் என ஆணையத்துக்குப் பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்கள். இந்த வழிமுறைகளின் வாயிலாக 86 ஆயிரத்து 342 பேர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளை ஆராய்ந்து, தனது விரிவான பரிந்துரைகளை

நீதியரசர் ஏ.கே.இராஜன் குழு **14.07.2021** அன்று அரசுக்கு அளித்தது. அந்தப் பரிந்துரைகளில் சமுதாயத்தில் பின்தங்கியோர் மருத்துவக் கல்வியைப் பெறும் கனவிற்கு இடையூறாகவும், சமூகப் பொருளாதாரத்தில் வளமிகுந்த பிரிவினருக்குச் சாதகமாகவும் இருந்து, எம்.பி.பி.எஸ் மற்றும் உயர் மருத்துவப் படிப்புகளிலுள்ள பலதரப்பட்ட சமூகப் பிரதிநிதித்துவத்தை நீட் தேர்வானது குறைத்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

குறிப்பாக, அரசுப் பள்ளியின் மாணவர்கள், பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் **2.5** இலட்சத்திற்கும் குறைவாகக் கொண்டுள்ளவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர் மற்றும் பட்டியலின பழங்குடியினர் போன்ற பிரிவுகளைச் சேர்ந்த வசதி குறைந்தவர்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், எம்.பி.பி.எஸ். மாணவர்களின் தகுதி அல்லது தரத்தினை நீட் தேர்வு உறுதிசெய்வதாகத் தெரியவில்லை எனவும், ஒப்பிடுகையில், குறைந்த செயல்திறன் கொண்ட (தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு மதிப்பெண்கள் மற்றும் மேனிலை மதிப்பெண்களில்) மாணவர்கள் எம்.பி.பி.எஸ். படிப்பில் சேர்க்கை பெறுவதற்கு மட்டுமே தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு புகுத்தியுள்ளது எனவும் அறிக்கை முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆகவே, **2006**ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சார் கல்வி நிறுவனங்களில் சேர்க்கைச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் **3/2007**) போன்றதொரு சட்டத்தை மாநில அரசு நிறைவேற்றி, அதற்காகக் குடியரசுத் தலைவருடைய ஒப்புதலைப் பெறலாம் என்றும் இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்த உயர்மட்டக் குழு அளித்த விரிவான பரிந்துரைகளைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள, தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அரசு செயலாளர்களைக்கொண்ட குழு ஒன்று **15.07.2021** அன்று

அமைக்கப்பட்டது. செயலாளர்கள் குழு, 2007இல் தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்ட சட்டத்தைப் போன்று மருத்துவக் கல்விச் சேர்க்கைக்கு நீட் தேர்வினை விலக்குவதற்கான காரணத்தைக் குறிப்பிட்டுச் சட்டம் இயற்றி, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெற்று, அதற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய ஒப்புதல் பெறவேண்டும் என்று தெரிவித்துள்ளது.

நீட் தேர்வானது மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்துகிறது என்பதும் தவறானதே. 2017ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே அதிக மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்வி நிறுவனங்களைக் கொண்டுள்ள மாநிலங்களுள் தமிழ்நாடு ஒன்றாக இருந்தது. இந்த நிறுவனங்களிடமிருந்து பட்டம் பெற்ற மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவராக விளங்கினர். எனவே, மேல்நிலைப் பள்ளிப் பாடத்திட்டம் போதுமான தரத்தில் இருக்கும் சூழலில், தகுதித் தேர்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சேர்க்கையானது எந்த வகையிலும் கல்வியின் தரத்தைக் குறைத்துவிடாது.

மேலும், பள்ளித் தேர்வு மதிப்பெண்கள் நெறிப்படுத்துதல் முறைமூலமாக சரிசெய்யப்பட்டால் அது முறையான, நியாயமான மற்றும் நடுநிலையான சேர்க்கை முறையை வழங்கும். மருத்துவக் கல்விப் படிப்புகளுக்கான சேர்க்கையினை இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் மூன்றாவது பட்டியலில் 25ஆவது உள்ளீட்டில் காணலாம். எனவே, மாநில அரசானது அதை முறைப்படுத்தத் தகுதியுடையது. ஆகவே, இன்று என்னால் இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்தப் புதிய சட்டமுன்வடிவில், மருத்துவ இளநிலைப் படிப்பில் அரசு ஒதுக்கீடு இடங்கள், தனியார் மருத்துவக் கல்லூரிகளில்

அரசு ஒதுக்கீடு செய்யும் இடங்கள் ஆகியவற்றிற்கு **12**ஆம் வகுப்புத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மட்டுமே மாணவர் சேர்க்கை நடத்த முன்மொழியப்படுகிறது. மேலும், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு முன்னுரிமை ஒதுக்கீடு செய்யவும் முன்மொழியப்படுகிறது.

உயர்மட்டக் குழுவின் பரிந்துரையைக் கவனமாகப் பரிசீலித்த பின்பு, சமூகநீதியை உறுதிசெய்யவும், சமத்துவம் மற்றும் சம வாய்ப்புகளை நிலைநிறுத்தவும், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய மாணவர்களைப் பாதுகாக்கவும், மாநிலத்தில், முக்கியமாக கிராமப் பகுதிகளில், வலுவான சுகாதாரக் கட்டமைப்பை உறுதி செய்யவும், பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் அனைத்து மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கையை மேற்கொள்ள இச்சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே, அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் இந்த சட்டமுன்வடிவினை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நீட் தேர்வால் அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்த அனிதா தொடங்கி, ஏராளமான மாணவர்கள் தங்களுடைய உயிரை இழக்கக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். நேற்றைக்குக்கூட சேலம் மாவட்டத்தைச் சார்ந்த தனுஷ் என்ற மாணவர் இந்த நீட் தேர்வினால் உயிரிழந்திருக்கிறார். உயிர்க்கொல்லியாக மாறிவரும் நீட் தேர்விலிருந்து நிரந்தர விலக்கு பெறுவதற்கான இந்த மசோதாவை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் நடத்திய சட்டப் போராட்டத்தின் விளைவாக, மருத்துவக் கல்விக்கான அகில இந்திய ஒதுக்கீட்டில் இன்றைக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீட்டினைப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்குப் பெற்று வரலாற்றுச் சாதனையை நாம் புரிந்திருக்கிறோம். இந்த நீட் தேர்வு விவகாரத்திலும் அனைத்துக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களும் முழு ஒத்துழைப்பினை நல்கி, சமூகநீதியில் வரலாறு படைத்திட துணைநிற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்,*
*'நீட்' தேர்வு குறித்த சட்டமுன்வடிவினை முன்மொழிந்து,*
*ஆற்றிய உரை –* ***13.09.2021***

# 5 பவுனுக்கு உட்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில், பத்தி 264–இல், 'கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட 5 பவுனுக்கு உட்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்' என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அதனை நிறைவேற்றும் விதமாக தங்களது அனுமதியோடு, 110 விதியின்கீழ் நான் அறிவிப்பினை வெளியிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது, கடந்த 25.08.2021 அன்று நடந்த விவாதத்தின்போது, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த ஆட்சியில் வழங்கப்பட்ட பயிர்க் கடன் தள்ளுபடியில் பல்வேறு குளறுபடிகள் நடந்துள்ளதை ஆதாரங்களோடு சுட்டிக்காட்டி, எவ்வாறு 2 இலட்சத்து 42 ஆயிரத்து 783 நபர்களுக்கு, 2 ஆயிரத்து 749 கோடியே 10 இலட்சம் ரூபாய் தவறாகத் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை விரிவாக விளக்கிப் பேசினார். அந்த விவாதத்தின்போது, தொடர்ந்து பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவ்வாறான தவறுகள் நகைக் கடன்களிலும் எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த வகையில் நடைபெற்றுள்ளன என்பதையும் விளக்கி, எனவே, நகைக் கடன்கள் ஒவ்வொன்றையும் தீவிரமான மற்றும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தியப் பின்னரே தள்ளுபடி செய்வது குறித்த முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த அவையிலே தெரிவித்திருந்தார். அதன்படி, அனைத்து நகைக் கடன்கள் பற்றிய

முழு புள்ளிவிவரங்களும் சேகரிக்கப்பட்டு, கடந்த ஒரு மாத காலமாக தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

அதனடிப்படையில், நகைக் கடன்கள் தள்ளுபடி என்பது ஒரு குடும்பத்திற்கு 5 பவுனுக்கு உட்பட்ட நகைக் கடன்களை சில தகுதிகளின்கீழ், உண்மையான ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் தள்ளுபடி செய்யப்படும் என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன். இந்த நகைக் கடன்கள் தள்ளுபடி அறிவிப்பு குறித்து, தகுதியான நபர்களைக் கண்டறிவதற்காக, கடந்த ஒரு மாத காலம், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பெற்ற அனைத்து நகைக் கடன்கள் பற்றிய பெயர், கடன் பெற்ற கூட்டுறவு சங்கங்களின் விவரம், கடன் பெற்ற நாள், கடன் தொகை, கடன் கணக்கு எண், வாடிக்கையாளர் தகவல் குறிப்பு எண், குடும்ப அட்டை எண், ஆதார் எண், முகவரி, அலைபேசி எண் உள்ளிட்ட 51 விதமான தகவல்களைச் சேகரித்து, தொகுக்கப்பட்டு கணினி மூலம் விரிவான பகுப்பாய்வு செய்யப்பட்டன.

அவ்வாறு புள்ளிவிவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதில் நகைக் கடன்கள் வழங்கப்பட்டதிலும், பல்வேறு விதிமீறல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நகைக் கடன் தள்ளுபடி செய்கையில் சரியான, தகுதியான ஏழை, எளிய மக்கள் மட்டுமே பயன்பெற வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. எனவே, 5 பவுனுக்கும் குறைவாக நகைக் கடன் பெற்றவர்களில் சில நேர்வுகளில் தள்ளுபடி செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை எனக் கருதப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, 2021ஆம் ஆண்டு பயிர்க் கடன் தள்ளுபடி வழங்கப்பட்டதில் பயன் பெற்றவர்கள், ஒரே குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள்,

ஒரு கூட்டுறவு நிறுவனத்திலோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களிலிருந்தோ, ஒன்றுக்கும் மேற்பட்ட கடன்கள் மூலம் 5 பவுனுக்கு மேல் நகை ஈட்டின்பேரில் கடன் பெற்றவர்கள்; தவறாக AAY (அந்தியோதயா அன்ன யோஜன) குடும்ப அட்டையைப்

பெற்று, அவற்றைப் பயன்படுத்தி நகைக் கடன் பெற்றவர்கள்; மற்றும் இதுபோன்ற மேலும் சில நேர்வுகளில் வழங்கப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்ய இயலாது. இதுகுறித்த விபரமான வழிமுறைகளை கூட்டுறவுத் துறை இன்னும் ஓரிரு நாளில் வெளியிடும்.

இந்த நகைக் கடன் தள்ளுபடி குறித்த தேர்தல் அறிக்கையில் அறிவிப்பு வெளிவந்தவுடன், முறையற்ற வகையில் தள்ளுபடி பெறவேண்டும் என்கிற தவறான நோக்கத்தோடு, நகைக் கடன்களைப் பெற்றிருப்பதும், குறிப்பாக, சில மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முறைகேட்டில் ஈடுபட்ட சங்கங்களின்மீது தகுந்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

மேற்கூறியவாறு, தகுதியுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் **5** பவுனுக்கு உட்பட்டு நகைக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்காக அரசுக்கு ஏற்படும் செலவு, பூர்வாங்க மதிப்பீடுகள் மற்றும் ஆய்வுகளின் அடிப்படையில் **6** ஆயிரம் கோடி ரூபாய் ஆகும் எனத் தெரிய வருகிறது. இதற்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு அரசு தேவையான உதவிகளை செய்யும் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு நிறுவனங்கள் இனி நேர்மையாக, திறமையாக, ஏழை, எளிய விவசாயிகளும், நடுத்தர வர்க்கத்தினரும் பயன்பெறும் வகையில் செயல்படத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். முழுமையான கணினிமயமாக்கம், Core Banking போன்ற நவீன வசதிகளுடன் கூட்டுறவு நிறுவனங்கள் முறையாகக் கண்காணிக்கப்பட்டு, எதிர்காலத்தில் சிறப்பாக நடத்திச் செல்லப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து அமைகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி **110**இன்கீழ்*
*நகைக் கடன் தள்ளுபடி தொடர்பாக*
*ஆற்றிய உரை – **13.09.2021***

# சட்டத்தின் ஆட்சிக்கு இந்த அரசு மதிப்பளிக்கும்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்து, தமிழ்நாடு முதலமைச்சராக, முதல் காவல்துறை மானியக் கோரிக்கையை இந்தப் பேரவையின்முன் வைத்து, அதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதங்களின் வாயிலாக விமர்சனங்களையும், விமர்சனங்களின் மூலமாக பல நல்ல கருத்துகளையும் வழங்கியிருப்பதற்கு நான் உள்ளபடியே என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் அருகில் அமர்ந்திருக்கக்கூடிய அவை முன்னவர் அவர்கள், தனது நீர்வளத் துறையின் சார்பிலான மானியக்

கோரிக்கை அறிக்கையை இந்த அவையில் முதலாவதாக தாக்கல் செய்தார். மானியக் கோரிக்கையானது ஒரு சுற்று, சுற்றி இப்போது என்னிடம் வந்திருக்கிறது. நிகழ்காலக் கழக ஆட்சி, கடந்த காலக் கழக ஆட்சியின் தொடர்ச்சி என்பதனால், காவல்துறை ஒளி பெறவும், வழிகாட்டவும் தேவையானத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கையைப் பேரவைக்கு முன்கூட்டியே நான் தெரிவித்திட விரும்புகின்றேன்.

சமூகத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டிடும் கடமையும் பொறுப்பும் காவல்துறை வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எந்த ஒரு நாட்டில் சட்டம்—ஒழுங்கு சரியாக இருக்கிறது எனச் சொல்லப்படுகிறதோ, அங்கே சட்டங்கள் ஏற்கப்பட்டு, முறையாகப் பின்பற்றப்படுகின்றன; அதன் காரணமாக அந்தச் சமுதாயம் இயல்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது; என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

ஒரு சட்டம் நியாயமற்றது என்றால், அதற்கு கீழ்ப்படிய மறுப்பது உரிமை எனக் கருதப்படும் (When a Law is unjust, it is only right to disobey) என தாமஸ் ஜெஃபர்சன் அவர்களும், மகாத்மா காந்தியடிகள் அவர்களும் கூறியிருப்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், **15.03.1969** அன்று, “எந்தச் சமுதாயத்தில் இருந்து போலீஸ் படையினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அந்தச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்ற நிலைக் கண்ணாடிகளாக அப்படையினர் விளங்குவார்கள். போலீஸ் படை நன்றாக நேர்த்தியாகச் செயல்படுகிறது என்றால், அது சமுதாயத்தின் தன்மையைக் காட்டும். அதேபோல, போலீஸ் படையினர் எங்கேனும் செயலாற்றுவதில் தவறுகள் இழைத்தால், சமுதாயத்தில் நிலவும் குறைபாட்டையே அவை காட்டுகின்றன” என்று இந்த அவையிலே கூறியிருக்கிறார்கள்.

தி.மு.கழகத்தைப் பொறுத்தவரைக்கும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, போலீசாருடைய நன்மைக்காக, நல்வாழ்வுக்காக எப்போதும் வாதாடக் கூடியவர்கள். முதலமைச்சராக இந்தப் பேரவைக்கு நான் வழங்கும் முதல் காவல்துறையினுடைய மானியக் கோரிக்கை இது. இருந்தாலும், ஏற்கெனவே **20.07.2009** அன்றும், **10.05.2010** அன்றும், முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் கட்டளையை ஏற்று, அவர் சார்பில் காவல்துறை மானியக் கோரிக்கையை முன்வைத்து, துணை முதலமைச்சர் என்ற முறையில், பதிலுரைகளை நான் ஆற்றியிருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர்ந்திட விழைகின்றேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் அன்றாடம் கற்றுப் பெற்ற அனுபவம்; **07.07.2017** அன்றும், **26.06.2018** அன்றும், சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக காவல்துறை மானியக் கோரிக்கையின்மீது எடுத்துவைத்த கருத்துகள் ஆகியவற்றின் தொடர்ச்சியாக, இன்றைக்குக் காவல்துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்திட முன்வந்திருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், இதே பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கைக்கு **05.07.1967** அன்று பதிலுரை ஆற்றியபோது மூன்று முக்கியமான குறிக்கோள்களை காவல்துறைக்கு வரையறுத்துக் காட்டியிருக்கிறார். “நாட்டினுடைய சமுதாய வாழ்விற்கு, காவல்துறை திறமையாக இருக்க வேண்டும்; திறமையுள்ள போலீஸ் துறை அமைய வேண்டுமானால், அவர்களுக்குப் போதுமான அளவிற்கு வசதிகள் செய்துத் தரப்பட வேண்டும்; அந்தத் துறையிலேயே வேறு யாரும் தலையிட்டு, தங்களுக்குச் சாதகமாக அந்தத் துறையைத் திருப்பிக்கொள்ளக் கூடாது” என்பவைதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் கோடிட்டுக் காட்டிய மூன்று குறிக்கோள்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலடிச் சுவடுகளைக் கைகளால் அளந்து ஓர் அங்குலம் கூட விட்டுவிடாமல் பின்பற்றிய காரணத்தினால், தமிழகக் காவல்துறையின் மறுமலர்ச்சிக்கு அந்த மூன்று குறிக்கோள்களை நடைமுறைப்படுத்திட நாளும் முயன்றார் என்பது நாம் பெருமிதம் கொள்ளத்தக்கதாகும். காவல்துறை முன்னேற்றத்திற்கு கழக அரசு கடந்த காலங்களில் நிகழ்த்திய அரிய பல சாதனைகளின் உணர்வுடன், அந்த உணர்வு உருவாக்கித் தந்துள்ள உவகையுடன் நான் இப்போது பதிலுரையாற்றிக் கொண்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பிரபலப் பத்திரிகைகளும், ஆங்கில வார இதழ்களும், மாநில, தேசிய நாளிதழ்களும் பாராட்டக்கூடிய வகையில் ஆட்சி செய்து கொண்டிருக்கிறோம். அப்படிப் பாராட்டிய சிலவற்றை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

உலகப் புகழ்பெற்ற எக்கனாமிஸ்ட் இதழின் ஜூலை 3ஆம் தேதியிட்டப் பதிப்பில், முதலமைச்சராக உள்ள எனது தலைமையிலான அரசின் செயல்பாடுகளைப் பாராட்டி கட்டுரை வெளியாகியுள்ளது. இந்து குழுமம் வெளியிடும் பிரண்ட்லைன் இதழில் In action from Day 1 என்றும்; Panel for Progress என்றும்; Free rides for women's empowerment என்றும் பல்வேறு கட்டுரைகள் அரசின் செயல்பாடுகளை வரவேற்று, கடந்த சில மாதங்களில் வெளியாகியிருக்கின்றன.

தமிழ்நாடு முதலமைச்சரும், அமைச்சர்களும் ஓய்வுறக்கம் இன்றி பணியாற்றுவதைச் சுட்டிக்காட்டி Rising Sun Never Sets என்று குறிப்பிட்டு 'தி வீக்' இதழ் செய்தி வெளியிட்டது. இந்தியா டுடே இதழ் Solid Start என்று இந்த அரசின் 100 நாட்கள் செயல்பாடுகளைப் பாராட்டி, ஆகஸ்ட் 2 ஆம் தேதியிட்ட இதழில்

கட்டுரை வெளியாகியிருக்கிறது. மேலும், a refreshing focus on efficiency and transparent governance என்றும் எழுதியது. இந்துஸ்தான் டைம்ஸ் நாளேடு, ‘100 Days of DMK: Activities of HR&CE are back to life’ என்று இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையில் நமது செயல்பாடுகளைப் பாராட்டியிருக்கிறது.

தினத்தந்தி நாளிதழ் ‘மு.க.ஸ்டாலின் கொண்டுவரும் திராவிட மாடல் வளர்ச்சி’ என்று ஜூலை 14 தேதியிட்ட இதழில் தலையங்கம் தீட்டியிருக்கிறது. இப்படி தமிழ்நாட்டில் இருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும், டெல்லியில் இருந்தும் உலகின் பிற பகுதிகளில் இருந்தும் வெளியாகக்கூடிய முன்னணி இதழ்கள் அனைத்தும் போற்றப்படும் விதத்தில் முன்னேற்றத்தை நோக்கியே இந்த அரசு போய்க்கொண்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும்.

கடந்த ஒருமாத காலமாக நடந்த மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கெடுத்துப் பேசிய அமைச்சர்கள் அனைவரும் இந்த அரசிடம் என்னவெல்லாம் இருக்கிறது என்பதை விரிவாகப் பேசியிருக்கிறார்கள். உள்துறை சார்பில் என்னைக் கேட்டால், எதுவெல்லாம் இல்லை என்பதைத்தான் நான் சொல்ல முடியும். இந்த ஆட்சியில் வன்முறைகள் இல்லை! சாதிச் சண்டைகள் இல்லை! மத மோதல்கள் எழவில்லை! துப்பாக்கிச் சூடுகள் இல்லை! அராஜகங்கள் இல்லை! இதுதான் இந்த ஆட்சியின் மாபெரும் சாதனையாகும். உள்துறை சார்பில் சொல்ல விரும்புவது, தமிழ்நாட்டு மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கான அடித்தளத்தை அமைத்துத் தந்திருக்கின்றோம். இதனை உருவாக்கிக் கொடுத்த காவல்துறை அதிகாரிகள் தொடங்கி, கடைநிலை காவலர் வரைக்கும் அனைவருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதிலும், கொரோனா ஊரடங்கு காலத்திலும் விடுப்பே இல்லாமல் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றியவர்கள்

காவல்துறையைச் சார்ந்தவர்கள். அவர்கள் தியாகத்திற்கு ஈடு இணை எதுவும் கிடையாது. ஆனாலும், அவர்களுக்கு நாம் காட்டும் நன்றியின் அடையாளமாக 25 இலட்சம் ரூபாய் வழங்கினோம். காவலர்கள் அனைவருக்கும் தலா 5,000 ரூபாய், கொரோனா நிவாரண நிதியாக வழங்கிய அரசுதான் இந்த அரசு. இதற்கென 58.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. விடுப்பே இல்லாமல் பணியாற்றும் காவலர்களின் கவலையைப் போக்க வாரத்தில் ஒருநாள் விடுப்பு வழங்கப்பட்டுள்ளது. 968 உதவி ஆய்வாளர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. 10 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த சைபர் பயிற்சி வளாகம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். தடய அறிவியல் துறை சார்பில் இளநிலை அறிவியல் அலுவலர் பணியிடங்களுக்காக 62 பேருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, தமிழ்நாட்டின் அனைத்துத் தொகுதிகளுக்கும் சென்று நான் மக்களிடம் மனுக்களைப் பெற்றேன். அந்த மனுக்களை ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் நிறைவேற்றிக் காட்டுவேன் என்று சொன்னேன். அந்த மனுக்களில் உள்துறை சார்பாக வந்த மனுக்கள் 1,498. இந்த மனுக்கள் அனைத்துக்கும் தீர்வு கண்டிருக்கிறோம் என்பதையும் இந்த மன்றத்துக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவலர்கள் நலன் பேணுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதும் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. ஒவ்வொரு முறை ஆட்சியில் அமருகின்றபோதும், காவலர்கள் அனைவரது கவலையையும் தீர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறோம். காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக, 1969ஆம் ஆண்டு முதலாவது காவல்துறை ஆணையம், 1989ஆம் ஆண்டு இரண்டாவது காவல்துறை ஆணையம், 2006ஆம் ஆண்டு மூன்றாவது காவல்துறை ஆணையம் அமைத்து,

அந்த ஆணையங்களின் பரிந்துரைகளை நிறைவேற்றியவர்தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

1971ஆம் ஆண்டு காவல்துறையில் கம்ப்யூட்டர் பிரிவைத் தொடங்கியதும், வீரதீர செயல்கள்புரியும் காவலர்களுக்கு அண்ணா பதக்கம் வழங்கத் தொடங்கியதும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் தலைமையிலான தி.மு.கழக ஆட்சியில்தான். அவரது வழிநின்று, காவலர்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை அறிவதற்காக காவல்துறை ஆணையம் விரைவில் அமைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் காவல்துறையினருக்கான பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படிப்படியாக, நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றுவோம். தேர்தல் வாக்குறுதியின்போது சொல்லப்பட்டதில் சில முக்கியமான வாக்குறுதிகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மட்டும் இந்த அவைக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குடியுரிமைத் திருத்தச் சட்டம், வேளாண் சட்டங்கள், சேலம் எட்டு வழிச்சாலை, கூடங்குளம் அணு உலை, மீத்தேன், நியூட்ரினோ, ஹைட்ரோகார்பன் ஆகியவற்றுக்கு எதிரானப் போராட்டங்களில் கலந்துகொண்டவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறுவதாகச் சொன்னோம். அதன்படி, 5,570 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகக் கடந்த ஆட்சியின்போது, 22.05.2018 அன்று நடந்தப் போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தி 13 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அப்பாவி மக்கள்மீது போடப்பட்ட 36 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. பல்வேறு வழக்குகளில் சிக்கவைக்கப்பட்ட 93 பேருக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகையாகத் தரப்பட்டுள்ளது. இறந்தவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், காயம்

அடைந்தவர்களுக்கும் அவர்களது தகுதிக்கு ஏற்ற வேலைவாய்ப்பை வழங்கி இருக்கிறோம்.

ஸ்டெர்லைட் ஆலை துப்பாக்கிச் சூடு தொடர்பாக நீதி விசாரணை செய்ய அமைக்கப்பட்ட ஆணையத்தின் பதவிக் காலத்தை நீட்டித்துக்கொண்டே வந்திருக்கிறது கடந்த அ.தி.மு.க. அரசு. ஆட்சி அமைந்ததும் அந்த ஆணையத்தின் இடைக்கால அறிக்கையை இந்த அரசு பெற்றிருக்கிறது. இறுதி அறிக்கையை பிப்ரவரி 22ஆம் நாளுக்குள் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அறிக்கை கிடைத்த பிறகு அடுத்தகட்ட நடவடிக்கையை நிச்சயமாக நாங்கள் எடுப்போம்.

பொள்ளாச்சி பாலியல் வன்முறை வழக்கைப் பொறுத்தவரையில், அதனை CBI விசாரணை நடத்தி வருகிறது. இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் திருமதி முத்தரசி என்ற CBCID பெண் எஸ்.பி. அதிகாரி இதற்காக நியமிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைக்கவும், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைத்திடவும், வழக்கினை விரைந்து நடத்திட முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது. அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய மரணத்தில் உள்ள மர்மங்கள் குறித்து விசாரிக்க கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதியரசர் ஆறுமுகசாமி ஆணையத்தின் விசாரணையையும் விரைந்து முடிக்கச் சொல்லியிருக்கிறோம்.

லஞ்ச ஒழிப்புத் துறைக்கு வந்துள்ள புகார்களின் அடிப்படையிலும் படிப்படியாக விசாரணைகள் நடந்து வருகின்றன. இவையனைத்துமே தேர்தல் காலத்தில் மக்கள் மன்றத்தில் கொடுத்த வாக்குறுதிகள்தான். அதனைத்தான் இப்பொழுது நாங்கள் நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறோம்.

'இதுமட்டும்தானா ?' என நீங்கள் நினைத்து விட வேண்டாம். மாறிவரும் குற்றங்கள், மக்களின் பாதுகாப்புச் சூழல்கள் ஆகியவற்றை மனதில் கொண்டு, சென்னை பெருநகரக்

காவல்துறையை மற்ற பெருநகரங்களில் உள்ளதுபோல் சீரமைத்திட இந்த அரசு எண்ணியுள்ளது. அந்த அடிப்படையில், ஆவடி, தாம்பரம் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு தனித் தனி புதிய காவல் ஆணையரகங்கள் அமைக்கப்படும்.

சிறைக் கைதிகளின் முன்விடுதலை தொடர்பான சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு, பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய 113ஆவது பிறந்தநாள் வருகிற செப்டம்பர் 15ஆம் தேதியன்று வருகிறது. அப்போது, நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்துவரும் 700 ஆயுள் தண்டனைக் கைதிகளின் தண்டனையை நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் குறைத்து, முன்விடுதலை செய்ய இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

மக்கள்தொகைக்கேற்ப மக்களுக்கு சேவையாற்ற 10 புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்படும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை விரைந்து மேற்கொள்வதற்கு வசதியாக 4 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்கப்படும்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், குற்றம் என்ற ஒன்று நடந்தால் சாதி, மதம், இனம், மொழி, கட்சி பார்க்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் காவல்துறைக்குக் கண்டிப்பான உத்தரவை வழங்கியிருக்கிறேன். அதனடிப்படையில், தனியார் பள்ளியில் மாணவிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாக ஒரு ஆசிரியர்மீது புகார் வந்ததும், அவர் உடனடியாகக் கைது செய்யப்பட்டார். விளையாட்டுப் பயிற்சியாளர்கள் இருவரும் உடனடியாகக் கைது செய்யப்பட்டார்கள். பாலியல் புகார் எழுந்ததைத் தொடர்ந்து தனியார் பள்ளி உரிமையாளர் ஒருவரை உடனடியாகக் கைது செய்தோம். பட்டியலினத்தவரை விமர்சித்துப் பேட்டி அளித்த ஒரு நடிகை உடனடியாகக் கைது செய்யப்பட்டார். PUBG விளையாட்டு மூலமாக Youtube Channel–இல் ஆபாசமாக

நடந்துகொண்ட ஒருவர் கைது செய்யப்பட்டார். இவற்றை நினைவூட்டுவதற்குக் காரணம், புகார் எழுந்ததும், எவரையும் தயவு தாட்சண்யம் பார்க்காமல் கைது செய்யும் அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதைச் சொன்னேன்.

அதேபோல், மணல் கடத்தல், குட்கா விற்பனை, பொது விநியோகப் பொருட்கள் கடத்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள்மீதெல்லாம் வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. காவல்துறையை நவீனப்படுத்த வேண்டும். இன்றைக்கு அனைத்தையும் விஞ்சியதாக cyber குற்றங்கள் பெருகிவிட்டன. தொழில்நுட்பம் வளர வளர அதனைக் குற்றம் செய்வோர் பயன்படுத்திக்கொள்கிறார்கள். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் செய்யும் குற்றங்கள் பெருகிவிட்டன. இணையவழிப் பொருளாதாரக் குற்றங்கள் அதிகமாகிவிட்டன. தொழில்நுட்பச் சேவைகளைத் திருடுவது, தகவல்களை அழிப்பது, முகம் தெரியாதவர்களை ஏமாற்றுவது, இணையதளங்கள் மூலமாக மிரட்டுவது, போலிக் கணக்குகள், போலிப் பெயர்கள் ஆகியவை பெருகிவருகின்றன. இந்த இணையதளங்கள் மூலமாக பாலியல் குற்றங்களும் அதிகமாகி வருகின்றன. நிதிக் குற்றவாளிகளும், பாலியல் குற்றவாளிகளும் நவீன தொழில்நுட்பத்தை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். இதனைக் கண்டுபிடித்து தடுப்பதற்கான நவீன வழிமுறைகள் கொண்டதாக தமிழ்நாடு காவல்துறை நிச்சயமாக மாற்றியமைக்கப்படும்.

தடய அறிவியல் துறையானது மாநில காவல்துறை, மத்திய புலனாய்வுத் துறை மற்றும் தேசிய புலனாய்வுத் துறை ஆகிய புலனாய்வு அமைப்புகளுக்கு குற்றங்களைக் கண்டறிவதற்குரிய அறிவியல்சார் சேவைகளை வழங்கி வருகிறது. குற்றப் புலனாய்வில் எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ளும் வகையில் தடய அறிவியல் துறையின் பகுப்பாய்வுத் திறனை மேம்படுத்த அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது.

தீயணைப்புத் துறைக்கு வாகனங்களே முதுகெலும்பாக அமைகிறது. ஆகையால் உழைப்புக் காலம் முடிந்த தீயணைப்பு வாகனங்களுக்கு மாற்று ஊர்திகள் கொள்முதல் செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இத்துறைப் பணியாளர்களுக்கு சர்வதேசத் தரத்தில் பயிற்சி அளிப்பதுடன், அவர்களது உயிர்காக்க மேம்பட்ட பாதுகாப்புக் கவசங்களை வழங்கவும் முன்னுரிமை வழங்கப்படும்.

காவல்துறை என்றாலே குற்றங்களைத் தடுக்கும் துறையாக, தண்டனை வாங்கித்தரும் துறையாக மட்டும் அனைவரும் நினைக்கிறார்கள். காவல்துறை என்பது குற்றங்கள் நடக்காத வகையில் சூழ்நிலையை உருவாக்கித் தரும் துறையாக மாறவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை; இந்த அரசினுடைய எண்ணம். அதனை நிறைவேற்றிக் காட்டும் விதத்தில் இந்த அரசின் செயல்பாடுகள் இருக்கும் என்று நான் உங்களுக்கெல்லாம் உறுதியாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திலே இங்கு இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய கருத்துகளை தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு இந்தத் தருணத்தில் நான் பதிலுரையாற்றக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு.ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்கள் போலீஸ் அதிகாரிகளுக்குப் பயிற்சி வழங்குவது குறித்துப் பேசினார். போலீஸ் அதிகாரிகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு பதிவிக்கும் ஏற்றவாறு பல்வேறு பயிற்சிகள், புத்தாக்கப் பயிற்சிகள் எல்லாம் Police Academy–இல் வழங்கப்பட்டு வருகிறது. அதை மேலும் விரிவுபடுத்தி உயர் போலீஸ் அதிகாரிகளுக்கும் குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு.தி.வேல்முருகன் அவர்கள் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது குறித்து இங்கே பேசினார். இட ஒதுக்கீடு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு ஆணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் **20** விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படும் என்று **2010**ஆம் ஆண்டு கழக ஆட்சியில்தான் அது செயல்படுத்தப்பட்டது. இடைப்பட்ட **10** ஆண்டுகளில் அவ்வாறு செயல்படுத்தப்படவில்லை. பல வழங்குகள் நீதிமன்றத்திற்குச் சென்றன. ஆனால், இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபொழுது தெளிவான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறோம். மனிதவள மேலாண்மைத் துறையால் **16.08.2021** அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண் **82**–இல் குறிப்பிட்டுள்ளபடி வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு மட்டுமே **20** விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம் என்பதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு.ம.சிந்தனைச்செல்வன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்; பலவற்றைக் குறிப்பிட்டார், இருந்தாலும் ஒன்றை மட்டும் தேர்வு செய்து அதற்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். ஓய்வுபெற்ற காவலர் மற்றும் காவல் அதிகாரிகளுக்கு நல வாரியம் அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தார். அந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நல வாரியம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். **1996**ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்களின் பதவி உயர்வு குறித்து இங்கே அவர் பேசினார். அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதை அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் **59** என்றும்,

பிறகு 60 என்றும் உயர்த்தியதாலும், 85 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டு பணியில் சேர்ந்திருப்பதாலும், 1996ஆம் ஆண்டு நேரடி காவல் உதவி ஆய்வாளர் பணிக்காகத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு காவல் துணைக் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வு வழங்குவது காலதாமதமாகிறது. ஆனாலும், அவர்களுக்கு 01.06.2022–லிருந்து பதவி உயர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஏற்கெனவே இந்த அரசு எடுப்பதற்கு துவங்கியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜி.கே.மணி அவர்கள் பேசும்போது மாநில ஆவணக் காப்பகத்தின் தற்போதைய நிலை குறித்து அவர் கவலை தெரிவித்தார். மாநில ஆவணக் காப்பகம் செயல்படுவதற்கும், உரிய அறிக்கைகளை வெளியிடுவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு.கு.செல்வப்பெருந்தகை அவர்கள் பேசும்போது காவலர் மருத்துவமனையை பல்நோக்கு மருத்துவமனை தரத்திற்கு இணையாக உயர்த்தவேண்டுமென்று கூறியிருந்தார். அதையும் இந்த அரசு நிச்சயம் பரிசீலிக்கும். அதேபோன்று, அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு.பால் மனோஜ்பாண்டியன் அவர்கள் பேசும்போது, பிரகாஷ் சிங் வழக்கில் சொல்லப்பட்டுள்ள காவல்துறை சீர்திருத்தங்களை முழுமையாக நிறைவேற்றியது அ.தி.மு.க. ஆட்சிதான் என்று குறிப்பிட்டார். ஆனால், நான் சொல்ல விரும்புவது தி.மு.க. அரசுதான் காவல்துறை சீர்திருத்தங்களைச் செயல்படுத்த முதன்முதலில் நடவடிக்கை எடுத்தது. 14.05.2008 அன்றே இதே அவையில் தமிழ்நாடு போலீஸ் Tamil Nadu Police Bill, 2008 கொண்டுவந்தது கழக அரசுதான்.

அதன் தொடர்ச்சியாக, பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியில் 2013இல் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால், அந்த சட்டத்தின்படி அ.தி.மு.க. அரசு 10 ஆண்டுகளில் நடந்துகொள்ளவில்லை. ஓய்வு பெறும் நாளில் இந்த வழக்கின் சீர்திருத்தங்களைப் பயன்படுத்தி DGP நியமனங்களைச் செய்து, அது நீதிமன்றம் வரை சென்று வழக்கெல்லாம் நடைபெற்றதை மறந்திருக்கமாட்டீர்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், DGP ஆக திரு.திரிபாதி அவர்களது பதவிக் காலத்தை நிறைவு செய்ததாக இருக்கட்டும்; இப்போது பொறுப்பேற்றிருக்கக்கூடிய புதிய DGP திரு.சைலேந்திர பாபு அவர்களின் தேர்வு மற்றும் நியமனமாக இருக்கட்டும்; முற்றிலும் பிரகாஷ்சிங் வழக்கின் அடிப்படையில்தான் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, பிரகாஷ்சிங் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் எஞ்சியுள்ள காவல்துறை சீர்திருத்தங்களை நிறைவேற்ற இந்த அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

அதேபோல, போக்சோ வழக்கு விசாரணை குறித்துப் பேசினார். பெண்களுக்கு எதிரான குற்றங்களைப் பொறுத்தமட்டிலும், இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. போக்சோ வழக்குகளை விரைந்து விசாரித்து, நீதி வழங்கிட அனைத்து மாவட்டங்களிலும் தனி நீதிமன்றங்கள் நிறுவ அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசியபோது, தமிழ்நாடு முழுவதும் 4.64 இலட்சம் CCTV கேமிராக்கள் பொருத்தப்பட்டன என்றும், அவற்றில் 2.50 இலட்சம் கேமிராக்கள் சென்னை மாநகரில் அ.தி.மு.க. ஆட்சியில் பொருத்தப்பட்டன என்றும் தெரிவித்தார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், சென்னை புறநகர் பகுதிகள் உட்பட, சென்னை புறநகர் காவல் நிலைய சரகங்களில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கேமிராக்கள் 1,07,425 மட்டும்தான். அவற்றில் குடியிருப்போர் நலச் சங்கங்கள்,

வியாபாரச் சங்கங்கள், சமூகப் பொறுப்பாளர்கள் நிதி மூலமாக அமைக்கப்பெற்றவை **43,673** கேமிராக்கள்; பொது மக்கள் சார்பாக வைக்கப்பட்ட தனியார் கேமிராக்கள் **60,730**; சென்னை மாநகராட்சி, டாஸ்மாக் நிறுவனம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் மூலமாக நிறுவப்பட்ட கேமிராக்கள் **4,022** மட்டுமே என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கேமிராக்களை வைத்தார்களேத் தவிர, அதைப் பராமரிக்க கடந்தகால அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு இதுகுறித்து ஆய்வு செய்து, கேமிராக்களை வைக்க, பராமரிக்க தனி நிதி ஒதுக்கி செயல்படுத்துவது குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்வது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். நான் சொல்ல விரும்புவது, "அரசிடம் நிதி இல்லை. அதனால் ஒளிபரப்ப முடியாது" என்ற கடந்த கால அரசு உயர்நீதிமன்றத்தில் சொல்லியிருக்கிறது. பொதுநல வழக்கு விசாரணைக்கு வந்தபோது, அப்படிக் கூறிய ஆட்சிதான் அ.தி.மு.க. ஆட்சி. ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், "சட்டமன்ற நடவடிக்கைகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்" என்று தேர்தல் வாக்குறுதியிலேயே சொல்லியிருக்கிறோம். அந்த வாக்குறுதி விரைவில் நிறைவேற்றப்படும்.

அ.தி.மு.க. ஆட்சியில் சாலை விபத்துகள் குறைந்த மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்று மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் திரு.நிதின் கட்கரி அவர்கள் கூறியிருப்பதாக இங்கே பேசினார்கள். குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறை CCTNS புள்ளிவிவரங்களை ஆய்வு செய்ததில் வேறு மாதிரியானத் தகவல்கள் கிடைத்துள்ளன. Cognos

என்ற மென்பொருளைப் பயன்படுத்தி, CCTNS–இல் பெறப்பட்ட தகவல்களுக்கும், இதே திட்டத்தின்கீழ், பழைய முறைகளின்படி மாவட்டங்களில் பதிவேற்றம் செய்யப்பட்ட தகவல்களுக்கும் இடையே வேறுபாடுகள் இருக்கின்றன. ஆகவே, விபத்து இறப்புகளைக் குறைப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலம் என ஒன்றிய அரசுக்கும், உச்சநீதிமன்றத்திற்கும் தவறானத் தகவல் தரப்பட்டுள்ளது என்பதைப் பதிவு செய்ய நான் விரும்புகிறேன். அதுகுறித்து விரிவான விசாரணைக்கு நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு காவல் அங்காடிப் பொருள்களுக்கு GST–யிலிருந்து விலக்கு பெற வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். முதலில் இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்டதாகும். அதுமட்டுமின்றி, 14.5 விழுக்காடு வரை மதிப்புக் கூட்டு வரியிலிருந்தும் விலக்கு அளித்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். GST–யிலிருந்து விலக்கு பெறுவதைப் பொறுத்தமட்டிலும் சொல்ல வேண்டுமென்றால், அ.தி.மு.க ஆட்சியில் இருந்தபோது, 42 GST கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்த 42 கூட்டங்களிலும் அப்போது ஆளுங்கட்சியாக இருந்த நீங்கள் அரசின் சார்பாக கலந்துகொண்டிருக்கிறீர்கள். ஆனாலும், கூட்டணிக் கட்சியாக இருக்கும் ஒன்றிய அரசிடம் இந்தச் சலுகைகளை நீங்கள் பெற முடியவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை நேர்மையாக ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த அரசு நிச்சயமாக GST–லிருந்து காவல் அங்காடிப் பொருள்களுக்கு விலக்கு பெற விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், காவல்துறைக்கு அ.தி.மு.க. ஆட்சியில்தான் அதிக நிதி ஒதுக்கப்பட்டது என்று

கூறினார். ஆனால், அ.தி.மு.க. ஆட்சியின் இறுதியில் காவல்துறைக்காக மொத்தமாக செலவிடப்பட்ட தொகை 10.01 விழுக்காடுதான். ஆனால், 2010 தி.மு.க. ஆட்சியில், காவல்துறைக்காக செலவிடப்பட்டது 12.27 விழுக்காடு. 10 ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது 2 விழுக்காடு நிதியை அதிகம் செலவிட்டு, காவல்துறையை நவீனப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதில், ஒதுக்கிய தொகையைப் பார்க்கக்கூடாது. செலவிடப்பட்ட விழுக்காட்டைத்தான் பார்க்க வேண்டும் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சட்டத்தின் ஆட்சிக்கு இந்த அரசு மதிப்பளிக்கும். ஜெ.ஜெ. நகர் அம்மா உணவக சம்பவம், சென்னையில் ஆட்டோ ஓட்டுநர் பெண் ஆய்வாளரிடம் கொரோனா ஊரடங்கின்போது தகராறு செய்த சம்பவம், திருச்சி மாவட்டத்தில் மணல் கடத்தல் நடைபெற்றதாகக் கூறப்பட்ட நிகழ்வு, திருச்சி மாவட்டத்தில் நில அளவை தனி வட்டாட்சியர் தாக்கப்பட்டதாகக் கொடுக்கப்பட்ட புகார், திருநெல்வேலி மாநகர் கோட்டை காவல் நிலையத்தில் பெண் ஒருவரை சகோதரர் தாக்கியதால் கத்திக்குத்து நடைபெற்றிருக்கிறது. இதுபோன்ற சம்பவங்களை இங்கே எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் எழுப்பினார்கள். அவை எல்லாவற்றுக்கும் புகார் அளிக்கப்பட்ட அதே நாளிலோ அல்லது அடுத்த நாளிலோ கைது செய்யப்பட்டு, சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டியிருக்கின்ற ஆட்சிதான் கழக ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட எவ்வளவு காலம் ஆனது என்பது உங்களுக்குத் தெரியும். அதேபோல, மறைந்த முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய முகாம் அலுவலகமாக செயல்பட்ட கொடநாடு

பங்களாவில் நடைபெற்ற கொள்ளை, கொலை சம்பவங்களில் தொடர்புடையோர் கைது செய்யப்பட எவ்வளவு காலம் ஆனது என்பதையும் சற்று நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

காவல்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது கடந்த 9ஆம் தேதியன்று பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ‘கொடநாடு வழக்கை நடத்துங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை; புது விசாரணை செய்யுங்கள், நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை’ என்று சொன்னார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கொடநாடு வழக்கை நடத்துவோம். உண்மைக் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் தப்பிக்க முடியொதென்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

‘வழக்கு நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது; வேண்டுமென்றே திட்டமிட்டு எங்கள்மீது குற்றம்சாட்டுவதைத் தவிர்க்க வேண்டும்’ என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். கொடநாடு வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது இந்த அவையிலே கொடநாடு வழக்கு பற்றி முதலில் பேசியது யார்? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான். கடந்த ஆகஸ்ட் 18ஆம் நாளன்று இந்த அவையில் அந்தப் பிரச்சினையைக் கிளப்பினார்கள்; வெளிநடப்பு செய்தார்கள். வழக்கு முடியும் தருவாயில் இருக்கும்போது எதற்காக மேல் விசாரணை செய்ய வேண்டுமென்று பேட்டியும் கொடுத்தார். என்னைப் போன்றவர்களுக்கே தி.மு.க. ஆட்சியில் பாதுகாப்பில்லை என்றும் பேட்டியளித்தார்கள். மறுநாள் ஆகஸ்ட் 19 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களைச் சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் மனுவும் கொடுத்திருக்கிறார். நிர்பந்தம் காரணமாக காவல்துறையினர் மேல் விசாரணை நடத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டியிருக்கிறார். முடியும் தருவாயில் உள்ள வழக்கை மீண்டும் எதற்காக விசாரணை

செய்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார்கள். அதாவது, நீதிமன்றத்தில் உள்ள வழக்கை சட்டமன்றத்தில் எழுப்பியது யார்? நாங்களல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பாவேந்தர் பாரதிதாசனின் கவிதை வரிகளிலே இரண்டு சொற்களை மட்டும் மாற்றி எனது பதிலுரையை நிறைவு செய்திட நான் விரும்புகிறேன்.

“புதியதோர் நாடு செய்வோம்
கெட்ட போரிடும் குணத்தை வேரோடு சாய்ப்போம்
பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்
இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
இது எனதென்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்
உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
ஒருபொருள்தனி எனும் மனிதரைச் சிரிப்போம்
இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்”

இந்த வரிகளை என்னுடைய மன நிறைவுக்காக மட்டும் நான் இங்கே சொல்லவில்லை. இங்கே வீற்றிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், காவல்துறையிலே பணியாற்றுபவர்களும், பாவேந்தர் பாடலின் பொருள் ஆழத்தைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். போலீஸ் துறையில் இருக்கின்ற சிலபல குறைபாடுகள் நீக்கப்படுவதற்காக சமுதாயத்தினுடைய நேர்த்தியும் வளர வேண்டும். அது வளர வளர அந்தக் குறைபாடுகள் தானாகவே குறையுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அரை நூற்றாண்டுக்கு முன்னரே சொல்லியிருக்கிறார்கள். வெற்றி அலங்காரத்திற்காக அல்ல, அனைவரும் அகத்திலே கொள்வதற்காக அணுகுமுறையினைச் செம்மைப்படுத்திக்கொள்வதற்காக சொன்ன பொன்மொழிதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த வழியில்

தமிழ்நாடு காவல்துறை நமது அரசின் ஆட்சியில் செவ்வனே செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டை சட்டத்தின் ஆட்சியில் நாட்டிலே முதன்மை மாநிலமாக்கிட தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, தெரிவிப்பதோடு மட்டுமல்ல, உறுதியும் சொல்கிறேன். இந்தக் காவல்துறையின் மானியக் கோரிக்கை விவாதத்திலே பங்கெடுத்து உரையாற்றிய அனைவருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், காவல்துறை மற்றும்*
*தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக்*
*கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு*
*பதிலளித்து ஆற்றிய உரை –* ***13.09.2021***

# தியாகம் வீண் போகக்கூடாது...



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீட்' சம்பந்தமாக இங்கே கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த மசோதாவினை வரவேற்பதாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார். அதற்காக உள்ளபடியே நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, ஜல்லிக்கட்டு தொடர்பாக தீர்மானம் வந்தபோதும், அப்போது தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தாலும், அரசியல் பார்க்காமல் நாங்களும் ஆதரித்தோம் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அதேபோல, 'நீட்'—க்காகக் கொண்டுவரப்பட்ட அந்த மசோதாவையும் எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் அப்போது வரவேற்றிருக்கிறது. நீங்கள் வெளிநடப்பு செய்த நேரத்திலே, இந்த நீட் பிரச்சினை தொடர்பாக நான் பேச ஆரம்பித்தேன். அப்போது நீங்கள் வெளிநடப்பு செய்த

காரணத்தினாலே, இங்கேயிருந்து நீங்கள் கேட்க முடியாவிட்டாலும், நான் என்ன பேசினேன் என்பதை வெளியிலே போய் கேட்டுத் தெரிந்துகொண்டீர்கள். அதற்கும் மகிழ்ச்சி; என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் கேட்கிற ஒரே கேள்வி, நீட் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும், இந்தச் சட்டமன்றத்திலே இரண்டு மசோதாக்களை நிறைவேற்றி, அரசின் மூலமாக நாம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தோம். அதை அவர்கள் திருப்பியனுப்பி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது. ஆனால், அந்தத் தகவலை ஏன் சட்டமன்றத்திலே அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. ஆட்சி சொல்லவில்லை ? என்பதுதான் என்னுடைய கேள்வி. இருந்தாலும் அதைப்பற்றியெல்லாம் பேசி, பிரச்சினையை உருவாக்குவதற்கு நான் தயாராக இல்லை. ஏனென்றால், மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் தற்கொலை செய்துகொண்டு மாளக்கூடிய ஒரு கொடுமை நடந்துகொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்காக ஒருங்கிணைந்து இந்த அவையில் இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே, இந்தத் தீர்மானத்தை நீங்கள் தயவுகூர்ந்து, வரவேற்று இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மீண்டும் கேட்டு அமைகிறேன்.

இங்கே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு.செல்வப் பெருந்தகை அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். அது தேவையா, தேவையில்லையா என்பதைப்பற்றிக்கூட நான் பேச விரும்பவில்லை. நல்ல நோக்கத்திற்காக இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டிருப்பதற்கு யார் காரணம் ? அது அவரவர்கள் மனசாட்சிக்கு நன்றாகத் தெரியும். எனவே, அதை விவாதித்துக் கொண்டிருந்தால், இந்தச் சட்டமுன்வடிவினை நிறைவேற்றுவதிலே சங்கடங்கள் இருக்கின்றன; சச்சரவுகள் இருக்கின்றன என்ற ஒரு கெட்ட பெயர் நம்முடைய அரசுக்கு வந்துவிடும். இங்கேயிருக்கக்கூடிய

உறுப்பினர்களுக்கு வந்துவிடும். எனவே, நான் அருள்கூர்ந்து கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பல குற்றச்சாட்டுக்களை எல்லாம் சொன்னார்கள். ஆனால், அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கெல்லாம், அவர்கள் வெளிநடப்பு செய்து, வெளியே சென்றபோதே நானே பதில் சொல்லிவிட்டேன். அதனால்தான் நான் அதைப்பற்றி விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை. அந்த அடிப்படையில்தான், நான் திரு.செல்வப் பெருந்தகை அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றுகிற நேரத்தில், சச்சரவுகளை ஏற்படுத்த வேண்டாம்; குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

எவ்வளவு பேர் தேர்ச்சி பெற்றார்கள்? எவ்வளவு பேர் கலந்துகொண்டார்கள் என்பதல்ல முக்கியம். எவ்வளவு பேர் தற்கொலை செய்து கொண்டு மாண்டிருக்கிறார்கள்? நேற்று உயிரிழந்த தனுஷ் என்ற மாணவனைச் சேர்த்து 15 பேர் மாண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டுதான், இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே, அவர்களுடைய தியாகம் வீண்போகக்கூடாது என்பதுதான் இந்த அரசினுடைய இலட்சியம். எனவே, அதற்கு ஏற்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள் தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 'நீட்' தேர்வு தொடர்பான*
*சட்டமுன்வடிவினை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டபோது,*
*ஆற்றிய உரை –* ***13.09.2021***

# அறவழியில் போராடிய விவசாயிகளின் மீது போடப்பட்ட வழக்குகள் இரத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘ஏதோ எங்களை வெளியேற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு நீங்கள் அந்தக் கருத்தைச் சொல்கிறீர்களா’ என்ற ஒரு சந்தேகத்தை எழுப்பினார். இந்தத் தீர்மானத்தில்கூட ‘ஒருமனதாக’ என்றுதான் போட்டிருக்கிறோம். நீங்களும் அதை ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடுதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் அந்தத் தீர்மானத்தில் உள்ள வாசகத்தைக்கூடப் பார்க்கலாம். அந்தத் தீர்மானத்தினுடைய வாசகத்தில் ‘ஒருமனதாக நிறைவேற்றப்பட வேண்டும்’ என்றுதான் சொல்லியிருக்கிறோம். ஆனால், இருந்தாலும் பி.ஜே.பி. உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துவிட்டு, வெளிநடப்பு செய்துவிட்டார்கள். அதனால், சபையில் இருக்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வைத்துத்தான், ‘ஒருமனதாகவா’ அல்லது ‘பெரும்பான்மையாகவா’ என்று கணக்குப் போடமுடியும். ஆதலால், இதை ஏற்றுக்கொள்கிறீர்களா, இல்லையா என்பதை மாத்திரம் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் எப்போதும் உழவர் பக்கம்தான் இருப்போம்; உழவர்களுக்காகப் போராடுகிறோம்; பாடுபடுகிறோம் என்றெல்லாம் சொன்னீர்கள். ஏற்றுக்கொள்கிறேன். பிறகு, நீங்கள் ஆட்சியில் இருந்தபோது, ஏன் இதை எதிர்த்து அல்லது திரும்பப்பெற

வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவில்லை ? பல மாநிலங்களில் இருக்கக்கூடிய சட்டமன்றங்களில் தீர்மானம் போட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், உழவர்கள் பக்கம் நாங்கள் எப்போதும் இருப்போம், இருப்போம் என்று சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய நீங்கள், இந்தச் சட்டங்களைத் திரும்பப் பெறவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு ஏன் தயங்கினீர்கள் ? அதில் என்ன தயக்கம் ? ஆதலால், நீங்கள் செய்ய முடியாததை, இப்போது நாங்கள் செய்கிறோம். அதனால் இதை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

அண்மையில் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, டெல்லிக்குச் சென்று பிரதமரைச் சந்தித்தபோது, இதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதில் எந்தவித மாற்றமும் கிடையாது. அப்போதே சொல்லியிருக்கிறோம். இதுவரை அதற்கு எந்தவிதமான பதிலும் கிடையாது. ஆகவே, இதற்கிடையில்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவோம் என்று தேர்தல் நேரத்தில் நாங்கள் மக்களிடத்தில் வாக்குறுதி அளித்திருந்தோம். எங்களது வாக்குறுதிகளில் அதுவும் ஒன்று. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தவுடன், விவசாயிகளுக்காகச் சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டுவருவோம்; போராடுகிற விவசாயிகளே எங்கள்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே, இந்த மூன்று வேளாண் சட்டங்களையும் உடனடியாக ஒன்றிய அரசு திரும்பப்பெற வேண்டுமென்று தீர்மானத்தைச் சட்டமன்றத்திலே கொண்டுவருவோம் என்று தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். நாங்கள் அளித்த உறுதிமொழிகளைத்தான் தொடர்ந்து படிப்படியாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்.

எனவே, இதற்கு நீங்கள் ஆதரவு தரவேண்டுமென்று மீண்டும், மீண்டும் வலியுறுத்தி, வற்புறுத்தி, பணிவோடு, உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை ஆதரித்து நன்றி தெரிவித்துப் பேசிய திரு.தி.வேல்முருகன் அவர்கள் ஒரு கோரிக்கையை எடுத்துவைத்தார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே, ஒன்றிய அரசு கொண்டுவந்த மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறக்கோரி தமிழ்நாடு முழுவதும் அறவழியில் போராடிய விவசாயிகள், அரசியல் கட்சித் தலைவர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ஒன்றிய அரசின்*
*மூன்று வேளாண் சட்டங்களை இரத்து செய்வது தொடர்பான*
*அரசினர் தனித் தீர்மானத்தின்மீது எதிர்க்கட்சித் துணைத் தலைவர்*
*திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பேசியபோது,*
*குறுக்கிட்டு பதிலளித்து ஆற்றிய உரை –* ***28.09.2021***

# மெட்ரோ இரயில் இணைப்பை மீனம்பாக்கம் முதல் கிளாம்பாக்கம் வரை நீட்டிக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு பணி முடிவு

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் சென்னை மாநகருக்கான புதிய பேருந்து முனையம் அமைக்கப்பட்டு வருவதன் காரணமாக, மெட்ரோ இரயில் இணைப்பை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் வரை நீட்டிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதனைக் கருதி, இந்தத் தடத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணிகள் பன்னாட்டு நிறுவனத்தின் மூலமாக முடிக்கப்பட்டுள்ளது. இந்த விரிவான இறுதித் திட்ட அறிக்கை அரசின் ஆய்வில் தற்போது இருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில், பணிகளைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு தொடங்கியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க. ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சென்னை மெட்ரோ இரயில் சேவையை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து, பல்லாவரம் மற்றும் குரோம்பேட்டை வழியாக வண்டலூர் வரை நீட்டிப்பது தொடர்பாக, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் எழுப்பிய கேள்விக்கு, பதிலளித்து ஆற்றிய உரை –* ***06.01.2022***

# சமூகநீதிக்கான நமது போராட்டம் தொடரும்...



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு விதி 110இன்கீழ் ஓர் அறிக்கையினை சமர்ப்பிக்க நான் விரும்புகிறேன்.

'எல்லார்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கி நகரட்டும் இந்த வையம்' என்ற உன்னதமான குறிக்கோளைக் கொண்டதுதான் இந்த அரசு. குறிப்பாக, கல்வி என்பதை அடிப்படை உரிமையாகச் செயல்படுத்திக் காட்ட நினைக்கக்கூடிய அரசாகவும் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. எந்தவொரு கல்லூரிச் சேர்க்கையாக இருந்தாலும், அதற்கு வைக்கப்படும் நுழைவுத் தேர்வானது ஏழை, எளிய, கிராமப்புற விளிம்பு நிலை மாணவ சமுதாயத்தைப் பாதிக்கும். அதனால் அந்தத் தேர்வுகளைத் தவிர்த்து, பள்ளிக் கல்வித்

திறனை மட்டும் அடிப்படையாகக் கொண்டதாக கல்லூரி மாணவர் சேர்க்கை அமைய வேண்டும் என்பதில் மாற்றமுடியாத உறுதிப்பாடு கொண்டதாக இந்த அரசு இருக்கிறது. அதாவது, 12ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலேயே கல்லூரி மாணவர் சேர்க்கை அமைய வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

இந்த அடிப்படையில்தான், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மாநில அளவில் நடத்தப்பட்டு வந்த நுழைவுத் தேர்வுகளை, 2007ஆம் ஆண்டு அகற்றி, அதற்காகத் தனிச் சட்டம் இயற்றினார்கள். அச்சட்டத்திற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய ஒப்புதலையும் பெற்று, கல்லூரி மாணவர்கள் சேர்க்கையில், ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களின் நலன் காக்கப்படுவதை உறுதிசெய்தார். இதன் அடிப்படையில்தான், பல ஆண்டுகளாக தமிழ்நாட்டிலே மருத்துவ மாணவர்கள் சேர்க்கையும் நடைபெற்று, திறன்மிக்க நம் மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி பயிலக்கூடிய வாய்ப்பும் கிடைக்கப்பெற்றது. இத்தகைய மருத்துவர்கள் மூலமாக இன்று மருத்துவத் துறையிலே நம் நாட்டிற்கே முன்னோடியாக நாம் விளங்கிக்கொண்டிருக்கிறோம்.

ஆனால், கடந்த காலத்தில் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட நீட் தேர்வுக்கான திருத்தச் சட்டம், அதன்பிறகு கொண்டுவரப்பட்ட தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் ஆகியன மருத்துவ மாணவர் சேர்க்கையில் நீட் தேர்வை முன்னிறுத்தி, நமது மாணவர்களை வெகுவாகப் பாதித்துள்ளன. மாநில அரசு நிதியிலிருந்து, மாநில அரசுகளால் தொடங்கப்படக்கூடிய மருத்துவக் கல்லூரிகளில் எவ்வாறு அம்மாநில மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்பது குறித்து முடிவு செய்யக்கூடிய உரிமையை மாநில அரசுகளிடமிருந்து பறித்து விட்டது ஒன்றிய அரசு. இதுமட்டுமன்றி, நுழைவுத் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சிகளைப் பெறுவதற்கு வசதி வாய்ப்புகள்

உள்ள மாணவர்களுக்கு மட்டுமே சாதகமாகவும், மருத்துவ மாணவர் சேர்க்கையில் 12 ஆண்டுகள் படிக்கக்கூடிய பள்ளிக் கல்வியால் எவ்விதப் பயனும் இல்லை என்ற நிலையை உருவாக்கி, பள்ளிக் கல்வி அமைப்பையே அர்த்தமற்றதாக ஆக்குவதாகவும் இந்த 'நீட்' தேர்வுமுறை உள்ளது.

இவ்வாறு மாணவர்களின் கல்விக் கனவைச் சிதைப்பதாக மட்டுமல்ல; இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தை சீர்குலைப்பதாகவும் இந்தச் செயல்கள் அமைந்துவிட்டன. இதனை நாம் வேடிக்கை பார்க்க முடியாது. மாணவர்களது எதிர்காலம் பாழாகி வருவதை கண்டும் காணாமல் நாம் இருந்து விடமுடியாது. இதனைச் சரிசெய்து, மாநில உரிமைகளையும் நமது மாணவர்களுடைய நலனையும் மீண்டும் நிலைநிறுத்தும் நோக்கத்தோடு இந்த அவையால் ஒருமனதாக 19.09.2021 அன்று ஒரு சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டமுன்வடிவு இன்னமும் மாண்புமிகு ஆளுநர் அவர்களால், மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படாமல் இருக்கிறது. இதுகுறித்து, மாண்புமிகு ஆளுநர் அவர்களை நானே நேரில் சென்று சந்தித்து வலியுறுத்தியிருக்கிறேன்.

இதனைத் தொடர்ந்து, கடந்த 28.12.2021 அன்று நாடாளுமன்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் தலைமையிலே, தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அலுவலகத்தில், நீட் தேர்வால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும், இந்தச் சட்டமுன்வடிவுக்கு ஒப்புதல் பெறப்படுவதில் ஏற்படக்கூடிய காலதாமதம் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கக்கூடிய மனு ஒன்றை அளித்திருக்கிறார்கள். பின்னர், அம்மனு மேல் நடவடிக்கைக்காக ஒன்றிய உள்துறை

அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளதாக மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய செயலகத்தின் சிறப்புப் பணி அலுவலர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, இதுகுறித்து மேலும் வலியுறுத்திட, அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களை நேரிலே சந்திக்க நேரம் கேட்டனர். ஆனால், இதுவரையிலே, அவர்களைச் சந்திக்க மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் மறுத்து வருகிறார். மக்கள் பிரதிநிதிகளை மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் சந்திக்க மறுப்பது, மக்களாட்சியினுடைய மாண்புக்கு எதிரானதாகும். எட்டரை கோடி தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளையும், நமது மாணவர்களுடைய கனவுகளையும் நிறைவு செய்வதற்கான இந்த அரசின் முயற்சிகள் வெற்றி பெற வேண்டும். அதற்காகவே இவ்வாறு பல வகைகளில் இந்த அரசு அயராது முயற்சி செய்து வருகின்றது. பல நாட்கள் கடந்தும், உள்துறை அமைச்சர் அவர்கள் நேரிலே சந்திக்க நேரம் ஒதுக்காத நிலையிலே, அவரிடம் கொடுக்கப்பட வேண்டிய மனு, அவரது அலுவலகத்திலே நேற்றையதினம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சமூகநீதியைநிலைநாட்டுவதில்நமதுநாட்டிற்கேமுன்னோடியாக விளங்கும் தமிழ்நாட்டின் வரலாற்றையும், திராவிட இயக்கங்களின் வரலாற்றையும் புரட்டிப் பார்க்கும்போது, நமது வெற்றிகள் அனைத்தும் நீண்ட நெடிய அரசியல், சட்டம் மற்றும் மக்கள் போராட்டங்களுக்குப் பின்னரே கிட்டியிருக்கின்றன.

நாமும், நமது மாநிலமும் இன்று அடைந்துள்ள இந்த வளர்ச்சியை இப்போராட்டங்களின் மூலமாகத்தான் நாம் பெற்றுள்ளோம் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, 'நீட்' போன்ற நுழைவுத் தேர்வுகளுக்கு எதிரான நமது இந்தப் போராட்டத்தையும், நமது சமூகநீதி இயக்கத்தின் அடுத்த

கட்டப் போராட்டம் எனக் கருதி, நாம் நமது கொள்கையிலிருந்து எள்முனையளவு கூட பின்வாங்காமல் முன்னெடுத்துச் செல்வோம்.

மேற்கூறிய இந்தச் சூழ்நிலையைக் கருத்திலே கொண்டு, அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து நாம் ஒருமித்த நிலைபாட்டினை எட்டுவதற்கு, நமது சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை நாளை மறுநாள், அதாவது, **08.01.2022** அன்று கூட்டுவது என்று முடிவு செய்திருக்கிறோம். அந்தக் கூட்டத்தில் நீங்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென்று சட்டமன்றக் கட்சிகளுடைய தலைவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்; உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். நீங்களும் சேர்த்து நிறைவேற்றிய தீர்மானம்தான் அது. அதனால், அதன் முக்கியத்துவத்தைக் கருதி, அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படக்கூடிய முடிவுகளின் அடிப்படையில் நீட் தேர்வுக்கு எதிரான, சமூக நீதிக்கான நமது போராட்டம் தொடரும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி **110**இன்கீழ்*
*'நீட்' தேர்வு தொடர்பாகவும், சட்டமன்ற அனைத்துக்*
*கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டுவது குறித்தும்,*
*ஆற்றிய உரை – **06.01.2022***

# ஆன்லைன் சூதாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு.வைத்தியலிங்கம் அவர்கள், ஆன்லைன் சூதாட்டத்தைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதுகுறித்து தொடர்ந்து பத்திரிகைகளிலும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

ஆன்லைன் சூதாட்டத்தைப் பொறுத்தவரையில், சென்ற ஆட்சியிலே தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 03.08.2001 அன்று உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பிலே, 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாட்டம் மற்றும் காவல் சட்டங்கள் திருத்தச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறிவிட்டது. ஆனாலும், அந்தத் தீர்ப்பின்மீது சட்ட ஆலோசனை கேட்டு, சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினைத் தடை செய்யக் கோரி, இந்த அரசு உச்ச நீதிமன்றத்திலும் மேல் முறையீடு செய்திருக்கிறது. வழக்கைப் பொறுத்தவரைக்கும், விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விசாரணை தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. விரைவில் ஆன்லைன் சூதாட்டத்திற்கு தமிழகத்திலே நிச்சயமாக முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்ற உறுதியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், தமிழகத்திலே ஆன்லைன் சூதாட்டத்திற்கு விரைவிலே முற்றுப்புள்ளி வைக்கப்படும் என அறிவித்து ஆற்றிய உரை –* ***06.01.2022***

# வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் உரை



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021ஆம் ஆண்டுக்கு விடைகொடுத்து, 2022ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கின்றோம். அனைவருக்கும் என்னுடைய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்காலத் தமிழகம் எல்லா வகையிலும் உயர்வையும், மேம்பாட்டையும் அடைய நாம் அனைவரும் சேர்ந்து உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. வீட்டுக்கு விளக்காக, நாட்டுக்குத் தொண்டனாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி அமைந்து நிகழ்த்தப்பட்ட முதல் ஆளுநர் உரையிலே, அனைத்து மாநிலங்களும் தலைநிமிர்ந்து நோக்கும் மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டுவோம் என்று குறிப்பிட்டிருந்தோம். அந்த இலக்கை நோக்கியப் பயணத்துக்கு

உற்சாகமும், உத்வேகமும் தரக்கூடிய வகையில் இந்தப் புத்தாண்டு, 2022ஆம் ஆண்டு அமையும் என்ற அந்த நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

2022ஆம் ஆண்டின் தொடக்கத்திலே நடைபெறுகிற முதல் கூட்டத்தொடர் என்கிற காரணத்தால், கடந்த 5ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இந்த மாபெரும் சபைக்கு வருகை தந்து வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் உரையினை ஆற்றினார்கள். பொதுவாக ஆளுநர் உரை, அரசின் கொள்கை அறிக்கை; அதாவது, Statement of Policy என்றுதான் வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இலக்கணத்தையே, கடந்த காலத்தில் அ.தி.மு.க. ஆட்சியின்போது ஆளுநர் உரைமீது நான் கருத்துரை எடுத்துச் சொன்ன நேரத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அதுகுறித்து இந்த மன்றத்தினுடைய பழைய ஏடுகளை எடுத்துப் பார்த்தால் அனைவரும் புரிந்துகொள்ள முடியும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 06.05.1957 அன்று, ஆளுநர் உரை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். "பொதுவாக, ஆட்சியாளர்களுடைய கொள்கைத் திட்டங்களை விளக்குவதே கவர்னருடைய பேருரை என்பதும், அக்கொள்கைத் திட்டங்களுக்கு ஏற்ப நிதியைப் பகிர்ந்தளிப்பதாகிய புள்ளி விவரங்களைக் கொண்டதே, வரவு செலவுத் திட்டம் என்பதுதான் நான் அறிந்துள்ள வரையில் உணர்ந்திருக்கிறேன்" என்று இவ்வாறு ஒரு சில வரிகளிலேயே, மிகவும் சுருக்கமாக, ஆளுநர் உரை எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்; வரவு செலவுத் திட்டம் எப்படி வரையப்பட வேண்டும்; என்று அவருக்கே உரிய சான்றாண்மையை அவர் வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கூற்றுப்படி, ஆளுநர் உரை, மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பட்டு அமைந்துள்ளது

என்பதில் நான் உள்ளபடியே, மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆளுநர் உரையைப் படித்து ஆராயும் நடுநிலையாளர்கள், இந்த உரை, கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கையாக, அதாவது Statement of Policy and Programme என அமைந்துள்ளதை நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் மனதார நம்புகின்றேன். மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு இந்த அரசின் சார்பிலும், தனிப்பட்ட முறையிலே என்னுடைய சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், தான் ஆற்றிய உரையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வரக்கூடிய விதத்தைப் பற்றி தன்னுடைய உரையிலே சொல்லியிருக்கிறார். அதேபோன்று, அறிவித்துள்ள திட்டங்கள் குறித்தும், செயல்படுத்தவிருக்கும் கொள்கைகள் குறித்தும் ஒவ்வொன்றாக விளக்கிப் பாராட்டிப் பேசியிருக்கிறார். அதற்காக மீண்டும் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவையெல்லாம் எனக்குக் கிடைத்த தனிப்பட்டப் பாராட்டுகள் அல்ல. இந்த அமைச்சரவைக்கேக் கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுகள். இந்த அரசினுடைய அங்கமாக இருக்கக்கூடிய அதிகாரிகள், அலுவலர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுக்கள். எங்களை ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்திய மக்களுக்குக் கிடைத்திருக்கக்கூடியப் பாராட்டுகள். எங்களை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்த உழைத்திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தொண்டர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடியப் பாராட்டுகள். அத்தகைய உணர்வோடுதான் இந்த மாமன்றத்தில் நான் கம்பீரமாக நின்றுகொண்டு இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்க்கட்சியாகவும் இருந்திருக்கின்றது; ஆளும் கட்சியாகவும் இருந்து மேண்மை கொண்டிருக்கிறது. **04.05.1957** அன்று ஆளுநர் உரைமீது பேசிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், "மேண்மை தாங்கிய கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி நான் போற்றவும் வரவில்லை; தூற்றவும் வரவில்லை; என்னுடைய கருத்துரையை ஆற்றவே வந்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டுச் சொன்னார். அத்தகைய நடுநிலை தவறாத மாண்பையும், பக்குவத்தையும் பெற்றிருப்பவர்கள் நாங்கள். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மேலும் என்ன சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், "ஆளுகின்றவர்கள் யாரைத் துணைக் கொள்ளல் வேண்டும் என்பதைப்பற்றி, வள்ளுவர் பெருமான் தன்னுடைய திருக்குறளில், "பெரியாரைத் துணைக்கோடல்" என்ற அதிகாரத்தில், ஆளுகின்றவர்கள் பெரியாரை தங்களுடைய துணைவராகக்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார். எந்தப் பெரியாரைத் துணைகொள்ள வேண்டும் என்று கூறினார் என்று சொன்னால், எதையும் 'சரி, சரி' என்று சொல்லி, அதைக் கண்டிக்காமல் இருக்கின்ற பெரியாரை அல்ல. சபையிலே ஆளுகின்ற தம்மை இடித்துச் சொல்லுகின்ற பெரியாரைத் துணைவராகக் கொள்ளாத மன்னன், பகைவர்கள் இல்லையாயினும், தன்னைத்தானே கெடுத்துக் கொள்வான்; கெட்டு விடுவான் என்று சொல்லியிருக்கிறார்." என்று முத்தமிழறிஞர் கலைஞர் இந்த அவையிலே பேசியிருக்கிறார்.

இந்த அரசு, தந்தை பெரியாரின் அரசாக, பேரறிஞர் அண்ணாவினுடைய அரசாக, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய அரசாக நடைபோடுகிறது என்று நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அந்த அறிவிப்பில் துளி மாற்றம் எப்போதும் இல்லை; இருக்காது என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது ஏராளமான உறுப்பினர்கள் பேசி, அனைவருக்கும் கால அவகாசம் கொடுத்து, பிறகு நான் அவை எல்லாவற்றுக்கும் விரிவான பதிலுரை தருவதற்குக் காலம், நேரம் இல்லாத அளவுக்கு கொரோனா, ஒமைக்ரான் தொற்று மீண்டும் மிரட்டத் தொடங்கியிருக்கிறது. அதனால்தான் அலுவல் ஆய்வுக் குழுவினுடைய முடிவுக்கு ஏற்ப, விரைந்து இந்த அவையை முடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், இரண்டு நாட்கள் இந்த அவையில் நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்திலே 15 உறுப்பினர்கள் பேசி ஆக்கப்பூர்வமான கருத்துகளை அரசுக்குச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக முதலில் உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அ.தி.மு.க.–வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு.வைத்தியலிங்கம் அவர்கள் பேசும்போது, கொரோனா தடுப்புப் பணிகளில் இந்த அரசு துரிதமாகச் செயல்படுகிறது என்று சொன்னார்கள். அதற்காக முதலில் அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீட் தேர்வுக்கு எதிரானப் போராட்டத்திற்கு அ.தி.மு.க. முழுமையான ஆதரவு தரும் என்று சொன்னதற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு.ஈஸ்வரன் அவர்கள் நேற்றையதினம் இங்கே பேசும்போது, “ஜவுளித் துறையை மேம்படுத்துவதற்கு நூல் விலை ஏற்றத்தினைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார். இதுகுறித்து நான் ஏற்கெனவே கடந்த 27.11.2021 அன்று ஒன்றிய அமைச்சருக்குக் கடிதம் எழுதி “நூல் விலை ஏற்றத்தினைக் குறைக்க வேண்டும்” எனக் கோரிக்கை விடுத்துள்ளேன். இந்த அரசு நெசவாளர்கள் நலன் காக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு.ப.அப்துல் சமது அவர்கள் “சிறைச்சாலைகளில் நீண்ட காலமாக சிறைவாசம் அனுபவித்து வரும் சிறைக் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று ஒரு கோரிக்கை வைத்தார். நான் ஏற்கனவே அறிவித்தவாறு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய 113ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பிறகு பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளை ஏற்று, தமிழகச் சிறைச்சாலைகளில் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் தண்டனை முடித்தும், பயன்பெற இயலாத, தகுதி பெறாத ஆயுள் தண்டனை சிறைவாசிகள், வயது முதிர்ந்த சிறைவாசிகள், பல்வேறு இணை நோய்கள் உள்ள உடல்நலம் குன்றிய சிறைவாசிகள், தீராத நோயுற்ற மற்றும் மனநலம் குன்றிய சிறைவாசிகள் உள்ளிட்டவர்கள் குறித்து தற்போது உள்ள சட்ட விதிகளின்படி ஆராய்ந்து பரிந்துரை அளிக்க மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் திரு.என்.ஆதிநாதன் அவர்களின் தலைமையின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு அளிக்கக்கூடிய பரிந்துரையின் அடிப்படையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் செயல்பட்டுவரும் இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சின்னதுரை மற்றும் திரு.ராமச்சந்திரன் ஆகியோர் பேசும்போது, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவது குறித்துப் பேசினார்கள். இந்த அரசு விவசாயிகளின் நலனில் எப்போதும் அக்கறை உள்ள அரசு என்பதால், கடந்த அக்டோபர் 25ஆம் நாள் தொடங்கி மூன்று கட்டங்களாக பெய்த வடகிழக்குப் பருவ மழை காரணமாக பாதிக்கப்பட்ட, பின் குறுவை பருவத்தில் விளைந்த பயிர்கள், சேதமடைந்த முன் பருவத்தில்

பயிரிடப்பட்ட விளைந்த சம்பா நெற்பயிர்கள், மறு நடவுச் செலவு, பயிறு வகைகள், எண்ணெய் வித்துப் பயிர்கள், சிறு தானியப் பயிர்கள், கரும்புப் பயிர்கள், தென்னை பயிர்கள் ஆகியவற்றிற்கு நிவாரணமாக 1 இலட்சத்து 62 ஆயிரம் எக்டேருக்கும் அதிகமான நிலங்களுக்கு 132 கோடியே 12 இலட்சம் ரூபாய் நிதி மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. சிறு, குறு, பெரு விவசாயிகள் 2 இலட்சத்து 65 ஆயிரத்திற்கும் மேல் பயனடையும் இந்த நிவாரண நிதி இரண்டொரு நாட்களில் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். ஒன்றிய அரசிடமிருந்து பேரிடர் மேலாண்மை நிதி வரவில்லை என்றாலும், விவசாயிகளின் நலன் காக்கும் இந்த அரசு மாநில நிதியிலிருந்து இந்த நிவாரணத் தொகையை வழங்குகிறது என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.சிந்தனைச் செல்வன் அவர்கள் ‘‘நமக்கு நாமே திட்டத்தின்கீழ் உள்ள மூன்றில் ஒரு பங்கு மக்களுடைய பங்கு என்பதை பழங்குடியினர் மற்றும் பட்டியல் இன மக்களுக்கு ஐந்தில் ஒரு பங்கு என விதிகளைத் தளர்த்த வேண்டும்’’ என்று இம்மாமன்றத்திலே கோரிக்கை வைத்துள்ளார். அடித்தட்டு மக்களின் குரலுக்கு தொன்று தொட்டு செவி சாய்த்துவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு ‘‘நமக்கு நாமே திட்டத்தைப் பொறுத்தமட்டில், பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஐந்தில் ஒரு பங்கு என விதிகள் தளர்த்தப்படும்’’ என்று நான் அறிவிக்கிறேன்.

அதேபோல், அரசுப் பள்ளிகளுக்கு மட்டும் ஸ்மார்ட் கிளாஸ் ரூம் என்று ஆளுநர் உரையில் அறிவிப்பு இடம்பெற்றிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, ‘‘மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் மட்டுமின்றி, பழங்குடியினர் நலப் பள்ளிகளிலும் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகளும், அதற்குத் தேவையான உட்கட்டமைப்பும், கூடுதலாக நிதி ஒதுக்கி

நிறைவேற்றித் தரப்படும்'' என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் மாண்புமிகு ஜி.கே.மணி அவர்கள் பேசும்போது ''பெண் குழந்தைகள் பாலியல் சீண்டல்களுக்கு உட்படும் நேர்வுகளில் தொடர்புடைய நபர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கோரிக்கை வைத்திருந்தார். இதுதொடர்பாக நானே காவல்துறை அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தடுக்க, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்து 24 ஆயிரத்து 513 முகாம்கள் பள்ளிகள், கல்லூரிகளில் நடத்தப்பட்டுள்ளன. 249 விழிப்புணர்வு ஊர்வலங்கள் நடத்தப்பட்டுள்ளன. போக்சோ வழக்குகளை விசாரிக்க திண்டுக்கல், தருமபுரி, தேனி, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் புதிதாக ''போக்சோ நீதிமன்றங்கள்'' அமைக்கப்படுகின்றன. இந்த அரசு பொறுப்பேற்றப் பிறகு குழந்தைகளுக்கு எதிரானப் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதனால் இதுவரை 2,363 போக்சோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பதிவுசெய்யப்பட்ட 338 வழக்குகளில், 135 வழக்குகளில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு விட்டது. வழக்குகளில் விரைவான விசாரணைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் அறிவுறுத்தியதற்கேற்ப, மே மாதத்திற்கு பிறகு சென்னை இராயப்பேட்டை காவல் நிலையத்தில் 19.05.2021 அன்று போடப்பட்ட போக்சோ வழக்கு ஒன்றில் 23 நாட்களுக்குள் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்திலே வழக்கு விசாரணை 82 நாட்களில் முடிந்து 31.08.2021 அன்று

தண்டனையே வழங்கப்பட்டுவிட்டது என்பதை நான் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இதுபோன்று முதல் தகவல் அறிக்கைகளில் விரைந்து குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்வது, நீதிமன்றங்களில் வழக்கு விசாரணையை விரைவுபடுத்துவது, ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தி, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்திட வேண்டும் என்று காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் திரு.கு.செல்வப்பெருந்தகை அவர்கள், "பாக்ஸ்கான் தொழிற்சாலையில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ஒரு கோரிக்கை வைத்தார், நேற்றைய விவாதத்தின்போது அதை எடுத்துச் சொன்னார். இத்தொழிற்சாலையில் இருக்கக்கூடிய பெண் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துவதாக எனக்கு தகவல் வந்த உடன் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆகியோரைப் போராட்டம் நடைபெறும் இடத்திற்கே அனுப்பிவைத்து, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நான் நடவடிக்கை எடுத்தேன். எனது அறிவுறுத்தலின்பேரில், **23.12.2021** அன்று தலைமைச் செயலகத்தில் தொழில் துறைக்கான அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில், ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்க பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு கூறிய ஆலோசனைகளைத் தவறாமல் செயல்படுத்துவதாக ஃபாக்ஸ்கான் நிறுவனமும் உறுதி அளித்திருக்கிறது. இதன் விளைவாக, ஃபாக்ஸ்கான் நிறுவனம் முதற்கட்டமாக இரண்டு விடுதிகளில் தங்கியிருக்கக்கூடிய **500** தொழிலாளர்கள் மூலம் **12.01.2022**

அன்று உற்பத்தியைத் தொடங்க உள்ளது என்ற செய்தியும் தமிழ்நாடு அரசின் சிப்காட் நிறுவனத்தின் மூலம் ஏறத்தாழ, 18,750 பாக்ஸ்கான் நிறுவன ஊழியர்கள் மற்றும் பிற நிறுவன ஊழியர்கள் தங்குவதற்கேற்ப வல்லம் வடகாலில் ஒருங்கிணைந்த தங்கும் விடுதி அமைக்கப்படவுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது முத்தமிழறிஞர் கலைஞர் வழியிலே செயல்படக்கூடிய அரசு. மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு வித்திடும் தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்கும் என்றைக்கும் ஆதரவாக இருந்தும், தொழிலாளர்களுடைய சட்டப்பூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும் செய்யும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த விடுதி ரூ.570 கோடி செலவிலே 20 ஏக்கர் நிலப்பரப்பிலே 8 தொகுதிகளாக 11 மாடிகளைக் கொண்டதாக வடிவமைக்கப்படவுள்ளது. புதுக் கட்டுமானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பணிகளை மேற்கொண்டு, 15 மாதங்களில் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அம்மா மினி கிளினிக்குகளை மூடிவிட்டோம், அம்மா உணவகத்தைக் கவனிக்கவில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பட்டியல் படித்தார். இதுபோன்ற பட்டியலைப் படிக்க வேண்டுமானால் என்னிடம் நிறையவே இருக்கிறது.

தலைவர் கலைஞர் அவர்களால் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் மாபெரும் சட்டமன்ற தலைமைச் செயலக வளாகம் கட்டப்பட்டு, அது அன்றைய மாண்புமிகு பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது. அந்த இடத்தில்தான் சட்டமன்றமும் நடந்தது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும், சட்டமன்றம் நடந்த இடத்தை மருத்துவமனையாக மாற்றியது யார் ? பேரறிஞர் அண்ணா

அவர்களின் நூற்றாண்டு விழா நினைவாக 170 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எட்டு மாடி அளவில் கட்டப்பட்ட மாபெரும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை மாற்ற முனைந்ததும், பராமரிக்காமல் பாழடைய வைத்ததும் யார்? அங்கிருந்த பேரறிஞர் அண்ணாவின் சிலையின் கீழ் இருந்த கலைஞர் பெயரை மறைத்தது யார்? கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தில் கலைஞர் பெயரை நீக்கியது யார்? செம்மொழிப் பூங்காவில் கலைஞர் பெயரை செடி, கொடிகளை வைத்து மறைத்துப் பராமரிக்காமல் விட்டது யார்? கடற்கரைப் பூங்காவில் இருந்த கலைஞர் பெயரை எடுத்தது யார்? ராணி மேரி கல்லூரியில் கலைஞர் அரங்கத்தின் பெயரை நீக்கியது யார்? கலைஞர் கொண்டுவந்தார் என்பதற்காகப் பெரியார் பெயரில் அமைந்த சமத்துவபுரங்களைப் பாழ்படுத்தியது யார்? உழவர் சந்தைகளை இழுத்து மூடியது யார்? தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் 2009ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட உடன்குடி பவர் கார்ப்பரேசன் லிமிடெட்டை முடக்கியது யார்? நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், வருமுன் காப்போம் திட்டம் ஆகியவற்றைக் கிடப்பில் போட்டது யார்? மதுரவாயல்–சென்னை துறைமுக உயர்மட்டச் சாலைத் திட்டத்தை முடக்கியது யார்? சமச்சீர்க் கல்விப் பாடப்புத்தகத்தில் கலைஞர் எழுதிய செம்மொழி வாழ்த்துப் பாடலையும், 7ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் நாடகக் கலை குறித்த பாடத்தில் இருந்த கலைஞர் பெயரையும் ஸ்டிக்கர் வைத்து மூடி மறைத்தது யார்?

இப்படி வரிசையாக நீண்டநேரம் என்னால் சொல்ல முடியும். பல கேள்விகளைக் கேட்க முடியும். இதை எல்லாம் நீங்கள் செய்தீர்கள், அதனால் நாங்கள் செய்தோம் என்று நான் சொல்ல வரவில்லை. அப்படி நடந்துகொள்ளக்கூடிய எண்ணம் எனக்கு ஒருகாலும் ஏற்பட்டதில்லை; வரவும் வராது.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் என்றுதான் இன்றைக்கும் இருக்கிறது. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் என்றுதான் இன்னமும் இருக்கிறது. சென்னை உயர்கல்வி மன்றத்துக்குள் அவருக்குச் சிலை இருக்கிறது. அவரது நினைவகம், பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அதை இந்த அரசே பராமரித்துக் கொண்டும் இருக்கிறது. அம்மா கிளினிக் என்று பெயர் வைத்தீர்களேத் தவிர, கிளினிக் இல்லை. இல்லாத ஒன்றை எப்படி இந்த அரசு மூட முடியும் ? அம்மா உணவகம் மூடப்பட்டுள்ளது என்று கூறினார்கள். மாண்புமிகு அவை முன்னவர் கூட, கலைஞர் பெயரில் இருந்த திட்டங்களை மாற்றப்பட்ட ஆதங்கத்தில் "ஒரு உணவகத்தை மூடினால் அதில் என்ன தவறு ?" என்று ஒரு கேள்வியை எழுப்பினார். என்னைப் பொறுத்தமட்டில், நான் அப்படி நினைக்கவில்லை. எந்த அம்மா உணவகமும் மூடப்படக் கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணம். அதனால்தான், ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் அம்மா உணவகங்கள் தொடரும் என்று நான் அறிவித்தேன். இன்றுவரை அந்த நிலைப்பாட்டில்தான் இருக்கிறேன். நிச்சயமாக இருப்பேன், அதில் எந்தவிதத்திலும் மாற்றம் ஏற்படாது என்பதை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரை என்பது ஓராண்டுக்கு ஒருமுறை ஆற்றப்படுவது. ஆனால், சென்ற ஆளுநர் உரைக்கும், இப்போதைய ஆளுநர் உரைக்கும் ஆறு மாதம்தான் இடைவெளி. முந்தைய ஆளுநர் உரை, கடந்த ஜுன் 21ஆம் நாள் ஆற்றப்பட்டது. இரண்டுக்கும் இடைப்பட்ட காலம் மிகக் குறைவுதான். ஆனால், இந்த இடைப்பட்டக் காலத்திலே ஏராளமான சாதனைகளையும் நாங்கள் செய்திருக்கிறோம்; ஏராளமான சோதனைகளையும் நாங்கள் சமாளித்திருக்கிறோம். கொரோனா என்கிற பெருந்தொற்று காலத்திலே ஆட்சிக்கு வந்தோம்.

போர்க்கால வேகத்திலே செயல்பட்டோம். அதனால், இரண்டாவது அலைக்கு முற்றுப்புள்ளி வைத்தோம். அதிலிருந்து மீண்ட நிலையிலே, வரலாறு காணாத மழை, வெள்ளம் என்கிற இயற்கைப் பேரிடர் நம்மைச் சூழ்ந்தது. அதற்கான நிவாரணப் பணிகளையும் மின்னல் வேகத்திலே செய்து கொடுத்தோம்.

தேர்தலுக்கு முன்பு, நாம் பெற்றிருக்கக்கூடிய நம்பிக்கையை விட, இப்போது பல மடங்கு நம்பிக்கையை மக்களிடையே இந்த அரசு பெற்றுள்ளது என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய மனசாட்சி கூட மறுக்காது என்பதை நான் நம்புகிறேன். மக்களுக்கு உண்மையாக இருந்தோம். அதனால் மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றுள்ளோம். இதே உண்மைத் தன்மையோடுதான் நான் என் வாழ்நாள் முழுவதும் செயல்படுவேன் என்று திட்டவட்டமாக இந்த மாமன்றத்திலே உறுதி அளிக்கிறேன்.

நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளைப் பற்றி இங்கு பேசினார்கள். கொரோனாவைத் தடுக்கின்ற அரண் என்பது தடுப்பூசிதான். நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தமிழ்நாட்டிலே முதல் தவணைத் தடுப்பூசி செலுத்தியவர்கள் **8.09** விழுக்காடு மட்டும்தான். இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்தியவர்கள் **2.84** விழுக்காடு மட்டும்தான். அதாவது முதல் நான்கு மாதங்களில் செலுத்தப்பட்ட தடுப்பூசியின் அளவு இவ்வளவுதான். ஆனால், அடுத்து நாங்கள் ஆட்சிக்கு வந்த ஏழே மாதங்களில், மக்களுக்கு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, தடுப்பூசி செலுத்திக்கொள்வதை மக்கள் இயக்கமாக ஆக்கினோம். தற்போது தமிழ்நாட்டு மக்களிலே **87.27** விழுக்காடு மக்கள் முதல் தவணை தடுப்பூசி செலுத்தி இருக்கிறார்கள். **61.25** விழுக்காடு மக்கள் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்தியிருக்கிறார்கள். இதுவரை மொத்தம் **8.76** கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டிருக்கிறது. **15** முதல் **18** வயதுவரை உள்ள

குழந்தைகளுக்கு ஜனவரி 3ஆம் தேதி தடுப்பூசி போடும் பணியைத் தொடங்கிவைத்தேன்.

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, பள்ளிகளுக்கேச் சென்று தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 60 வயதுக்கும் மேற்பட்ட எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கும், முன்களப் பணியாளர்களுக்கும் “கூடுதல் தவணையில்” தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒமைக்ரான் வைரஸ் தொற்று ஏற்பட்டாலும், அதனால் பெரும் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு தடுப்பூசியைப் பெரும்பாலானவர்களுக்கு செலுத்தியதுதான் காரணம். கொரோனா வார்டுக்கும் நேரில் சென்று ஆய்வு செய்தேன். சாலையில் இறங்கி முகக்கவசம் அணியாதவர்களுக்கு முகக்கவசம் அணிவித்தேன். ஒவ்வொரு உயிரும் நமக்கு முக்கியம் என்ற உன்னதமான எண்ணம்தான் இதற்குக் காரணம். உங்களின் அரசாக மட்டுமல்ல; உயிர் காக்கும் அரசாக இந்த அரசு இயங்கி வருகிறது என்பதற்கு இந்த ஒரு எடுத்துக்காட்டு போதுமானது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் மட்டுமல்ல; அனைத்துத் துறைகளும் இந்த அரசைப் பொறுத்தவரையில் மக்கள் நல்வாழ்வுத் துறைதான். அந்த எண்ணத்தோடுதான் அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறோம். கடந்த ஆளுநர் உரையில் 66 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அவற்றில் 49 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது என்பதை பெருமையோடு இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். மீதமுள்ள 17 அறிவிப்புகளில் ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ளவை 3. இன்னும் அரசாணை வெளியிட வேண்டிய அறிவிப்புகள் 14 என்ற நிலையில் உள்ளது. இவை ஏதோ அறிவிப்புகளாக மட்டுமல்ல; வெளியிட்ட அறிவிப்புகளில் 6 மாதத்தில் 75 விழுக்காடு அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு விட்டது. ஆகவே, இந்த அரசு அறிவிப்போடு நிற்பது இல்லை. எல்லா அறிவிப்புகளையும்

ஆணைகளாக வெளியிடுகிற அரசு என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சொற்கள் தனி மனிதனுடைய வெறும் சொற்களாக இல்லாமல், அரசாங்கத்தினுடைய ஆணைகளாக அதை மாற்றி வருகிறோம். இந்த ஆணைகள் அனைத்திற்கும் செயல் வடிவம் கொடுத்து வருகிறோம். அந்த அரசாணைகளில் மிக முக்கியமானவைகளை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி, கொரோனா கால நிவாரணமாக 4,000 ரூபாய்; ஆவின் பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு; பெட்ரோல் லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு; இலங்கைத் தமிழர்களுக்கு ரூபாய் 317 கோடியிலான பல்வேறு திட்டங்கள்; பெரியார் பிறந்தநாள் சமூகநீதி நாளாகக் கொண்டாட்டம்; மீனவர்களுக்கு வழங்கக்கூடிய சிறப்பு உதவித்தொகை 5,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்வு; விழுப்புரத்தில் சமூகநீதிப் போராளிகளுக்கு மணிமண்டபம்; நெசவாளர் கோரிக்கையை ஏற்று பஞ்சுக்கு ஒரு விழுக்காடு வரி ரத்து; அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு; தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் உருவாக்கம்; கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட நகைக் கடன்களும், தமிழக வரலாற்றில் முதன்முறையாக மகளிர் சுய உதவிக்குழுக்கள் பெற்ற கடன்கள் முழுமையாக ரத்து – இப்படி எண்ணற்ற சாதனைகளைச் செய்திருக்கிற அரசுதான் இந்த அரசு, உங்கள் அரசு என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 500க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினோம். குறுகிய காலத்தில் அவற்றில் பெரும்பாலான வாக்குறுதிகளுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டு அவைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கின்ற வாக்குறுதிகளை

நிறைவேற்றுவதற்கான கால அவகாசம் என்பது ஐந்து ஆண்டுகள். அந்த ஐந்து ஆண்டுகளுக்குள் நிறைவேற்றுவோம் என்பதுதான் தேர்தல் அறிக்கையின் சாராம்சம்.

ஆனால், பெரும்பாலான வாக்குறுதிகளை 5 மாத காலத்திலே நிறைவேற்றியுள்ள ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது பற்றியும், பேரறிஞர் அண்ணா அவர்களே முதலமைச்சராக இருந்தபோது விளக்கம் தந்திருக்கிறார்கள். நீங்கள் இந்தத் தேர்தல் வாக்குறுதிகளை என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். கேட்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால், கேட்பதற்கு முழு உரிமை பெற்றவர்கள் எங்களுக்கு வாக்களித்தவர்கள். ஏனென்றால் நம்பி எங்களுக்கு வாக்களித்தார்கள். அவர்கள் கேட்க வேண்டும். ஆனால் நீங்கள் கேட்கிறீர்கள். பரவாயில்லை. ஏன் பராவாயில்லை என்று சொல்கிறேன் என்றால், வாக்காளர்களுக்கு அந்த அவநம்பிக்கை ஏற்படவில்லை. ஆகையால் அவர்கள் எங்களை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் கேட்கிறீர்கள் என்ன ஆயிற்று என்று ? நான் முன்பே சொல்லியிருக்கின்றபடி படிப்படியாக முறையாக உரிய காலத்தில் உரிய அளவிற்கு நிச்சயமாக அது நிறைவேற்றப்படும். உடனே இல்லை, எல்லாம் மொத்தமாக இல்லை, எதையாவது விட்டுவிடுவீர்களா, அதுவும் இல்லை என்றால் நிறைவேற்றப்படுமா ? உரிய காலத்தில் முறையாக, படிப்படியாக, அதற்கென்ன தேவை, எது முதலில், எது இரண்டாவது, எது மூன்றாவது என்ற priority தேவை. எல்லோரும் எளிதாகப் புரிந்துகொள்ளும்படியான பேரறிஞர் அண்ணா அவர்களின் விளக்கத்தை அனைவரும் ஆய்ந்து சிந்தித்துப் பார்த்து ஏற்க வேண்டும் என்று நான் மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சொன்னதை மட்டும் செய்யாமல், சொல்லாததையும் செய்யக்கூடிய அரசுதான் இந்த அரசு. அந்த அடிப்படையில், சில முக்கிய சாதனைகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கொரோனாவால் குழந்தைகள் பள்ளிகளில் படிக்க முடியாததால் கற்றல் இழப்புப் பிரச்சினை பெற்றோர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியது. அந்தக் கவலையைப் போக்க வந்ததுதான் “இல்லம் தேடிக் கல்வி” என்கிற திட்டம். 200 கோடி ரூபாய் மதிப்பில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், 12 மாவட்டங்களில் முன்மாதிரி அடிப்படையில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. 80 ஆயிரத்து 138 இல்லம் தேடிக் கல்வி மையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த 80 ஆயிரம் அலுவலர்களைப் பயன்படுத்தி, ஜி.பி.எஸ். செயலி வாயிலாகக் கணக்கெடுத்து, இன்றைக்கு 1 இலட்சத்து 73 ஆயிரத்து 792 இடைநின்ற குழந்தைகள், அவரவர் வயதுக்கு ஏற்ற வகுப்புகளில் வெற்றிகரமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

“மக்களைத் தேடி மருத்துவம்” என்கிற மகத்தான திட்டம். மருத்துவ சேவையை மக்களின் இல்லத்திற்கே கொண்டு சேர்க்கின்ற திட்டம்தான் இது. 257 கோடி ரூபாய் மதிப்பில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 43 இலட்சத்து 66 ஆயிரத்து 518 பேர் பயனடைந்திருக்கிறார்கள். மாநிலமெங்கும் மருத்துவ முகாம்கள் நடத்தி, இந்த முன்னோடித் திட்டம், இன்றைக்கு மக்களின் “இல்ல மருத்துவமனைகள்” போல செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அரசாங்கப் பள்ளிக்கூடங்களை அனைவரும் விரும்பும் பள்ளிக்கூடங்களாக மாற்றிட இந்த அரசு முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. நான், சென்னை மாநகர மேயராக இருந்தபோது மாநகராட்சிப் பள்ளிகளை அந்தளவுக்கு தரம் உயர்த்தி நான்

மேம்படுத்தினேன் என்பது உங்களுக்கேத் தெரியும். அதேபோல, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து அரசாங்கப் பள்ளிகளையும் நாங்கள் விரைவில் மேம்படுத்துவோம் என்பது உறுதி.

அதனால், இந்த ஆளுநர் உரையில், மிக மிக முக்கியத் திட்டமாக அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ‘‘ஸ்மார்ட் கிளாஸ்’’ என்கிற திட்டம், அதாவது திறன்மிகு வகுப்பறைகள் உருவாக்குகின்ற திட்டம் வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டிலுள்ள 24 ஆயிரத்து 345 தொடக்கப் பள்ளிகளிலும் திறன்மிகு வகுப்பறைகள் தொடங்கப்படும். அரசுப் பள்ளிகள், அந்தப் பள்ளிகளின் வரலாற்றில், இது ஒரு மாபெரும் கல்விப் புரட்சியை உருவாக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகள் இந்தியாவிற்கே முன்னோடியாக செயல்படுகின்ற பெயரை எட்டிட இந்த அரசு தனது அனைத்து சக்தியையும் பயன்படுத்தும் என்பதை நான் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கிய உயிர் காக்கும் திட்டம், ‘‘இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டம்’’ ஆகும். அது உங்களுக்குத் தெரியும். சாலை விபத்துகளில் சிக்கி, பாதிக்கப்படுகிற விலைமதிப்பற்ற உயிர்களை காக்கக் கூடிய உன்னதமானத் திட்டம். தமிழ்நாட்டில் எந்த மூலையில் ஒருவர் விபத்துக்குள்ளானாலும், அது மற்ற மாநிலத்தவரானாலும், ஏன், வேறு நாட்டைச் சார்ந்தவராக இருந்தாலும் முதல் 48 மணி நேர சிகிச்சையை இந்த அரசே ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய கருணைமிக்கத் திட்டம். கருணையையே தன்னுடைய பெயரிலேக் கொண்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் அரசு அல்லவா இது! அதனால்தான் அத்தகைய கருணை உள்ளத்தோடு இந்தத் திட்டத்தை நாங்கள் தீட்டியிருக்கிறோம். இந்தத் திட்டத்தின்கீழ், 609 மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டு, இதுவரை 5,274 பேர் அவசர சிகிச்சைகளைப்

பெற்று பயனடைந்திருக்கிறார்கள். விபத்தில் சிக்குகிறவர்களுக்கு "ஒரு கோல்டன் திட்டம்" இது என்பது மட்டுமல்ல; மனித உயிர், மனித உரிமை இரண்டையும் இந்த அரசு இரு கண்கள் போல் காத்து வருகிறது என்பதற்கு மேலும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ள திட்டம்.

மேலும், பருவ மழையும், திடீர் மழையும் தமிழகத்தை விட்டு வைக்கவில்லை. சமீபத்தில் சென்னையில் ஒரே நாளில் இரண்டு முறை கனமழை கொட்டித் தீர்த்திருக்கிறது. கொட்டித் தீர்த்தது என்று சொல்வதைவிட, ஏதோ வானைப் பிளந்து ஊற்றுவதுபோல மழை சென்னை மாநகர வீதிகளை நிரப்பியது. ஒவ்வொரு முறையும் மழை வெள்ளப் பாதிப்பு வந்தவுடன் முதல் ஆளாகக் களத்தில் நிற்கிறவர்தான் உங்களுடைய முதலமைச்சர். மக்களின் துயரங்களை நேரில் கேட்டு, அவற்றைச் சீர்படுத்துவதற்கு, துடைப்பதற்கு, துன்ப, துயரங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நமது அமைச்சர்களும், ஏன் நம்முடைய அதிகாரிகளும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் அவரவர் தொகுதிகளில் மழை வெள்ள நிவாரணப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டு, விவசாயிகளுக்கும், மக்களுக்கும் ஏற்பட்ட இன்னல்களை துடைத்தெறிவதில் பொறுப்புடன் செயல்பட்டிருக்கிறார்கள்.

அதேபோல, சமீபத்தில் பெய்த மழையின்போது நான் வெளியூர் பயணத்தில் இருந்தேன். சென்னை திரும்பியவுடன், நேரடியாக விமான நிலையத்திலிருந்து அந்த நள்ளிரவிலேயே மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் களமிறங்கி, நடவடிக்கை எடுத்தேன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சென்னையில் மழை கொட்டி, குடிநீர் தரக்கூடிய ஏரிகள் எல்லாமே நிரம்பி வழிந்து, முறைப்படுத்தப்பட்ட தண்ணீர் வெளியேற்றத்தின்மூலம் மக்களுக்கு ஏற்படவிருந்த பாதிப்பைத் தவிர்த்தோம்; உடைமைகள் பாதுகாக்கப்பட்டன;

உயிர்கள் காப்பாற்றப்பட்டன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய பேரிடர் நிவாரண நிதிக்காக இந்த அரசு காத்திருக்கவில்லை. மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 801 கோடி ரூபாய் அதற்கென ஒதுக்கிப் பணிகளை முடுக்கி விட்டோம்; நிவாரண உதவிகளை வழங்கினோம். இதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திருப்புகழ் தலைமையில் குழு அமைத்து ஆலோசனைகளை அவர்களிடத்திலிருந்து பெற்றோம்; தொடர்ந்து பெற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த ஆலோசனைகளின் அடிப்படையில்தான் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் செயல்படுத்திட, நகராட்சி நிருவாகத் துறை, நீர்வளத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை போன்ற பல துறைகள் இணைந்து அந்தத் திட்டங்களைச் செயலாற்ற வேண்டியிருக்கிறது. இந்தப் பணிகளுக்காக முதற்கட்டமாக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்பதை இந்தப் பேரவையிலே நான் அறிவிக்கிறேன். உடனடியாக இதற்கான முதற்கட்டப் பணிகள் தொடங்கப்படும். இயற்கைப் பேரிடர்களிலிருந்து மக்களைக் காப்பதில் இந்த அரசு உறுதியோடு செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, அடுத்த பருவமழை வருகிறபோது, சென்ற மழையின் துயரங்கள் மக்களுக்கு துளியும் இருக்கக்கூடாது என்பதை மனதில் வைத்து இந்த அரசு தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

காவேரி டெல்டாவில் 61 கோடி ரூபாய் செலவில் குறுவை சாகுபடித் தொகுப்பு வழங்கியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேட்டூர் அணையில் உரிய நேரத்தில் தண்ணீரைத் திறந்து, கால்வாய்களை முன்கூட்டியே தூர்வாரிய காரணத்தால் 4.9 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி செய்து வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டிருக்கிறது.

மாற்றுத்திறனாளிகள் என்று பெயர் சூட்டிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய வழியிலே மாற்றுத்திறனாளிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, ஒரு அறிவிப்பை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கடுமையான இயலாமை; கடுமையான அறிவுசார் குறைபாடு; தசைச்சிதைவுகள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்புத் தொகையாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய ரூ.1,500 இனி ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம், 2,06,254 பேர் பயனடைவார்கள். இதனால், அரசுக்கு ஆண்டொன்றிற்கு 123 கோடியே 75 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையிலிருந்து இன்றைக்கு வெளியில் சென்று பேசியிருக்கிறார். அதற்கான காரணங்கள் என்னவென்று உங்களுக்குத் தெரியும். அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. அதேபோல, வெளிநடப்பு செய்து தொடக்கத்திலேயே, இந்த கவர்னர் உரையைப் படிக்கத் தொடங்கியவுடனே வெளிநடப்பு செய்து, வெளியில்போய் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி கொடுத்தபோது என்ன சொன்னாரென்றால், மழை, வெள்ளம் குறித்தும், தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு சரியில்லை என்றும் சொல்லியிருக்கிறார். மழை வெள்ளம் குறித்துப் பேச அ.தி.மு.க.வினருக்கு எந்தத் தகுதியும் இல்லை; எந்தத் தார்மீக உரிமையும் கிடையாது. ஏனென்றால், 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எந்தவித முன்னறிவிப்பும் செய்யாமல், செம்பரம்பாக்கம் ஏரியை நள்ளிரவில் திறந்துவிட்டு, சென்னை மாநகரத்தையே மிதக்க விட்டனர்; நூற்றுக்கணக்கானோர் மாண்டனர்; வீடுகளும், குடிசைகளும் மூழ்கின; ஏழை, நடுத்தர மக்கள் உடைமைகளை இழந்தனர்; சொந்த ஊரிலேயே தமிழர்கள் அகதிகளாக அலைந்தனர்; இது இயற்கைப் பேரிடர் இல்லை;

செயற்கைப் பேரிடர்; man-made disaster என்று பத்திரிகைகள் தலையங்கம் எழுதின; கடைசியில், புண்ணுக்குப் புனுகு தடவுவதைப் போல, நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. Smart City என்று விளம்பரப்படுத்திக்கொண்டு, எந்தெந்த வகையில் Smart ஆக வேலை பார்த்தனர் என்பதை நாடே வேடிக்கைப் பார்த்து, கைகொட்டி சிரித்தது.

மழை, வெள்ளம்தான் இப்படியென்றால், சட்டம்–ஒழுங்கு குறித்து பேசுவதற்காவது அவர்களுக்குத் தகுதி இருக்கிறதா? கொடநாடு கொலை, கொள்ளையில் தொடங்கி, பொள்ளாச்சி பாலியல் விவகாரங்கள், குட்கா வரை பல்வேறு முத்திரைகளை பதித்தவர்கள்தான் அவர்கள். நான் சொல்லித் தெரியவேண்டுமா? நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். இவற்றை எல்லாம் விரிவாப் பேசி சட்டசபையை, சத்த சபையாக மாற்ற நான் விரும்பவில்லை. குற்றம் சாட்டுவதற்கு முன்பாக தன் கையில் கறை இருக்கின்றதா என்பதைப் பார்த்துவிட்டுப் பேசவேண்டும். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பாலியல் பலாத்காரம் நடக்கின்றது என்று பத்திரிகைச் செய்திகளை வைத்து எங்கேயாவது குற்றவாளிகள் கைது செய்யப்படாமல் இருக்கின்றார்களா? எங்கள் ஆட்சியில். எங்காவது குற்றவாளிகள் தப்பித்துப் போயிருக்கிறார்கள் என்ற செய்தி உண்டா? தப்பிய ஒரேயொரு ஒரு குற்றவாளியையும் 5ஆம் தேதி கைது செய்துவிட்டோம். வேறு யாராவது தலைமறைவாக இருக்கின்றார்களா, இருந்தால் சொல்லச் சொல்லுங்கள். பதுங்கும் எவரையும் இந்த அரசு பாய்ந்து பிடிக்கும் என்று நான் உறுதியளிக்கிறேன். பதுங்கக்கூடியவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயமாக அவர்களைப் பிடித்து உரிய தண்டனையை இந்த அரசு வழங்கும்; அதில் எந்த மாற்றமும் கிடையாது. காவல்துறையை ஏவல் துறையாக மாற்றிவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். தூத்துக்குடியில் 13 பேரை துள்ளத் துடிக்க சுடச்

சொன்னது யார்? டி.வி.யைப் பார்த்துதான் நான் தெரிந்துகொண்டேன் என்று சொன்னது யார்? அதெல்லாம் நமக்குத் தெரிகின்றதோ இல்லையோ மக்களுக்குத் தெரியும்.

'எங்களது கட்சிக்காரர்களை விசாரணை என்ற பெயரால் அழைத்துச் செல்கிறார்கள்' என்று பொத்தாம் பொதுவாக எதிர்க்கட்சித் தலைவர் பேசியிருக்கிறார். அது எந்த வழக்கு என்பது தெரியவில்லை. அந்த வழக்கு பாயுமோ, இந்த வழக்கு பாயுமோ என்று பயந்து நடுங்குறவங்களுக்கெல்லாம் எங்களால் பாதுகாப்புத் தர இயலாது. தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சிதான் நடந்துகொண்டிருக்கிறது. தி.மு.க.–வைச் சேர்ந்தவர்களே யாராவது தவறு செய்தால், ஒரு சின்ன குற்றத்தில் ஈடுபட்டாலும், நிச்சயமாக சொல்கிறேன், உறுதியாக சொல்கிறேன், அண்ணாமீது ஆணையாகச் சொல்கிறேன், கலைஞர்மீது ஆணையாகச் சொல்கிறேன், இந்த ஸ்டாலின் உரிய நடவடிக்கை எடுப்பார். அதில் எந்த மாற்றமும் கிடையாது.

"52 மணி நேர ஆபரேஷன் டிஸ் ஆர்ம்" நடத்தி, 6,112–க்கும் மேற்பட்ட ரவுடிகள் சுத்தி வளைக்கப்பட்டார்கள். "ஒருமாத சிறப்பு கஞ்சா வேட்டை" மேற்கொள்ளப்பட்டு 9,498 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். குட்கா, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பவர்கள் வேட்டையாடப்பட்டிருக்கிறார்கள். பள்ளி கல்லூரிகள் வட்டாரத்தில் போதைப் பொருட்கள் விற்கப்படுவதை நாம் அடியோடு தடுத்திருக்கிறோம். அதைக் கடுங்குற்றமாக்க சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்டு வருகிறது. ரவுடிகளை ஒடுக்க, கூலிப்படைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மாநிலத்தில் ஒவ்வொருவரின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியதால்தான் இன்றைக்கு தொழில் வளர்ச்சியில், புதிய முதலீடுகளை நம்மால் ஈர்க்கமுடிகிறது. புதிய அத்தியாயத்தை இந்த அரசு எழுதிக்கொண்டிருக்கிறது. கடந்த ஏழு மாதங்களில் மூன்று முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தியிருக்கிறோம். அதன்மூலம், **56** ஆயிரத்து **230** கோடி அளவிலான முதலீடுகள் திரட்டப்பட்டிருக்கின்றது. **1** இலட்சத்து **74** ஆயிரத்து **999** நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற **109** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன. இதில், இதுவரை **21** ஆயிரத்து **508** கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் துவங்கப்பட்டுள்ளன. மேலும், மாநிலத்தில் திட்டமிட்டப் பாதையில் தொழில் வளர்ச்சியைக் கொண்டுசெல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை FinTech Policy சமீபத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கையும், Tamil Nadu Export Promotion Policy வெளியிடப்பட்டிருக்கின்றது. ஒரகடத்தில் **150** ஏக்கர் பரப்பளவில் மருத்துவக் கருவிகள் பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. நாட்டுக்கே முன்னோடியாக தூத்துக்குடியில் மாபெரும் அறைகலன் பூங்கா **1,100** ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த இரண்டு பூங்காங்கள்மூலம் மட்டும் **3** இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட இருக்கின்றது. **2030**ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு இலட்சம் கோடி டாலர் என்கிற இலக்கை எட்டுவதற்காகத்தான் நாங்கள் தினமும் உழைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற அரசு நலத்திட்ட நிகழ்ச்சிகளில், பல நிகழ்ச்சிகளுக்கு நானே நேரிடையாகச் சென்று கலந்துகொண்டிருக்கிறேன். **714.13** கோடி ரூபாய் மதிப்பிலான **185** அரசுத் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்துள்ளேதோடு, **339.86** கோடி ரூபாய் மதிப்பிலான **190** புதிய

திட்டங்களுக்கு நாங்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறோம். மேலும், பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 8 இலட்சத்து 18 ஆயிரத்து 835 பயனாளிகளுக்கு 3 ஆயிரத்து 642 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளேன். தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த முதல் முகவரியாக தமிழ்நாட்டை மாற்ற இந்த அரசு உறுதி பூண்டிருக்கிறது.

ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டியுள்ளபடி, ‘எங்கும் தமிழ், எதிலும் தமிழ்’ என்பது இந்த அரசினுடைய கொள்கையாகும். தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம், 1956இல் புதிய வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கொரோனாவால் பாதிக்கப்பட்டு இறந்தவர் குடும்பத்திற்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம், 27 ஆயிரத்து 432 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குப் பெறப்பட்ட 543 கோடி ரூபாயில், கோவிட் தடுப்பு நிவாரணப் பணிகளுக்காக 541.64 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் வெளிப்படைத்தன்மை இருக்கும் என்று நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன்; அது தற்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ், 2 இலட்சத்து 29 ஆயிரத்து 216 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. மகளிருக்கு பேருந்துகளில் இலவசப் பயணத் திட்டம் நல்ல பலனைத் தந்திருக்கிறது. 40 விழுக்காடாக இருந்த மகளிர் பயணிகளின் எண்ணிக்கை தற்போது 61 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது.

இந்த நிதியாண்டில், 4 இலட்சத்து 2 ஆயிரத்து 829 பேர் கொண்ட 29 ஆயிரத்து 425 புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரசு பொறுப்பேற்றப் பிறகு, ஆக்கிரமிப்பிலிருந்த 1,628 கோடி ரூபாய் மதிப்பிலான 432 ஏக்கர் பரப்பளவிலான திருக்கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு முன்பு ஒரு தொலைநோக்குத் திட்டத்தை நான் வெளியிட்டேன். அந்தத் தொலைநோக்குத் திட்டத்தை நிறைவேற்ற சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைக்கப்பட்டுள்ளது. நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கை, விதி 110இன் கீழான அறிவிப்புகள் உள்ளிட்ட பல்வேறு தருணங்களில் இந்த 8 மாதங்களில் வெளியிடப்பட்ட 1,641 அறிவிப்புகளில், 1,238 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதாவது, வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் 75 விழுக்காடு அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 24 விழுக்காடு அறிவிப்புகள், அதாவது, 389 அறிவிப்புகளைச் செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன. 1 விழுக்காடு அறிவிப்புகள், அதாவது 14 அறிவிப்புகள் மட்டும் ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ளன. இப்படி அறிவிப்புகளை, அதைச் செயல்படுத்தும் விதத்தை வெளிப்படையாக அறிவித்து, ஒளிவு மறைவில்லாத நிர்வாகம் கொடுக்கும் அரசாக இந்த அரசு விளங்குகிறது என்பதை இந்த மாமன்றத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன்.

இது ஒளிவுமறைவற்ற அரசு மட்டுமல்ல; அனைவருக்கும் ஒளிதரும் அரசு! இது சொன்னதைச் செய்யும் அரசு மட்டுமல்ல, சொல்லாததையும் செய்யும் அரசு! இது ஒரு கட்சியின் அரசு அல்ல, ஓர் இனத்தின் அரசு! இது தனிப்பட்ட ஸ்டாலினின் அரசு அல்ல, கோடிக்கணக்கான ஸ்டாலின்களின் எண்ணங்களைச் செயல்படுத்தும் அரசு! நாங்கள் இந்தப் பக்கம், நீங்கள் அந்தப் பக்கம் என்று ஓர் அடையாளத்துக்காகத்தான் உட்கார்ந்திருக்கிறோம். நாம் எல்லோரும் சேர்ந்து மக்களின் பக்கம்தான் என்பதை மக்களுக்குச் சேவை செய்வதன் மூலமாகக் காட்டி, எதிர்காலத் தமிழகத்தை ஒளிமயமானதாக அமைப்போம். அதற்கு இந்த ஆளுநர் உரை நிச்சயமாக வழிகாட்டியிருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

ஆளுநர் உரையில், ‘அது இல்லை’, ‘இது இல்லை’ என்று குற்றம், குறை காண்பவர்களுக்கு, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதமைச்சராக இருந்தபோது, **30.03.1967** அன்று இதேப் பேரவையில் ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். அதை இங்கே நினைவுபடுத்துவது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். சில காரியங்கள், தேவைகள் என்பதற்காக ஆளுநர் உரையில் விடப்படவில்லை. கோடிட்டுத்தான் காட்டுவார்கள். கவர்னர் உரையில் கோடிட்டுக் காட்டுவதை வைத்துக்கொண்டு, வெற்றிலை பாக்கு போடுவீர்களா என்று கேட்டால், சுண்ணாம்பு தடவாமல் போட்டுக்கொள்ள வேண்டுமென்று அர்த்தமல்ல. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போடுவீர்களா என்று யாரும் கேட்பதில்லை. வெற்றிலை, பாக்கு போடுவீர்களா என்றுதான் கேட்பார்கள். போட்டுக் கொள்கிறேன் என்று சொல்வார்கள். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மூன்றும்தான் வரும். வெற்றிலை, பாக்குதானே போட்டுக்கொள்ளச் சொன்னார் என்பதால் சுண்ணாம்பு வேண்டாமென்று யாரும் புறந்தள்ளிவிடமாட்டார்கள். அதுபோல, கவர்னர் உரையிலே அது இல்லை, இது இல்லை, ஆகவே இதில் எதுவும் இல்லை என்று தள்ளிவிடலாமா! கவர்னர் உரையிலே சில குறிப்பிட்ட விஷயங்கள் இருக்கும். அதுதொடர்பாக நாம்தான் மற்ற விஷயங்களை யூகித்துக் கொள்ள வேண்டும். குறை காண்பவர்களுக்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய இந்த விளக்கமேப் போதும் என்று நான் நம்புகிறேன். இந்த அரசு நடைபோடும் பாதையை அடையாளப்படுத்தும் உரையை ஆற்றிய மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு மீண்டும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேசமயம், எதிர்வரும் பொங்கல் திருநாளையொட்டி, **2** கோடியே **15** இலட்சத்திற்கும் மேற்பட்ட அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு **1,296** கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட செலவில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த வேளையில் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இதில்

முகாம்களில் வாழக்கூடிய இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களும் அடங்குவார்கள். பொங்கல் பரிசினைப் பெற்று தமிழர் திருநாளை, கொரோனா கால கட்டுப்பாடுகளைப் பின்பற்றி மகிழ்ச்சியுடன் கொண்டாட தமிழ்நாட்டு மக்களுக்கு என்னுடைய வாழ்த்துகளை இந்தத் தருணத்தில் நான் பகிர்ந்துகொள்கிறேன்.

அதோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய தமிழர் திருநாள் வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைவரும் கட்சி எல்லைகளை மறந்து, மக்கள் நிலையை உணர்ந்து இந்த ஆளுநர் உரையை மனப்பூர்வமாக வரவேற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஏழு பேர் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது திருத்தங்கள் அளித்திருக்கிறார்கள். தங்கள் தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டியப் பணிகள் குறித்து குறிப்பிட்டிருக்கிறார்கள். உரிய அமைச்சர்களுக்கு நடவடிக்கை எடுக்க அது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்திருக்கக்கூடிய திருத்தங்களை திரும்பப் பெறுமாறு கேட்டு, அனைவரும் கட்சி எல்லைகளை மறந்து மக்கள் நிலையை உணர்ந்து இந்த ஆளுநர் உரையை மனப்பூர்வமாக வரவேற்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

நன்றி, வணக்கம்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின்*
*பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது*
*நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு*
*முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்,*
*பதிலளித்து ஆற்றிய உரை – **07.01.2022***

# ‘நீட்’ விலக்கு சட்டமுன்வடிவு மீண்டும் நிறைவேற்றம்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் மக்களால் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல் ஆட்சிமுறை நிறுவப்பட்டபோது, சென்னை மாகாணத்திலும் தேர்தல் நடந்தது. 1920ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுத் தேர்தலில் திராவிட இயக்கத்தின் தலைமகனான நீதிக்கட்சி ஆட்சி அமைத்தது. அது பிரிட்டிஷ் ஆட்சிக் காலம். இங்கிலாந்தில் இருந்து இந்தியாவுக்கு வந்தவர்களெல்லாம் சென்னை மாகாணத்து சட்டமன்றம் எப்படி நடக்கிறது என்பதைப் பார்க்க வந்ததாகவும், அப்போது இந்தியாவிலேயே சென்னை மாகாணத்தின் நிருவாக நெறிமுறைப்படி, சட்டத்தினுடைய ஆட்சி நடப்பதாகவும் அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட மக்களாட்சியின் விழுமியங்களை உருவாக்கிய மாமன்றத்தில் இந்த நாள் என்பது, மிக முக்கியமான நாளாகும். ஜனநாயகம் காக்க, மக்களாட்சியின் மாண்பைக் காப்பாற்றுவதற்காக, கூட்டாட்சித் தத்துவத்தை நிலைநிறுத்துவதற்காக, கல்வி உரிமையை வென்றெடுப்பதற்காக நாம் இன்று கூடியிருக்கிறோம். ஏதோ நீட் தேர்வுக்கு எதிராக விவாதிப்பதற்காக மட்டும் நாம் கூடவில்லை. நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்தின் இறையாண்மையை, உரிமைகளைக் காப்பாற்றுவதற்காகவும் கூடியிருக்கிறோம். பல்வேறு, இனம், மொழி, பண்பாடுகள் கொண்ட இந்தியப் பெருநாட்டை உண்மையில் காக்கும் உன்னதமான தத்துவம் என்பது கூட்டாட்சித் தத்துவம்! அந்தக் கூட்டாட்சித் தத்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக நாம் இங்கே கூடியிருக்கிறோம். பதினாறு வயதில் அரசியல் களத்தில் நான் நுழைந்தேன். எனது பொதுவாழ்வில் மறக்க முடியாத நாளாக இந்த நாள் அமைந்துள்ளது. அந்த உணர்வோடுதான் நான் இந்த மாமன்றத்தில் நின்றுகொண்டிருக்கிறேன்.

நூறாண்டுகளுக்கு முன்பே சமூகநீதிக்கு அடித்தளம் போட்டது இந்தச் சட்டமன்றம். நமது அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தத்தைக் கொண்டுவர உந்து சக்தியாக விளங்கியது இந்தச் சட்டமன்றம். பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு; பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு இட ஒதுக்கீடு; சிறுபான்மையின மக்களுக்கு உள் ஒதுக்கீடு; அருந்ததியின சமுதாயத்திற்கு உள் இட ஒதுக்கீடு என சமூக நீதிக்கு வழங்கியது இந்தச் சட்டமன்றம். அகில இந்திய அளவில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு, ஒன்றிய அரசுப் பணிகளில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் மண்டல் கமிஷன் அறிக்கையைச் செயல்படுத்த வைத்ததும் இந்தச் சட்டமன்றம்தான். ஏன், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியில் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை உறுதி செய்ததும் இந்தச் சட்டமன்றம்தான்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பொறியியல் உள்ளிட்ட தொழிற் கல்வியில் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கியது இந்தச் சட்டமன்றம். அகில இந்தியத் தொகுப்பிற்கு அளிக்கும் மருத்துவ இடங்களில், 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; ஒட்டுமொத்த இந்தியத் துணைக் கண்டத்திற்கே பெற்றுத் தந்ததும் இந்தச் சட்டமன்றம்தான். இன்றைக்கு இருக்கின்ற 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நாட்டிலேயே முதல்முறையாகத் தமிழ்நாட்டில் செயல்படுத்தி, சாதனை படைத்தது இந்தச் சட்டமன்றம். அதற்கான சட்டப் பாதுகாப்பை உறுதி செய்ய, அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்து சமூக நீதியில் மாபெரும் வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியது இந்தச் சட்டமன்றம்தான். மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு இருந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்து, இதே சட்டமன்றத்தில்தான் சட்டம் இயற்றப்பட்டது. அப்போது இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார். அந்த நுழைவுத் தேர்வு ஒழிப்புச் சட்டம் செல்லும் என்று கூறி, சென்னை உயர்நீதிமன்றமும், நம் நாட்டின் உச்சநீதிமன்றமும் துணை நின்றதும் இந்தச் சட்டமன்றத்திற்குத்தான்.

நுழைவுத் தேர்வு வேண்டாம் என்று கூறி, குடியரசுத் தலைவர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சட்டம், தமிழ்நாட்டில் 10 ஆண்டு காலம் நடைமுறையில் இருந்தது. பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில், பொறியியல் மற்றும் மருத்துவக் கல்விக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டிருந்தோம். கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள ஏழைகளிலும், நடுத்தர வர்க்கத்திலிருந்தும் எண்ணற்றவர்கள் மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும் பட்டம் பெற்று, இன்று பார் போற்ற, மக்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய சமூக நீதி, சட்ட நீதி, ஒடுக்கப்பட்டோர் உரிமை,

தமிழினத்தின் மேன்மை, மொழி மேம்பாடு ஆகிய அனைத்துக்கும் அடித்தளம் அமைத்த இந்தச் சட்டமன்றத்தில் நின்று “நீட் என்ற சமூக அநீதியை அகற்ற, இந்தச் சட்டமன்றத்தால் முடியும்; நிச்சயமாக முடியும்” என்ற தன்னம்பிக்கையுடன் நான் பேசிக்கொண்டு இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று எட்டு மாதத்திற்குள் சிறப்புச் சட்டமன்றக் கூட்டத்தை இன்று நாம் கூட்டியிருக்கிறோம். இதேபோன்றுதான், ஆட்சிப் பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே, அதாவது, **1968** சனவரி **23**ஆம் நாள் சிறப்புச் சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டினார், முதலமைச்சராக இருந்த பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள். அதில்தான், தமிழ்நாட்டு மாணவர்களின் தாகத்தைத் தீர்த்து, நமது மொழியுரிமையை நிலைநாட்டிய, வரலாற்றுப் பிரகடனமாக இருமொழிக் கொள்கையை நிறைவேற்றினார், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்.

அந்தத் தீர்மானத்தில், “பல்வேறு மொழி, பண்பாடு, நாகரிகங்களைக்கொண்ட இந்தியாவில் ஒரு வட்டார மொழியை மட்டும் இந்தியாவின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டிருப்பது; இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைத்து; ஒரு மொழிப் பகுதி மற்ற மொழிப் பகுதிகளை அடிமைகொள்ளச் செய்திடும் என்று உணரப்படும் காரணத்தால், தமிழும் மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் சட்டம், திருத்தப்பட வேண்டும். அதுவரையில், ஆங்கிலமே ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருந்து வரவேண்டும். அதற்கு ஏற்றபடி, இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவு திருத்தப்பட வேண்டும் என்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது” என்றும், “தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு

இடமளித்து, ‘இந்தி’ மொழியை அறவே நீக்கிட இம்மன்றம் தீர்மானிக்கிறது’’ என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களால் அரசியல் களத்தில் பயிற்றுவிக்கப்பட்ட நாம், இந்தியா முழுமைக்குமான சமூக நீதிக் கல்விக் கொள்கையை முன்மொழிவதற்காக இந்தச் சிறப்பு சட்டமன்றக் கூட்டத்தில் இப்போது நாம் கூடியிருக்கிறோம். நாம் அனைவரும் ஒருங்கிணைந்து, ஒற்றுமையுடன் செயல்பட்டு, சமூக நீதியை நிலைநாட்டிட, மாணவர்களின் மருத்துவக் கல்வி தாகத்தைத் தணித்திட கூடியிருக்கிறோம். நூற்றாண்டு கண்ட வரலாற்றுப் புகழ்மிக்கக் கொள்கை முடிவுகளை மேற்கொண்ட உன்னதமான இந்த அவையின் இறையாண்மையைக் காப்பாற்றிட, 8 கோடி மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் இந்தச் சட்டமன்றத்திற்கு, அரசியல் சட்டம் வழங்கியுள்ள சட்டமியற்றும் அதிகாரத்தைப் பாதுகாத்திட நாம் இன்று கூடியிருக்கிறோம்.

நீட் தேர்வு என்பது அரசியலமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட தேர்வு முறை கிடையாது. அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்ற தேர்வு முறையும் கிடையாது. நீட் என்பது இந்திய மருத்துவக் கவுன்சில் ஒழுங்குமுறை விதிப்படி உருவாக்கப்பட்ட ஒரு தேர்வுதான். 2010ஆம் ஆண்டு இப்படி ஒரு தேர்வு முறை முன்மொழியப்பட்டபோதே அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள். இந்தியாவினுடைய பல்வேறு மாநிலங்களும் எதிர்த்தது. இந்தியா முழுவதும் 115 வழக்குகள் இந்தத் தேர்வுக்கு எதிராகப் போடப்பட்டன. அப்படி வழக்குப் போட்டதில் தமிழ்நாடு முதன்மை மாநிலம். இந்த வழக்குகளை மொத்தமாக உச்சநீதிமன்றம் விசாரித்தது.

இந்தத் தேர்வு அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது என்று உச்சநீதிமன்றமே 18 ஜூலை 2013 அன்று தீர்ப்பளித்தது.

அதுவும் உச்சநீதிமன்றத்தினுடைய தலைமை நீதியரசரின் அமர்வே அந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அத்தோடு இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அந்தத் தேர்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால், ஒன்றிய அரசாக பா.ஜ.க. அரசு அமைந்த பிறகு, ஒரு தனியார் பயிற்சி நிறுவனம் இந்த வழக்கை மீண்டும் கையில் எடுத்தது. உச்சநீதிமன்றத்தில் நீட் தேர்வு குறித்த வழக்கு விசாரணைக்கு வந்தது. விசாரணைக்கு வந்தவுடனே, “Judgement is recalled” என்றும் “Hear this case afresh” என்றும்தான் **24.05.2016** அன்று உச்சநீதிமன்றம் கூறியது. இதன் அடிப்படையில்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு **11.04.2016** அன்று ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்து, நாடு முழுவதும் நீட்டைச் செயல்படுத்தியது.

நீட் தேர்வு என்பதே தனியார் பயிற்சி நிறுவனங்களுக்குச் சாதகமானதுதான். இந்தத் தேர்வின் மூலமாக மாணவ, மாணவியரிடம் இருந்து இலட்சக்கணக்கில் பணம் வசூலிக்கிறார்கள். அந்த நிறுவனங்களின் நன்மைக்காக மட்டுமே இந்தத் தேர்வு இன்றுவரை பயனுள்ளதாக இருக்கிறது. இவ்வளவு பணத்தைச் செலுத்தி பயிற்சி பெற முடியாதவர்களுக்காகத்தான் நாம் நீட் விலக்கு கேட்கிறோம். மசோதாவைக் கொண்டு வருகிறோம். நீட் தேர்வு என்பது ஏழை, எளிய மாணவர்களது கல்வி உரிமைக்குத் தடை போடுகிறது. அவர்களது மருத்துவக் கனவில் தடுப்புச் சுவர் எழுப்புகிறது. “நீ டாக்டர் ஆக முடியாது” என்று தடுக்கிறது. “உனக்குத் தகுதியில்லை” என்று தடுக்கிறது. அதனால்தான், நீட் விலக்கு மசோதாவைக் கொண்டு வருகிறோம். அந்தத் தேர்வில் நடந்த முறைகேடுகளை நான் இந்த மாமன்றத்தில் அதிகம் விளக்கிச் சொல்லத் தேவையில்லை. இருந்தாலும் நான் சிலவற்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**2019**ஆம் ஆண்டு நடந்த தேர்வில் முறைகேடு செய்ததாக **4** பேர் கைது செய்யப்பட்டார்கள். **2020**ஆம் ஆண்டு நடந்த

தேர்வில் முறைகேடு செய்ததாக 5 பேர் கைது செய்யப்பட்டார்கள். 2021ஆம் ஆண்டு தேர்வில் 15 பேர் முறைகேடு செய்ததாக ஒன்றிய அரசே மக்களவையில் கூறியிருக்கிறது. ஆள்மாறாட்டம் செய்வது, வினாத்தாள்களைத் திருடுவது, விடைத்தாள்களை மாற்றி வைப்பது என அனைத்து முறைகேடுகளும் நடந்துள்ளன. இதனை சி.பி.ஐ. வழக்காகவும் பதிவு செய்துள்ளது. நம்முடைய தமிழ்நாடு மட்டுமல்ல, ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலும் நீட் தேர்வு முறைகேடு தொடர்பாகப் பல்வேறு வழக்குகள் போடப்பட்டுள்ளன. ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதியதாக உதித் சூர்யா என்ற மாணவரும், அவரது தந்தை வெங்கடேசனும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதுவரை 5 மாணவர்கள், அவர்களின் பெற்றோர் 6 பேர், ஒரு இடைத்தரகர் என 12 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதிய 10 பேரின் புகைப்படங்களை நம் மாநில சி.பி.சி.ஐ.டி. போலீசார் வெளியிட்டு இருக்கிறார்கள். கோவை மாணவர் ஒருவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் இது விஷயமாக வழக்கு தொடர்ந்தார். எதற்காக என்று கேட்டால் 700க்கு என்னுடைய மதிப்பெண் 594 என்று அக்டோபர் 5ஆம் தேதி இணையத்தில் காட்டுகிறது. அக்டோபர் 17ஆம் தேதி 248 என்று காட்டுகிறது. இதுசம்பந்தமாக வழக்கு போட்டிருக்கிறார். தேர்வை நடத்தக்கூடியவர்கள் இதற்கு விளக்கம் தந்தாகவேண்டும். ஆனால் அதைப்பற்றிச் சொல்லாமல், வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கு மனு போட்டார்கள். 09.02.2021 அன்று சென்னை உயர்நீதிமன்றம், ‘‘நீட் தேர்வு விடைத்தாள் முறைகேடு மோசடி வழக்கை சி.பி.ஐ.க்கு ஏன் மாற்றக் கூடாது’’ என்று ஒரு கேள்வி எழுப்பியது. இன்னொரு மாணவி தனது விடைத்தாள்களில் முறைகேடு நடந்திருப்பதாகவும், தான் ஒரே ஒரு கேள்விக்கு மட்டுமே பதிலளிக்காத நிலையில், விடைத்தாளில் 11 கேள்விகளுக்கு பதிலளிக்காதது போல இருக்கிறது என்றும் வழக்கு போட்டார்.

நீட் தேர்வு முறைகேட்டில் ஈடுபட்ட 15 மாணவர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக மக்களவையில் ஒன்றிய அரசே 03.12.2021 அன்று அறிவித்திருக்கிறது. கடந்த 29.09.2021 அன்று உச்ச நீதிமன்றத்தில் மாணவர்கள் சிலர் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள். செப்டம்பர் 12 அன்று நடந்த நீட் தேர்வில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளன. ஆள்மாறாட்டம் நடந்துள்ளது எனவே தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று அதில் குறிப்பிட்டு காட்டியிருக்கிறார்கள்.

ஆகவே, நாம் சொல்ல விரும்புவது என்னவென்றால், நீட் தேர்வு ஒன்றும் வானத்தில் இருந்து குதித்துவிடவில்லை; பல்வேறு குளறுபடிகளோடு ஏழை, எளிய மாணவர்களைத் தகுதி என்ற பெயரில் ஓரங்கட்டக் கொண்டுவரப்பட்ட தேர்வு. அதனால்தான் இந்தத் தேர்வை நாங்கள் எதிர்க்கிறோம்; அதிலிருந்து விலக்கு கோருகிறோம். நீட் தேர்வு என்பதை விட, அதை ‘மாணவர்களைக் கொல்லும் தேர்வு’ என்றே கூறிட வேண்டும். நீட் என்பது தேர்வு அல்ல, ஒரு பலிபீடம். அரியலூர் அனிதா உள்ளிட்ட பல மாணவச் செல்வங்களை, இந்தியாவின் வருங்காலத் தலைமுறையை நாம் இழந்திருக்கிறோம். அந்தக் குழந்தைகளை, இளம் பிஞ்சுகளை பெற்றோர்கள் மட்டும் பறிகொடுக்கவில்லை; நாமும் இழந்தோம்! தமிழ்நாடு மட்டுமல்ல; இந்திய நாடே பறிகொடுத்துள்ளது.

சில மாணவர்களைக் கல்லறைக்கும், சில மாணவர்களைச் சிறைச்சாலைக்கும் அனுப்பிய இந்த நீட் தேர்வு தேவையா என்பதுதான் இந்த மாமன்றத்தில் நான் எழுப்பக்கூடிய கேள்வி. நான் மட்டுமல்ல; ஒட்டுமொத்த மாணவச் சமுதாயமும் பெற்றோர்களும் எழுப்பக்கூடிய கேள்வி. அதனால்தான், நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறும் மசோதாவை நாம் நிறைவேற்றினோமேத் தவிர; ஏதோ எடுத்தேன் கவிழ்த்தேன் என்று நிறைவேற்றிவிடவில்லை. பல மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைத்த இந்த நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறுவதே தமிழ்நாட்டு மாணவர்களுக்கு

நன்மை பயக்கும். நீட் தேர்வு சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதா என்பதைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்திட ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் டாக்டர் ஏ.கே.இராஜன் தலைமையில் **10.06.2021** அன்று ஒரு குழு அமைக்கப்பட்டது. மக்களிடம் கருத்து கேட்கப்பட்டது. அந்தக் கருத்துகளின் அடிப்படையில், **14.07.2021** அன்று இக்குழு **193** பக்க அறிக்கையை அரசுக்கு அளித்தது. அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவம் படிக்க இயலவில்லை என்று சொன்னது. தகுதி, திறமை பேசுகிறார்களே, அந்தத் தகுதி, திறமை கூட இந்தத் தேர்வில் அடிபடுகிறது என்றும் இக்குழு தரவுகளுடன் சொன்னது.

இந்த அறிக்கை மீது விரிவான பரிந்துரைகளை அளிக்க தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவை முதலமைச்சர் என்கிற முறையில் நான் அமைத்தேன். இறுதியில் எல்லாவற்றையும் பரிசீலித்து, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்களிக்க வேண்டும் என்ற மசோதா இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இவ்வளவு விரிவாக ஆராய்ந்து, உரிய தரவுகளுடன்தான் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றினோம்.

மொத்தம், இந்த அவையில் இருக்கக்கூடிய **234** உறுப்பினர்களில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் சேர்த்து, **4** பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நீங்கலாக மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் ஆதரவோடும் நீட் விலக்கு மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் உணர்வை மட்டுமல்ல இந்த மாமன்றத்தின் இறையாண்மை உணர்வையும் எதிரொலித்தது. அதனை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பிவைத்திருக்க வேண்டும். மாறாக அதுகுறித்து எந்த முடிவெடுக்காமல் **142** நாட்கள் வைத்திருந்தார்கள். அதுகுறித்து, நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திய நிலையில்,

மீண்டும் நமக்கேத் திருப்பி அனுப்பி உள்ளார். அந்த மசோதாவை நிராகரிப்பதற்காக அவர் சொன்ன காரணங்கள், சரியானவை அல்ல என்பதை இந்த மாமன்றத்தில் நான் சொல்லித்தான் ஆக வேண்டும்.

நீட் தேர்வு குறித்து ஆராய்வதற்காக தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நீதியரசர் ஏ.கே.ராஜன் குழுவின் அறிக்கை ஊகங்களின் அடிப்படையிலானது என்று தெரிவித்துள்ளார் மாண்புமிகு ஆளுநர் அவர்கள். அரசாணை எண் **283**, மருத்துவம்– மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் **10.06.2021** அன்று நீதியரசர் ஏ.கே.ராஜன் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இடம்பெற்றிருந்தார்கள். இந்த உயர்மட்டக் குழுவின் ஆய்வு வரம்புகளும் வெளியிடப்பட்டன. பொதுமக்கள் அனைவரிடம் இருந்தும் கருத்துகளை இக்குழு கேட்டுப் பெற்றது. மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் ஆணையத்தில் வைக்கப்பட்டிருந்த கருத்துக்கேட்புப் பெட்டியில் போடப்பட்ட மனுக்கள் என ஆணையத்துக்கு பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்களது கருத்துகளை வழங்கியிருந்தார்கள்.

இந்த வழிமுறைகளின் வாயிலாக **86** ஆயிரத்து **342** பேர்களிடமிருந்து பெறப்பட்டக் கருத்துகளை ஆராய்ந்து தனது விரிவான பரிந்துரைகளை நீதியரசர் ஏ.கே.இராஜன் குழு அரசுக்கு **14.07.2021** அன்று அளித்தது. அதாவது தனிப்பட்ட சிலரின் ஊகங்களின் அடிப்படையில் அல்ல; சுமார் ஒரு இலட்சம் பேரின் கருத்துகளைக் கேட்டுப் பெற்று இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்தப் பரிந்துரை அறிக்கையில் சமுதாயத்தில் பின்தங்கியோர் மருத்துவக் கல்வியைப் பெறும் கனவிற்கு இடையூறாகவும், சமூகப் பொருளாதாரத்தில் வளமிகுந்தப் பிரிவினருக்கு சாதகமாகவும் இருந்து, எம்.பி.பி.எஸ் மற்றும் உயர் மருத்துவப் படிப்புகளிலுள்ள பலதரப்பட்ட சமூகப் பிரதிநிதித்துவத்தை நீட் தேர்வானது குறைத்துள்ளது எனத்

தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவும் ஊகம் அல்ல. இதற்கான புள்ளிவிவரமும் அந்த அறிக்கையில் விரிவாக உள்ளது.

அரசுப் பள்ளியின் மாணவர்கள், பெற்றோரின் ஆண்டு வருமானம் **2.50** இலட்சம் ரூபாய்க்கும் குறைவாகக் கொண்டுள்ளவர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் பிரிவுகளைச் சேர்ந்த வசதி குறைந்தவர்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் இந்த அறிக்கையில் புள்ளிவிவரங்களோடு சொல்லப்பட்டுள்ளது.

'நீட் தேர்வு தகுதிக்கு எதிரானது' என்று இந்த அறிக்கை சொல்வதை ஆளுநர் விமர்சித்துள்ளார். இதனை மறுக்கும் ஆதாரப்பூர்வமான தகவல்கள் நீதியரசர் ஏ.கே.இராஜன் குழுவின் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை தேர்வானவர்களில் கிராமப்புற ஏழை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசுப் பள்ளியில் தமிழ்வழியில் பயின்றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் இந்த அறிக்கை சொல்கிறது. தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் **7.5** விழுக்காடு இட ஒதுக்கீட்டில் இடம் பெற்றவர்களையும், நீட் தேர்வால் பலன் பெற்றவர்கள் என்று யாரும் தவறாகக் கணக்கிட்டுக் கொள்ளக் கூடாது என்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இயற்பியல், வேதியியல், உயிரியல் தேர்வுத் திறன் குறித்து இந்த அறிக்கையில் இல்லை என்று ஆளுநர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வு எழுதும் அறிவியல் பிரிவு மாணவர்கள் அனைவருமே இந்த மூன்று பாடங்களையும் படிக்கிறார்கள். எனவே, இம்மூன்று பாடங்களில் தேர்ந்தவர்கள்தான் பன்னிரெண்டாம் வகுப்பில் உயர்ந்த இடங்களைப் பெறுகிறார்கள். அதனால்தான் பன்னிரெண்டாம்

வகுப்பு மதிப்பெண்ணே போதுமானது என்று நாங்கள் சொல்கிறோம். இன்னொரு தேர்வு தேவையில்லை என்று நாம் இங்கே குறிப்பிடுகிறோம். நீட் தேர்வு வருவதற்கு முன்பு, 90 விழுக்காட்டுக்கும் மேலான இடங்களை மாநிலப் பாடத்திட்டத்தின்படி பயின்ற மாணவர்கள்தான் பெற்றுவந்தார்கள். ஆனால், நீட் தேர்வுக்குப் பின்னர், மருத்துவப் படிப்பில் சேர்க்கையில் மாநிலப் பாடத்திட்டத்தின்படி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது.

கருப்பாக உள்ளவர்கள் உள்ளே வரக்கூடாது என்பது எத்தகைய பாகுபாடோ, அதைப்போல மாநிலப் பள்ளிக் கல்வித் திட்டத்தின்கீழ் படித்தவர்களது புத்தகங்களில் இருந்து வினாத்தாள் தயாரிக்காததும் மிகப்பெரிய பாகுபாடுதான்.

நீட் என்பது கல்விமுறை அல்ல. அது பயிற்சிமுறை. இது தனியார் பயிற்சி மையங்களைத்தான் ஊக்குவிக்கும். தனிப் பயிற்சி பெற முடியாதவர்கள், கல்வி பெறத் தகுதியற்றவர்கள் என்ற பாகுபாட்டை உருவாக்குகிறது.

ஒரு மாணவர் இரண்டு மூன்று ஆண்டுகள் தனிப் பயிற்சிக்காக ஒதுக்க வேண்டும்; இலட்சக்கணக்கில் செலவு செய்ய வேண்டும். இதனைப் பொருளாதாரத்தில் பின்தங்கிய, ஏழை, எளிய மாணவர்களால் எப்படி சமாளிக்க முடியும்? என்பதுதான் திரும்பத் திரும்ப நாம் எழுப்புகிற கேள்வியாகும்.

கட்டணம் செலுத்திப் பயிற்சி எடுக்க முடியாதவர்களால் மருத்துவப் படிப்புக்கு உள்ளே நுழைய முடியாது என்பதே, கட்டணம் செலுத்தி இரண்டு மூன்றாண்டு காலம் பயிற்சி பெற முடிந்தவர்களால் மட்டுமே உள்ளே நுழைய முடியும் என்பதே, இந்த 21ஆம் நூற்றாண்டில் மாபெரும் அறிவுத் தீண்டாமை! தகுதி என்ற போர்வையில் உள்ள இந்தத் தீண்டாமை அகற்றப்பட வேண்டாமா?

அதற்காகத்தான் நீட் விலக்கு மசோதாவை மீண்டும் இங்கே நாம் கொண்டுவந்திருக்கிறோம்.

வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரி வழக்கைப்பற்றி இந்த அவையில்கூட எல்லோரும் பேசினார்கள். ஆளுநர் அவர்கள் அந்த வழக்கை மேற்கோள் காட்டியிருக்கிறார்கள். இந்த வழக்கு சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களுக்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளுக்கு எதிரானதா நீட் தேர்வு என்பது தொடர்புடையதாகும். அந்த வழக்கு மாநிலச் சட்டமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரம் குறித்தது அல்ல. ஆகவே, அந்த வழக்கிற்கும், நாம் கொண்டு வரவிருக்கக்கூடிய நீட் விலக்கு மசோதாவுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது.

மாடர்ன் பல் மருத்துவமனைக்கும், மத்திய பிரதேச அரசுக்குமான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகள் அமர்வில் நடந்தது. உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை குறித்து சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில அரசுக்கே உண்டு என்று தீர்ப்பளித்தது. அதே வழக்கில் நீதியரசர் பானுமதி வழங்கிய தனித்தீர்ப்பில், மாணவர் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டம், மாநில அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்டதே என்று அவர்கள் தீர்ப்பளித்தார்கள். மாநில சட்டமன்றத்திற்கு இருக்கக்கூடிய சட்டமியற்றும் அதிகாரத்தின்படிதான் நாம் நீட் தேர்வுக்கு எதிரான சட்ட முன்வடிவை நிறைவேற்றி இருக்கிறோம்.

அரசமைப்பு ரீதியாக நீட் தேர்வு தேவைப்படுவதாக ஆளுநர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். சமூகத்திலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியவர்களது உரிமைக்காக எந்தச் சட்ட ஏற்பாட்டையும் செய்துகொள்ளலாம் என்று அரசியலமைப்புச் சட்டம் சொல்கிறது. அந்த அடிப்படையில்தான் நாங்கள் இந்த சட்டமசோதாவை மீண்டும் கொண்டு வருகிறோம். அரசியலமைப்புச் சட்டம், பாகுபாட்டுக்கு எதிரானது. ஆனால், நீட் தேர்வு

பாகுபாடு காட்டுகிறது. அரசியலமைப்புச் சட்டம் சமூகநீதியை வலியுறுத்துகிறது. ஆனால், நீட் தேர்வு சமூகநீதிக்கு எதிரானது. அரசியலமைப்புச் சட்டம், சட்டத்தின் நீதியைப் பேசுகிறது. ஆனால், நீட் தேர்வு, பணக்கார நீதியைப் பேசுகிறது. சமத்துவம் என்பதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிநாதம். ஆனால், நீட் தேர்வு, சமத்துவத்துக்கு முற்றிலும் எதிரானது. அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்தும் அனைத்து அடிப்படை உரிமைகளுக்கும் எதிரானது நீட் தேர்வு. அதனால்தான் நீட் தேர்வில் இருந்து விலக்கு கேட்கிறோம். என்னுடைய வேதனையெல்லாம், ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களைப் பாதிக்கும் மிக மோசமான ஒரு தேர்வு குறித்து, அது மோசமானதுதான் என்று இவ்வளவு நீண்ட நேரம் வாதிட வேண்டியதாக இருக்கிறதே என்பது தான் என் வருத்தம். நாம் சொல்வது புரிய வேண்டியவர்களுக்கு, இன்னமும் புரியாமல் இருக்கிறதே என்பதுதான். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, டெல்லி அமைச்சர் ஒருவரிடம், கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை விவகாரம் பற்றி போன் செய்து பேசினாராம். அப்போது எதிர்முனையில் பேசியவருக்கு, கள்ளக்குறிச்சி என்ற பெயரைப் புரிந்துகொள்ளவே 15 நிமிடம் ஆனது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதே மாதிரி நீட் தேர்வின் மோசமான அம்சங்களையே நாம் ஐந்தாண்டுகாலமாக விளக்கிக் கொண்டு இருக்கிறோம். ஆனால், இன்னும் அவர்களுக்குப் புரியவில்லை. உண்மையில், புரிந்துகொள்ள மறுக்கிறார்கள் என்றுதான் கருத வேண்டியுள்ளது. ஆனால், நாம் வெற்றி பெறும்வரை நமது இந்தப் போராட்டத்தை விடமாட்டோம் என்பதை இந்த மாமன்றத்தில் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது ஏதோ நீட் விவகாரம் மட்டுமல்ல என்பதை நான் தொடக்கத்தில் சொன்னேன். ஒரு சட்ட மசோதாவை

நிறைவேற்றினோம், அதை ஆளுநர் திருப்பி அனுப்பினார் என்று மட்டும் நான் இதைப் பார்க்கவில்லை. யாரும் அப்படிப் பார்க்க மாட்டீர்கள் என்பதையும் நான் அறிவேன். இந்தச் சட்டமுன்வடிவைத் திருப்பி அனுப்பியதன்மூலமாக நமது தமிழ்நாடு மாநிலத்தின் உரிமை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமன்றத்தின் இறையாண்மை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. மாநில சுயாட்சி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கூட்டாட்சித் தத்துவம் தலைகவிழ்ந்து நிற்கிறது. அதுதான் வேதனைக்குரியது. அதுதான் கவலையளிக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கு எல்லாம் முன்னுதாரணமான, வழிகாட்டியான தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவை நிறுத்தி வைக்க முடியும், உதாசீனப்படுத்த முடியும் என்றால், இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் மாநிலங்களின் கதி என்ன? அரசியல் சட்டம் வகுத்துத் தந்துள்ள ஒன்றிய, மாநில அரசுகளின் உறவு எங்கே போகும்? பல்வேறு இனம், மொழி, கலாச்சாரம், பண்பாடு கொண்ட மக்களின் நிலைமை என்ன? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசின் கொள்கை முடிவை, வெறும் நியமனப் பதவியில் அமர்ந்திருக்கும் ஓர் ஆளுநர் மதிக்காமல் திருப்பி அனுப்புவது மக்களாட்சித் தத்துவத்துக்கே எதிரானது அல்லவா? “பிறகு எந்த நம்பிக்கையில் மக்கள் வாக்களிப்பார்கள்? யாரை நம்பி வாக்களிப்பார்கள்?” என்பதுதான் நாம் எழுப்ப வேண்டிய கேள்வி ஆகும்.

‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்பதுதான் நம்முடைய இந்தியத் துணைக்கண்டத்தின் பண்பாடு. அதனைச் சிதைக்கலாமா? இவற்றையெல்லாம் சிந்திக்கத் தெரிந்தவர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். வலிமையான அரசா, நேர்மையான அரசா என்றால், நேர்மையான அரசுதான் அனைவரும் விரும்பும் அரசாக இருக்க முடியும். வலிமையான சாம்ராஜ்யங்கள் வரலாற்றின் பக்கங்களில்

மட்டும்தான் இருக்கின்றன. ஆனால், பாகுபாட்டுக்கு எதிரான அசோகர்தான், மக்களால் இன்றும் நினைக்கப்படுகிறார். பலதரப்பட்ட மனிதர்களை உள்ளடக்கிய இந்திய நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்தை சீர்குலைக்கும் முயற்சியாக சமீபகாலக் காட்சிகள் அமைந்து வருவது வருத்தம் அளிப்பதாக உள்ளது. இந்த நேரத்தில் நான் சிறிது கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கிறேன். சமூகநீதி மட்டும்தான் திராவிட இயக்கத்தின் கொடை என்று சிலர் நினைக்கிறார்கள். மாநில சுயாட்சியும் திராவிட இயக்கத்தின் கொடைதான். 1918 அக்டோபர் 2 அன்று இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பேசியவர், நீதிக்கட்சித் தலைவரான திரு.டி.எம்.நாயர் அவர்கள். அவர்தான் 1917ஆம் ஆண்டிலேயே மொழிவாரி மாநிலங்களுக்காகக் குரல் கொடுத்தார். மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்றும் சொன்னார். அப்படிச் செய்தால்தான் கூட்டாட்சி முறை வெற்றி பெறும் என்றும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அத்தகைய முன்னோடித் தலைவரான டி.எம்.நாயர் அவர்களை இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன். அவர் சொல்லி 100 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனாலும் மாநிலங்களின் உரிமைக்காக இன்னமும் நாம் பேசிக் கொண்டு இருக்கிறோம்! நிதி ஒதுக்கீட்டுச் சட்ட முன்வடிவின் மீது 15.07.1967 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே மாமன்றத்தில் உரையாற்றியபோது, “மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் உள்ள தொடர்புகள் எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும் சட்டப்படி இருக்கின்ற தொடர்புகள், நடைமுறையிலே உள்ள தொடர்புகள் இவைகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். அதற்கு அரசியல் சட்டத்தையே கூட திருத்த வேண்டுமென்றாலும் அதற்கும் தயக்கம் கூடாது. அதற்கான ஒரு கமிஷன் அமைத்து விசாரிக்கப்பட வேண்டும் என்பதைத்தான் இதுவரை வலியுறுத்திக்கொண்டு

வந்ததைப்போலவே இனியும் வலியுறுத்திச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார். அப்படி முழங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களை வியப்போடு நான் திரும்பிப் பார்க்கிறேன்.

‘‘நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு நேரா வண்ணம் மாநில சுயாட்சி அடிப்படையில் மத்திய, மாநில உறவுகளை ஆராய'' சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ராஜமன்னார் அவர்கள் தலைமையில் **22.09.1969** அன்று குழு அமைத்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களை நான் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன். **27.05.1971** அன்று ராஜமன்னார் குழு அறிக்கையை அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு அனுப்பிவைத்தோம். அந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்டு, “These are important issues and we intend to consult all the Chief Ministers” என்று பதிலளித்து **22.06.1971** அன்று பெறப்பட்ட கடிதம் இந்த அவையின் குறிப்புகளை அலங்கரிப்பதைப் புரட்டிப் பார்த்து நான் பெருமிதம் அடைகிறேன். அனைத்திற்கும் மேலாக, மாநில சுயாட்சித் தீர்மானம் **16.04.1974** அன்று இதே அவையில் கொண்டுவரப்பட்டு ஏப்ரல் **20**ஆம் நாள் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க வாதங்களை மீண்டும் படித்துப் பார்த்து, இந்தச் சட்டமன்றத்தின் நீண்ட நெடிய வரலாற்றை எண்ணி உள்ளபடியே நான் பெருமிதப்படுகிறேன்.

அதிலும் குறிப்பாக, தீர்மானத்தின் மிக முக்கியமான வாசகமாக, ‘‘மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் ராஜமன்னார் குழு அறிக்கையை ஏற்று, இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இந்தப் பேரவை முடிவு செய்கிறது'' என்று முன்மொழிந்த தலைவர்தான் நம்முடைய தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதையும் நினைத்துப் பார்க்கிறேன். மாநிலங்கள் மட்டும் அல்ல, மத்திய அரசுத் தேவையான அதிகாரக் குவியல்கள் என்னும் விலங்குகளால் கட்டுண்டுக் கிடப்பானேன்? இந்தக் கேள்வியின் நீண்ட நாளைய தாகத்தைத் தீர்க்கும் நெல்லிக்கனியாகத்தான் இன்று, இந்த மாபெரும் சபைதனில் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த முத்தமிழறிஞர் எத்தகைய தொலைநோக்குப் பார்வை கொண்டவர் என்பதை எண்ணி எண்ணிப் பெருமைக் கொள்கிறேன்.

அன்றைய நாள், "இந்திய அரசியல் அரங்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் நாம் ஏற்றி வைக்கும் இந்தச் சுடர் விளக்கு ஒளிவிட வேண்டும்" என்றவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். அதைத்தான் இன்றைக்கு நாம் எதிர்பார்க்கிறோம். நீட் விலக்கு சட்டமுன்வடிவை நிறைவேற்றி மீண்டும் அனுப்பிவைப்பதன் மூலமாக இந்தியாவுக்கே ஒரு ஒளிவிளக்கை நாம் ஏற்றிவைக்கிறோம். தி.மு.க. எதிர்க்கட்சியாகவும், அ.தி.மு.க. ஆளுங்கட்சியாகவும் அன்றைய தினம் இருந்தாலும், நாம் இணைந்து, ஒருமுகமாக நின்று நீட் விலக்கு மசோதாவை கடந்த 01.02.2017 அன்று இதே அவையில் நிறைவேற்றினோம்.

அந்த மசோதாவிற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறாமல் 27 மாதங்கள் கிடப்பில் போட்டு வைக்கப்பட்டது. இறுதியில் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. அப்போதே இரண்டாவது முறையாக நீட் விலக்கு சட்ட மசோதாவை நிறைவேற்றி அனுப்பி வைத்திருக்கலாம். அந்த வாய்ப்பு தவறிப்போனது. அதைப்பற்றியெல்லாம் நான் இப்போது பேச விரும்பவில்லை. அது தேவையும் இல்லை. இந்தச் சூழலில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததும், ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்கள் தலைமையில் குழு அமைத்தோம். அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்று, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற சட்டமுன்வடிவை 13.09.2021 அன்று நிறைவேற்றி அனுப்பினோம்.

அரசியல் சட்டப்படி ஆளுநர் அவர்களுக்கு உள்ள அதிகாரம் என்ன? இதை நான் சொல்வதை விட, ஒன்றிய, மாநில உறவுகள் பற்றி ஆராய அமைக்கப்பட்ட சர்க்காரியா கமிஷன் பரிந்துரையில் சொல்லப்பட்டுள்ளதை இந்த அவையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுப் பட்டியலில் (Concurrent List) உள்ள பொருள் குறித்து மாநிலச் சட்டமன்றத்திற்கு உள்ள சட்டமியற்றும் அதிகாரத்தைப் பாதுகாக்கவே அரசியல் சட்டத்தில் 254 (1) என்ற பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்துடன் முரண்படும் ஒரு சட்டத்தை மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றினால், அதைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கக்கோரி ஆளுநருக்கு மாநில அமைச்சரவை அறிவுறுத்தலாம். மாநில அமைச்சரவை அப்படி அறிவுறுத்தினால், ஆளுநர் அதன்படி உடனடியாகச் செய்தாக வேண்டும்.

அரசியல் சட்டப்பிரிவு 254(1)–இன்கீழ் மாநிலச் சட்டமன்றம் சட்டம் நிறைவேற்றினால், அரசியல் சட்டப்பிரிவு 200இன்கீழ் அதற்கு ஒப்புதல் வழங்கக்கூடிய அதிகாரத்தை ஆளுநர் அமைச்சரவை முடிவுக்கு கட்டுப்பட்டே நடக்க வேண்டும். 'The Governor must abide by the advice of the Council of the Ministers.'

ஆளுநருக்கு அனுப்பப்படும் சட்டமுன்வடிவு தன் சொந்தக் கொள்கைக்கு மாறாக உள்ளது என்று நிராகரிக்காமல், அமைச்சரவை என்ன அறிவுரை வழங்குகிறதோ அதன்படிதான் நடக்க வேண்டும். அதைத்தான் 2006இல் இருந்த ஆளுநர் அவர்கள், 'நுழைவுத் தேர்வு ரத்து' என்று சட்டமுன்வடிவை நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து இந்தச் சட்டமன்றம் நிறைவேற்றி அந்த வரலாற்றைப் படைத்திருக்கிறார்.

நமக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தின் அடிப்படையில்தான், 13.09.2021 அன்று நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கச்

சட்டமுன்வடிவினை நாம் நிறைவேற்றினோம். அதைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க வேண்டியது ஆளுநரின் அரசியல் சட்டக் கடமை. அந்தக் கடமையை முறையாக இனியாவது ஆளுநர் செய்வார் என நான் நினைக்கிறேன், எதிர்பார்க்கிறேன். நாம் மட்டுமல்ல, நீங்களும் எதிர்பார்க்கலாம். அதுதான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின், சட்டமியற்றும் அதிகாரத்திற்கு உட்பட்டு ஆளுநர் நிறைவேற்றவேண்டியக் கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றவில்லை என்பதால் நானே நேரில் ஆளுநர் மாளிகைக்குச் சென்றேன். ஆளுநரிடம் பல முறை நான் வலியுறுத்தியிருக்கிறேன். நம்முடைய மூத்த அமைச்சர், அவையின் முன்னவர், மாண்புமிகு துரைமுருகன் அவர்களும் நேரில் சந்தித்து ஆளுநரை வலியுறுத்தினார். நம் மாநில எம்.பி.க்கள் எல்லாம் குடியரசுத் தலைவரை சந்திக்க முயற்சி செய்து, அவரது அலுவலகத்தில் மனுவினை அளித்து வலியுறுத்தினார்கள். ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து விளக்கியிருக்கிறோம். எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய அ.தி.மு.க.–வைச் சேர்ந்த எம்.பி.க்கள், அதேபோன்று பல்வேறு கட்சிகளில் இருக்கக்கூடிய எம்.பி.க்கள் அனைவரும் நேரடியாகச் சென்று, சொல்லியிருக்கிறோம். இந்தநிலையில்தான், ஏறக்குறைய **142** நாட்கள் கழித்து, ‘நீட்’ விலக்கு சட்டமுன்வடிவைத் திருப்பி அனுப்பி, மீண்டும் சட்டமன்றம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார் ஆளுநர் அவர்கள். இந்த அசாதாரணச் சூழலில், அரசியல் சட்டப்பிரிவு **254(1)**–இன்கீழ் சட்டமன்றத்திற்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய சட்டமியற்றும் அதிகாரத்தைக் கேள்வி கேட்கக்கூடிய வகையில் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் செயல் இருக்கிற காரணத்தினால், கடந்த **05.02.2022** சனிக்கிழமை அன்று அனைத்துக் கட்சியைச் சார்ந்த சட்டமன்றக் கட்சியில் இடம் பெற்றிருக்கின்ற தலைவர்களின் கூட்டத்தினை நடத்தினோம். அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில்தான், இன்றைக்கு

'நீட்' விலக்கு சட்டமுன்வடிவினை இந்த அவையில் மீண்டும் நான் முன்மொழிகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், **30.03.1967**இல் இதே அவையில், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசியபோது, "கவர்னர் பதவியே வேண்டாமென்று முதன் முதலில் திராவிட முன்னேற்றக் கழகம் சொன்ன நேரத்தில் அது ரொம்ப பைத்தியக்காரத்தனம் என்று பேசிக்கொண்டிருந்த அரசியல் வட்டாரத்தில், ஒரு பகுதி இன்றையதினம் அதே கண்ணோட்டத்திற்கு வந்திருப்பதற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்" என்று குறிப்பிட்டதை நினைவுபடுத்திப் பார்க்கிறேன்.

அது போன்றதொரு சூழலை, நமது ஆளுநர் நிச்சயம் உருவாக்க மாட்டார் என்று நான் நம்புகிறேன். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் நலனை எண்ணி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தின்கீழ் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்படும் இந்த 'நீட்' விலக்கு சட்டமுன்வடிவினை காலம்தாழ்த்தாமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்பார் என்று நான் நம்புகிறேன். காலம் காலமாக மறுக்கப்பட்ட கல்வி உரிமையைக் காக்க, தமிழ்நாட்டின் மாநில உரிமைகளைக் காக்க, பட்டியலின, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஏழை எளிய, விளிம்பு நிலை, கிராமப்புற மக்களின் நலனைக் காக்க, இந்தச் சட்டமுன்வடிவை அனைவரும் நிறைவேற்றித்தர வேண்டும் என்று உங்களை எல்லாம், மீண்டும், மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

'மாநிலங்கள் அதிகளவில் அதிகாரங்களைப் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்' என்ற பேரறிஞரின் அண்ணாவின் இலக்கை அடையவும், 'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' என்ற கலைஞரின்

முழக்கத்தை வென்றெடுக்கவும், இந்த நாள் மிக முக்கியமான நாளாக அமைந்துள்ளது.

இந்தச் சட்டமுன்வடிவை முன்மொழிவதன் மூலமாக நானும், அதனை ஆதரித்து வாக்களிப்பதன் மூலமாக நீங்களும் செய்யும் செயல் என்பது, இந்தியாவின் ஜனநாயக நெறிமுறைகளைக் காப்பாற்றும். ஒற்றையாட்சித் தன்மை கொண்ட நாடாக இந்தியா மாற்றப்படாமல் தடுக்கும். இறையாண்மை என்பது மக்களாட்சியில் சட்டமன்றத்திற்கு உள்ள சட்டமியற்றும் அதிகாரம் என்பதை நிலைநாட்டும். இந்தியத் துணைக்கண்டமானது அனைத்து தேசிய இனங்களுக்குமான நாடு என்பதைப் பிரகடனப்படுத்தும். அத்தகைய அரசியல் சட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாக இந்த நாளை மாற்றியமைக்க வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்திய மாநிலங்களின் உரிமைகளைக் காக்கும் பெரும் பொறுப்பைச் செய்வதற்கான வாய்ப்பை எனக்கு வழங்கிய தமிழ்ப்பெருமக்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

தமிழ்நாடு வாழ்க! தமிழ்நாடு வாழ்க! தமிழ்நாடு வாழ்க! நன்றி, வணக்கம்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நீட் தேர்வு*
*விலக்கு தொடர்பான சட்டமுன்வடிவின் மீதான*
*விவாதத்தில் ஆற்றிய உரை – **08.02.2022***

## சாலை விபத்தில் சிக்கியவர்களை காப்பாற்றும் நல்ல உள்ளங்களுக்கு 'நற்கருணை வீரன்' சான்றிதழ்...



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோதே, நான் பலமுறை இந்த சாலை விபத்துக்களைப் பற்றி, அதனுடைய எண்ணிக்கை அதிகரித்து வருவதைப் பற்றிக் கவலையுற்று உரையாற்றியிருக்கிறேன். ஆகவே, அதை மனதிலே வைத்து நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், "சாலைகளில் மக்களுக்குப் பாதுகாப்பான பயணத்திற்கு வழிவகை செய்திட வேண்டும்" என்பதை இந்த அரசினுடைய முதன்மையான இலக்காக நாங்கள் அமைத்துக் கொண்டிருக்கிறோம்.

அதற்காக என்னுடைய தலைமையில் உயர் மட்டக் குழுக் கூட்டம் ஒன்றினை கடந்த 18.11.2021 அன்று கூட்டி ஆலோசித்து, "இன்னுயிர்

காப்போம்–நம்மைக் காக்கும்–48'' என்ற உயிர் காக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. ''சீரான சாலைகள் திட்டம், விபத்தில் சிக்கும் அனைவருக்கும் முதல் 48 மணி நேர அவசர உயிர் காக்கக்கூடிய இலவச சிகிச்சை, சாலைப் பாதுகாப்பு ஆணையம், அவசர மருத்துவ சேவைகளுக்கான சட்டம், இன்னுயிர் காப்போம்–உதவி செய்'' என்ற ஐந்து அம்சத் திட்டமாக அது இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நானே கடந்த 18.12.2021 அன்று மேல்மருவத்தூர் சென்று ''இன்னுயிர் காப்போம்–நம்மைக் காப்போம் 48'' என்ற திட்டத்தைத் தொடங்கிவைத்தேன். அன்று முதல் இத்திட்டம் மிகத் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு, மக்களுக்கு சாலைகளில் பாதுகாப்பான பயணங்கள் மேற்கொள்வதற்கான அனைத்துச் சூழல்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்மூலம் விபத்துக்களில் சிக்குவோருடைய உயிர் காப்பாற்றப்படுகிறது. 18.12.2021 முதல் 18.03.2022 வரை அரசு மருத்துவமனைகளில் 29 ஆயிரத்து 142 பேரும், தனியார் மருத்துவமனைகளில் 4,105 பேரும், ஆக மொத்தம் 33 ஆயிரத்து 247 பேர் இந்த ''48 மணி நேர இலவச'' சிகிச்சையைப் பெற்றிருக்கிறார்கள். அவ்வாறு சிகிச்சை பெற்றார்கள் என்பதைவிட, 33 ஆயிரம் குடும்பங்கள் இத்திட்டம் மூலம் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டிற்கே முன்னோடியாக விளங்கும் இந்தத் திட்டத்திற்காக இதுவரை 29.56 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்பதையும், இத்திட்டம் மேலும் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பையும், சாலை விபத்தில் ஒருவர் கூட உயிரிழக்கக்

கூடாது என்பதையும் உறுதி செய்யக்கூடிய உயரிய நோக்கத்தோடு, அரசு இனிவரும் காலங்களிலும் தீவிரமாகச் செயல்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

சாலை விபத்தில் சிக்கிய நபர்களை உடனடியாக, Golden Hours–க்குள் மருத்துவமனைக்குக் கொண்டுவந்து அனுமதித்து, உயிரைக் காக்கக்கூடிய மனிதநேயப் பண்போடு பணியாற்றும் நல்ல உள்ளங்களுக்கு நற்கருணை வீரன் என்ற நற்சான்றிதழும், 5 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசும் வழங்கப்படுகிறது.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாட்டில்*
*சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கான உரிய*
*வழிகாட்டுதல்கள் தொடர்பான வினாவிற்கு,*
*பதிலளித்து ஆற்றிய உரை – **21.03.2022***

# உழவர்களின் நலனை பாதுகாக்கும் அரசு

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் மேகதாது சம்பந்தமாக ஒரு தீர்மானத்தை, அரசினர் தனித் தீர்மானமாகக் கொண்டுவந்து, அவரே முன்னுரையாக வரலாற்றிலே பதிவாகியிருக்கக்கூடிய பல்வேறு செய்திகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, கட்சி பேதமின்றி, அரசியல் பேதமின்றி இந்தத் தீர்மானத்தை நாம் ஏகமனதாக நிறைவேற்றிட வேண்டுமென்ற அந்த அடிப்படையிலே, ஒரு தீர்மானத்தை அவர் முன்மொழிந்திருக்கிறார்கள்.

அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்ததற்குப் பிறகு, அதைத் தொடர்ந்து உரையாற்றியிருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் நின்று, இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றிட, இந்த அரசுக்கு ஆதரவு தந்தமைக்கு முதலில் உங்கள் அத்தனை பேருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேகதாது அணையைக் கருநாடகம் கட்டுவதற்கு ஒன்றிய அரசு அனுமதி தருவதை நிச்சயம் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒத்துக்கொள்ள மாட்டோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

நடுவர் மன்றத் தீர்ப்பிற்கும், உச்சநீதிமன்றம் அளித்துள்ள இறுதித் தீர்ப்பிற்கும் எதிராக கருநாடக அரசு மேற்கொள்ளத் துடிக்கும் இந்த முயற்சியை தமிழ்நாடு அரசு நிச்சயம் தடுக்கும்.

அணைக்கு அனுமதி அளிக்கக் கூடாது என ஒன்றிய அரசுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதிலும், சட்டரீதியான நடவடிக்கைகளிலும் இந்த அரசு நிச்சயமாக உறுதியாக இருக்கும். அதிலே எந்தவித பாகுபாடும் பார்க்கமாட்டோம். அணை கட்டக்கூடிய முயற்சிகளை இந்த அரசு எல்லா வடிவிலும் எதிர்க்கும். தமிழ்நாட்டின் காவிரி உரிமையை, தமிழ்நாட்டு உழவர்களின் நலனை இந்த அரசு நிச்சயம் பாதுகாக்கும். தமிழ்நாட்டு உரிமையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம்; நிச்சயம் வெற்றி பெறுவோம்.

நன்றி, வணக்கம்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்,*
*மேகதாது அணை தொடர்பான தீர்மானத்தில்,*
*ஆற்றிய உரை –* ***21.03.2022***

# பத்து மாதங்களில் நாங்கள் செய்திருக்கும் சாதனைகளைப்போல் எந்த ஆட்சியிலும் செய்யவில்லை

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க.–வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பெரிய பட்டியலை வரிசைப்படுத்தி, இதையெல்லாம் தேர்தல் அறிக்கையிலே சொன்னீர்களே, ஏன் செய்யவில்லை, ஏன் செய்யவில்லை என்று கேட்கிறார். நீங்கள் தொடர்ந்து இரண்டு முறை, அதாவது 10 வருடங்கள் ஆட்சியில் இருந்தீர்கள். நீங்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னதையெல்லாம் முழுமையாக செய்து முடித்து விட்டீர்களா? அப்படிச் செய்து முடித்திருந்தால், சொல்லுங்கள். பல வாக்குறுதிகளை நீங்கள் அந்த 10 வருடங்களில் நிறைவேற்றவேயில்லை. அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன; அது மக்களுக்கும் நன்றாகத் தெரியும்.

நான் இப்போது சொல்கிறேன். நாங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கக்கூடிய வாக்குறுதிகளை, உறுதிமொழிகளை, அதிலும் குறிப்பாக இந்த 10 மாதங்களில், நாங்கள் செய்திருக்கக்கூடிய சாதனைகளைப்போல் எந்த ஆட்சியிலும் செய்யவில்லை என்பதை நான் உறுதியோடு சொல்ல முடியும். எனவே, விரைவிலே, நீங்கள் என்னென்ன வாக்குறுதிகளைக் கேட்டிருக்கிறீர்களோ, அவற்றையெல்லாம் பட்ஜெட்டிலும் சொல்லியிருக்கிறோம். எனவே, நிச்சயமாக, உறுதியாக, படிப்படியாக அவை நிறைவேற்றப்படும். அதுதான் எங்களுடைய இலட்சியம், அதுதான் எங்களுடையக் கொள்கை.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ‘தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிச்சயமாக நிறைவேற்றப்படும்’ என பதிலளித்து ஆற்றிய உரை – **22.03.2022***

## மக்கள் நலனை மட்டுமே முன்னிறுத்தி கடந்த ஆட்சியில் நிறைவேற்றப்படாத அறிவிப்புகளையும் நிறைவேற்றுவோம்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு சட்டமன்றத்திலும், பொதுவெளியிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் வாக்குறுதிகள் குறித்தும், அவற்றை இந்த அரசு நிறைவேற்றி வருவது குறித்தும் சில கருத்துகளும், விமர்சனங்களும் எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்டு வருவதால், அவை குறித்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் இப்பொருள் குறித்த உண்மை நிலையை விளக்கும் வகையில், உங்கள் அனுமதியுடன் இந்த அவையில் ஒரு வெள்ளை அறிக்கைக்குச் சமமான, ஒரு அறிக்கையை சட்டமன்றப் பேரவை விதி 110இன்கீழ் இப்பொழுது நான் வெளியிட விரும்புகிறேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிவுச்சுடர் பேரறிஞர் அண்ணா, நல்லாட்சி தந்த நாயகராகவும், நற்றமிழ் வளர்த்த புரவலராகவும், சொல்லாலும், செயலாலும், எழுத்தாலும் தமிழ் வளர்த்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் முனைப்போடு செயல்பட்டு வரக்கூடிய இந்த அரசு, ஆட்சிக்கு வந்து பத்து மாதங்கள் நிறைவுபெற்றுள்ளது.

தி.மு.க. தேர்தல் அறிக்கை தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளை குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிறைவேற்றுவதற்கும், மாநிலப் பொருளாதாரத்தை மீட்பதற்கும், துறைவாரியான முன்னேற்றத்திற்கும், ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையாகும். இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள **505** வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும். அதில் சொல்லப்படாத நலத்திட்டங்களும் செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புடன் மக்கள் அளித்த மாபெரும் வெற்றியைப்பெற்று அமைந்துள்ள இந்த அரசு, அதனை நிறைவேற்ற உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.

தமிழக மக்களின் நம்பிக்கையை உறுதி செய்யும் விதமாக, கடந்த மே 7ஆம் தேதியன்று பதவியேற்ற ஒரு சில மணித்துளிகளிலேயே தமிழகத்திலுள்ள கோடிக்கணக்கான மக்கள் பயன்பெறும் வகையில் ஐந்து முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டு அரசாணைகளை நான் வெளியிட்டேன்.

- **2.09** கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் ரூ.**4,000** கொரோனா நிவாரண நிதி.
- ஆவின் பால் லிட்டருக்கு ரூ.**3** குறைப்பு.
- மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம்.
- மக்களின் மனுக்களின் மீது தீர்வு காண "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறை.

- தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சைக்கான அனைத்து செலவினங்களையும் முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தில் அரசே ஏற்பு.

இந்த ஐந்தில், முதல் நான்குமே திராவிட முன்னேற்ற கழக தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றிருந்தவை. கடந்த பத்து மாதங்களுக்குள் நிறைவேற்றப்பட்ட முக்கியமான சில வாக்குறுதிகளை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கவும், முதன்முறையாக வேளாண்மைக்கென்றுத் தனியாக இரண்டு நிதிநிலை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

- கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் சுமார் 55 ஆயிரம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை 2,756 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது.

- கூட்டுறவு அமைப்புகள் மூலம் வழங்கப்பட்ட 5 சவரனுக்குட்பட்ட ரூபாய் 5 ஆயிரத்து 250 கோடி நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

- பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு.

- ஊரகப் பகுதிகளில் 1,200 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவது.

- ‘நமக்கு நாமே’ திட்டம், உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுவது.

- “இயற்கை வேளாண்மை வளர்ச்சித் திட்டம்” என்ற உன்னதத் திட்டத்தை செயல்படுத்துவது.

- அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவு பெறக்கூடிய வகையில் புனரமைத்தல் மற்றும் மதுரையில் கலைஞர் நூலகம் அமைத்தல்.

- இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம், மீத்தேன்/ நியூட்ரினோ மற்றும் கூடங்குளம் அணுமின் நிலையம் மற்றும் எட்டுவழிச்சாலைத் திட்டங்களுக்கு எதிராகப் போராடிய விவசாயிகள், பொதுமக்கள் மீது போடப்பட்ட 5,570 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

- மூன்று வேளாண் சட்டங்கள் மற்றும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி மூன்று வேளாண் சட்டங்களும் ஒன்றிய அரசால் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

- NEET தேர்விலிருந்து விலக்கு பெறுவதற்கான சட்ட முன்வடிவை சட்டப்பேரவையில் நிறைவேற்றியது.

- கொரோனா சிகிச்சைப் பணியில் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த மருத்துவர்களின் குடும்பங்களுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் கொரோனா இழப்பீட்டுத் தொகை.

- அதேபோல், கொரோனா நோய்த் தொற்றால் காவல்துறையில் உயிரிழந்த காவல்துறை அலுவலர்கள் மற்றும் காவலர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் வீதம் நிவாரணத் தொகை.

- குடும்ப அட்டை கோரி விண்ணப்பிக்கக்கூடிய தகுதிவாய்ந்த அனைத்து நபர்களுக்கும் பதினைந்து நாட்களுக்குள் ‘ஸ்மார்ட் கார்டு’ வழங்குதல்.

- தமிழக அரசிற்கு ஆலோசனைகளை வழங்கிட ‘முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு’ அமைக்கப்பட்டுள்ளது.
- பணியிலிருக்கும்போது உயிரிழக்கும் அரசுப் பணியாளரின் குடும்பத்தினருக்கு, குடும்பப் பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் உதவித்தொகை 3 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்படும் அரசுப் பணிகளுக்கான தேர்வுகளில் தமிழ் மொழி தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- ஸ்டெர்லைட் சம்பவம் குறித்து தவறாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை மற்றும் கல்வித் தகுதியின் அடிப்படையில் அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது.
- மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தப்பட்டது.

இந்த அரசினால் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு அறிவிப்புகளில், தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகளோடு, இடம் பெறாத அறிவிப்புகளும் அடங்கும். அவை குறித்து நடவடிக்கைகள் தொடர்புடையத் துறைகளால் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில்,

- இந்த மாமன்றத்தில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் 52 தேர்தல் வாக்குறுதிகளும்;
- மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை குறித்த என்னுடைய பதிலுரையில் 1 வாக்குறுதியும்;

- மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட 2021–2022ஆம் ஆண்டு மற்றும் 2022–2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையில் 33 வாக்குறுதிகளும்;
- மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் வேளாண்மைக்காக தாக்கல் செய்யப்பட்ட 2021–2022ஆம் ஆண்டு மற்றும் 2022–2023ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் 21 வாக்குறுதிகளும்;
- விதி 110இன்கீழ் வெளியிடப்பட்ட அறிக்கையில் 3 வாக்குறுதிகளும்;
- அவரவர் துறை சார்பாக அமைச்சர் பெருமக்கள் வெளியிட்ட அறிவிப்புகளில் 78 வாக்குறுதிகளும்;
- இதர அறிவிப்புகளில் 10 வாக்குறுதிகளும், நேரடியாக நிறைவேற்றப்பட்ட 10 வாக்குறுதிகளும் என இதுவரை மொத்தம் 208 தேர்தல் வாக்குறுதிகள் அரசின் அறிவிப்புகளாக இடம்பெற்றுள்ளன. இவை அனைத்திற்கும் உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டு, அரசாணைகள் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் முறையாகவும், முழுமையாகவும் செயல்படுத்தப்படுவதை இந்த அரசு முனைப்புடன் கண்காணித்து வருகிறது.

இந்த அரசு பதவியேற்று, இதுவரை நடைபெற்ற சட்டசபைக் கூட்டங்கள், அரசு விழாக்கள் போன்றவற்றில் குறிப்பிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் இடம்பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்ட வாக்குறுதிகளைத் தவிர, தேர்தல் அறிக்கையில் சொல்லாத பல்வேறு கொள்கை அளவிலான அறிவிப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில், தமிழக மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றம்

மற்றும் பலவகையான நலத்திட்ட உதவிகள் என சொல்லாதவற்றையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. உதாரணமாக,

- பள்ளிக்கு வந்து கல்வி கற்றுவந்த மாணவர்களை வீட்டுக்குள் முடக்கிவைத்த கொரோனா பெருந்தொற்று குழந்தைகளின் கல்வியை மட்டுமின்றி அவர்களின் மனதையும் பாதித்துவிட்டது. இந்தப் பாதிப்பை சரி செய்யக்கூடிய விதமாக தனித்துவம் கொண்ட 'இல்லம் தேடிக் கல்வித் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டு வகுப்பறையைப் பள்ளிகளுக்கு வெளியேயும் நீட்டிக்கச் செய்யும் மகத்தான முயற்சியை இந்த அரசு மேற்கொண்டது.
- மாநிலத்தில் தொற்றா நோய்களின் சுமையை எதிர்கொள்ளும் விதமாக இல்லங்களுக்கேச் சென்று, அனைவருக்கும் நல வாழ்வு என்கிற உயரிய நோக்கத்தினைச் செயல்படுத்தும் வகையில், "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற புதிய திட்டத்தை செயல்படுத்துவது.
- தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பையும், சாலை விபத்தில் ஒருவர் கூட உயிரிழக்கக்கூடாது என்பதையும் உறுதி செய்யக்கூடிய உயரிய நோக்கத்தோடு "இன்னுயிர் காப்போம்–நம்மைக் காக்கும் 48" என்ற உயிர் காக்கும் திட்டத்தை செயல்படுத்துவது;
- தமிழ்நாட்டில் உள்ள சிற்றூர்கள் அனைத்தும் அவற்றின் முழு ஆற்றலுக்கேற்ப வளர்ச்சியடைந்து செழிக்க வேண்டும் என்கின்ற நோக்கில் 'கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை' அறிமுகப்படுத்தியது;
- மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் தனித்துவத் திறன்களை மேம்படுத்தி அவர்களுக்கு ஒரு சிறப்பான

எதிர்காலத்தை ஏற்படுத்தித் தரக்கூடிய எனது கனவு திட்டமான 'நான் முதல்வன்' என்ற உன்னதமானத் திட்டத்தை செயல்படுத்துவது;

- அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு அனைத்து தொழிற் கல்வி இடஒதுக்கீட்டுப் பிரிவுகளில், ஏழரை விழுக்காடு இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்தல்.
- திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை.
- கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதி, கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்கள் அரசே ஏற்பு.
- கொரோனாவால் தந்தை அல்லது தாயை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு 3 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை.
- தமிழ்நாட்டில் உள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர் நலனைப் பேணிட, வீடு மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு, 317 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 'தமிழ்நாடு ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நல ஆணையம்' என்கிற புதிய அமைப்பு ஒன்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்கச் சட்டம் இயற்றப்பட்டு, ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.
- பத்திரிகையாளர் மற்றும் ஊடகத் துறையினர் "முன்களப் பணியாளர்" களாக அறிவிப்பு.

- ➢ அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகை மற்றும் ஊடகத் துறையினருக்கான சிறப்பு ஊக்கத்தொகை 5,000 ரூபாய் ஆக உயர்வு.
- ➢ கொரோனா தொற்றால் மரணமடைந்த அங்கீகரிக்கப்பட்ட ஊடகத் துறையினர்களுக்கான இழப்பீட்டுத் தொகை 10 இலட்சம் ரூபாயாக உயர்வு.

சட்டமன்றத் தேர்தலின்போது மக்களுக்கு அளித்த 505 வாக்குறுதிகளில், 208 வாக்குறுதிகளை நிறைவேற்றப் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2011–2012 முதல் 2020–2021 வரை கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் கடந்த ஆட்சியாளர்களால், வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் 537 அறிவிப்புகள் நிலுவையில் உள்ளன.

செயல்படுத்தப்படாமல் நிலுவையில் உள்ள 537 அறிவிப்புகளில் 5,470 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலான 26 அறிவிப்புகள், அவற்றை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் எவற்றையும் ஆராயாமல், ஆய்வு மேற்கொள்ளாமல், 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்த இயலாதவை என கைவிடப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலான, அதாவது 19 அறிவிப்புகள் 2011ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை உள்ள ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டவை ஆகும்.

மேற்கூறிய 537 அறிவிப்புகளில், 9,741 கோடி ரூபாய் திட்ட மதிப்பிலான 20 அறிவிப்புகளுக்கு, கடந்த ஆட்சிக்காலத்தில் அதற்குரிய அரசாணைகள் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

537 அறிவிப்புகளில் 491 அறிவிப்புகளுக்கு மட்டுமே அரசாணை மற்றும் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில், 76,619 கோடி

ரூபாய் மதிப்பீட்டிலான 143 அறிவிப்புகளுக்கு அதற்குரிய அரசாணை மற்றும் அனுமதி வழங்கப்பட்டு, நிதி எதுவும் விடுவிக்கப்படாமலும், பணிகள் துவங்கப்படாமலும் உள்ளன. அவற்றில் சிலவற்றை இந்த மாமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

- 2,160 கோடி ரூபாய்ச் செலவில் 311 ஏக்கரில் சென்னை திருமழிசையில் துணைக்கோள் நகரம்.
- மதுரை விமான நிலையத்துக்கு அருகில் 586.86 ஏக்கரில் ஒருங்கிணைந்த துணைகோள் நகரம்.
- ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கு இலவச செல்போன் வழங்கப்படும், பொது இடங்களில் இலவச வை—பை, ரேஷன் கார்டு வைத்திருப்பவர்கள் கோ—ஆப்டெக்சில் பொங்கல் பண்டிகைக்கு துணி எடுக்க ரூ.500 மதிப்புள்ள கூப்பன் வழங்கப்படும்.
- அம்பேத்கர் அறக்கட்டளை நிறுவப்படும், அம்மா வங்கி அட்டை அனைவருக்கும் வழங்கப்படும் என்று 2016ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அ.தி.மு.க. கொடுத்த பல்வேறு வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.
- ரூ.25க்கு ஒரு லிட்டர் பால்.
- மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் பேணும் வகையில் வைட்டமின் டி மற்றும் இரும்புச் சத்துகள் செறிவூட்டப்பட்ட ஆவின் பால் 1 லிட்டர் ரூ.25க்கு என குறைந்த விலையில் வழங்கப்படும் என்ற வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை.
- இதேபோல, மீனம்பாக்கம்—செங்கல்பட்டு இடையே உயர்நிலை நெடுஞ்சாலை மேம்பாலம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

- உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2 வருடத்துக்கு ஒரு முறை நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், கடந்த 5 ஆண்டுகளில் ஒரு முறை மட்டுமே உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடந்திருக்கிறது.

கடந்த ஆட்சியாளர்களால் 2011 ஆம் ஆண்டு அவர்களது தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் நிறைவேறாமல் இருப்பவைகளை தங்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

- சென்னை முதல் கன்னியாகுமரி வரை கடலோரச் சாலைத் திட்டம்.
- தென் தமிழகத்தில் 'ஏரோ பார்க்'.
- ஆன்லைன் டிரேடிங் தடுக்கப்படும்.
- மொபைல் மின்னணு ஆளுமைத் திட்டம்.
- தடையில்லா மின்சாரத்துக்கு சிறப்புத் திட்டம்.
- இலவச டிடிஹெச் சேவைகள் விரைவாக வழங்கப்படும்.
- வீடுகளில் திருட்டு, கொள்ளைகளைத் தடுக்க இளைஞர் சிறப்புப் படைகள்.
- பள்ளிக் குழந்தைகளைப் பாதுகாக்க மாணவர் சிறப்புப் படை.
- மீனவர் பாதுகாப்புப் படை.
- சிங்கப்பூரில் உள்ளதுபோல சென்னை, மதுரை, திருச்சி, கோவையில் மோனோ இரயில் திட்டம் செயல்படுத்தப்படும்.

இதை ஒப்பிடும்போது, 10 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்த அ.இ.அ.தி.மு.க. அரசு தனது 2011ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில்

186 வாக்குறுதிகளும், 2016ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் 321வாக்குறுதிகளும் என மொத்தம் 507 வாக்குறுதிகளை அளித்தது. அ.தி.மு.க. ஆட்சி 10 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்தும், இந்த 507 வாக்குறுதிகளில், 269 வாக்குறுதிகளுக்கு மட்டுமே அரசாணை வெளியிட்டு நிறைவேற்றியிருக்கிறார்கள்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இந்த அரசின் முதல் ஆண்டிலேயே 505 வாக்குறுதிகளில், 208 வாக்குறுதிகளுக்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அவற்றில் 171 வாக்குறுதிகளுக்கு அரசாணைகளும் வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

கடந்த ஆட்சியாளர்களால் சட்டப்பேரவை விதி 110இன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டப் பிறகு அறிவிக்கப்பட்டதால், கிட்டத்தட்ட அனைத்து நிதி ஒதுக்கீடு தேவைப்படும் அறிவிப்புகளுக்கும், தொடர்புடைய துறைகளின் மானியக் கோரிக்கைகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த அறிவிப்புகள் அனைத்துமே இன்னமும் வெற்று அறிவிப்புகளாக காகிதத்திலேயே உள்ளன. மேலும், அவை விளம்பர நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டவை என்பது தான் நிதர்சனம்.

நான் தொடர்ந்து ஒன்றை வலியுறுத்திச் சொல்லி வருகிறேன். இந்த அவையிலும் பலமுறை நான் பதிவு செய்திருக்கிறேன். இது எனது அரசு அல்ல. நமது அரசு. அந்தக் கருத்தினைப் பின்பற்றி இந்த அவையில் நமது அரசின் நிலைப்பாட்டை விளக்கிட நான் விரும்புகிறேன்.

தேர்தல் வாக்குறுதிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வரும் வேளையில் ''பத்து மாதக் குழந்தையிடம் பத்தாம் வகுப்பு மதிப்பெண் என்ன'' என்று கேட்பதுபோல் இருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, ''இந்தக் குழந்தை பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெறுவது மட்டுமல்ல பட்டப் படிப்பிலும் பதக்கம் வெல்லும்''.

நீங்கள் சுட்டிக்காட்டும் ஒவ்வொரு முறையும் எங்கள் மீது அதிக நம்பிக்கை வைத்து நீங்கள் வைக்கக்கூடிய நினைவூட்டல் என்றே நாங்கள் எடுத்துக்கொள்கிறோம்.

மேலும், ஒன்றை இந்த அவையில் மீண்டும் பதிவு செய்ய விரும்புகிறேன். நமது அரசு சொன்னதை மட்டுமல்ல, சொன்னதற்கு மேலும் செய்து காட்டும் அரசு என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

இறுதியாக ஒரு கருத்தை இந்த அவையில் பதிவிட விரும்புகிறேன், எதிர்க்கட்சிகள் கடந்த 10 ஆண்டு காலத்தில் நிறைவேற்றாமல் போன அறிவிப்புகளில் மக்களுக்கு மிகவும் பயன்படும் தேவைகள் ஏதேனும் கண்டறியப்பட்டால், ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு'' என்ற பேரறிஞர் அண்ணாவின் வாக்கிற்கேற்ப, மக்கள் நலனை மட்டுமே முன்னிறுத்தி அவற்றையும் நாங்கள் நிறைவேற்றுவோம் என்ற உறுதியை அளித்து நன்றி கூறி அமைகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், தேர்தல்*
*வாக்குறுதிகள் குறித்தும், அரசு நிறைவேற்றி வரும் திட்டங்கள்*
*குறித்தும் விதி **110**இன்கீழ் ஆற்றிய உரை – **23.03.2022***

# குற்றவாளிகளுக்கு தண்டனை விரைந்து பெற்றுத்தரப்படும்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேரமில்லா நேரத்தைப் பயன்படுத்தி, சில பிரச்சினைகளை, சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்து சில செய்திகளை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினையை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார். வேலூர் மாவட்டம், சத்துவாச்சேரி இந்திரா நகரைச் சேர்ந்த இராமன் என்பவர் கடந்த 17.03.2022 அன்று சத்துவாச்சேரி காவல் நிலையத்தில் அளித்த புகாரில் வ.உ.சி. நகரைச் சேர்ந்த பாலா (எ) பரத், மணிகண்டன் உள்ளிட்ட சிலர் தன்னை குடிபோதையில் தாக்கியதாகவும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார். இப்புகார் தொடர்பாக காவல்துறையினர், பரத், மணிகண்டன் உள்ளிட்ட மூவரைப் பிடித்து விசாரணை மேற்கொண்டபோது, 17.03.2022 அன்று அதிகாலை கேலக்சி திரையரங்கம் அருகே ஒரு ஆண் மற்றும் பெண் ஆகியோர் சி.எம்.சி. மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென ஆட்டோவில் ஏறியபோது, அவர்களைத் தனியிடத்திற்கு அழைத்துச்சென்று பரத், சந்தோஷ், மணிகண்டன் உள்ளிட்ட ஐவர் அப்பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், அவருடன் இருந்த ஆண் நபரை ஏ.டி.எம்.–க்கு அழைத்துச்சென்று, சுமார் 40 ஆயிரம் ரூபாயைப் பறித்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், விசாரணையில் பாதிக்கப்பட்ட பெண் சி.எம்.சி. மருத்துவமனையில் மருத்துவராகப் பணிபுரியும் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பெண் என்பதும், ஆண் நபர் அதே மருத்துவமனையில் பணிபுரியும் நாக்பூரைச் சேர்ந்த பிரனீத் ராஜ் கஷ்யப் என்பதும் தெரிய வந்துள்ளது. பாதிக்கப்பட்ட பெண் அவரது சொந்த மாநிலத்திற்குச் சென்றுள்ள நிலையில், நேற்று (22.03.2022) இணையவழி வாயிலாக அளித்த புகாரில், வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் குற்ற எண் 127/2022, இ.த.ச. பிரிவுகள் 147, 148, 342, 365, 368, 376 (D), 376 (E), 395, 397, 506 (ii) உடன் இணைந்த பிரிவு 4–தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, பரத் உள்ளிட்ட நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அடுத்து, இன்னொன்றையும் சொன்னார்கள். அதாவது, ஓய்வுபெற்ற நீதியரசர் காரில் சென்று கொண்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவத்தையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். 4ஆவது காவல் ஆணையத்தின் தலைவரும், ஓய்வுபெற்ற உயர்நீதிபதியுமான திரு.சி.டி.செல்வம் அவர்கள் நேற்று, 22.03.2022ஆம் தேதி தனது காரில் தனி பாதுகாவலர், தலைமைக் காவலர் திரு.சக்திவேல் என்பவரோடு அசோக் நகர், நூறடி சாலையில் உள்ள கே.கே. நகர் காவல் நிலையம் அருகே சென்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது அவருடைய வாகனம் அப்பகுதியிலுள்ள போக்குவரத்து சிக்னல் அருகே நின்றபோது இருசக்கர வாகனத்தில் சென்ற அடையாளம் தெரியாத 3 நபர்கள், ஆணையத் தலைவரின் வாகனத்தின்முன்பு தங்களது வாகனத்தை நிறுத்தியிருக்கிறார்கள். உடனே தனி பாதுகாவலர் திரு.சக்திவேல் அவர்கள் வாகனத்தை நகர்த்தக் கூறியிருக்கிறார். இதனையடுத்து, அந்த நபர்கள் தனி பாதுகாவலரிடம் வாக்குவாதத்திலே ஈடுபட்டு, அவர்களுக்குள் ஒருவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் அவரைத் தாக்கிவிட்டு, இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றிருக்கிறார்கள். இதில்

காயமுற்ற தனி பாதுகாவலர் திரு.சக்திவேல், வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்; நலமுடன் இருக்கிறார்.

இச்சம்பவம் குறித்து கே.கே. நகர் காவல் நிலையத்தில் குற்ற எண் 127/2022, இ.த.ச. பிரிவுகள் 341, 294–பி, 324, 307, 506 (ii) அதன்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள். இனி இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சென்னை மாநகர ஆணையருக்கு நான் அறிவுறுத்தியிருக்கிறேன். இதுசம்பந்தமாக, நானே ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.பி.டி.செல்வம் அவர்களிடத்திலே தொலைபேசியிலே தொடர்புகொண்டு, விவரங்களை எல்லாம் நானும் கேட்டிருக்கிறேன்.

அடுத்து, விருதுநகரைப்பற்றி ஒரு பிரச்சினையைச் சொல்லியிருக்கிறார். விருதுநகரிலே 22 வயது பெண்ணிடமிருந்து பாலியல் வன்முறை புகார் வந்தவுடன், வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 24 மணி நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் 4 பேர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். மீதியுள்ள 4 பேர் சிறார் நீதிமன்றத்தின் கூர்நோக்கு இல்லத்திலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வழக்கில் குற்றவாளிகள் விரைந்து தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காக, தற்போது வழக்கு, மாநில குற்றப் புலனாய்வு பிரிவு–சி.பி.சி.ஐ.டி பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது. சி.பி.சி.ஐ.டி கண்காணிப்பாளர் திருமதி முத்தரசி அவர்கள் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 60 நாட்களுக்குள் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இந்த வழக்கு தனி நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படும். விரைந்து குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தரப்படும். அதுவும் அதிகபட்ச தண்டனை பெறப்படும் என்பதை ஆணித்தரமாக, உறுதிபட இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பாலியல் வன்முறை வழக்கினை ஒரு ‘‘மாடல் வழக்காக’’ நேரடியாகக் கண்காணிக்குமாறு காவல்துறைத் தலைவர் (D.G.P.) அவர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். நிச்சயம், பொள்ளாச்சி பாலியல் வழக்குபோல் இல்லாமல், வண்ணாரப்பேட்டை 13 வயது சிறுமி பாலியல் வன்முறை வழக்குபோல் இல்லாமல், இந்த வழக்கு நிச்சயம் முறையாக நடத்தப்படும்.

இந்த அரசு எப்படி தண்டனை வாங்கிக்கொடுக்கிறது; இந்த மாநிலத்திற்காக மட்டுமல்ல; ஒட்டுமொத்த இந்தியாவிற்கே இந்த வழக்கு ‘‘விரைந்து தண்டனை பெற்றுத் தருவதில்’’ ஒரு முன்னணி வழக்காக மட்டுமல்லாமல், இதுபோன்று தவறு செய்யக்கூடியவர்களுக்கு ஒரு பாடமாகவும் இருக்கப்போகிறது. பொறுத்திருந்து பாருங்கள். இதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், இங்கே இருக்கக்கூடிய எல்லா உறுப்பினர்களுக்கும் நான் இதை உறுதியோடு தெரிவித்து, அமைகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேரமில்லாத நேரத்தில்,*
*சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை குறித்த கேள்விக்கு,*
*பதிலளித்து ஆற்றிய உரை –* ***23.03.2022***

## நல்ல திட்டங்கள் எதுவாக இருந்தாலும் அதை நிறைவேற்றித்தருகிற ஆட்சிதான் கலைஞர் அவர்கள் உருவாக்கித்தந்த இந்த ஆட்சி

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, தாலிக்குத் தங்கம் வழங்கக்கூடிய திட்டத்தை நிறுத்தியதாக ஒரு கருத்தை நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பதிவு செய்திருக்கின்றார். அ.தி.மு.க. தொடங்கிய திட்டங்களை, ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்ததும் நிறுத்தி விடுவதைப்போல ஒரு போலித் தோற்றத்தை இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தனது உரையிலே உருவாக்கியிருக்கிறார்கள்.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, முந்தைய உங்களுடைய அரசு திட்டங்களை முடக்குவதற்குப் பெயர்போன அரசு; அது உங்களுடைய அரசு. இது கடந்த காலங்களில், பல நேரங்களில் நிரூபணமாகியிருக்கக்கூடிய உண்மை. ஊடகத்தினர், பொதுமக்கள் என அனைவரும் இதை நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, தலைவர் கலைஞர் அவர்களால், தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் மாபெரும் சட்டமன்ற, தலைமைச் செயலக வளாகம் கட்டப்பட்டு, அன்றைக்குப் பிரதமராக இருந்த திரு.மன்மோகன் சிங் அவர்களால் அது திறந்துவைக்கப்பட்டது. அந்த இடத்தில்தான், சட்டமன்றமும் நடந்திருக்கிறது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப்பிறகு, சட்டமன்றம் நடைபெற்ற அந்த இடத்தை மருத்துவமனையாக மாற்றியது யார்?

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழா நினைவாக, 170 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 8 மாடிகள் கொண்ட

அளவில் ஒரு பெரிய மாளிகையை, அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை தி.மு.க. ஆட்சி கட்டியது. அந்த மாபெரும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை மாற்ற நினைத்ததும், அதைப் பாழடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டதும் யார்? அங்கிருந்த அண்ணாவினுடைய சிலைக்குக் கீழே கல்வெட்டு இருக்கும். அந்தக் கல்வெட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்களது பெயர் இருந்தது. அந்தப் பெயரையே எடுத்த ஆட்சி எது?

கலைஞர் காப்பீட்டுத் திட்டத்திலே, கலைஞர் வீடு வழங்கக்கூடிய திட்டத்திலே இருந்த கலைஞர் பெயரை நீக்கியது யார்? செம்மொழிப் பூங்காவிலே, கலைஞருடைய பெயரை மறைப்பதற்காக செடி, கொடிகளை கொண்டுபோய் வைத்து, அதை முழுமையாக மூடி மறைத்தது யார்? கடற்கரைப் பூங்காவில் இருந்த கலைஞர் பெயரை எடுத்தது யார்?

இராணி மேரிக் கல்லூரியை இடித்துவிட்டு, அங்கிருந்த கல்லூரியை அப்புறப்படுத்த நினைத்தது உங்களுடைய ஆட்சி. அதை இடிக்கக்கூடாது, அந்தக் கல்லூரி பழமையானக் கல்லூரி, பல நூற்றாண்டுகளைக் கண்டிருக்கக்கூடிய வரலாற்றுச் சிறப்புக்குரிய கல்லூரி என்று நாங்கள் அன்றைக்குத் தி.மு.க. சார்பில் குரல் கொடுத்தோம். அதற்காகச் சிறைபிடிக்கப்பட்டு, சிறைக்குப்போய் பல நாட்கள் இருந்து வந்திருக்கிறோம். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு, அந்தக் கல்லூரி வளாகத்தில் ஒரு கட்டடம் கட்டப்பட்டு, கலைஞர் மாளிகை என்று பெயர் சூட்டப்பட்டது. நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அந்த கலைஞர் மாளிகையில் இருந்த கலைஞர் பெயரை நீக்கியதுதான் உங்களுடைய சாதனை.

ஆகவே, கலைஞர் கொண்டுவந்தார் என்பதற்காகவே சமத்துவபுரங்கள் எல்லாம் பழுதுபார்க்கப்படாமல், அவற்றைப் பேணிப் பாதுகாக்க முடியாத அளவிற்கு, அதைப் பாழடித்தது யார்?

உழவர் சந்தைகளை மேலும் மேலும் வலுப்படுத்தக்கூடாது என்று அதை இடித்து மூடியது யார்? தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில் 2009ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட உடன்குடி பவர் கார்ப்பரேஷன் லிமிடெட்–ஐ முடக்கியது யார்? நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், வருமுன் காப்போம் திட்டம் போன்ற இந்தத் திட்டங்களையெல்லாம் உங்கள் ஆட்சியில் முடக்கினீர்கள். அதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

இன்னொன்று, முக்கியமான விஷயம்; இங்கே மதுரவாயல்– சென்னை துறைமுகம் உயர்மட்டச் சாலைத் திட்டம் குறித்தும் பேசினார்கள். அந்தத் திட்டத்தை முடக்கியது யார்? சமச்சீர் கல்விப் பாடப்புத்தகத்தில் கலைஞர் எழுதிய செம்மொழி வாழ்த்துப் பாடலையும், 7ஆம் வகுப்புப் பாடத் திட்டத்திலே நாடகக் கலை குறித்தப் பாடத்தில் கலைஞர் அவர்களது பெயரையும் ஸ்டிக்கரை வைத்து மறைத்தது யார்?

இப்படி வரிசையாக என்னால் சொல்ல முடியும். அதற்காக, பழிவாங்குவதற்காக நாங்கள் செய்கிறோம் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். நல்ல திட்டங்கள் எதுவாக இருந்தாலும், முறையான திட்டங்கள் எதுவாக இருந்தாலும், அதை நிறைவேற்றுகிற ஆட்சிதான், கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கக்கூடிய, எங்கள் தலைமையில் நடைபெறக்கூடிய இந்த ஆட்சி என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களது உரையினிடையே, பதிலளித்து ஆற்றிய உரை –* ***23.03.2022***

# இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு வரவேண்டும்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் அவர்களும் பதிலுரையாற்றி, இந்த அவையில் இருக்கக்கூடிய அனைவருடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் பெற்றிருக்கிறார்கள். இந்த அரசு மிகச் சிறப்பாக பல திட்டங்களை, பல பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது என்று பல்வேறு மாநிலங்களில், ஏன் வெளிநாடுகளில் இருப்பவர்கள் கூட பாராட்டக்கூடிய அளவிற்கு நம்முடைய அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அப்படிப் பெருமைப்படுகிற அளவிற்கு வந்துகொண்டிருக்கக்கூடிய செய்திகளையெல்லாம் நாம் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எனவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் எவ்வளவோ துறைகள் இருந்தாலும், முக்கியமான துறை நிதித்துறைதான். அந்த நிதித்துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர், என்னுடைய அருமை சகோதரர் மாண்புமிகு முனைவர் திரு.பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அவர்கள் மிகச் சிறப்பான வகையில், தன்னிடத்தில் இருக்கக்கூடிய அனுபவங்களைக்கொண்டும், வெளிநாடுகளில் தாம் பெற்றிருக்கக்கூடிய பல நல்ல அம்சங்களையெல்லாம் மனதிலே தேக்கிவைத்துக்கொண்டு, அந்தப் பணியை மிகச்

சிறப்பாகச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், உள்ளபடியே பாராட்டுக்குரியவராக அவர் விளங்கிக்கொண்டிருக்கிறார்.

அதேபோலத்தான், நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் ‘வேங்கையின் மைந்தன்’ என்று பெயர் பெற்றவர் அவர். இப்பொழுது ‘வேங்கையின் மைந்தன்’ மட்டுமல்ல; விவசாயிகளுடைய மைந்தனாக மாறி, அவரும் தன்னுடைய கடமையைச் சிறப்போடு நிறைவேற்றியிருக்கிறார். இது ஒவ்வோர் ஆண்டும் தொடரவேண்டும். அவர்கள் தொடர்வார்கள் என்ற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு இருக்கிறது. அதை அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்ற உணர்வோடு, அவர்களை வாழ்த்தி, அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், இலங்கைத் தமிழர்கள் இன்றைக்குப் பல துன்பங்களுக்கு, துயரங்களுக்கு ஆளாகியிருக்கக்கூடிய சூழ்நிலையில், அங்கு பரிதவித்துக் கொண்டிருக்கக்கூடிய தமிழர்கள் அண்மையில் தமிழ்நாட்டிற்கு வந்துகொண்டிருக்கின்ற செய்திகளையெல்லாம் நானும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அதுகுறித்து நேற்றையதினமே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதோடு, இது தொடர்பாக, ஒன்றிய அரசிடமும், அங்கிருக்கக்கூடிய அதிகாரிகளிடத்திலும், அமைச்சர்களிடத்திலும் தொடர்புகொண்டு, இதை எப்படிக் கையாள வேண்டும் என்று சட்டரீதியாக நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். எனவே, விரைவில் அதற்கொரு விடிவுகாலத்தை நிச்சயமாக இந்த தமிழக அரசு ஏற்படுத்தித்தரும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், இங்கிருக்கக்கூடிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்திருக்கக்கூடிய

தலைவர்கள், உறுப்பினர்கள், நான் மேற்கொள்ளவிருக்கக்கூடிய துபாய், அபுதாபி பயணத்திற்கு தங்களது வாழ்த்துக்களையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு நான் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றை மட்டும் நான் உறுதியோடு சொல்கிறேன். பல நிகழ்ச்சிகளில் நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். இந்தியாவிலேயே நம்பர்–1 முதலமைச்சர் என்ற அந்த பாராட்டைப் பெறுவதிலே எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால், அதைவிட எனக்கு பெருமகிழ்ச்சி எதுவென்றால், இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதல் மாநிலம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு, நம்முடைய தமிழகம் வர வேண்டும். அந்த அடிப்படையில்தான் நாங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். எனவே, அப்படிப்பட்ட அந்த வெற்றிக்கு நான் இன்று மாலையிலே மேற்கொள்ளவிருக்கக்கூடிய துபாய், அபுதாபி பயணம் நிச்சயம் துணை நிற்கும். அதற்கு நீங்கள் வாழ்த்தியிருக்கிறீர்கள். வாழ்த்திய நெஞ்சங்களுக்கு மீண்டும் என்னுடைய சார்பிலே நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் ஆகியோரின் பதிலுரைக்குப் பின்னர், ஆற்றிய உரை –* ***24.03.2022***

# ரூ.68,375 கோடி முதலீட்டில் 2,05,802 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110இன்கீழ் ஓர் அறிக்கையினை, குறிப்பாக தொழில் முதலீடுகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்த ஓர் அறிக்கையினை தங்களுடைய அனுமதியோடு இந்த அவையிலே எடுத்துவைக்க விரும்புகின்றேன்.

2021ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் தொழில் துறையை மீட்டெடுப்போம்'', ''தொழில் வளர்ச்சியை பரவலாக்க கொள்கைகள் வகுக்கப்படும்'', ''தொழில் தொடங்க முன்வருவோரை ஊக்குவிக்கக்கூடிய வகையில் ஒற்றைச் சாளர முறை மூலமாகத் தொழில் வளத்தைப் பெருக்குவோம்'' என்று தேர்தல் வாக்குறுதிகளைக் கொடுத்தோம். அந்த வாக்குறுதிகளை இந்த அரசு படிப்படியாக நிறைவேற்றி வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, **68,375** கோடி ரூபாய் முதலீடும், **2,05,802** நபர்களுக்கு வேலைவாய்ப்பும் உருவாக்கக்கூடிய வகையில் **130** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

**20.07.2021** அன்று சென்னையில் ‘‘முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு’’ என்ற நிகழ்ச்சி வாயிலாக **17,141** கோடி ரூபாய் முதலீடும், **55,054** பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் வகையில் **35** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

**22.09.2021** அன்று சென்னையில் ‘‘ஏற்றுமதியில் ஏற்றம்– முன்னணியில் தமிழ்நாடு’’ என்ற நிகழ்ச்சி வாயிலாக **1,880** கோடி ரூபாய் முதலீடும், **39,150** பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் **14** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

**23.11.2021** அன்று கோயம்புத்தூரில் ‘‘முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு’’ என்ற நிகழ்ச்சி வாயிலாக **35,208** கோடி ரூபாய் முதலீடும், **76,795** பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் வகையில் **59** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

**07.03.2022** அன்று தூத்துக்குடியில் ‘‘சர்வதேச அறைகலன் பூங்கா அடிக்கல் நாட்டு விழாவின்போது’’ **4,488** கோடி ரூபாய் முதலீடும், **15,103** பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் வகையில் **14** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

இதுதவிர, **11.09.2021** மற்றும் **15.03.2022** அன்று நடைபெற்ற நிகழ்வுகளில் **3,558** கோடி ரூபாய் முதலீடும், **4,600** பேர்களுக்கு வேலைவாய்ப்பும் உருவாக்கும் வகையில் DP World மற்றும் சாம்சங் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**26.03.2022** மற்றும் **28.03.2022** ஆகிய நாட்களில் துபாய் மற்றும் அபுதாபி நாடுகளில் நடைபெற்ற நிகழ்வுகளில் **6,100** கோடி ரூபாய் முதலீடும், **15,100** பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் வகையில் **14** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

‘‘சீரான மற்றும் பரவலான தொழில் வளர்ச்சி’’ எங்கள் தேர்தல் வாக்குறுதி. அதை நிறைவேற்றும் வகையில் இன்றைக்கு சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கிருஷ்ணகிரி, தருமபுரி, மதுரை, கரூர், நாமக்கல், திண்டுக்கல், புதுக்கோட்டை, தேனி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய 25 மாவட்டங்களில் இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொழில் வளர்ச்சிக்கு இவ்வளவு முயற்சிகளை எடுத்துள்ள இந்த அரசின் சார்பில் ஐக்கிய அரபு நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டேன். துபாயில் நடைபெற்ற உலக கண்காட்சி, 5 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் சர்வதேச நிகழ்வுகளில் ஒன்று. 192 நாடுகள் பங்கேற்ற அக்கண்காட்சியில் மார்ச் 25 முதல் 31ஆம் தேதி வரை ‘‘தமிழ்நாடு வாரமாக’’ கடைபிடிக்கப்பட்டது. கண்காட்சியின் இறுதி வாரங்களில்தான் பெரிய முதலீட்டாளர்கள் கலந்துகொள்வார்கள். அதனால் நான் துபாய் சென்று, மார்ச் 25ஆம் தேதி ‘‘தமிழ்நாடு அரங்கினை’’, அந்த அரங்கில் உள்ள கண்காட்சியைத் திறந்துவைத்தேன்.

துபாயிலும், அபுதாபியில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சொந்தங்களைச் சந்தித்து, சொந்த மண்ணான தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அழைப்பு விடுத்தேன். ஐக்கிய அரபு நாடுகளின் பொருளாதாரத் துறை அமைச்சர், வெளிநாட்டு வர்த்தகத் துறை அமைச்சர், வர்த்தக சங்க நிருவாகிகள் ஆகியோரையும் சந்தித்து, தமிழ்நாட்டிற்கு முதலீடுகள் பெறுவது குறித்து ஆலோசனை நடத்தினேன்.

முபாதலா முதலீட்டு நிறுவனம் மற்றும் ABQ போன்ற நிறுவனங்கள், ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள பல்வேறு முதலீட்டாளர்களை நிருவகித்திடும் நிறுவனங்கள், இவர்களையும்

சந்தித்து வளர்ந்து வரும் துறைகளான எரிசக்தி, சரக்குப் போக்குவரத்துத் திட்டங்கள், உள்கட்டமைப்புத் திட்டங்கள், தரவு மையங்கள், மின்னணுவியல் போன்ற திட்டங்களில் பெருமளவில் முதலீடுகளைப் பெற்றிட உரையாடினேன். இதைத் தொடர்ந்து, இவ்விரு நிறுவனங்களின் முதலீடுகளைப் பெற ஒரு பணிக்குழு (Working Group) விரைவில் அமைக்கப்படவுள்ளது.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல், இந்த துபாய் பயணத்தின் வாயிலாக 6,100 கோடி ரூபாய் முதலீடும், 15,100 பேருக்கு வேலைவாய்ப்பும் ஏற்படுத்தக்கூடிய வகையில் 6 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

அபுதாபியைத் தலைமையிடமாகக்கொண்ட மிகப்பெரிய எஃகுக் குழாய் உற்பத்தியாளர்களில் ஒன்று, சென்னையைச் சுற்றியுள்ள மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி நிறுவனங்கள் அடங்கியிருக்கக்கூடிய பகுதியில் 1,000 கோடி ரூபாய் முதலீடும், 2,000 பேருக்கு வேலைவாய்ப்பும் ஏற்படுத்தக்கூடிய வகையில் ஒரு உற்பத்தித் திட்டத்தினை நிறுவ தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

லூலூ பன்னாட்டுக் குழுமம் இந்தியா மற்றும் மத்திய கிழக்கு/வட ஆப்பிரிக்கா மண்டலங்களில் பல்வேறு திட்டங்களை நிறுவியுள்ளது. ‘‘இரு பெரும் வணிக வளாகங்கள்’’, ‘‘உணவு பதப்படுத்தக்கூடிய திட்டம்’’ ஆகியவற்றை தமிழ்நாட்டில் நிறுவ, 3,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை இந்தக் குழுமத்துடன் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

இந்தியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள ஆஸ்டர் DM மருத்துவக் குழுமத்துடன் சென்னையில் 500 படுக்கைகள் கொண்ட பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையை உருவாக்கும் வகையில், 500

கோடி ரூபாய் முதலீடும், 3,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றான ஷெராப் குழும நிறுவனத்துடன் 500 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் ஒரு "சரக்குப் பூங்கா" அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள மிகப்பெரிய ஜவுளி மற்றும் ஆடைகள் உற்பத்தியாளர்களில் ஒன்றான ஒயிட் ஹவுஸ் நிறுவனத்துடன், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள திண்டிவனம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வாலாஜாபாத் ஆகிய பகுதிகளில் 500 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 3,000 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் வகையில் "ஆடை மற்றும் தையல் திட்டங்களை" அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு நாட்டைச் சேர்ந்த டிரான்ஸ்வேல்டு குழுமத்துடன் 100 கோடி ரூபாய் மதிப்பில், 600 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தக்கூடியத் திட்டம் நிறுவிட புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தங்கள் எல்லாம் நான் துபாய் நாட்டிற்கு மேற்கொண்ட அரசு முறைப் பயணத்தின் விளைவாக கிடைக்கப் போகும் முதலீடுகள். ஆகவே, துபாய் நாட்டிற்குச் சென்ற அரசு முறைப் பயணம், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கவும், நம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும்தான். அந்த இலக்கை எட்டும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டிருக்கிறேன் என்பதை பெருமையுடன் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

10 மாதங்களிலேயே தொழில் துறையில் இந்த அரசு செய்திருக்கக்கூடிய சாதனைகளுக்கு நம்முடைய அரசு பொறுப்பேற்றதும் எடுத்த நடவடிக்கைகளேக் காரணம். 20.07.2021

அன்று தொழில்களை ஈர்க்க, 24 துறைகளைச் சார்ந்த 100 சேவைகளை மின்மய வடிவில் அளித்திடும் வகையில் “ஒற்றைச் சாளர இணையதளம்–2.0”யைத் தொடங்கிவைத்தேன். 23.11.2021 அன்று “ஒற்றைச்சாளர கைபேசி செயலி”யையும் தொடங்கி வைத்தேன். 07.03.2022 அன்று தொழில் தொடங்கத் தேவைப்படும் நிலம் தொடர்பாக “தமிழ்நாடு நிலத் தகவல் இணையத்தை” தொடங்கிவைத்தேன். அதே, 07.03.2022 அன்று தொழில் தொடங்குவதற்குரிய அனுமதிகள், ஒப்புதல்கள், நடைமுறைகளை அறியும் “வழிகாட்டி நிறுவனத்தின் புதிய இணைய தளத்தை” துவக்கிவைத்தேன்.

இப்படி, இந்த அரசு தொழில் துறையில் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் முதலீட்டாளர்களுக்கு, புதிய தொழில் தொடங்குவோருக்கு மிகப்பெரிய நம்பிக்கையை இந்த அரசின்மீது, தமிழ்நாட்டின் மீது அளித்திருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டு கூறவேண்டுமென்றுச் சொன்னால், கடந்த 2021ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரையில் மட்டும் தமிழ்நாட்டில் வெளிநாட்டு நேரடி முதலீடு (Foreign Direct Investment) என்பது 41.5 விழுக்காடு அதிகரித்துள்ளது.

அதுமட்டுமல்ல; தமிழ்நாட்டில் முதலீடுகளை ஊக்குவிக்கும் முகமையான ‘Guidance’–க்கு ‘Asia Oceania Region’–ன் வருடாந்திர முதலீடுகள் மாநாட்டில், ‘Best Investment Promotion Agency’ என்ற விருதும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்தகட்டமாக, 2022 ஆண்டு மே மாதத்தில் சுவிட்சர்லாந்து நாட்டில் நடைபெறவுள்ள உலகப் பொருளாதார அமைப்பின் வருடாந்திரக் கூட்டத்திலும், ஜெர்மனி நாட்டில் ஹானோவர் நிகழ்விலும், ஜூன் மாதத்தில் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள “க்ளோபல் ஆஃப் ஷோர் விண்ட்” (Global Off Shore Wind) நிகழ்விலும், ஜூலை மாதத்தில் அமெரிக்க நாட்டிலும்,

முன்னணி முதலீட்டாளர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகள் ஏற்கெனவே தொடங்கிவிட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முக்கியமாக எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, 2023ஆம் ஆண்டின் இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு தமிழ்நாட்டில் சிறப்பாக நடத்தப்படும். அதன்மூலம், மேலும் அதிகமான முதலீடுகள் திரட்டப்படும். நம்முடைய பல இலட்சம் தமிழக இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு போட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், இனிமேல் போடப்போகும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் முதலீடுகளாக, வேலைவாய்ப்புகளாக மாறும். தமிழ்நாட்டிற்கு வரும் முதலீடுகளை அதிகரிக்கவும், மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தவும் மேற்கொள்ளப்படும் இந்த அரசின் முயற்சிகளுக்கு அனைவரும் கட்சி வித்தியாசம் பாராமல் துணை நிற்க வேண்டும் என்பதை மட்டும் கேட்டு, அதேபோல், என் பயணத்திற்கு வாழ்த்திய நல் உள்ளங்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி **110**இன்கீழ்,*
*தொழில் முதலீடுகள் மற்றும் புரிந்துணர்வு*
*ஒப்பந்தங்கள் குறித்து, பதிலளித்து ஆற்றிய உரை – **06.04.2022***

# அடிப்படை வசதிகளை மக்களுக்கு செய்துகொடுக்க நிதி ஆதாரம் அவசியம் தேவை

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் சொத்து வரி பொது சீராய்வு தொடர்பாக கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்து, எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள், எங்களுடைய கூட்டணியில் இடம்பெற்றிருக்கக்கூடிய தலைவர்கள் உள்பட அனைவரும் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் பத்திரிகையாளர்களை அழைத்து, எடுத்துச் சொல்லியிருந்தாலும், சட்டமன்றத்திலும் அதற்குரிய விளக்கத்தை முறையாக வழங்கிட வேண்டுமென்று நான் அவருக்குத் தந்த உத்தரவின் அடிப்படையிலே, அவரும் இங்கே சில விளக்கங்களையெல்லாம் உங்களிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நான் அதிக நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. சுருக்கமாக நான் தெரிவிக்க விரும்புவது, இந்த சொத்து வரி உயர்வை இந்த அரசு மனமுவந்து செய்யவில்லை. நான் அதை மனப்பூர்வமாக இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி கிடைக்காது என்று கூறுகிறபோது, அதைச் சமாளிக்க வேண்டிய கட்டாயம் இந்த அரசுக்கு ஏற்பட்டது. ஏனென்றால், முன்பு உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெறவில்லை. மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் தேக்க நிலையில் இருந்தன.

மாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகள் வருவாய்ப் பற்றாக்குறையால், மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான பணிகளை நிறைவேற்றுவதில்கூட பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டன. அதை சோதனையாக சந்தித்துக்கொண்டிருந்தன. ஆனால், இப்போது அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த உள்ளாட்சி அமைப்புகளிலே பொறுப்பேற்றிருக்கக் கூடியவர்கள் அரசிடம் என்ன எதிர்பார்ப்பார்கள் ? அங்கே ஆற்றவேண்டிய பணிகளுக்கு, திட்டங்களுக்கு நிதியை எதிர்பார்ப்பார்கள். ஆகவே, இந்த நிலையிலேதான் மக்களை பாதிக்காமல், குறிப்பாக அடித்தட்டு மக்களை, ஏழை, நடுத்தர வகுப்பு மக்களை பாதிக்காமல், உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிப் பணிகளை மனதிலே வைத்துக்கொண்டு, சொத்து வரி உயர்வு அறிவிக்கப்பட்டிருக்கிறது. மக்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதால், தற்போது நடைமுறைப்படுத்தக்கூடிய சொத்து வரி சீராய்விலே, கட்டடங்களின் பரப்பளவிற்கு ஏற்றவாறு பிரித்து, வரி உயர்வு செய்யக்கூடிய திட்டம் இதிலே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், நகர்ப்புறத்தில் மொத்தம் உள்ள குடியிருப்புகளைப் பொருளாதார அடிப்படையில் பார்த்தால் **83** விழுக்காடு மக்களை இந்த வரி விதிப்பு பெரியதாக பாதிக்காது என்பதுதான் உண்மை. ஆகவேதான், பத்திரிகைகளும், ஊடகங்களும்கூட இந்த அரசினுடைய முயற்சியைப் பாராட்டிக்கொண்டுதான் இருக்கிறது.

“அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கக்கூடிய கட்டாயம்– அதற்கு நிதி ஆதாரம் அவசியம் தேவை” என்றும், “இப்போதுள்ள நிலையில் உள்ளாட்சி அமைப்புகளிடம் இருக்கக்கூடிய நிதி ஆதாரத்தை வைத்துக்கொண்டு எதையும் செய்ய முடியாது என்ற காரணத்தால்,இந்த வரி உயர்வு தவிர்க்க முடியாத ஒன்றாகும்” என்றும்

நேற்றையதினம் தினத்தந்தி பத்திரிக்கையின் தலையங்கத்திலேயே இதுகுறித்துக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

பேரவையில் அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும், இந்த அரசின் சார்பிலே பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புவது, கட்சி வேறுபாடின்றி நான் சொல்ல விரும்புவது, அரசின் இந்த முடிவுக்கும், மக்கள் நலத்திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை உள்ளாட்சி அமைப்புகள் நிறைவேற்றிடவும், நம் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் துணை நிற்க வேண்டும் என்பதுதான்.

எதிர்கட்சி மற்றும் எங்கள் தோழமைக் கட்சிகளுக்கும் எனது அன்பான ஒரு வேண்டுகோள்! மாநில வளர்ச்சியில் எவ்வித அரசியலும் செய்திட வேண்டாம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமின்றி, இங்கு அமர்ந்திருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளின் சட்டமன்றத் தலைவர்களையும் கேட்டு, அமைகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சொத்து வரி சீராய்வு*
*தொடர்பான கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீதான*
*விவாதத்தின்போது ஆற்றிய உரை –* ***06.04.2022***

# சமூக நீதிக்கான சட்டப்போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020–2021ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு மருத்துவப் படிப்புக்கான மாணவர் சேர்க்கையில் 7.5 சதவீதம் ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன், பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளில் கடந்த ஆண்டுகளின் மாணவர் சேர்க்கை விவரங்களின்படி, அரசுக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் முன்னிலை வகிக்கும் சுயநிதிக் கல்லூரிகளில், மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் சேர்க்கை பெற்றுவந்த சூழ்நிலையில், இந்த நிலை மாற்றப்பட வேண்டுமென்று நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டேன்.

அதன் அடிப்படையில், அரசுக்கு உரிய பரிந்துரைகளை அளித்திட மாண்பமை டெல்லி உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்

திரு.த.முருகேசன் அவர்கள் தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையம் அளித்த அறிக்கையின்படி, அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு, அனைத்து இடஒதுக்கீட்டுப் பிரிவுகளிலும் 7.5 சதவீதம் இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய, அரசால் 2021ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ‘‘இளநிலை தொழிற்கல்விப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம்’’ இயற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, 7.5 சதவீத முன்னுரிமை அடிப்படையிலான பொறியியல் படிப்புக்குத் தேர்வு செய்யப்பட்ட அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சேர்க்கை ஆணைகளை வழங்கும் விழாவில் கலந்துகொண்டு, ‘‘அரசுப்பள்ளிகளில் படித்து 7.5 சதவீத இடஒதுக்கீடு மூலம் தொழிற்கல்லூரிகளில் சேரக்கூடிய மாணவர்களுடைய, அதாவது, பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளுக்கு ஆகக்கூடிய செலவு, கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், கலந்தாய்வுக் கட்டணம் உள்ளிட்ட அனைத்தையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளும்’’ என்ற அறிவிப்பினை நான் வெளியிட்டேன்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டு, இதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்தவகையில், படிப்புக் கட்டணம் வழங்குவதற்காக 45 கோடியே 61 இலட்சம் ரூபாயும், விடுதிக் கட்டணத்திற்காக 25 கோடியே 32 இலட்சம் ரூபாயும், போக்குவரத்துக் கட்டணத்திற்காக, 3 கோடியே 35 இலட்சம் ரூபாயும், ஆகமொத்தம், 74 கோடியே 28 இலட்சம் ரூபாய் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தக் கல்வியாண்டில், 7 ஆயிரத்து 876 மாணவர்கள் சேர்க்கை ஆணை பெற்றிருக்கிறார்கள். 17.02.2022 வரை 6,100 மாணவர்களுக்கான கட்டணமாக 38 கோடியே 31 இலட்சம் ரூபாய்

விடுவிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சூழ்நிலையில், 7.5 சதவீத இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையிலான அரசு ஒதுக்கீட்டிற்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் பல்வேறு பொதுநல வழக்குகள் தொடரப்பட்டு, இருதரப்பு வாதுரைகளும் முடிவுற்று, இன்று நமக்கு சாதகமானத் தீர்ப்பு வெளியாகியுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்ற உறுப்பினர்களுடன் நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பு, தரவுகளின் அடிப்படையிலும், முறையான கலந்தாலோசனை செய்யப்பட்டு கொண்டுவரப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலான இட ஒதுக்கீட்டிற்கு உயர்நீதிமன்றம் தந்துள்ள மிகப் பெரிய அங்கீகாரம்.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்று 10 மாத காலத்தில், சமூக நீதிக்கான சட்டப் போராட்டத்தில் கிடைக்கும் மூன்றாவது வெற்றி இந்தத் தீர்ப்பு என்பதைப் பெருமையுடன் பதிவு செய்கிறேன்.

சமூக நீதியை மக்கள் மன்றத்திலும், நீதிமன்றத்திலும் நிலைநாட்டி, நாட்டிற்கே வழிகாட்டும் வரலாற்றுக் கடமையை தமிழகம் தொடர்ந்து செய்திடும்.

திராவிட மாடல் ஆட்சி, அதற்காக அயராது உழைத்திடும்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மருத்துவம் மற்றும் தொழிற்கல்வி படிப்பில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீதம் முன்னுரிமை அடிப்படையிலான ஒதுக்கீடு மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாக ஆற்றிய உரை – 07.04.2022*

# சமூக நீதி நிச்சயம் நிலைநாட்டப்படும்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன்னியர்களுக்கான சிறப்பு ஒதுக்கீடு சம்பந்தமாக இந்த அவையிலே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதனடிப்படையிலே, திரு.ஜி.கே.மணி அவர்கள், திரு.கு.செல்வப்பெருந்தகை அவர்கள், திரு.தி.வேல்முருகன் ஆகியோரும், தரவுகளைக் கொண்டும், மதுரை உயர்நீதிமன்றத்திலே முறையாக வழக்கறிஞர்களை வைத்தும் வாதாடவில்லை என்று குற்றஞ்சாட்டக்கூடிய வகையிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

வன்னியர் சமுதாயத்திற்கு 10.5 விழுக்காடு சிறப்பு ஒதுக்கீடு வழங்கக்கூடிய "தமிழ்நாடு சட்டம் 8/2001 தொடர்பாக உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் தமிழ்நாடு அரசு தீவிரமாக வாதாடியது. அ.தி.மு.க. அரசு கொண்டுவந்தச் சட்டம் என்றாலும், எங்களைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்திற்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கிய அரசு என்ற அந்த நிலையிலே, உயர்நீதிமன்றத்தில் அரசு தலைமை வழக்கறிஞரே வாதாடியிருக்கிறார்.

உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர்கள் ராகேஷ் திவேதி, அபிசேக் மனு சிங்வி, முகுல் ரோத்தகி, வில்சன் உள்ளிட்டோர் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் சார்பிலே ஆணித்தரமாக வாதாடியிருக்கிறார்கள். இந்த வழக்கில் எழுத்துப்பூர்வமான வாதங்கள் தாக்கல் செய்வது, தேவையான ஆவணங்களைப் பதிவு செய்வது ஆகிய அனைத்திலும் தமிழ்நாடு அரசு மற்றும் அதன்

வழக்கறிஞர்கள் செயல்பாடுகள் மிகவும் பாராட்டத்தக்கதாக இருக்கிறது என உச்சநீதிமன்றமே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

இந்தச் சிறப்பு ஒதுக்கீட்டிற்கான பரிந்துரை **2012**இல் வழங்கப்பட்டது. ஆனால், இதற்கான சட்டமுன்வடிவு எப்பொழுது வந்தது ? **2021** சட்டமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு மாலையில் வரப் போகிறது என்று காலையில் செய்தி வருகிறது. அன்று மாலையில், குறிப்பாக தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வருவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக, இந்தச் சட்டமுன்வடிவு அவையிலே கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**2012** முதல் **2021** வரை உள்ள இடைவெளிக்குப் பிறகு, காலையில் தேர்தல் அறிவிப்பு; மாலையில் இச்சட்டம் என்று, அதுவும் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வருவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாகக் கொண்டுவந்து, **26.02.2021** அன்று நிறைவேற்றிய, அந்த அவசரம்தான் உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் வெளிவந்த இந்தத் தீர்ப்பிற்கு முக்கியக் காரணமாக அமைந்திருக்கிறது.

உச்சநீதிமன்றமே இதுகுறித்த தீர்ப்பில், "We find that the Government has committed an error" என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. **26.02.2021**லிருந்தது யாருடைய தலைமையிலான அரசு என்பதைச் சொல்லித் தெரியவேண்டிய அவசியமில்லை. தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மற்ற குறைகளை இந்த மன்றத்தில் நானும் ஒரு முறை சுட்டிக்காட்டி, ''ஏட்டிக்குப் போட்டி அரசியல் நடத்த நான் தயாராக இல்லை''.

இந்தச் சிறப்பு ஒதுக்கீடு சட்டம் தற்காலிகமானது என்று யார் சொன்னது என்ற வாதத்திற்குள் கூட இப்போது நான் செல்ல விரும்பவில்லை. ஏனென்றால், இது மாநிலத்தினுடைய சமூக நீதிப் பிரச்சினை; சிறப்பு இட ஒதுக்கீடு தொடர்பான பிரச்சினை. ஆகவே, இந்த சிறப்பு இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரைக்கும், சட்ட

வல்லுநர்களுடன் உரிய ஆலோசனை நடத்தி, நிச்சயம் சமூக நீதி நிலைநாட்டப்படும்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவிகித ஒதுக்கீடு தொடர்பாக அறிக்கை ஒன்றினை, செய்தி ஒன்றினை நான் இங்கே படித்தேன். இன்றைக்கு உயர்நீதிமன்றத்திலே வழங்கியிருக்கக்கூடிய தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, இந்த 7.5 சதவிகித ஒதுக்கீட்டை நாங்கள் கொண்டுவந்தபோது, அறிமுகப்படுத்தியபோது, என்னென்ன தரவுகளையெல்லாம் வைத்து நாங்கள் முறைப்படுத்தினோமோ, நிச்சயமாக அதேபோன்று நாங்கள் இந்த விஷயத்திலும் நிலைநிறுத்துவோம் என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கான அதிகாரம் இந்த மாபெரும் மன்றத்திற்கும், மாநில அரசுக்கும் உண்டு என்று தீர்ப்பில் உச்சநீதிமன்றம் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்து, அமைகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், வன்னியர் சமுதாயத்திற்கு*
*10.5 விழுக்காடு சிறப்பு ஒதுக்கீடு தொடர்பாக*
*ஆற்றிய உரை – 07.04.2022*

# முன்னாள் மக்கள் நலப்பணியாளர்களுக்கு “வேலை உறுதித் திட்டப்பணி ஒருங்கிணைப்பாளர்” என்ற பணி வழங்கப்படும்



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலப் பணியாளர்கள் குறித்து இங்கே எழுப்பப்பட்டிருக்கக்கூடிய கேள்விக்கு, ஒரு நல்ல விளக்கத்தை நான் அளிக்க விரும்புகிறேன்.

ஊரகப் பகுதிகளில் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல், கிராம பொதுச் சொத்துக்களைப் பேணிக் காத்திடல், சிறு சேமிப்புத் திட்டத்திற்கு உதவுதல் போன்ற கிராம அளவிலான பல்வேறு பணிகளுக்காக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் 02.09.1989இல், ஒரு ஊராட்சிக்கு ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் என்ற அடிப்படையிலே, மொத்தம் 12 ஆயிரத்து 617 ஊராட்சிகளுக்கு 25 ஆயிரத்து 234 மக்கள் நலப் பணியாளர்கள் அப்போது நியமனம் செய்யப்பட்டார்கள்.

**13.07.1991**இல் இப்பணியிடங்கள் அன்றைய அ.தி.மு.க. அரசால் இரத்து செய்யப்பட்டது. உங்களுடைய அ.தி.மு.க. ஆட்சியில்தான் இரத்து செய்தீர்கள். மீண்டும் கழக ஆட்சி அமைந்ததற்குப் பின்பு, மீண்டும் இப்பணியிடங்கள் **24.02.1997** அன்று தோற்றுவிக்கப்பட்டன. பின்னர் அமைந்த உங்களுடைய அ.தி.மு.க. அரசால் **01.06.2001** அன்று மீண்டும் இரத்து செய்யப்பட்டது. **12.6.2006**இல் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் இப்பணியிடங்களைத் தோற்றுவித்து, ஊராட்சிக்கு ஒருவர் என **12** ஆயிரத்து **618** மக்கள் நலப் பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டன. இறுதியாக **08.11.2011**–லும் அன்றைய அ.தி.மு.க. அரசால் இப்பணியிடங்கள் இரத்து செய்யப்பட்டன. எப்பொழுதெல்லாம் அ.தி.மு.க. ஆட்சிக்கு வருகிறதோ, அப்பொழுதெல்லாம் இரத்து செய்திருக்கிறது. தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் மீண்டும் அவர்கள் பணி அமர்த்தப்படுகிறார்கள். இதுதான் மாறி, மாறி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதனுடைய தொடர்ச்சியாக, மக்கள் நலப் பணியாளர்கள் சார்பாக பல்வேறு வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, இறுதியாக மேல்முறையீட்டு வழக்குகளில் **19.08.2014** அன்று மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தால் மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீளப் பணி வழங்க வேண்டுமென்ற அடிப்படையிலே தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்படி, சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை எதிர்த்து அப்போதைய அ.தி.மு.க. அரசு சார்பில் டில்லி உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, **19.08.2014** நாளிட்ட உத்தரவில் சென்னை உயர்நீதிமன்றம் பணி நியமனம் வழங்க உத்தரவிட்டு அளித்த தீர்ப்பிற்கு இடைக்கால தடை (Interim stay)

விதித்தது. 11.08.2017 அன்று மேற்படி சிறப்பு விடுப்பு மனுக்கள் Civil Appeal–ஆக மாறுதல் செய்யப்பட்டு, கடைசியாக 28.02.2022 அன்று விசாரணைக்கு வரப்பெற்று தற்போது நிலுவையில் இருக்கிறது.

இந்த நிலையில், மக்கள் நலப் பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினைக் கருத்தில்கொண்டு, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பாக அவர்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. பின்னர், நிலுவையில் உள்ள வழக்கில், தீர்ப்பிற்கு உட்பட்டு நீதிமன்ற ஆணைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களோடு ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில், பின்வரும் முடிவுகள் மாண்பமை உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு உட்பட்டு எடுக்கப்பட்டுள்ளன:

மாநிலத்திலுள்ள 12 ஆயிரத்து 524 கிராம ஊராட்சிகளில் உள்ள "வேலை உறுதித் திட்டப் பணி ஒருங்கிணைப்பாளர்" என்ற பணியிடத்தில் விருப்பம் தெரிவிக்கும் முன்னாள் மக்கள் நலப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளித்து, இப்பணி வாய்ப்பு வழங்கப்படும்.

இப்பணிக்கென ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள மதிப்பூதியத்தினை ரூ.3,000/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தியும், மக்கள் நலப் பணியாளர்கள் ஏற்கெனவே கிராம ஊராட்சிப் பணிகளில் பணியாற்றியதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு கிராம ஊராட்சிப் பணிகளைக் கூடுதலாக கவனிக்க வாய்ப்பளித்து, அதற்கென மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.2,500/– வழங்கவும், இதன்படி இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு

ஒட்டுமொத்த மதிப்பூதியமாக ரூ.7,500/– வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுமட்டுமல்ல, கடந்த 10 ஆண்டுக் காலத்தில், காலமான மக்கள் நலப் பணியாளர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு, அவர்கள் விரும்பினால், அவர்களுக்கும் முன்னுரிமை வழங்கி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணி ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றக்கூடிய வாய்ப்பு வழங்கப்படும் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மக்கள் நலப் பணியாளர்கள் குறித்த கேள்விக்கு, பதிலளித்து ஆற்றிய உரை –* ***08.04.2022***

# ஒன்றிய அரசு
# இளங்கலை படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வினை இரத்து செய்ய வேண்டும்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளங்கலைப் படிப்புகளுக்கு பொது நுழைவுத் தேர்வு குறித்த தீர்மானத்தின் முன்னுரையாக நான் ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

மாநிலத்தின் கல்வி உரிமை மீது ஒன்றிய அரசின் தாக்குதல் தொடருகிறது. பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதியுதவியுடன் இயங்கும் அனைத்து மத்தியப் பல்கலைக்கழகங்களிலும், இளங்கலை உள்ளிட்ட பல்வேறு படிப்புகளுக்கான சேர்க்கைகளுக்கு "பொது நுழைவுத் தேர்வு"என்று அறிவித்து, வருகின்ற 2022–2023ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்த திட்டமிட்டிருக்கிறது.

இந்த நுழைவுத் தேர்வு மதிப்பெண்களை மாநிலப் பல்கலைக்கழகங்கள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், தனியார் பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள்கூட இளங்கலைப்

படிப்புகளின் மாணவர் சேர்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என "பீடிகை" போட்டு, ஓர் அறிவிப்பினை ஒன்றிய அரசின்கீழ் இயங்கக்கூடிய பல்கலைக்கழக மானியக் குழு வெளியிட்டுள்ளது. அதனை எதிர்த்து இந்த மாமன்றத்தில் பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**தீர்மானம்**

"ஒன்றிய அரசின்கீழ் இயங்கும் பல்கலைக்கழக மானியக் குழு, 2022–2023ஆம் கல்வியாண்டு முதல், அம்மானியக் குழுவின் நிதியுதவியுடன் இயங்கும் அனைத்து மத்தியப் பல்கலைக்கழகங்களிலும், இளங்கலை உள்ளிட்ட பல்வேறு படிப்புகளுக்கான சேர்க்கைகள் தேசிய தேர்வு முகமை (National Testing Agency-NTA) நடத்தும் பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு (Common University Entrance Examination-CUET) மூலம் மட்டுமே நடைபெறும் என்று அறிவித்துள்ளது. +2 தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களைக் கணக்கில் கொள்ளாமல், பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் (CUET) மாணவர்கள் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே சேர்க்கை நடைபெறும் எனவும், மாநிலப் பல்கலைக்கழகங்கள், தனியார் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் விரும்பினால் மாணவர்கள் சேர்க்கையை நடத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது.

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு (NCERT) பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு நுழைவுத் தேர்வும், நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாநிலப் பாடத் திட்டங்களில் படித்த மாணவர்கள் அனைவருக்கும் சமமான வாய்ப்பினை வழங்கிடாது என்று இந்தப் பேரவை கருதுகிறது. பெரும்பாலான மாநிலங்களில், மொத்த மாணவர்களில் 80 விழுக்காட்டிற்கும் அதிகமான மாணவர்கள் மாநிலப் பாடத் திட்டங்களில் பயின்று வருபவர்கள். இவர்கள் பெரும்பாலும் விளிம்புநிலைப் பிரிவினரைச் சேர்ந்தவர்களாவர். எனவே, NCERT பாடத் திட்ட அடிப்படையிலான நுழைவுத் தேர்வு, மத்திய பல்கலைக்கழகங்களில் சேருவதற்குத்

தகுதியான பெரும்பான்மையினருக்கு பாதகமான நிலையை ஏற்படுத்துவதோடு, இந்தச் சூழ்நிலை நம் நாட்டிலுள்ள பல்வேறு மத்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றின் இணைப்புக் கல்லூரிகளில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கும் என்றும் இந்தப் பேரவை கருதுகிறது.

இந்நுழைவுத் தேர்வும், நீட் தேர்வைப் போன்றே நாடு முழுவதும் உள்ள பல்வேறு பள்ளிக் கல்வி முறைகளை ஓரங்கட்டி, பள்ளிகளில் நீண்ட காலக் கற்றல் முறைகளை வெகுவாகக் குறைத்து மதிப்பிட வழிவகுப்பதோடு, மாணவர்கள் தங்களது நுழைவுத் தேர்வு மதிப்பெண்களை அதிகரிக்க பயிற்சி மையங்களைச் சார்ந்திருக்கும் ஒரு சூழலை ஏற்படுத்திவிடும் என்பதில் ஐயமில்லை. மேலும், மாணவர்களுக்கான பயிற்சி மையங்கள் புற்றீசல் போன்று வளர மட்டுமே இது சாதகமாக அமையும் என்று தமிழக மக்களிடையே அச்சம் எழுந்திருக்கிறது. இவ்வாறு ஒரு நுழைவுத் தேர்வினைச் செயல்முறைக்கு கொண்டு வருவதால், பள்ளிக் கல்வியோடு பயிற்சி மையங்களையும் நாடும் இளைய மாணவ சமுதாயத்தினர் பெரும் மனஉளைச்சலுக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

எனவே, மாநில அரசுகளின் உரிமையினை நிலைநாட்டும் பொருட்டு, மத்தியப் பல்கலைக்கழகங்களில் பல்வேறு படிப்புகளில் சேர்வதற்காக நடத்தவிருக்கும் பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வினை இரத்து செய்திட ஒன்றிய அரசினை இந்தப் பேரவை வலியுறுத்துகிறது''

எனும் தீர்மானத்தை நான் மொழிகிறேன்.''

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இளங்கலைப் படிப்புகளுக்கு–*
*பொது நுழைவுத் தேர்வு தொடர்பாக தீர்மானத்தை*
*முன்மொழிந்து ஆற்றிய உரை – **11.04.2022***

# தமிழ்நாட்டு மக்களின் உணர்வினைப் பிரதிபலிக்கும் தீர்மானம்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தனித் தீர்மானத்தின்மீது, பாரதீய ஜனதா கட்சியைத் தவிர்த்து, இந்த அவையிலே இருக்கக்கூடிய மற்ற எல்லாக் கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகளும், தலைவர்களும் இங்கே வரவேற்றுப் பேசி, இந்தத் தீர்மானத்திற்கு ஒரு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் தந்திருக்கிறார்கள். அதற்காக முதலிலே நான் அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானம் தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வினைப் பிரதிபலிப்பதாக இருப்பதால், இந்தப் பொது நுழைவுத் தேர்வினை இரத்து செய்திட வேண்டுமென்று எட்டரை கோடி தமிழ் மக்களின் சார்பிலே ஒன்றிய அரசை இந்த மன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக மாணவர்களுடைய எதிர்காலம் பாதிக்காத வகையிலே, ஒன்றிய அரசு பொது நுழைவுத் தேர்வினை இரத்து செய்திட வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இளங்கலை உள்ளிட்ட பல்வேறு படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வு தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீது சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் / பிரதிநிதிகள் பேசிய பின்னர், நன்றி தெரிவித்து ஆற்றிய உரை – **11.04.2022***

# மக்களுக்கு எது சாதகம் என்பதை புரிந்துகொண்டு நடக்க வேண்டும்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை நீதிமன்றத்திலே இருக்கிறது. இன்று அதிலே தீர்ப்பை எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம். இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேகர்பாபு அவர்கள் மிக விளக்கமாக என்ன சொல்ல வேண்டுமோ, அவை அனைத்தையும் பதிலாக இங்கே தந்திருக்கிறார்கள். எனவே, நான் அதற்குள் அதிகம் செல்ல விரும்பவில்லை.

இருந்தாலும், பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். அது என்னவென்று கேட்டால், ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினைகளில் நீங்கள் கொஞ்சம் அதிகம் கவனம் செலுத்துங்கள். இதுதான் என்னுடைய வேண்டுகோள். சாமானிய மக்கள் பாதிக்கிற வகையில், இன்றைக்கு பெட்ரோல் விலை, டீசல் விலை, அதேபோன்று,

கேஸ் சிலிண்டர் விலை, இவையெல்லாம் உயர்ந்து கொண்டே போகிறது. அதைக் கட்டுப்படுத்துகிற முயற்சியிலே நீங்கள் ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டிய நிதியைப் பற்றி விளக்கமாக, விரிவாக சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சர்களிடத்திலே, குறிப்பாக, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடத்திலே நான் வலியுறுத்திவிட்டு வந்திருக்கிறேன். எனவே, அதற்கு நீங்கள் support–ஆக இருந்து, அதைப் பெறுவதற்கான முயற்சியிலே நீங்கள் ஈடுபட வேண்டும். நம்முடைய மாநில மக்களுக்கு எது சாதகம் என்பதைப் புரிந்து கொண்டு நீங்கள் நடக்க வேண்டும். எனவே, தேவையில்லாமல், இதிலே அரசியலைப் புகுத்தி, அதன்மூலமாக நீங்கள், உங்களுடைய கட்சியைப் பலப்படுத்த வேண்டும், வளப்படுத்த வேண்டுமென்று நினைத்தீர்களேயானால், அது நடக்கவே நடக்காது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த*
*மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்*
*எழுப்பிய பிரச்சினைக்கு, குறுக்கிட்டு பதிலளித்து*
*ஆற்றிய உரை –* ***12.04.2022***

# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் "சமத்துவ நாள்"



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் அம்பேத்கர் வடக்கில் உதித்த சமத்துவ சூரியன்; பலர் வாழ்வில் கிழக்காய் இருந்த பகலவன்; சமூகம் ஏற்படுத்திய ஏற்றத் தாழ்வை, கல்வி, சட்டம், அரசியல் எழுச்சி மூலமாக சமப்படுத்திய போராளி; 'இருட்டறையில் இருக்குதடா உலகம்; சாதி இருக்கிறதென்போனும் இருக்கின்றானே' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய வரிகளைப்போல, சாதிக் கொடுமையால் இருண்ட உலகத்தைத் தன்னுடைய பரந்த அறிவால், ஞானத்தால் விடிய வைத்த விடிவெள்ளி அண்ணல் அம்பேத்கர் அவர்கள். அவர் வேண்டாததை நீக்கிய சிற்பி; வேண்டியதைச் சேர்த்த ஓவியர்; அண்ணல் அறிவுச்சுடராய் விளங்கி அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துக்கொடுத்தவர். அவருடைய கருத்துக்கள் ஆழமும், விரிவும் கொண்டவை; எதிர்காலத்திற்கு ஒளிவிளக்கு அது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பாக மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பெரியார் பிறந்தநாளை 'சமூகநீதி நாளாக' அறிவித்தது போல, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் தேதியை 'சமத்துவ நாள்' என்று கொண்டாட வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்று, ஏப்ரல் 14 ஆம் தேதி இனி சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும் என்றும், சமத்துவ நாள் உறுதிமொழி தமிழ்நாடு முழுவதும் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றைய கூட்டத்தில் அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில், அண்ணலுடைய முழு அளவு வெண்கலச் சிலையை நிறுவ வேண்டுமென்ற கோரிக்கையை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் தொல். திருமாவளவன் முன்வைத்தார்கள்.

அந்தக் கோரிக்கையையும் ஏற்று, அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் முழுஉருவ வெண்கலச் சிலை நிறுவப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான திரு.ஆ.ராசா அவர்கள், பெரியாருடைய நூல்களை 21 மொழிகளில் மொழி பெயர்த்ததைப் பாராட்டியதோடு, அண்ணல் அம்பேத்கருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களைத் தமிழில் வாசிக்க வாய்ப்பாக மொழிபெயர்த்துப் புதுப்பிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை விடுத்திருந்தார்.

அந்தக் கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தமிழக அரசால் அண்ணலுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் செம்பதிப்பாக

தமிழில் வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகநீதியின் நோக்கம் சமத்துவத்தை அடைவதே என்பதையும், இவ்விரண்டும் நம் இலக்கின் இரண்டு கண்கள் என்பதையும் இந்த மாமன்றம் மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டமே அறியும். தமிழர்கள் அனைவரும் உயர்ந்த நிலையை அடைய, எத்தகைய விண்ணப்பம் வந்தாலும், அதை உடனே பரிசீலித்து ஆவன செய்கிற ஆட்சிதான் இப்போது நடக்கிறது என்பதைத் தெரிவித்து, இந்தளவில் இந்த அறிவிப்பை நிறைவு செய்து அமைகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி **110**இன்கீழ்*
*'அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் **14**ஆம் தேதி*
*'சமத்துவ நாள்' என்று கொண்டாடப்படும்'*
*என அறிவித்து ஆற்றிய உரை – **13.04.2022***

# “என் கடன், பணி செய்து கிடப்பதே”



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழரைக் கோடி தமிழ் மக்களின் ஒட்டுமொத்த உணர்வையும் பிரதிபலிக்கும் நீட் தேர்வுக்கு விலக்கு கோரும் சட்டமுன்வடிவு கடந்த 210 நாட்களாக கிண்டி ஆளுநர் மாளிகை வளாகத்தில் முடங்கிக் கிடக்கிறது. நூற்றாண்டு கண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டமுன்வடிவு கிண்டி ஆளுநர் மாளிகை வளாகத்தில் கவனிப்பாரின்றிக் கிடக்கிறது.

அப்படிப்பட்ட வேளையில், அதே ஆளுநர் மாளிகை வளாகத்தில் நடக்கக்கூடிய தேநீர் விருந்து என்ற விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வது என்பது ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளைப் புண்படுத்துவதாகவும், சட்டமன்ற மாண்பினை மேலும் சிதைப்பதாகவும் அமைவதாலேயே, அந்தக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள இயலாத நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டது.

இதுகுறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு நானே ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அதில் அதற்கான விவரங்கள் எல்லாம் விரிவாகத் தரப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு ஆளுநர் அவர்களுடன் எங்களுக்கு எந்தவிதமான தனிப்பட்ட விரோதமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், தனிப்பட்ட முறையில் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களுக்கும், தமிழ்நாடு முதலமைச்சரான எனக்கும் மிகமிகச் சுமுகமான உறவு இருக்கிறது. நேரில் பேசும்போது, இந்த ஆட்சியின் செயல்பாடுகளை மிகவும் பாராட்டி அவர் பேசியிருக்கிறார். நாங்கள் ஆட்சி நடத்தக்கூடிய விதம் குறித்து பொது மேடையிலேயே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அது ஊடகங்களில் எல்லாம் வெளியாகி இருக்கிறது.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பழகுவதற்கு அதிகம் இனிமையானவர். எங்களுக்கு அதிகமான மரியாதையை அவர் தருகிறார். ஆளுநர் என்ற முறையில் அந்தப் பதவிக்குரிய மரியாதையை நாங்களும் அளிக்கிறோம்; அளித்துக் கொண்டிருக்கிறோம்; தொடர்ந்து அளிப்போம். இது அரசியல் எல்லைகளைக் கடந்த பண்பாடு. இந்தப் பண்பாட்டை எப்போதும், எந்த நிலையிலும் நாம் அனைவரும் காக்க வேண்டும்; காப்போம்.

தனிப்பட்ட முறையில் எனக்குக் கிடைக்கக்கூடியப் பாராட்டுக்களை விட, தமிழ்நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய நன்மையும், பலனுமே முக்கியமானது. அதனையே முக்கியமானதாக நான் கருதுகிறேன்.

இந்தச் சட்டமன்றத்தின் மாண்பை, தமிழ்நாட்டு மக்களின் உணர்வை மதித்து, நீட் விலக்கு மசோதாவை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அனுப்பிவைத்தாக வேண்டும். அப்படி அனுப்பிவைக்காதது முறையானது அல்ல. இந்தச் சபையின் மாண்புக்கு விரோதமானது

ஆகும். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அனுப்பி வைக்காதது என்பது எனக்கல்ல; இந்தத் தமிழ்நாட்டு மக்களை அவமதிக்கக்கூடிய செயலாகும்.

நான் இந்தப் பேரவைக்குச் சொல்வதெல்லாம், சொல்ல விரும்புவதெல்லாம், கடந்த **50** ஆண்டு கால பொது வாழ்க்கையில் நான் எத்தனையோ வலிகளையும், அவமானங்களையும் சந்தித்து வந்திருக்கிறேன். அது எனக்கு ஒரு பொருட்டல்ல. இந்த **50** ஆண்டு கால பொது வாழ்க்கை எனக்கு கற்றுத் தந்தது எல்லாம் வலிகளையும், அவமானங்களையும், புகழ்ச்சிகளையும், பாராட்டுரைகளையும் புறந்தள்ளிவிட்டு – ‘‘என் கடன், பணி செய்து கிடப்பதே’’ என்று செயல்படுவதுதான். அப்படித்தான் நான் செயல்பட்டு வருகிறேன்.

‘‘பொது வாழ்க்கையில் மக்கள் நலன் சார்ந்து செயல்படுவதுதான் தலையாய கடமை’’ என்பதே பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழியிலே நான் கற்றுக் கொண்டிருக்கக்கூடிய பாடமாகும். அந்த வழியில்தான் நான் சென்று கொண்டிருக்கிறேன். ஆனால், தனிப்பட்ட முறையில் எனக்குக் கிடைக்கக்கூடிய வலி, அவமானங்களைப் பொறுத்துக்கொண்டு, அதனால் தமிழ்நாட்டுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு ஏதேனும் நன்மை கிடைக்கும் என்றால், புகழ்ச்சிகளையும், பாராட்டுரைகளையும் நான் புறந்தள்ளிவிட்டு, அவமானங்களையும், வலிகளையும் தாங்கிக் கொள்ளவே நான் எப்போதும் தயாராக இருப்பேன்.

தமிழ்நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்த உணர்வாக இருக்கக்கூடிய நீட் விலக்கு சட்டமுன்வடிவை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்புவதுதான் முக்கியம். அதற்காகத்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது. எனவே, தனிப்பட்ட ஒரு நபருக்கான மரியாதைகள், புகழுரைகள் இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு, தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி தொடர்ந்து நான் முயற்சித்துக் கொண்டேயிருப்பேன்.

தமிழ்நாடு முதலமைச்சராக இந்தச் சட்டமன்றத்தின், நூற்றாண்டு கண்ட சட்டமன்றத்தின் மாண்பைக் காக்கும் பொறுப்பும் என்னுடையது என்று புரிந்துகொண்டதால்தான் இந்த முடிவை எடுக்க நேரிட்டது. தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளைத் தொடர்ந்து நாம் அனைத்து மன்றங்களிலும் எதிரொலிப்போம். அவர்களது உரிமையை நிலைநாட்டுவோம்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பிய மசோதாவை, இந்தச் சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் **08.02.2022** அன்று நிறைவேற்றி, மீண்டும் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு நாம் அனுப்பி வைத்தோம். இன்றுடன் **70** நாட்கள் ஆகின்றன. இந்நிலையில், நீட் விலக்கு மசோதாவை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்க மாண்புமிகு ஆளுநர் அவர்கள் முடிவு செய்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அது தொடர்பான நடவடிக்கைகளைப் பார்த்துவிட்டு, தேவைப்பட்டால், அனைத்து சட்டமன்றக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து அமைகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், விதி 110இன்கீழ்*
*ஆளுநர் விவகாரம் தொடர்பாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்*
*அறிவித்து ஆற்றிய உரை – **18.04.2022***

# சிறப்பாக செயலாற்றும் தொழில் துறை



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அ.தி.மு.க.—வினுடைய சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் உரையாற்றுகிறபோது, நான் எனது வெளிநாடு சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு, சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடத்திலே சொன்னதாக ஒன்றை இங்கே பதிவு செய்திருக்கிறார். நான் அப்படிச் சொல்லவில்லை. 10 வருடங்களாக நடக்காததை, 10 மாதங்களில் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்ற அடிப்படையில்தான் சொன்னேனேத் தவிர, வேறல்ல.

அவர் பேசுகின்றபோது, இன்னொன்றையும் குறிப்பிட்டார். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, முதலீடுகள் எப்படி வந்தன ? உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை எப்படிக் கூட்டினோம் ? அதேபோல,

எத்தனைத் தொழிற்சாலைகளைக் கொண்டுவந்திருக்கிறோம். அதனால், வேலைவாய்ப்புகள் எத்தனை பேருக்குக் கிடைத்திருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் சொன்னார்.

அதேபோல, அதைத் தொடர்ந்து, இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய, அன்றைக்கு முதலமைச்சராக இருந்தவர், அவர் ஆட்சிக் காலத்திலே கொண்டுவந்த முதலீடுகளைப் பற்றியும் குறிப்பிட்டார். அதேபோல, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைக் கூட்டி எவ்வளவு கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் பெற்றிருக்கிறோம்; எத்தனை பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன; எத்தனைத் தொழிற்சாலைகளை உருவாக்கியிருக்கிறோம் என்பதையெல்லாம் பேசியிருக்கிறார். அதற்கெல்லாம், நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் இடையிடையே எழுந்து அதற்கு பதில் சொல்லாமல், அவர் பேசி முடித்ததற்குப்பிறகு, நிறைவாக அவருடைய பதிலுரையிலே அவற்றிற்கெல்லாம் விளக்கமாகப் பதில் சொல்லவிருக்கிறார்.

இருந்தாலும், தொழில் முதலீட்டாளர்களைச் சந்திக்க, தொழில் துறை முன்னேற்றத்திற்காக நான் வெளிநாடு சென்றுவந்த காரணத்தினால், அதிலே எனக்கும் பங்கு உண்டு என்ற அந்த உணர்வோடு சில விளக்கங்களை இந்த அவைக்கு நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதிலே எந்த மாற்றமும் கிடையாது. இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து, புதிய அன்னிய முதலீடுகளைப் பெறுவதற்காக, புதிய முதலீடுகளைப் பெறுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்ந்து போடப்பட்டு வருகின்றன.

ஆட்சிக்கு வந்து பத்தே மாதங்களில், **131** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக **69** ஆயிரத்து **375** கோடியே **54** இலட்சம்

ரூபாய் முதலீட்டை ஈர்த்திருக்கிறோம். புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடுவது மட்டும் முக்கியமல்ல; மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது சொன்னார்; 'MoU போட்டவுடனே, அடுத்த நிமிடமே, அடுத்த மாதமே தொழிற்சாலை வந்துவிடும்; வேலைவாய்ப்பு கிடைத்துவிடும் என்று நான் சொல்லவில்லை. படிப்படியாகத்தான் அவையெல்லாம் வரும்' என்ற அடிப்படையில் தனது கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆகவே, அதில் உறுதி செய்யப்பட்டிருக்கிற முதலீடுகளைக் கொண்டுவருவதுதான் மிக மிக முக்கியம்.

அந்த வகையில், இந்த 10 மாதங்களில் புதிய முதலீடுகள் வந்திருக்கின்றன; புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன; புதிய வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. தொழில் வளர்ச்சியின் பயன் குறிப்பிட்டப் பகுதிகளுக்கு மட்டுமே சென்றடையாமல், தமிழ்நாடு முழுமைக்கும் அது சென்றாக வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்த அரசு தன்னுடைய பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின், 'வளர்ச்சி குறைந்த மாவட்டங்களுக்கும்' அதனுடைய வளர்ச்சி, பயன்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதிலும் நாங்கள் உறுதியாக இருந்து பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறோம்.

அதனால்தான், இன்றைக்குக்கூட பிரபலமான தமிழ் பத்திரிகையான தினத்தந்தி பத்திரிகையின் தலையங்கத்தைப் பார்த்திருந்தால், நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள். அந்தப் பத்திரிகையின் தலையங்கத்தில் இன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறார்கள்; "தமிழ்நாட்டில் குவிகிறது அன்னிய நேரடி முதலீடுகள்" என்று இந்த அரசைப் பாராட்டி, அந்தப் பத்திரிகை தலையங்கமே எழுதியிருக்கிறது.

ஏற்கெனவே, ஆங்கில நாளேடான இந்து பத்திரிகை, 'அன்னிய முதலீடுகளை ஈர்க்கக்கூடிய தமிழ்நாடு' என்று பாராட்டி

எழுதியிருக்கிறது. அதுமட்டுமல்ல; ஒன்றிய அரசின் தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சகத்தின்கீழ் இயங்கும் நிறுவனமே, "2021 ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான" காலக்கட்டத்தில், தமிழ்நாட்டில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 41.5 விழுக்காடு அதிகரித்திருக்கிறது என்று புள்ளிவிவரத்தையும் வெளியிட்டிருக்கிறது.

தேசிய அளவில் பார்த்தீர்களென்றால், 16 விழுக்காடு வீழ்ச்சியைச் சந்தித்த அதே காலக்கட்டத்தில், தமிழ்நாடு இந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்பது மிகவும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய, பெருமைப்படத்தக்க ஒரு செய்தியாகும். நாட்டின் ஒட்டுமொத்த அன்னிய நேரடி முதலீட்டில் தமிழ்நாட்டின் பங்கு 4 விழுக்காட்டில் இருந்து 5 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது.

தமிழ்நாடு அரசின் தொழில் துறை வழிகாட்டி நிறுவனமாக இருக்கக்கூடிய Guidance Tamil Nadu 'ஆசிய ஓசியானியா' பகுதியில் சிறந்த தொழில் முதலீடு ஊக்குவிப்பு முகமை என்ற சர்வதேச விருதினைப் பெற்றிருக்கிறது. அதற்காக அமெரிக்க தூதரகமே இந்த அரசைப் பாராட்டியிருக்கிறது. தமிழ்நாட்டைத் தொழில் முதலீட்டாளர்களின் முக்கிய மாநிலமாக மாற்றிக் காட்டியிருக்கக்கூடிய தொழில் துறைக்கு, குறிப்பாக, இந்தத் தொழில் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு.தங்கம் தென்னரசு அவர்களுக்கும், அவருக்குத் துணையாக நின்று பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய தொழில் துறை அதிகாரிகள் அனைவருக்கும் மனமார்ந்த, பாராட்டை, வாழ்த்துக்களை இந்த அவையின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தலைமையில் இயங்கக்கூடிய இந்தத் தொழில் துறை Team, நிச்சயமாக, உறுதியாக தமிழ்நாட்டை தொழில் துறையில் முதன்மை மாநிலமாக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

தொழில் வளர்ச்சிக்கு சட்டம்–ஒழுங்கு சிறப்பாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்.

எனவே, சட்டம்–ஒழுங்கு முக்கியமாகத் தேவைப்படுகிறது. சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை வராமல் இருப்பதற்கு தொழில் வளர்ச்சி நிச்சயமாகத் தேவைப்படுகிறது. அதை மனதில் வைத்துதான் தொழில் துறை வளர்ச்சிக்கு, நானும், இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய அமைச்சர் அவர்களும், அவருக்குக் கீழ் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய இந்தத் துறை அதிகாரிகளும் அதற்காகத் தொடர்ந்து உழைத்துக்கொண்டிருக்கிறோம். உழைத்துக்கொண்டிருப்பது மட்டுமல்ல; இந்த அவையில் இருக்கக்கூடிய ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு பார்க்காமல், நீங்களும் அதற்கான ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தரக்கூடிய வகையில் முன்வர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு, சிறப்பாகச் செயலாற்றிக்கொண்டிருக்கக்கூடிய தொழில் துறைக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து அமைகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*

*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*

*தொழில் துறையில் முதலீடுகள் குறித்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை –* ***19.04.2022***

# அரசியல் சட்டப் பதவிகளில் இருப்பவர்களை பாதுகாக்கும் கடமையை காவல்துறை செவ்வனே நிறைவேற்றும்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நேரமில்லா நேரத்தைப் பயன்படுத்தி, ஒரு முக்கியமான பிரச்சினையை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அதேபோல, சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், சட்டமன்ற பா.ஜ.க. தலைவர் ஆகியோர் இங்கே உரையாற்றியிருக்கிறார்கள்.

அதாவது, நேரமில்லா நேரத்தைப் பயன்படுத்தி அரசிடம் கேள்வியைக் கேட்கின்றபோது, அதற்குரிய பதிலை அவர்கள் பொறுமையாக இருந்து கேட்டு, அதிலே அவர்களுக்கு உடன்பாடு இல்லை என்று சொன்னால், வெளிநடப்பு செய்யட்டும்; நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அதுதான் மரபு. ஆனால், அவர்களுக்கேத் தெரிந்துவிட்டது. இதிலே பதில் சொல்கிறபோது, நாம் என்னென்ன செய்திருக்கிறோம் என்று சொல்வார்கள்

என்பது அவர்களுக்குத் தெரியும். அதைத்தான் திரு.செல்வப் பெருந்தகை அவர்கள் மிக விளக்கமாக இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தருமபுரம் ஆதீனம் அவர்களைச் சந்திக்க திருக்கடையூர் கோயிலில் இருந்து புறப்பட்டுச் சென்றபோது, அவருடைய வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெற்றிருக்கக்கூடிய போராட்டத்திற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கூடுதல் டி.ஜி.பி. (சட்டம்—ஒழுங்கு) அவர்கள் நேற்றையதினம் தெளிவாக ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார். அதை முழுமையாக நீங்கள் பத்திரிகைகளிலே பார்த்திருக்கலாம்; தொலைக்காட்சிகளிலும் கேட்டிருக்கலாம். இருந்தாலும் காவல் துறையின் கூடுதல் இயக்குநர் முக்கியமாகக் குறிப்பிட்டிருக்கக்கூடிய ஒன்றை நான் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

'இந்த ஆர்ப்பாட்டத்தில் மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய கான்வாய் மீது கற்கள், கொடிகள் வீசியதாகக் கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லை. காவல் துறையினர், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைத் தடுப்புகள் அமைத்து, கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். பின்னர், அவர்களைக் கைது செய்து வாகனங்களில் ஏற்றினர். வாக்குவாதம் செய்து, பிளாஸ்டிக் பைப்புகளில் கட்டப்பட்டிருந்த கொடிகளை வீசி எறிந்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை' என்பதை காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்கள் மிகத் தெளிவாக, மிக விளக்கமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

அதேபோல, A.D.C. to the Hon'ble Governor of Tamil Nadu அவர்கள் ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார். Official—ஆக அவர் நம்முடைய Director General of Police (DGP)—க்கு ஒரு கடிதத்தை அனுப்பி வைத்திருக்கிறார். அதிலே, அவர் கடைசியாகக்

குறிப்பிட்டிருப்பது, “fortunately, Hon’ble Governor and the convoy passed unarmed”. அதாவது, மாண்புமிகு ஆளுநர் மற்றும் அவரது பாதுகாப்பு வாகனங்கள் கற்களோ, கொடிகளோ மற்றும் எந்தப் பொருட்களாலும் பாதிக்கப்படாமல் காவல் துறையால் பாதுகாக்கப்பட்டன என்ற செய்தியை ஆளுநர் அவர்களுடைய பாதுகாப்பு அதிகாரி, காவல் துறை இயக்குநருக்குக் கடிதம் மூலம் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

ஆனால், இதுதான் நமக்கு chance; இதை அரசியலுக்காக நாம் பயன்படுத்திட வேண்டும் என்று நினைத்திருக்கிறார்கள். இது அரசியல் கட்சிகளுக்கு சாதாரணமாக இருக்கக்கூடிய இயல்புதான். பொதுவாக, அ.தி.மு.க.—விலே இருக்கக்கூடிய அந்த ஒருங்கிணைப்பாளர்கள் இரண்டு பேரும் திட்டமிட்டு சேர்ந்துதான் அறிக்கை கொடுப்பார்கள். இங்கேயிருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகிய இரண்டு பேரும் சேர்ந்துதான் அறிக்கை கொடுப்பார்கள். ஆனால், இந்த அறிக்கை மட்டும் தனித்தனியாக வந்தது. அப்பொழுதே நீங்கள் புரிந்துகொள்ளலாம். அதிலே குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அவருடைய அறிக்கையிலே கடைசியாக, ‘தமிழக ஆளுநர் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்திற்கு காவல் துறையைத் தனது கையில் வைத்திருக்கக்கூடிய இந்த விடியா அரசினுடைய முதலமைச்சர் என்ன பதில் சொல்லப் போகிறார்’ என்று சொல்லிவிட்டு, இப்போது பதிலைக் கேட்காமலேயே போய்விட்டார். அதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.

அதேபோல, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் தனியாக ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார். அவர் கடைசியாகச் சொல்வது; இன்னும் soft—ஆகச் சொல்லியிருக்கிறார். ‘மேற்படி வன்முறைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களைக் காவல் துறை

உடனடியாகக் கண்டறிந்து, அவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்தி, உரிய தண்டனையைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார். இது நியாயமாக இருக்கிறது.

அங்கே போராட்டம் நடத்தியவர்கள் மீது உரிய வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது; சட்டப்பூர்வ நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு ஆளுநர் அவர்களின் பாதுகாப்பிற்காக மத்திய மண்டலக் காவல் துறைத் தலைவராக இருக்கக்கூடிய ஐ.ஜி. தலைமையில் இரண்டு டி.ஐ.ஜி.–க்கள், 6 எஸ்.பி.–க்கள், 6 கூடுதல் எஸ்.பி.–க்கள், 21 டி.எஸ்.பி.–க்கள், 54 ஆய்வாளர்கள், 102 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 1,120 காவலர்கள் பயன்படுத்தப்பட்டு, அவருடைய பயணம் பாதுகாப்பாக இருந்தது என்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

"ஆர்ப்பாட்டத்தில் ஆளுநரின் கான்வாய் மீது கற்கள் வீசப்பட்டன; கொடிகள் வீசப்பட்டன" என்பது ஓர் அபாண்டமானக் குற்றச்சாட்டு. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் காவல் துறையினர் தடுப்புகள் அமைத்து, கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர் என்பதுதான் உண்மை.

ஜனநாயக ரீதியில் ஆர்ப்பாட்டம் நடத்தினாலும், மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய பாதுகாப்பில் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை முறையாக எடுத்திருக்கிறது. மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு உரிய பாதுகாப்பினை அளிப்பதில் இந்த அரசு எந்த சமரசமும் செய்து கொள்ளாது என்பதை நான் உறுதியோடு இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்த நிகழ்வை வைத்துக்கொண்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களைப் பயன்படுத்தி அரசியல் செய்யலாம் என மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் எண்ணுகிறார்கள். நான் உறுதியாகச் சொல்கிறேன், அது நடக்கவே நடக்காது, இது தி.மு.க. ஆட்சி. சாத்தான்குளத்திலே நடைபெற்ற சம்பவம் குறித்து இன்றைக்கும் பேசிக்கொண்டிருக்கிறோம். அதேபோல, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைப் போராட்டத்தின்போது நடைபெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவம். அந்தச் சம்பவத்தைப்பற்றி அன்றைக்கு முதலமைச்சராக இருந்தவரிடம் கேட்டபோது, எனக்குத் தெரியவில்லையே என்று சொன்னார். அப்படிச் சொன்னவர்தான் இவர். ஆனால், இன்றைக்கு இவர் சட்டம்–ஒழுங்கைப் பற்றிப் பேசுவதுதான் வேடிக்கையாக இருக்கின்றது.

அ.தி.மு.க. ஆட்சியில் ஆளுநராக இருந்த மறைந்த சென்னா ரெட்டி அவர்களுக்கு என்ன நடந்தது? நான் அதற்குள் அதிகம் போக விரும்பவில்லை. திண்டிவனத்தில் 10.04.1995 அன்று, ஆளுநர் சென்னாரெட்டியும், அவரது கான்வாயும் 15 நிமிடங்களுக்கு மேல் அங்கே மறிக்கப்பட்டு, ஆபத்தான நிலையில் நடுரோட்டில் நின்றது யாருடைய ஆட்சியில்? அ.தி.மு.க. எம்.எல்.ஏ.–க்கள் 4 பேர் தலைமையில் சரமாரியாக கல் எறிந்திருக்கிறார்கள்; முட்டையை வீசியிருக்கிறார்கள்; தக்காளியை வீசி அவமானப்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், சென்னா ரெட்டி உயிர் தப்பினார்'' என்று அன்றைக்குத் தலைப்புச் செய்தியாக பத்திரிகைகளில் வந்தது. இது யாருடைய ஆட்சியில்?

தாக்குதலுக்கு உள்ளான ஆளுநரைத் திரும்பப் பெறவேண்டும் என்று இதே அவையில், அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு தனித் தீர்மானமே கொண்டுவரப்பட்டது என்று இங்கே திரு.கு.செல்வப்

பெருந்தகை அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நாவலர் அவர்கள்தான் அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து, அது இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டது என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆகையால், 'சென்னாரெட்டி உயிர் தப்பினார்' என தலைப்புச் செய்தி பத்திரிகைகளில் எல்லாம் வந்தது. தாக்குதலுக்கு உள்ளான மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் திரும்பப் பெற வேண்டுமென்று **26.04.1995** அன்று இதே சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்தது யாருடைய ஆட்சியில் ?

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மட்டுமல்ல; மிகப் பெரிய சட்டப் பதவியில் இருந்த தலைமைத் தேர்தல் ஆணையர் மறைந்த டி.என்.சேஷன் அவர்கள் தாஜ் ஓட்டலிலிருந்து வெளியே வரவே முடியவில்லை. அதெல்லாம் அ.தி.மு.க. ஆட்சியினுடைய சாதனைகள். விமான நிலையத்திலிருந்து விரட்டியடித்து, அவர் சென்னையில் இருக்கக்கூடிய தாஜ் கோரமண்டல் ஓட்டலுக்கு வந்த பிறகு, அந்த ஓட்டலையும் முற்றுகையிட்டு, கல்வீசித் தாக்குதல் நடத்தியது யாருடைய ஆட்சியில் ? அவர்கள் ஆட்சியில்தான்.

ஏன்; இன்றைக்கு பா.ஜ.க.—வில் ஒரு முக்கியஸ்தராக இருக்கக்கூடிய டாக்டர் சுப்பிரமணியன் சுவாமி அவர்களை, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே சென்று தாக்குதல் நடத்த முயன்று, அவரை அசிங்கப்படுத்திய ஆட்சி உங்களுடைய ஆட்சி, அ.தி.மு.க. ஆட்சி. எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரி; சந்திரலேகா அவர்கள்மீது ஆசிட் வீசிய ஆட்சி, யாருடைய ஆட்சி ? எல்லாம் அ.தி.மு.க. ஆட்சியில்தான் நடைபெற்றன.

எனவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், நான் தெளிவாக, உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். காவல்துறை ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களைத் தடுத்திருக்கிறது. மாண்புமிகு ஆளுநர்

அவர்கள் மீது ஒரு தூசு கூட விழாதவாறு மிகவும் பாதுகாப்பாக அழைத்துச் சென்றிருக்கிறது. அதுமட்டுமல்ல; ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு, விசாரணையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசியல் சட்டப் பதவிகளில் இருப்பவர்களைக் காப்பாற்ற, அவர்களுக்குரிய பாதுகாப்பினை அளித்திட, இந்த அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது. அந்தக் கடமையைக் காவல் துறை செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

ஆகவே, தங்கள் ஆட்சியில் ஆளுநரை கல், முட்டை, தக்காளி என வீசித் தாக்கியதை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, நடக்காத ஒன்றை நடந்ததாகக் கற்பனையாக இங்கே கூறி அரசியல் செய்ய வேண்டாம் என்று, இங்கேயிருந்து வெளிநடப்பு செய்திருந்தாலும், அவர்களுக்கு இந்தச் செய்தி போகும் என்ற காரணத்தினால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும் நான் மிகுந்த மரியாதையோடும், மதிப்போடும் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இதுகுறித்து இந்த விளக்கமே போதும் என்று கருதி, நான் அமைகிறேன்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் வருகைக்கு*
*எதிர்ப்பு தெரிவித்து நடைபெற்ற போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட*
*பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான விவாதம் குறித்து, தமிழ்நாடு*
*சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*பதிலளித்து ஆற்றிய உரை –* ***20.04.2022***

# ரூ.25 கோடி மதிப்பீட்டில் "ஒலிம்பிக் தங்கம் தேடுதல்" திட்டம்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சக்தி என்பது உடல் வலிமையும், உள்ளத்தின் வலிமையும் இணைந்தது. இரண்டு ஆற்றலும் ஒருசேர இருக்கும் மனிதர்களால்தான் அனைத்துத் துறைகளிலும் வெற்றியாளர்களாக மாற முடியும். அந்த வகையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின் சார்பிலான அறிவிப்புகளை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

ஒரு சமுதாயத்தின் வலிமை, அச்சமுதாய மக்களுடைய மனரீதியான நலத்தையும், உடல்ரீதியான வலிமையையும் பொறுத்துள்ளது. அறிவு சக்தியைப் போன்றே, உடல் வலிமையும் ஒரு சொத்து. அத்தகைய உடல் வலிமையை அடைவதற்குப் பல்வேறு பயிற்சிகள் இருந்தாலும், விளையாட்டு என்பது அதில் மிகமிக முக்கியமானது. விளையாட்டு என்பது உடலினை உறுதி

செய்கிறது; உடலினைத் துடிப்போடு வைத்திருக்கிறது; மனதுக்கும் புத்துணர்ச்சியைத் தருகிறது. அதேபோல், நேர்மையையும், ஒழுக்கத்தையும் கற்றுத் தருகிறது; வெற்றியோ, தோல்வியோ இரண்டும் ஒன்றுதான் என்ற மனப்பக்குவத்தையும் விளையாட்டு உருவாக்குகிறது; குழுவாக இணைந்து செயல்பட வேண்டுமென்ற கூட்டு மனப்பான்மையை உருவாக்குகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு அரசால் அண்மைக்காலமாக விளையாட்டுத் துறைக்கு ஏராளமான திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை மாணவர்களும், இளைஞர்களும் சீரிய முறையில் ஒருங்கிணைந்து பயன்படுத்திக் கொண்டால், தமிழ்நாட்டின் இளைய ஆற்றல் எழுச்சி பெறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. தமிழ்நாடு பல ஆண்டுகளாக குழுப் போட்டிகளிலும், தனித் திறன் போட்டிகளிலும் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் முன்னிலை வகித்து வருகிறது. அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படக்கூடிய உயரிய ஊக்கத் தொகை ஆகியவைதான் அதன் அடிப்படைக் காரணங்கள்.

பன்னாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் அதிக பதக்கங்கள் வெல்வதை ஊக்குவிக்கக்கூடிய வகையில், தமிழ்நாடு அரசு ரூ.3 கோடி முதல் பல்வேறு வகையான ஊக்க உதவித் தொகைகளைத் தொடர்ந்து வழங்கி, இளைஞர்களை ஊக்கப்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் உள்ளிட்ட பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சர்வதேச அளவிலான வாகையர் (Championship) போட்டிகளில் வெற்றி வாகை சூட ஏதுவாக, பல்வேறு விளையாட்டுகளுக்காக உலகத் தரத்திலான விளையாட்டுக் கட்டமைப்புகளை ஏற்படுத்த சென்னைக்கு அருகில் பிரம்மாண்டமான விளையாட்டு நகரம் (Mega Sports City)

அமைக்க அனைத்துவிதமான நடவடிக்கைளையும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், தமிழ்நாட்டை சார்ந்த வீரர்கள் சர்வதேச தரத்திலான பயிற்சிகளை மேற்கொண்டு வெற்றி வாகை சூடுவார்கள்.

ஒலிம்பிக் போன்ற பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் வாய்ப்பை ஏற்படுத்த தமிழ்நாட்டின் நான்கு மண்டலங்களில் தலா ஒன்று வீதம் நான்கு ஒலிம்பிக் அகாடமிகள் (Olympic Academies) அமைக்க அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

மாநிலம் முழுவதும் விளையாட்டுப் பயிற்சிகள், அதற்கான வசதிகள் ஏற்படுத்த நினைக்கிறோம். அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும், தலா ரூ.3 கோடி செலவில் சிறு விளையாட்டு அரங்கங்கள் நிறுவப்பட உள்ளன. இதன்மூலம், ஏழை, எளிய, நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்த கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வாழக்கூடிய இளைஞர்கள் பலன் பெற வழிவகை செய்யப்பட உள்ளது.

தமிழக விளையாட்டு வீரர்கள், ஒலிம்பிக் போன்ற சர்வதேசப் போட்டிகளில் பதக்கம் வெல்வதற்கு வழிகாட்ட ஒரு முயற்சியைத் தொடங்கவிருக்கிறோம். “ஒலிம்பிக் தங்கம் தேடுதல் (Olympic Gold Quest)” என்ற திட்டம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

வட சென்னை பகுதியானது பல்வேறு விளையாட்டுத் திறமையாளர்களை ஊக்குவிப்பதில் புகழ் பெற்று விளங்கி வருகிறது. அப்பகுதியில் உள்ள இளைஞர்களை ஊக்கப்படுத்தி மேம்படுத்தக்கூடிய நோக்கில், வட சென்னை பகுதியில் நவீன தொழில்நுட்பங்களோடு கூடிய நவீன குத்துச்சண்டை விளையாட்டு வளாகம் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது. இங்கு கையுந்துப்பந்து (Volleyball), இறகுப்பந்து (Badminton),

கூடைப்பந்து (Basket ball), குத்துச்சண்டை (Boxing), கபாடி (Kabaddi) மற்றும் இதர உள்ளரங்க விளையாட்டுகளுக்கான வசதிகளோடு (Indoor Games) நவீன உடற்பயிற்சிக் கூடம் (Modern Gym) அமைக்கப்பட உள்ளது.

அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுக்கென்றே தனியாக பிரம்மாண்டமான மைதானம் அமைக்கப்பட உள்ளது. தமிழர்களால் உருவாக்கப்பட்ட இந்தியத் தற்காப்புக் கலைகளில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய சிலம்பம் விளையாட்டினை ஊக்கப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. சிலம்ப வீரர்களுக்கு, விளையாட்டு வீரர்களுக்கான வேலைவாய்ப்புகளில் 3 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பல்வேறு சர்வதேச அளவிலான போட்டிகளை நடத்த முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் தமிழ்நாட்டில் விளையாட்டைச் சார்ந்த பொருளாதாரம் உருவாகவும், அதனை மேம்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில், சென்னை ஓபன் ATP டென்னிஸ் தொடரை மீண்டும் நடத்தவும், Beach Olympics எனப்படும் கடற்கரை ஒலிம்பிக்ஸ் தொடரை நடத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகள் நடத்துவதன்மூலம் விளையாட்டுத் துறையில் புதிய முதலீடுகளும் தொழில் வளர்ச்சியும் ஏற்படும். இதனையொட்டி சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து, தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறை வளர்ச்சியடையவும் வாய்ப்புகள் ஏற்படும்.

சதுரங்க விளையாட்டில் (Chess) இந்தியாவின் தலைநகராக விளங்கக்கூடிய வகையில் எப்போதுமே தமிழ்நாடு பல்வேறு கிராண்ட் மாஸ்டர்களை உருவாக்கியிருக்கிறது. அந்த வகையில் உலக அளவில் சிறந்த சதுரங்க விளையாட்டு வீரர்கள், கிராண்ட் மாஸ்டர்

விஸ்வநாதன் ஆனந்த் உள்ளிட்ட பல்வேறு கிராண்ட் மாஸ்டர்களைத் தமிழ்நாடு தொடர்ந்து உருவாக்கி வருகிறது.

இந்தியாவில் விளையாட்டு உலகின் மணிமகுடமாக விளங்கக்கூடிய 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் வரும் 28.07.2022 முதல் 10.08.2022 வரை தமிழ்நாட்டில் உலகமே வியக்கக்கூடிய வகையில் பிரம்மாண்டமாகத் தமிழ்நாடு அரசால் நடத்தப்பட உள்ளது. 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டிகளில் உலகில் உள்ள 180 நாடுகளைச் சார்ந்த சதுரங்க விளையாட்டு வீரர்கள் அதிலே பங்குபெறவிருக்கிறார்கள். 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை நடத்துவதற்கு இன்றே ஒரு குழு ஏற்படுத்தப்பட்டு, அந்தப் பணிகளும் சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலமாக விளையாட்டுத் துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாக வளர்ந்து சிறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அனைத்துத் துறைகளும் ஒரு சேர வளர வேண்டுமென்ற எனது எண்ணத்தின் வடிவமாக இத்தகைய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் இளைய சக்தியை ஆக்கப்பூர்வமான வழிகளில் பயன்படுத்த தமிழக அரசு எப்போதும் முனைப்புடன் செயல்படும் என்று இந்த மாமன்றத்துக்கு உறுதி அளித்து அமைகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110இன்கீழ்*
*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை தொடர்பான*
*அறிவிப்புகளை வெளியிட்டு ஆற்றிய உரை – 21.04.2022*

# மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் அமைச்சராக இருக்கக்கூடிய சகோதரி கீதா ஜீவன் அவர்கள் நிறைவாக பதிலுரை ஆற்றவிருக்கிறார்கள். ஆனால், இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையும் இதில் இணைந்திருக்கின்ற காரணத்தால், நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது அந்தத் துறையை தன் கையில் வைத்துக்கொண்டு எவ்வாறு பணியாற்றினாரோ, அதே வழியில் நின்று, இன்றைக்கு நானும் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

இங்கே அ.தி.மு.க.–வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு.அருண்குமார் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு.உதயநிதி அவர்களும் மாற்றுத்திறனாளிகள் குறித்துப் பேசி, அதையொட்டி அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் நான் நிச்சயமாக, உறுதியாக படிப்படியாக நிறைவேற்றுவேன். மாற்றுத்திறனாளிகளுக்கென்று அமைக்கப்பட்டிருக்கக்கூடிய ஆணையரகத்திற்கு நானே நேரடியாகச் சென்று, சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய அமைப்புகளுடைய

நிருவாகிகளை அழைத்து, இதில் என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன; என்னென்ன பிரச்சினைகளையெல்லாம் நாங்கள் தீர்த்து வைத்திருக்கின்றோம்; அதனால் நீங்கள் பெற்றிருக்கக்கூடிய நன்மைகள் என்ன; இன்னும் மீண்டும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி ஆலோசிப்பதற்காக மிக விரைவிலே ஒரு பெரிய ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, நிச்சயமாக அதற்குரிய பரிகாரத்தை இந்த அரசு காணும்; படிப்படியாக அதை நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்பதை இங்கு பேசிய உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல; அனைவருக்கும் இதை ஓர் அறிவிப்பாகவே நான் அறிவித்து அமைகிறேன்.

வணக்கம்!

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்,*
*'மாற்றுத்திறனாளிகள் தொடர்பான கோரிக்கைகளை ஆய்வு செய்து,*
*அவற்றைப் படிப்படியாக நிச்சயம் நிறைவேற்றுவோம்' என*
*உறுதியளித்து ஆற்றிய உரை – **21.04.2022***

# 600 ஊராட்சிகளில் "கிராமச் செயலகங்கள்"



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற 24.04.2022 அன்று தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் கொண்டாடப்படுகிறது. அதனை முன்னிட்டு சில அறிவிப்புகளை இந்த மாமன்றத்திற்கு நான் வழங்க விரும்புகிறேன்.

உள்ளாட்சி என்பது மக்களாட்சியினுடைய ஜனநாயகத்தின் ஆணிவேர். அது வலிவுடனும் பொலிவுடனும் இருந்தால்தான், அரசினுடைய நலத்திட்டங்கள் கடைக்கோடி மனிதரையும் சென்றடையும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும் போதெல்லாம், உள்ளாட்சிகளின் உரு சிதையா வண்ணம், உயர்த்தி வலிமைப்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறோம். அதற்கேற்ப திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருவதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் ஒளிவுமறைவற்ற வெளிப்படைத் தன்மையினை ஏற்படுத்திடவும், உள்ளாட்சி அமைப்புகளின் சாதனைகள் மற்றும் திட்டச் செயலாக்கங்கள் குறித்து தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கங்கள் நடத்திட ஏதுவாக, ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தினத்தை 'உள்ளாட்சிகள் தினம்' எனக் கொண்டாட வேண்டுமென்று நான் துணை முதலமைச்சராக இருந்தபோது முடிவு மேற்கொள்ளப்பட்டது. 2007 நவம்பர், 1ஆம் நாள் அன்று உள்ளாட்சி தினமாகக் கொண்டாடப்பட்டது. இறுதியாக 2010ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டாடப்பட்டு, அதற்குப் பிறகு அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டது.

கிராமப்புற மக்களிடையே திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், அரசின் அனைத்து செயல்பாடுகளிலும் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திடவும், மக்கள் பங்கேற்பை ஊக்குவிக்கவும், இடையில் நடத்தப்படாமல் போன இந்த நிகழ்வு, மக்கள் இயக்கமாக மீண்டும் நவம்பர் 1ஆம் தேதி, "உள்ளாட்சிகள் தினமாக" கொண்டாடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கிராமங்களை வலிமைப்படுத்தவும், அங்கே வளர்ச்சியினை ஊக்கப்படுத்தவும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரங்கள் ஏற்கெனவே வகுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், ஒவ்வொரு ஊராட்சியிலும் அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கி, கிராம சபை என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, கிராம சபைக்கென குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, 1998ஆம் ஆண்டில் முதல் முறையாக, ஆண்டிற்கு 4 முறை, குறிப்பிட்ட நாட்களில் கிராம சபை நடத்தப்பட வேண்டும்

என்பதை அரசாணையாக வெளியிட்டார்கள். அதனடிப்படையில், கிராம சபை கூட்டங்கள் நடத்தப்பட்டு வந்தாலும், அவ்வப்போது சிறப்பு கிராம சபைக் கூட்டங்களும் தேவையின் அடிப்படையில் மிகக் குறுகிய கால அறிவிப்புகள்மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு குறுகிய கால அறிவிப்புகள்மூலம் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும் போது, மக்களின் பங்கேற்பு குறைவாக இருக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. எனவே, இதைக் கருத்திற்கொண்டு, குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்த வேண்டிய கிராம சபைக் கூட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்து, மக்களின் பங்கேற்பினை உறுதி செய்வது அவசியம் எனக் கருதி, இந்த ஆண்டு முதல், ஆண்டிற்கு **6** கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த வகையில், ஜனவரி **26–**குடியரசு தினம், மே–**1** தொழிலாளர் தினம், ஆகஸ்ட்–**15** சுதந்திர தினம், அக்டோபர்–**2** அண்ணல் காந்தியடிகள் பிறந்த தினம் ஆகிய நாட்களில் நடைபெற்று வரக்கூடிய கிராம சபை கூட்டங்கள், இனி வரும் காலங்களில், கூடுதலாக மார்ச்–**22** உலக தண்ணீர் தினம் அன்றும், நவம்பர்–**1** உள்ளாட்சிகள் தினம் அன்றும் நடத்தப்படும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான மாதாந்திர அமர்வுப் படி தொடர்பாக குறிப்பிட விரும்புகிறேன். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், முதலமைச்சராக இருந்தபோதுதான், முதன்முதலாக மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சிப் பிரதிநிதிகளுக்கு அமர்வுப் படி வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, இன்றுவரை வழங்கப்பட்டு வருகிறது. அதன்பிறகு, பல ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த இந்த அமர்வுப் படியினை உயர்த்தி வழங்கிடக் கோரி பல்வேறு மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றதன் அடிப்படையில், மாவட்ட ஊராட்சி

மற்றும் ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு கூட்டங்களில் கலந்து கொள்ளும் நாட்களில் அமர்வுப் படித் தொகை பத்து மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என்றும், கிராம ஊராட்சித் தலைவர், கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு அமர்வுப் படித் தொகை ஐந்து மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் இந்த அவையில் மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகிறேன்.

இவ்வாறு அமர்வுத் தொகை உயர்த்தி வழங்கப்படுவதால், தமிழகத்திலுள்ள **12,525** கிராம ஊராட்சித் தலைவர்கள், **99,327** கிராம ஊராட்சி உறுப்பினர்கள், **388** ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், **6,471** ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், **36** மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் **655** மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட **1** இலட்சத்து **19** ஆயிரம் ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இதன்மூலம் பயன்பெறுவார்கள்.

ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் தங்களின் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் செயல்படுத்தப்படக்கூடிய பல்வேறு திட்டப் பணிகளைக் கண்காணித்திட முதன்முறையாக **2008**ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, **385** ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டன. ஆனால், அதன்பிறகு **10** ஆண்டுகளுக்கு வாகனங்களே வாங்கப்படாத நிலையில், கடந்த ஆட்சியில் **2019–2020**ஆம் ஆண்டில், புதிய வாகனங்கள் வழங்குவதற்கான அறிவிப்புகள் மட்டுமே வெளியிடப்பட்டன. ஆனால், செயல்முறைப்படுத்தப் படவில்லை. இதனால் ஏறத்தாழ **13** ஆண்டு காலமாக புதிய வாகனங்கள் அவர்களுக்கு வழங்கப்படாத சூழல் உள்ளது.

இதனைக் கருத்தில்கொண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் அந்தந்த ஒன்றியப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளைத் திறம்படக் கண்காணித்திட ஏதுவாக,

தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கும் புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

அடுத்தபடியாக, கிராம ஊராட்சித் தலைவர்களின் தலைமைப் பண்பினை வெளிக் கொணரக்கூடிய வகையிலும், ஊராட்சிகளில் சிறந்த நிருவாகத்தினை ஏற்படுத்திடும் வகையிலும், சிறப்பாக நிருவகிக்கக்கூடிய கிராம ஊராட்சித் தலைவர்களைப் பெருமைப்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில், நான் துணை முதலமைச்சராகவும், துறையினுடைய அமைச்சராகவும் இருந்தபோதுதான், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால், ‘உத்தமர் காந்தி கிராம ஊராட்சி’ என்ற விருது 2006ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டது. 10 முக்கிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்புடைய ஊராட்சித் தலைவர்களுக்கு நற்சான்றிதழ், கேடயம் மற்றும் ரொக்கத் தொகை வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு வந்தது.

அந்த வகையில், 2006 முதல் 2010ஆம் ஆண்டு வரை, 60 கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது. அதற்குப்பிறகு இடைப்பட்ட காலத்தில் இவ்விருது வழங்கப்படவில்லை. இந்த ஆண்டு முதல் வழங்கத் திட்டமிட்டிருக்கிறோம். சிறப்பாகச் செயல்படக்கூடிய கிராம ஊராட்சிகளுக்கு “உத்தமர் காந்தி விருது” 2022ஆம் ஆண்டு முதல் மீண்டும் வழங்கப்படும் என்பதையும், ஆண்டுதோறும் மாவட்டத்திற்கு ஒன்று வீதம், சிறந்த 37 கிராம ஊராட்சிகளுக்கு பத்து இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கிராம அளவில், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் வருவாய்த் துறைக்கு மட்டுமே அலுவலகங்கள் தனித்தனியே செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், பிற துறைகள் மூலம்

கிராமங்களில் செயல்படுத்தப்படக்கூடிய திட்டங்களை ஒருங்கிணைத்து, அதனைக் கண்காணிக்க கிராம அளவில் வசதிகளை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, உள்ளாட்சியில் நல்லாட்சி என்ற நோக்கத்துடன், மக்களாட்சியின் மாண்பினை கிராம அளவில் உறுதி செய்திட ஏதுவாக, ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை மற்றும் சமூக நலத் துறை போன்ற முக்கிய துறைகளின்மூலம் செயல்படுத்தப்படக்கூடிய அரசின் பல்வேறு திட்டங்களை கிராம அளவில் ஒருங்கிணைத்து செவ்வனே செயல்படுத்திட **600** ஊராட்சிகளில் "கிராமச் செயலகங்கள்" இந்த ஆண்டே கட்டப்படும் என்பதை இந்த அவையில் பெருமகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகிறேன்.

இந்த கிராமச் செயலகங்கள் ஊராட்சித் தலைவருக்கான அறை, அனைத்துத் துறை கூட்ட அரங்கம், கிராம நிருவாக அலுவலருக்கான அறை, கிராம ஊராட்சிச் செயலருக்கான அறை, இணைய வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்டதாக இருக்கும். இந்த புதிய முன்னெடுப்பின் முதற்கட்டமாக, இந்த ஆண்டு **600** புதிய கிராமச் செயலகக் கட்டடங்கள், ஒவ்வொன்றும் சுமார் **40** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோட்டையில் இருந்து திட்டங்களை வகுத்து, அதற்கான அரசாணைகளை அரசு பிறப்பித்தாலும், அவற்றினை மக்களிடம் கொண்டு சேர்க்கும் முக்கிய பணியை ஆற்றிக் கொண்டிருப்பது உள்ளாட்சி அமைப்புகள்தான். அந்தக் காரணத்திற்காகத்தான், நாங்கள் ஊரக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறோம். அதனை மக்களும் நன்கு உணர்ந்துள்ள காரணத்தினால்தான், ஊரக, உள்ளாட்சி, நகர்ப்புறத் தேர்தல்களில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில்

செயல்படக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது தமிழக மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, எங்களுக்கு இமாலய வெற்றியைத் தந்தார்கள் என்பதை நான் ஆணித்தரமாக இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

தமிழக மக்கள் எங்களது அரசின் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை என்றென்றும் வீண்போகாத வண்ணம் நாங்கள் தொடர்ந்து செயல்படுவோம் என்று இந்த அவைக்கு உறுதி கூறி அமைகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110இன்கீழ்,*
*ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தொடர்பாக*
*அளித்த அறிக்கை – 22.04.2022*

# மாநில அரசே துணை வேந்தர்களை நியமனம் செய்யும்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறையின்கீழ் 13 பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. உயர்கல்வி அளிப்பதில் இந்தப் பல்கலைக்கழகங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க பணிகளை ஆற்றி வருகின்றன. இவற்றினுடைய வேந்தராக மாண்புமிகு ஆளுநர் அவர்களும், இணை வேந்தராக மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சரும் செயல்படக்கூடிய நேரத்தில், கொள்கை முடிவுகளை எடுக்கக்கூடிய அரசுக்குப் பல்கலைக்கழகத் துணை வேந்தர்களை நியமிக்கக்கூடிய அதிகாரம் இல்லாமல் இருப்பது உயர்கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

மாநில அரசின், அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கலந்தாலோசித்து மாண்புமிகு ஆளுநர் அவர்கள் துணை வேந்தரை நியமிப்பது மரபாக இருந்து வந்துள்ள நிலையில்,

அண்மைக் காலமாக இந்த நிலையிலே மாற்றம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, கடந்த நான்கு ஆண்டுகளில் பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் நியமனத்தில், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தனக்கு மட்டுமே பிரத்தியேகமான உரிமை என்பது போல் செயல்பட்டு, உயர்கல்வியை அளிக்க வேண்டிய பொறுப்பில் உள்ள மாநில அரசை மதிக்காமல் செயல்படும் போக்கு தலைதூக்கியிருக்கிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசால், அதன்கீழ் செயல்படும் பல்கலைக்கழகத்திற்குத் துணை வேந்தரை நியமிக்க முடியவில்லை என்பது, ஒட்டுமொத்தப் பல்கலைக்கழக நிருவாகத்தில் பல்வேறு குளறுபடிகளை ஏற்படுத்துகிறது. இச்செயல் மக்களாட்சியினுடைய தத்துவத்திற்கே விரோதமாக இருக்கிறது.

''ஒன்றிய – மாநில அரசு உறவுகள்'' குறித்து ஆராய 2007இல் நியமிக்கப்பட்ட உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு.பூஞ்சி அவர்கள் தலைமையிலான ஆணையம் அளித்துள்ள பரிந்துரையில், ''அரசியல் சட்டத்தில் வழங்கப்படாத துணை வேந்தர் நியமன அதிகாரத்தை மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அளிக்கக் கூடாது'' என்று பரிந்துரைத்துள்ளது. அதற்கு பூஞ்சி ஆணையம் சொன்ன காரணங்கள் என்ன தெரியுமா? துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் இருந்தால், அது சர்ச்சைகளுக்கும், விமர்சனங்களுக்கும் உள்ளாகும். பல்கலைக்கழக கல்வியில் மாநில அரசு இயற்கையிலேயே ஆர்வமாக அக்கறையுடன் இருக்கும் சூழலில், மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் இதுபோன்ற அதிகாரத்தைக் கொடுப்பது மாநில அரசுக்கும், ஆளுநருக்கும் இடையே அதிகார மோதலுக்கு வித்திடும் என்று தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஆங்கிலத்தில் சொல்வதென்றால், "There would be a clash of functions and powers" என்று மிகவும் ரத்தினச் சுருக்கமாகச்

சுட்டிக் காட்டியிருக்கிறது. இந்தப் பரிந்துரையின்மீது, ஒன்றிய அரசால் மாநிலங்களின் கருத்துகள் கேட்கப்பட்டு, தமிழ்நாடு உள்ளிட்ட 19 மாநிலங்கள் பூஞ்சி ஆணைய அறிக்கையை ஏற்றுக்கொள்ளலாம் என்று கருத்து தெரிவித்துள்ளதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு, என்னுடைய தலைமையில் அமைந்தவுடன், பூஞ்சி ஆணையப் பரிந்துரைகள் குறித்து மீண்டும் மாநில அரசினுடைய கருத்தைக் கேட்டு, உள்துறை அமைச்சகத்திடம் இருந்து கடிதம் வந்தது. அந்தக் கடிதத்திற்கும் "துணை வேந்தரை நியமிக்கும் அதிகாரத்தை மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அளிக்கக் கூடாது என்ற பரிந்துரையை ஏற்க வேண்டும்" என்று இந்த அரசின் சார்பில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமின்றி, பல்வேறு மாநிலங்களில் துணை வேந்தர் நியமனங்கள் எப்படி நடைபெறுகிறது என்பதை ஆய்வு செய்தபோது, இன்றைக்கு இந்தியப் பிரதமராக இருக்கக்கூடிய மாண்புமிகு திரு.மோடி அவர்களது சொந்த மாநிலமான குஜராத் மாநிலத்தில், தேடுதல் குழு பரிந்துரைக்கும் மூவரில் ஒருவரை மாநில அரசு நியமிக்கிறது. அதேபோல, ஆந்திரா, கருநாடகா, தெலுங்கானா மாநிலங்களிலும் தேடுதல் குழுவால் பரிந்துரைக்கப்படக்கூடிய மூவரில் ஒருவர் துணைவேந்தராக மாநில அரசின் ஒப்புதலோடு வேந்தரால் நியமிக்கப்படுகிறார். ஆகவே, இந்த மாநிலங்களில் உள்ளதுபோல, குறிப்பாக, மாண்புமிகு பிரதமர் அவர்களுடைய சொந்த மாநிலமான குஜராத்தில் உள்ளதுபோல, தமிழ்நாட்டிலும், தமிழ்நாடு அரசின்கீழ் உள்ள பல்கலைக்கழகச் சட்டங்களில் உரிய திருத்தம் செய்து, பல்கலைக்கழகத் துணை வேந்தரை மாநில அரசே நியமிக்கும் வகையில் சட்டமுன்வடிவினை இங்கே மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் **06.01.2022** அன்று மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் ''துணை வேந்தர்களை மாநில அரசே நியமனம் செய்யும் வகையில் சட்டம் கொண்டு வரப்படும்'' என்று இதே மன்றத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதி இன்று நிறைவேற்றப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. குஜராத்தில் மாநில அரசுதான் துணை வேந்தரை நியமிக்கிறது. ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவை இங்கிருந்து வெளிநடப்பு செய்திருக்கக்கூடிய பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ''பூஞ்சி ஆணைய'' பரிந்துரையை ஏற்கலாம் என **2017**இல் அ.தி.மு.க. ஆட்சியிலும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே. அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கும் இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிப்பதில் நெருடல் இருக்க வாய்ப்பே கிடையாது. எல்லாவற்றையும்விட, இது மாநில அரசினுடைய உரிமை தொடர்புடைய பிரச்சினை; மாநிலத்தினுடைய பல்கலைக்கழகக் கல்வியுரிமை தொடர்பான பிரச்சினை; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் உரிமை. ஆகவே, இந்த அவையில் உள்ள அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருமனதாக இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*பல்கலைக்கழகத் துணை வேந்தர்களை மாநில அரசே*
*நியமிக்கும் வகையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்*
*கொண்டுவரப்பட்ட சட்டமுன்வடிவின்மீது,*
*ஆற்றிய உரை –* ***25.04.2022***

# கலைஞர் பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாட்டம்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தமிழர்களே! தமிழர்களே! நீங்கள் என்னைக் கடலில் தூக்கி எறிந்தாலும், கட்டுமரமாகத்தான் மிதப்பேன். அதில் ஏறி நீங்கள் பயணம் செய்யலாம்; கவிழ்ந்து விடமாட்டேன்!

தமிழர்களே! தமிழர்களே! என்னை நீங்கள் நெருப்பில் தூக்கிப் போட்டாலும், அதிலே நான் விறகாகத்தான் வீழ்வேன்; அடுப்பெரித்து நீங்கள் சமைத்துச் சாப்பிடலாம்!

தமிழர்களே! தமிழர்களே! நீங்கள் என்னைப் பாறையில் மோதினாலும், சிதறுத் தேங்காயாகத்தான் உடைவேன்! நீங்கள் என்னை எடுத்துத் தின்று மகிழலாம்!” என்ற வைர வரிகளுக்குச் சொந்தக்காரர் மட்டுமல்ல; தன்னுடைய வாழ்க்கையை அப்படியே வாழ்ந்து காட்டியவர்தான் முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர்,

அஞ்சுகச் செல்வர்; நம்மையெல்லாம் ஆளாக்கி விட்டு விட்டு, வங்கக் கடலோரம், தன் அன்பு அண்ணன் அருகே வாஞ்சைமிகு தென்றலின் தாலாட்டில் இருந்தபடி தமிழ்ச் சமுதாயத்தின் மகிழ்ச்சியைக் கண்ணுற்று வரும் கலைஞர் அவர்கள்.

நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர் உண்டென்றால், அவர் ஒருவர்தான். 1957 முதல் 2016 வரை நடந்த தேர்தல்களில் எல்லாம் வென்றவர் அவர் மட்டும்தான். 1957இல் குளித்தலை; 1962இல் தஞ்சாவூர்; 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் சைதாப்பேட்டை; 1977, 1980 ஆகிய ஆண்டுகளில் அண்ணா நகர்; 1989, 1991 ஆகிய ஆண்டுகளில் துறைமுகம்; 1996, 2001, 2006 ஆகிய ஆண்டுகளில் சேப்பாக்கம்; 2011, 2016 ஆகிய ஆண்டுகளில் திருவாரூர் ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றார். 13 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து, 60 ஆண்டுகள் இந்த மாமன்றத்தின் உறுப்பினராக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

1984ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார்கள். தமிழ்நாட்டை ஐந்து முறை ஆண்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். 10.02.1969 அன்று முதன்முறையாக; 15.03.1971 அன்று இரண்டாவது முறையாக; 27.01.1989 அன்று மூன்றாவது முறையாக; 13.05.1996 அன்று நான்காவது முறையாக; 13.05.2006 அன்று ஐந்தாவது முறையாக என ஐந்து முறை இந்த நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 19 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஐந்து முறை ஆட்சியில் இருந்த காலத்தில் முதலமைச்சர் கலைஞர் உருவாக்கியதுதான் இன்று நாம் கண்ணுக்கு முன்னால் பார்க்கக்கூடிய நவீன தமிழகம். அன்னைத் தமிழ் மொழிக்கு செம்மொழித் தகுதி! ஒன்றிய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு உயர்வு! அனைத்துச்

சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம்! மகளிருக்கும் சொத்திலே பங்குண்டு என்ற சட்டம்! பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களுக்கான சமூகநீதி உரிமைகள்! உழவர்களுக்கு இலவச மின்சாரம்! கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்பட்ட 7 ஆயிரம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி! சென்னை தரமணியில் டைடல் பார்க்! சென்னைக்கு மெட்ரோ இரயில் திட்டம்! சிப்காட், சிட்கோ தொழில் வளாகங்கள் உருவாக்கம்! தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கியது! நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டங்கள்!

அவசர ஆம்புலன்ஸ் 108 சேவை அறிமுகம்! இலவச மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்! மினி பஸ்களைக் கொண்டு வந்தது! உழவர் சந்தைகள் அமைத்தது! கைம்பெண் மறுமண நிதி உதவி, கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி ஆகிய திட்டங்கள்! அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு! பெண்களுக்காக 33 விழுக்காடு இடஒதுக்கீடு! இலவச எரிவாயு இணைப்புடன்கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்குதல்! மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல்! அனைவரும் இணைந்து வாழ தந்தைப் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்! இஸ்லாமிய சமூகத்தினருக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கியது! உருது பேசும் இஸ்லாமியர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இணைத்தது! நுழைவுத் தேர்வு இரத்து! மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கியது! சேலம் உருக்காலை, சேலம் புதிய இரயில்வே மண்டலம், நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கக்கூடிய திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஆசியாவிலேயே பெரிய அண்ணா நூலகம் ஆகியவை உருவாக்கம்! மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் ஆகியோருக்கு மறுவாழ்வு

வழங்குதல்! ஏராளமான பல்கலைக்கழகங்கள், மருத்துவக் கல்லூரிகள், கலை—அறிவியல் கல்லூரிகள் உருவாக்கியது!

இப்படி நான் சொல்லத் தொடங்கினால் இன்று முழுவதும் என்னால் சொல்லிக் கொண்டேயிருக்க முடியும். இவைதான் தமிழகத்தின் அடையாளங்கள் என்றால், அந்த அடையாளங்களை எல்லாம் உருவாக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

தலைவர்களோடு தலைவர்களாக வாழ்ந்த தலைவர்தான் கலைஞர் அவர்கள்! தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத், பாவேந்தர் பாரதிதாசன், பெரியவர் பக்தவத்சலம், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதன், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., கவியரசு கண்ணதாசன், திருமுருக கிருபானந்த வாரியார், தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

தமிழகத்தில் மட்டுமல்ல; பரந்து விரிந்த இந்த இந்திய அரசியலுக்கே வழிகாட்டியாக இருந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்தியாவின் குடியரசுத் தலைவர்களாக இருந்த நீலம் சஞ்சீவிரெட்டி, கியானி ஜெயில்சிங், வி.வி.கிரி, சங்கர் தயாள் சர்மா, ஆர்.வெங்கட்ராமன், கே.ஆர்.நாராயணன், ஏ.பி.ஜெ.அப்துல்கலாம், பிரதிபா பாட்டீல் ஆகியோரால் பாராட்டப்பட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்தியாவின் தலைமை அமைச்சர்களாக இருந்த அம்மையார் இந்திராகாந்தி, சரண்சிங், வி.பி.சிங், தேவகவுடா, ஐ.கே.குஜ்ரால், வாஜ்பாய், மன்மோகன் சிங் ஆகியோரால் போற்றப்பட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத தலைவர் கலைஞருடைய

மறைவிற்குத்தான் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் முழுவதுமாக ஒத்திவைக்கப்பட்டன. இப்படி எல்லைகளைத் தாண்டி எல்லோரையும் வசப்படுத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

படைப்பாளிகளோடு போட்டியிடும் படைப்பாளி; கவிஞர்களில் தலைசிறந்த கவிச்சக்கரவர்த்தி; திரையுலகத்தினரில் மூத்த கலையுலகவாதி; அரசியல் உலகில் தலைசிறந்த அரசியல் ஆளுமை; நிருவாகத் திறனில் நுணுக்கமான திறமைசாலி; மேடை ஏறினால் வெல்லும் சொல்லுக்கு அவர்தான் சொந்தக்காரர்; அலையில் ஏறினால் அவர்தான் வெற்றிச் சூத்திரம் அறிந்தவர் என எல்லாவற்றிலும் முதல்வராக வாழ்ந்த முதல்வர் அவர்.

'என்னிடம் இருந்து செங்கோலைப் பறிக்கலாம்; எழுதுகோலைப் பறிக்க முடியாது' என்று அவர் சொல்லிக் கொண்டார். செங்கோல் பறிக்கப்பட்டாலும், செங்கோலை வழிநடத்தும் எழுதுகோலை அவர்தான் வைத்திருந்தார். அரசு என்பது பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக்கொள்ள முடியாமல் போனாலும், அவரிடம்தான் இருந்தது. அரசும் அரசியலும் அவரை இயக்கின. அரசையும், அரசியலையும் அவரே இயக்கினார். இத்தகைய அரசு இயலின், அரசியலின் மாபெரும் தலைவருக்கு இந்த அரசு தனது வரலாற்றுக் கடமையைச் செய்ய நினைக்கிறது.

திருவாரூரில் முத்துவேலர்–அஞ்சுகம் அம்மையாருக்கு மகனாக கலைஞர் அவர்கள் பிறந்துதித்த நாளான ஜூன் 3ஆம் நாள், அரசு விழாவாக இனி கொண்டாடப்படும் என்பதை இம்மாமன்றத்தில் நெஞ்சில் விம்மக்கூடிய மகிழ்ச்சியால், இதயத்தில் துடிக்கக்கூடிய எழுச்சியால், சிந்தை அணுக்களில் வெளிப்படும் நன்றி உணர்வால் நான் இதை இந்த அவைக்கு அறிவிக்கிறேன்.

வரும் ஜூன் 3 அன்று சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கம்பீரக் கலைஞரின் கலைமிகு சிலை நிறுவப்படும் என்பதையும் அறிவிப்பதில் பெருமைப்படுகிறேன்.

“நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்” என்று அடிக்கடிச் சொல்வார் தலைவர் கலைஞர் அவர்கள். நீண்ட தூரம் இந்த தமிழினத்துக்காக ஓடியவர் கலைஞர் அவர்கள். அவரை அதிக அதிக உயரத்தில் உயர்த்திப் பார்ப்பதைத் தனது கடமையாகக் கருதுகிறது தமிழ்நாடு அரசு.

நன்றி!

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*‘கலைஞர் அவர்கள் பிறந்துதித்த நாளான ஜூன் **3**ஆம் நாள், அரசு விழாவாக இனி கொண்டாடப்படும்’ – ‘வரும் ஜூன் **3** அன்று சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கம்பீரக் கலைஞரின் கலைமிகு சிலை நிறுவப்படும்’ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி **110**இன்கீழ் அறிவித்து ஆற்றிய உரை – **26.04.2022***

# மனித உரிமை காக்கப்பட்டு, உரிய நீதி கிடைத்திட துணை நிற்கும் அரசு...

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கு.செல்வப்பெருந்தகை, பேராசிரியர் ஜவாஹிருல்லா, திரு.ஜி.கே.மணி, திரு.முஹம்மது ஷாநவாஸ், திரு.சின்னதுரை, திரு.இராமச்சந்திரன், திரு.வேல்முருகன் உள்ளிட்ட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.விக்னேஷ் மரணம் குறித்து பல கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறீர்கள். எனவே, அதற்குரிய விளக்கத்தை முதலமைச்சராக மட்டுமல்ல; காவல் துறையை என்னுடைய கையிலே வைத்திருக்கக்கூடிய காரணத்தால், அந்தப் பொறுப்புணர்வோடு என்னுடைய விளக்கத்தை அளிக்க நான் விரும்புகிறேன்.

சென்னை மாநகரக் காவல் துறையில் இரவு வழக்கமாக மேற்கொள்ளக்கூடிய வாகனச் சோதனையின் போது, சென்னை, பட்டினப்பாக்கம் பகுதியைச் சார்ந்த சுரேஷ், விக்னேஷ் ஆகிய இருவரும் வந்த ஆட்டோவை கெல்லீஸ் அருகிலே காவல் துறையினர் நிறுத்தியிருக்கிறார்கள். கஞ்சா போதையில் இருந்த அவர்களை காவல் துறையினர் விசாரித்தபோது, சரியான பதில் சொல்லாத காரணத்தால், வாகனத்தையும், அவர்களையும் சோதனையிட்டிருக்கிறார்கள். அப்படிச் சோதனையிட்டபோது, அவர்களிடம் கஞ்சா மற்றும் மது பாட்டில்கள் இருந்தது தெரிய வந்திருக்கிறது. பிறகு அவர்களை காவல் நிலையத்திற்கு வருமாறு

அழைத்திருக்கிறார்கள். ஆனால், விக்னேஷ் என்பவர் காவல் துறையினருடன் வர மறுத்திருக்கிறார். மறுத்தது மட்டுமல்ல; தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் காவல் துறையினரைத் தாக்க முயற்சித்திருக்கிறார். அதைச் சமாளித்து, இருவரையும் போலீஸார் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து, ஆட்டோவில் இருந்த கஞ்சா மற்றும் மது பாட்டில்களை பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள். இவர்களின் பின்புலத்தை FRS என்ற செயலியின்மூலம் ஆய்வு செய்தபோது, சுரேஷ் மீது கொலை, கொலை முயற்சி உள்ளிட்ட 11 வழக்குகளும், விக்னேஷ் மீது ஏற்கெனவே 2 கன்னக்களவு வழக்குகளும் இருப்பது தெரிய வந்திருக்கிறது.

அடுத்த நாள் காலை, அதாவது 19.04.2022 அன்று காலை, இருவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டிருக்கிறது. காலை உணவு சாப்பிட்டபின், விக்னேஷ்க்கு திடீரென்று வாந்தி, வலிப்பு வந்திருக்கிறது. உடனே அருகில் இருக்கக்கூடிய தனியார் மருத்துவமனைக்கு அவரைக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார். ஆனால் அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் இறந்த நிலையில் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, விக்னேஷ் இறப்பு குறித்து ‘‘சந்தேக மரணம்’’ என முறைப்படி வழக்குப் பதிவு செய்து, மேஜிஸ்ட்ரேட் விசாரணை நடைபெற்று வருகிறது. விக்னேஷினுடைய உடல் 20.04.2022 அன்று மேஜிஸ்ட்ரேட் அவர்கள் முன்னிலையில், மருத்துவக் குழுவினரால் பிணக் கூராய்வு செய்யப்பட்டிருக்கிறது. இது வீடியோ மூலமும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பிரேத பரிசோதனை முடிவுற்ற பின்னர், 20.04.2022 அன்றே

உறவினர்களிடம் முறைப்படி விக்னேஷினுடைய உடல் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கு சந்தேக மரண வழக்காகப் பதிவு செய்யப்பட்டு, விசாரணையில் உள்ள நிலையில், தலைமைச் செயலக காலனி காவல் நிலைய உதவி ஆய்வாளர் புகழும் பெருமாள், காவலர் பொன்ராஜ், ஊர்க் காவல் படைக் காவலர் தீபக் ஆகியோர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும், காவல் துறை இயக்குநர் அவர்கள் மேல் விசாரணைக்காக இவ்வழக்கினை 24.04.2022 அன்று சி.பி.சி.ஐ.டி—க்கு மாற்றம் செய்து உத்தரவிட்டிருக்கிறார். ஆகவே, விக்னேஷ் மரணம் தொடர்பாக சட்டப்படியான அனைத்து நடவடிக்கைகளையும் முறையாக அரசு எடுத்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், திராவிட முன்னேற்றக் கழகம், காவல் மரணங்கள் தீர விசாரிக்கப்பட்டு, அது எவ்வாறானதாக இருந்தாலும், அந்நிகழ்வில் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றது. அதே வகையில், இந்த வழக்கும் முறையாக விசாரிக்கப்பட்டு, கடைக்கோடி மனிதனுக்கும், அவர்களின் மனித உரிமை காக்கப்பட்டு, உரிய நீதி கிடைத்திட இந்த அரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் என்றைக்கும் துணை நிற்கும் என்பதை இந்த அவையில் இருக்கக்கூடிய, இந்த கவன ஈர்ப்பைக் கொண்டு வந்து உரையாற்றியவர்களுக்கு மட்டுமல்ல; இங்கேயிருக்கக்கூடிய எல்லா உறுப்பினர்களுக்கும் இதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இதுகுறித்து சில கோரிக்கைகளை, சில உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கிறீர்கள். எனவே, மாண்புமிகு

உறுப்பினர்கள் தெரிவித்திருக்கக்கூடிய அந்தக் கருத்துக்களைத் தொடர்ந்து, வழக்கினுடைய முடிவுகள் எப்படியிருந்தாலும், மனிதாபிமான அடிப்படையில் உயிரிழந்த விக்னேஷ் அவர்களது குடும்பத்தினுடைய ஏழ்மை நிலையைக் கருத்தில்கொண்டு உடனடியாக 10 இலட்சம் ரூபாய் நிவாரணம் அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்படும். அதே அடிப்படையில், சுரேஷ் அவர்களது உயர் சிகிச்சைக்கான செலவையும் அரசே ஏற்கும் என்பதை இந்த அவையில் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கின்றேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*

*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*

*சென்னையைச் சேர்ந்த விக்னேஷ் என்பவரது மரணம் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை – **26.04.2022***

# தேர் விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 இலட்சம் நிவாரணயுதவி



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், களிமேடு கிராமத்தில் 27.04.2022 அன்று அதிகாலை நடைபெற்ற தேர்த் திருவிழாவின்போது, எதிர்பாராத விதமாக, தேர், மின் கம்பியில் உரசியதால் விபத்து ஏற்பட்டு, சம்பவ இடத்திலேயே 11 பேர் உயிரிழந்து விட்டனர் என்ற நெஞ்சை உலுக்கும் செய்தியினை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், மேலவெளி கிராமத்திற்கு உட்பட்ட களிமேடு அப்பர் திருக்கோயிலில் கடந்த 26.04.2022 அன்று நடைபெற்ற திருநாவுக்கரசு சுவாமிகள் 94 ஆம் ஆண்டு சித்திரை சதய விழாவின் தொடர்ச்சியாக நடைபெற்ற தேர் பவனி வீதி உலாவின்போது, இன்று அதிகாலை 3:10 மணி அளவில்

தஞ்சாவூரிலிருந்து பூதலூர் செல்லும் சாலையில் தேரோட்டம் முடிந்து, தேரினைத் திருப்ப முற்பட்டபொழுது, தேர் கட்டுப்பாட்டினை இழந்து அருகில் இருந்த உயர் மின்னழுத்த மின் கம்பியில் உரசியதாகத் தெரிகிறது.

அப்போது ஏற்பட்ட மின் விபத்தில் சம்பவ இடத்திலேயே மோகன், பிரபாத், ராகவன், அன்பழகன், நாகராஜ், சந்தோஷ், செல்வம், ராஜ்குமார், சாமிநாதன், கோவிந்தராஜ், பரணி ஆகிய 11 பேர் பரிதாபமாக உயிரிழந்த துயரமான சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்துள்ள 16 பேர்களும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான அனைத்து சிறப்பு சிகிச்சைகளையும் அளிப்பதற்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இப்பணிகளை மேற்பார்வையிடவும், துரிதப்படுத்திடவும், தஞ்சாவூர் மாவட்ட பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களும் மக்கள் பிரதிநிதிகளும், அரசு உயர் அலுவலர்களும் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு தலா ஐந்து இலட்சம் ரூபாயினை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

விபத்து நடைபெற்ற இடத்திற்கு இன்று நான் நேரில் சென்று, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் தெரிவிக்கவும், காயமடைந்து சிகிச்சையில் உள்ளவர்களைச் சந்திக்கவும் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்திடும் வகையில், பேரவையில் பின்வரும் இரங்கல் தீர்மானத்தினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம்**

மிகுந்த துயரமான இச்சம்பத்தில் உயிரிழந்தவர்களைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவிக்கும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தஞ்சாவூர் மாவட்டம், களிமேடு கிராமத்தில் இன்று அதிகாலை*
*தேர் மின் கம்பியில் உரசியதால் ஏற்பட்ட விபத்து தொடர்பாக,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை –* ***27.04.2022***

# பெட்ரோல் மீது விதிக்கப்பட்ட மாநில வரியைக் குறைத்தது தமிழ்நாடு அரசு



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு.கு.செல்வப் பெருந்தகை அவர்கள் சில கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார். நேற்றையதினம், கொரோனாவினால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மாநில முதல்வர்களோடு, மாநிலத்தில் இருக்கக்கூடிய அரசு அதிகாரிகளோடு, நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக ஒரு கூட்டத்தை நடத்தினார். அந்தக் கூட்டத்திலே, பெட்ரோல் மற்றும் டீசல் விலையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லி, அதை சில மாநிலங்கள் குறைப்பதற்கான வழிவகையைக் காணவில்லை என்று ஒரு கருத்தை அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

பெட்ரோல் மற்றும் டீசல் விலையைக் குறைப்பதற்கு ஒன்றிய அரசு எடுத்த முயற்சிகளுக்கு சில மாநிலங்கள் ஒத்துழைக்கவில்லை என்றும், இந்தப் பொருட்களின் மேல் மாநில அரசுகள் விதிக்கக்கூடிய வரிகளை இந்த அரசுகள் குறைக்காத காரணத்தால்தான் பெட்ரோல் மற்றும் டீசல் விலையை நாட்டில் குறைக்க முடியவில்லை என்றும் மாண்புமிகு பிரதமர் அவர்கள் நேற்றைக்குக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். இதனைப்பற்றி நான் ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், முழுப்பூசணிக்காயை சோற்றிலே மறைப்பது போல், அவர் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

✶ 2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததிலிருந்து, கச்சா எண்ணெயின் விலை பெருமளவு சரிந்தபோது, அதற்கேற்றாற்போல பெட்ரோல் மற்றும் டீசல் விலையைக் குறைக்காமல், அந்த எண்ணெய் விலை வீழ்ச்சியால் கிடைத்த உபரி வருவாய் முழுமையும் தனதாக்கிக் கொண்டது ஒன்றிய அரசு.

✶ பெட்ரோல் மற்றும் டீசல் மேல் விதிக்கப்படக்கூடிய மத்திய கலால் வரியானது, மாநில அரசுகளோடு பகிர்ந்து அளிக்கக்கூடியது என்ற காரணத்தால், அதனைக் குறைத்து மாநில அரசுகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும் வருவாயில் கை வைத்தது ஒன்றிய அரசு.

✶ பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்படக்கூடிய ஒன்றிய தலவரி மற்றும் தலமேல்வரியும், மாநில அரசுகளோடு பகிர்ந்தளிக்கப்படத் தேவையில்லை என்பதால், இந்த வரிகளை மிகக் கடுமையாக உயர்த்தி, மக்கள் மீது சுமையைத் திணித்து, அதனால் கிடைக்கும் இலட்சக்கணக்கான கோடி வருவாயை முழுவதும் தனதாக்கிக் கொண்டது ஒன்றிய அரசு.

- ✶ சில மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது என்ற ஒரே காரணத்திற்காக பாசாங்கு காட்டுவதுபோல இந்தத் தேர்தலுக்கு முன்பாக அதிரடியாக பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்படும் வரிகளைக் குறைத்து வேடம் போட்டது ஒன்றிய அரசு.
- ✶ மாநில அரசு தேர்தல்கள் முடிந்த பின்பு, அடுத்த வாரம் முதல் மடமடவென விலையை முன்பு இருந்ததை விட உயர்த்தி, மக்கள் மீது கூடுதல் சுமையை சுமத்தும் ஒன்றிய அரசு.
- ✶ ஆனால், தேர்தல் முடிந்து வெற்றி பெற்ற பின்பு, தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டவாறு மக்கள் நலன் கருதி, நிதிநிலைமையையும் பொருட்படுத்தாமல், ஒன்றிய அரசு குறைப்பதற்கு முன்பாகவே, பெட்ரோல் மீது விதிக்கப்படும் மாநில வரியைக் குறைத்தது தமிழக அரசு.
- ✶ இவையனைத்தும் தமிழக மக்களுக்கு நன்றாகவே தெரியும். யார் பெட்ரோல் விலையைக் குறைப்பதில் உண்மையிலேயே முனைப்பு காட்டுகிறார்கள்; யார் பெட்ரோல் விலையைக் குறைப்பது போல நடித்து பழியை மற்றவர்கள் மீது போடுகிறார்கள் என்பதை மக்களுடைய முடிவிற்கே நான் விட்டு விடுகிறேன்.

எனவே, இதுகுறித்து விவரமாக data அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு நிதித் துறை அமைச்சரும் விளக்கம் அளிக்கவிருக்கிறார் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்*
*பெட்ரோல்–டீசல் விலை தொடர்பான விவாதத்தின்போது,*
*ஆற்றிய உரை –* ***28.04.2022***

# தங்கமணி உடற்கூராய்வு அறிக்கை கிடைத்தவுடன் உரிய விசாரணை நடத்தப்படும்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு காவல் நிலைய சரகம், தட்டரணை கிராமத்தைச் சேர்ந்த தங்கமணி என்பவர் அவரது வீட்டில் விஷச்சாராயம் வைத்திருந்ததாக திருவண்ணாமலை மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினர் கடந்த 26.04.2022 அன்று வழக்குப் பதிவு செய்து, அவரைக் கைது செய்து நீதித் துறை நடுவர் முன்பு ஆஜர் செய்து, அன்றையதினமே திருவண்ணாமலை கிளைச் சிறையில் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினர்.

இந்த நிலையில், சிறையிலிருந்த தங்கமணிக்கு ஏப்ரல் 27 அன்று உடல்நலக் குறைவு ஏற்பட்டதையடுத்து, அவர் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இரவு சுமார் 7:40 மணிக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தங்கமணி சிகிச்சை பலனின்றி இரவு சுமார் 8:40 மணியளவில் உயிரிழந்துள்ளார். தங்கமணியின் உடல் அதே மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது.

நேற்றிரவு, நீதித் துறையினுடைய நடுவர் முன்னிலையில் உடற்கூராய்வு நடைபெற்றுள்ளது. அதன் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், உரிய விசாரணை நடத்தப்பட்டு, இந்த அவைக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு காவல் நிலைய சரகம், தட்டரணை கிராமத்தைச் சேர்ந்த தங்கமணி என்பவரது மரணம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதற்கு, பதிலளித்து ஆற்றிய உரை – 28.04.2022*

# இலங்கைப் பிரச்சினை நமது இரத்தத்தில், உணர்வில், வாழ்வில் கலந்தது



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் சூழ்ந்த இலங்கை நாடு, இன்று கண்ணீரால் சூழப்பட்டுள்ளது. ஈழத் தமிழ் மக்களுக்காகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆளுங்கட்சியாக இருந்தபோதும், எதிர்க்கட்சியாக இருந்தபோதும் ஆற்றிய பணிகளை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்பதைப் போல, நம்முடைய இரத்தத்தில், உணர்வில், வாழ்வில் கலந்த ஒரு பிரச்சினையாக இலங்கைப் பிரச்சினை இருந்து வருகிறது. இலங்கையில் வாழக்கூடிய ஈழத் தமிழர் நலன் கருதி அரசியல் ரீதியாகப் பல்வேறு முழக்கங்களை வெவ்வேறு காலக்கட்டங்களில் நாம் முன்வைத்திருக்கிறோம். காலச்சக்கரம் இலங்கை மக்களை அலைக்கழித்து எங்கோ கொண்டு போய் நிறுத்திவிட்டது. இருப்பினும், இன்றைய நாள் மனிதாபிமான அடிப்படையில் நாம்

கைகொடுக்க வேண்டும் என்பதே இந்த அரசினுடைய நிலைப்பாடு ஆகும்.

தற்போது இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கான காரண, காரியத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. அதேநேரத்தில், அங்குள்ள மக்கள் படக்கூடிய துன்பங்கள், துயரங்கள் நம் அனைவருடைய மனதிலும் சோகத்தை உருவாக்கியிருக்கிறது.

இலங்கை முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கிறது. பெட்ரோல், டீசலுக்காக வாகனங்கள் பல மணி நேரம் வரிசையிலே காத்திருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மண்ணெண்ணெய் வாங்க பொது மக்கள் 6 மணி நேரம் காத்திருக்க வேண்டிய ஒரு அவல நிலையும் ஏற்பட்டிருக்கிறது. எரிவாயு சிலிண்டர்கள் கிடைப்பதில் கடுமையான தட்டுப்பாடும் இருக்கிறது. இதனால் சமையல் செய்வதே சிக்கலுக்குரியதாக மாறியிருக்கிறது என்று செய்திகள் அவ்வப்போது வந்து கொண்டிருக்கின்றன. நாடு முழுவதும் மின்சாரத் தட்டுப்பாடு நிலவுகிறது. அரசு மற்றும் தனியார் அலுவலகங்களும் செயல்பட முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. பல அத்தியாவசியப் பொருட்களுடைய விலை பன்மடங்கு உயர்ந்து கொண்டே போகிறது. பேருந்துகள், இரயில்கள் ஆகிய போக்குவரத்துச் சேவைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன; பல இடங்களில் அவை நிறுத்தப்பட்டிருக்கின்றன.

இரசாயன உரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதால், மலையகப் பகுதிகளில் தேயிலை விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலும் நமக்கு வருகிறது. இதனால், தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியக்கூடிய மலையகத் தமிழர்கள்

கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இலங்கை நாடு முழுவதும் உயிர்காக்கும் பல மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளில் இரசாயன உரம் கிடைக்காதது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. சாதாரணமாக 1,200 ரூபாய்க்குக் கிடைத்த உர மூட்டை தற்போது 32,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. பால் விலை, பால் பவுடர் விலை, உணவுப் பொருள்கள் விலை என அனைத்தும் பல நூறு மடங்கு உயர்ந்துவிட்ட காரணத்தால் பச்சிளம் குழந்தைகளும் கூட துன்பத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்ற செய்தி கேட்டு நம் நெஞ்சம் பதைபதைக்கிறது. மொத்தத்தில் இலங்கை மக்களின் வாழ்க்கை என்பது மிகமிக மோசமான நிலையை அடைந்துள்ளது.

அண்டை நாட்டுப் பிரச்சினையாக இதை நாம் பார்க்க முடியாது. அங்கு யார் ஆட்சியில் இருக்கிறார்கள்; அவர்கள் எத்தகையவர்கள் எனப் பார்க்க இயலாது. அந்த நாட்டு மக்களுக்கு நம்மால் ஆன உதவியை நாம் செய்தாக வேண்டும் என்பதைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

இலங்கையில் இருந்து இத்தகைய செய்திகள் வந்ததுமே, ஈழத் தமிழ் மக்களுக்கு நம்மால் ஆன அனைத்தையும் வழங்குவோம் என்று நான் அறிவித்தேன். பிரதமர் அவர்களை 31.03.2022 அன்று நான் நேரிலே சந்தித்து வலியுறுத்தினேன். அப்போது அதனை அறிந்து இலங்கைத் தமிழர் தலைவர்களும், சில தமிழ் அமைப்புகளும் எனக்கு வைத்த கோரிக்கை, “தனியாகத் தமிழர்களுக்கு மட்டும் உதவி என்று அனுப்ப வேண்டாம்; இலங்கை மக்களுக்கு என்று பொதுவாக அனுப்புங்கள்; மக்களைப் பிரித்துப் பார்க்க வேண்டாம்; அனைத்து இன மக்களும் சேர்ந்துதான் இந்த நெருக்கடியை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்” என்று சொன்னார்கள்.

அதைக் கேட்டபோது நான் நெகிழ்ந்து போனேன். என்னால் உணர்ச்சிப் பெருக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதுதான் தமிழர் பண்பாடு. "பகைவர்க்கும் அருள்வாய் நன்நெஞ்சே" என்பதைப் போல, இலங்கைத் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. இந்த நிலையில், ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்காக நாம் உதவிகள் செய்தாக வேண்டும். அந்த வகையில் பின்வரும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கலாம் எனத் தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.

- முக்கியமாக, 40 ஆயிரம் டன் அரிசி; இதனுடைய ஒட்டுமொத்த மதிப்பு சுமார் 80 கோடி ரூபாய்;
- அதேபோல், உயிர் காக்கக்கூடிய 137 மருந்துப் பொருட்கள்; இதன் மதிப்பு 28 கோடி ரூபாய்;
- குழந்தைகளுக்கு வழங்க 500 டன் பால்பவுடர்; இதன் மதிப்பு 15 கோடி ரூபாய்.

இவற்றையெல்லாம் இலங்கையில் வாழக்கூடிய அனைத்து மக்களுக்கும் நாம் வழங்க நினைக்கிறோம். இவற்றை மாநில அரசு நேரடியாக வழங்க முடியாது. ஒன்றிய அரசின் அனுமதியோடு இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் வழியாகத்தான் வழங்க வேண்டும். இலங்கையில் இத்தகைய நெருக்கடி ஏற்பட்டதுமே, இந்திய அரசிடம் இதுகுறித்த கோரிக்கையை நான் முன்வைத்தேன்.

31.03.2022 அன்று டெல்லி சென்று மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்தபோதும் இதனை நான் வலியுறுத்தியிருக்கிறேன். அதனைத் தொடர்ந்து ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டும் நான் கோரிக்கை வைத்திருக்கிறேன்.

அவருக்கும் **15.04.2022** அன்று கடிதம் எழுதி நினைவூட்டியிருக்கிறேன். இன்றுவரை எந்தத் தகவலும் இல்லை. ஆனால் அங்கு நிலைமை தற்போது மிகவும் மோசமடைந்துள்ளது.

'உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்கிறார் வள்ளுவர். உதவி என்பதும் மனிதாபிமான அடிப்படையில் உடனடி உதவியாக இருக்க வேண்டும். காலத்தே செய்தால்தான் அது உதவி. இதனைத்தான் தமிழக மக்களும் எதிர்பார்க்கிறார்கள். இந்த எண்ணத்தை ஒன்றிய அரசுக்குச் சொல்லக்கூடிய வகையில் ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நிறைவேற்றி அனுப்புவது காலத்தினுடைய கட்டளை என்று அரசு கருதுகிறது. அதனடிப்படையில், கீழ்க்காணும் தீர்மானத்தை நான் இங்கே முன்மொழியக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**தீர்மானம்**

"இலங்கையில் தற்போது நிலவி வரும் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிடும் பொருட்டு, தமிழ்நாடு அரசு அவர்களுக்குத் தேவையான அரிசி, பருப்பு, பால் பொருட்கள் முதலிய அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர் காக்கக்கூடிய மருந்துகள் ஆகியவற்றை அனுப்பி வைக்கத் தயாராக உள்ளது என்றும்; இதற்கு ஒன்றிய அரசு தேவையான அனுமதி வழங்க வேண்டும் என்றும் ஒன்றிய அரசிற்கு ஏற்கெனவே மாநில அரசு கடிதம் எழுதியிருக்கிறது. எனினும், இதுகுறித்து ஒன்றிய அரசிடமிருந்து எந்தவிதமான தெளிவான பதிலும் இதுவரை பெறப்படாத நிலை உள்ளது.

தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று இலங்கையில் கடும் இன்னலுக்கு உள்ளாகி இருக்கக்கூடிய மக்களுக்கு உதவக்கூடிய

வகையில், உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை உடனடியாக அனுப்பி வைக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து, உரிய அனுமதிகளை வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசினை இப்பேரவை வலியுறுத்துகிறது.''

இந்தத் தீர்மானத்தை கட்சி எல்லைகளைக் கடந்து, கருணை உள்ளத்தோடு அனைவரும் ஒருமனதாக ஆதரிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*இலங்கையில் கடும் இன்னலுக்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து, ஆற்றிய உரை –* ***29.04.2022***

# இலங்கை நாட்டு மக்களுக்கு உதவி செய்ய தமிழக அரசு தயாராக இருக்கிறது

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, மனிதநேயமிக்க தீர்மானத்தை ஆதரித்துப் பேசியிருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இங்கேயிருக்கக்கூடிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்திருக்கக்கூடிய தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், இந்தத் தீர்மானத்தை வரவேற்று, ஆதரித்து, இதை ஒருமனதாக நிறைவேற்றிட வேண்டுமென்ற அடிப்படையிலே பேசியதற்கு முதலில் என்னுடைய நன்றியை உங்கள் அத்தனை பேருக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடும் இன்னலுக்கு உள்ளாகியிருக்கக்கூடிய இலங்கை நாட்டு மக்களுக்கு உதவிடும் நோக்கில், இன்று தமிழக அரசு அறிவித்துள்ள உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர்காக்கக்கூடிய மருந்துகள் அடங்கிய உதவி என்பது முதற்கட்டமாக அறிவிக்கப்பட்டிருப்பதுதான். இலங்கை நாட்டு மக்களுக்கு இன்னும் உதவி தேவைப்படுமென்றால், அடுத்த கட்டமாக, உதவிகள் செய்வதற்கு தமிழக அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக நான் இந்த அவைக்குக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.ஜி.கே.மணி அவர்கள்கூட குறிப்பிட்டுச் சொன்னார். “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்ற வள்ளலாரின் உணர்வுகளைத் தாங்கி, தமிழ்நாட்டு மக்கள், அதேபோல, அரசியல்

கட்சிகள், தொண்டு நிறுவனங்கள், வர்த்தக அமைப்பினர் உள்ளிட்டோர் இலங்கை நாட்டு மக்களுக்கு உதவிகள் செய்ய முன்வந்தால், அவற்றையும் ஒருங்கிணைத்து, ஒன்றிய அரசின் மூலமாக இலங்கை நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது. அதற்கு முன்னோட்டமாகத்தான் நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், அவருடைய சொந்த நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாயைத் தான் வழங்குவதாக இன்று அறிவித்திருக்கிறார். அவர் ஏன் இதை அறிவித்திருக்கிறார் என்றால், மற்றவர்களும் அதைப் பின்பற்ற வேண்டுமென்ற அந்த அடிப்படையில்தான் அதை அறிவித்திருக்கிறார். ஆகவே, அவருடைய அந்த நல்லெண்ணத்திற்கு நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*

*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*

*இலங்கையில் கடும் இன்னலுக்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தின்மீது அனைத்துக் கட்சித் தலைவர்களும் பேசி முடித்ததற்குப் பின்னர், ஆற்றிய உரை – **29.04.2022***

# நீட் விலக்கு சட்டமசோதா மாண்புமிகு இந்தியக் குடியரசு தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைப்பு

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கனவை சிதைத்துவரும் நீட் தேர்விலிருந்து நமது மாணவர்களுக்கு விலக்கு பெற வேண்டும் என்பதற்காக இந்த அரசு எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகளைப் பற்றி நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இதன் முதல் படியாக நாம் அனைவரும் இணைந்து இந்த மாமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றிய நீட் விலக்கு தொடர்பான சட்டமுன்வடிவை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மறுபரிசீலனை செய்யுமாறு கோரியதும், அதுகுறித்து அனைத்துச் சட்டமன்றக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி விரிவாக விவாதித்து, சில தினங்களுக்குள்ளாகவே மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்கு ஏதுவாக, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு மீண்டும் அனுப்பி வைத்தோம்.

இதுதொடர்பாக மாண்புமிகு ஆளுநர் அவர்களை நான் நேரில் சந்தித்து, மேலும் தாமதமின்றி இந்தச் சட்டமுன்வடிவை ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும், மாண்புமிகு பிரதமர் அவர்களையும், மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து இந்தச் சட்டமுன்வடிவிற்கு விரைவில் ஒப்புதல் அளிக்கப் பெற வேண்டுமென்றும் வலியுறுத்தினேன். அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதுகுறித்து மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களது அலுவலகத்தில் மனு அளித்திருக்கிறார்கள்.

இந்தத் தொடர் முயற்சிகளின் பயனாக, ஒரு வரலாற்று நிகழ்வாக, நாம் சட்டமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பி வைத்த நீட் விலக்கு சட்டமுன்வடிவினை ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்கு ஏதுவாக மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அனுப்பி வைத்துள்ளார்கள் என்ற தகவலை மாண்புமிகு ஆளுநர் அவர்களின் செயலர் அவர்கள் சில மணித்துளிகளுக்கு முன்பாக என்னிடம் தொலைபேசி வாயிலாகத் தெரிவித்துள்ளார் என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நீட் விலக்கு தொடர்பான நமது போராட்டத்தின் அடுத்த கட்டமாக ஒன்றிய அரசை வலியுறுத்தி, இந்தச் சட்டமுன்வடிவிற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து அமைகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*நீட் விலக்கு தொடர்பான சட்டமுன்வடிவினை*
*மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்கு*
*ஏதுவாக, ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி*
*வைத்துள்ளதாக, மாண்புமிகு ஆளுநர் அலுவலகத்திலிருந்து செய்தி*
*வரப்பெற்றது எனத் தெரிவித்து ஆற்றிய உரை – **04.05.2022***

# குற்றச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் மீது உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், விக்னேஷ் மரணம் குறித்தும், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்தும் இந்த அரசினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையிலே இங்கே உரையாற்றியிருக்கிறார்கள்.

சென்னையைச் சேர்ந்த விக்னேஷ் என்ற இளைஞர் வாகன சோதனையின்போது, கஞ்சா மற்றும் மது பாட்டில்கள் வைத்திருந்ததையொட்டி, அவர் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்தில் விசாரணையின் போது, உடல் நலம் குன்றி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார் என்பது குறித்து ஏற்கெனவே இந்த அவையிலே சிறப்புக் கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்து, எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்ல; இந்த அவையில் உள்ள கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் இங்கே பேசியிருக்கிறார்கள்.

அப்போது நான் பதிலளித்துப் பேசிய நேரத்தில், 'விக்னேஷ் இறப்பு குறித்து ''சந்தேக மரணம்'' என முறைப்படி வழக்குப் பதிவு செய்து, மேஜிஸ்ட்ரேட் விசாரணை நடைபெற்று வருகிறது. விக்னேஷினுடைய உடல் **20.04.2022** அன்று மேஜிஸ்ட்ரேட் அவர்கள் முன்னிலையில், மருத்துவக் குழுவினரால் உடற்கூராய்வு செய்யப்பட்டிருக்கிறது என்றும், இது வீடியோ மூலம் முழுமையாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும், பிரேத பரிசோதனை முடிவுற்ற பின்னர், அன்றைய தினமே உறவினர்களிடம் முறைப்படி விக்னேஷினுடைய உடல் ஒப்படைக்கப்பட்டது என்ற விவரத்தை எல்லாம் நான் அன்றைக்குத் தெரிவித்திருந்தேன்.

மேலும், இந்த வழக்கானது, சந்தேக மரண வழக்காகப் பதிவு செய்யப்பட்டு, விசாரணையில் உள்ள நிலையில், தலைமைச் செயலக காலனி காவல் நிலைய உதவி ஆய்வாளர் புகழும் பெருமாள், காவலர் பொன்ராஜ், ஊர்க் காவல் படைக் காவலர் தீபக் ஆகியோர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும், காவல் துறை இயக்குநர் அவர்கள் மேல் விசாரணைக்காக இவ்வழக்கினை **24.04.2022** அன்று சி.பி.சி.ஐ.டி–க்கு மாற்றம் செய்து உத்தரவிட்டிருக்கிறார்.

ஆகவே, விக்னேஷ் மரணம் தொடர்பாக சட்டப்படியான அனைத்து நடவடிக்கைகளையும் முறையாக அரசு எடுத்து வருகிறது என்று நான் தெரிவித்திருக்கிறேன்.

தற்பொழுது கிடைத்துள்ள விக்னேஷ் அவர்களின் உடற்கூராய்வு முடிவுகளின்படி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவருடைய உடலில் **13** இடங்களில் காயங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இதனடிப்படையில், இன்று இந்த வழக்கானது, கொலை வழக்காக மாற்றப்பட்டு, காவலர்கள் மீது கொலை வழக்குப்

பதியப்பட்டு, விசாரணையினைத் தொடர்ந்து நடத்திட CB-CID போலீசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், ஈரோடு மாவட்டம், சென்னிமலை காவல் நிலைய சரகம், உப்பிலிபாளையம் ஓடைக்காடு பகுதியில் துரைசாமி மற்றும் அவரது மனைவி ஜெயமணி ஆகியோர் **30.04.2022** அன்று அவர்களது தோட்டத்து வீட்டின் வெளிப்பகுதியில் உறங்கிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அப்போது அடையாளம் தெரியாத நபர்கள் அந்த இருவரையும் தாக்கிவிட்டு, அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளை திருடிச் சென்றிருக்கிறார்கள்.

இச்சம்பவத்தில், காயமுற்ற துரைசாமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், அவரது மனைவி ஜெயமணி பெருந்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அதேபோன்று, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் காவல் நிலைய சரகம், தம்பிரெட்டிப்பாளையத்தில் பழனிச்சாமி மற்றும் அவரது மனைவி வள்ளியம்மாள், அவர்களுக்குச் சொந்தமான ரெட்டிப்பாளையத்தில் உள்ள தோட்டத்து வீட்டில் குடியிருந்து வருகின்றனர்.

அவர்கள் தங்களது வீட்டின் வெளியே உறங்கிக்கொண்டிருந்த போது, அடையாளம் தெரியாத நபர்கள் அவர்களைத் தாக்கி கொலை செய்து, வள்ளியம்மாள் அணிந்திருந்த சுமார் ஏழரை சவரன் தங்க நகைகளை திருடிச் சென்றிருக்கிறார்கள்.

இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பாக காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து, இதற்கென தனிப்படைகள் அமைக்கப்பட்டு இக்குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை அடையாளம் கண்டு கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த இரண்டு சம்பவங்கள் குறித்த முதல் கட்ட விசாரணையில், தாக்குதல் நடந்த விதம் மற்றும் கொள்ளையடிக்கப்பட்ட முறை ஒன்றுபோல் இருப்பதால், இந்த இரண்டு சம்பவங்களில் ஒரே குற்றக் கும்பல் ஈடுபட்டிருக்கலாம் என்றும் தெரிய வருகிறது. இதுகுறித்து கோயம்புத்தூர் சரக காவல்துறை துணைத் தலைவர் அவர்கள் தலைமையிலே, காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விரைவில் குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள்.

இதுபோன்ற குற்றச் சம்பவங்களைப் பொறுத்தவரையில், காவல் துறையின் சார்பில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டும், ஒருசில குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடிக்க இயலாத நிலை கடந்த காலங்களிலும் இருந்துள்ளது. இருந்தாலும், இதுகுறித்து காவல் துறை விசாரணை நடைபெற்று வருவதால், இதற்கு மேல் இதுபற்றிப் பேசி, நான் அரசியலாக்க விரும்பவில்லை. ஆகவே, உரிய நடவடிக்கை நிச்சயமாக, விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சென்னையைச் சேர்ந்த விக்னேஷ் மரணம் மற்றும் ஈரோடு, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற குற்றச் சம்பவங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் பேசியதற்கு, பதிலளித்து ஆற்றிய உரை –* ***06.05.2022***

# முதலாண்டு முத்தான தொடக்கம் இரண்டாமாண்டு இணையற்ற ஆண்டாக இருக்கும்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் பொறுப்பேற்று இன்றோடு ஓராண்டு நிறைவு பெறுகிறது. இந்த ஓராண்டு காலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு உண்மையுடனும், உளப்பாங்குடனும் உழைத்திருக்கிறேன் என்கிற மனநிறைவோடுதான் இந்த மாமன்றத்தில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன்.

ஒரு தனிமனிதனின் வரலாற்றில் வேண்டுமானால் ஓராண்டு என்பது மிக நீண்டதாக இருக்கலாம். ஆனால், ஒரு நாட்டின், மாநிலத்தின் வரலாற்றில் ஓராண்டு என்பது ஒரு துளிதான். துளி போன்ற இந்த ஓராண்டு காலத்தில், கடல் போன்ற விரிந்த சாதனைகளைச் செய்துள்ளோம் என்ற பெருமிதத்தோடு இந்த மாமன்றத்தில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன்.

‘இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக நானும், பேராசிரியரும் உழைத்துக்கொண்டு இருக்கிறோம். எங்களுக்குப் பின்னால் இந்தப் பணியை யார் செய்வார்கள் என்று கேட்பீர்களேயானால், இந்த மேடையில் உட்கார்ந்திருக்கிற தம்பி ஸ்டாலின்தான் அதனைச் செய்ய வேண்டும். சிறப்பாகச் செய்வார் என்று நானும் பேராசிரியரும் நம்புகிறோம்’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த கூட்டத்திலே வெளிப்படையாக அறிவித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், இனமானப் பேராசிரியப் பெருந்தகை அவர்களும் என் மீது வைத்த நம்பிக்கையை இந்த ஓராண்டு காலத்தில் காப்பாற்றி இருக்கிறேன் என்ற மகிழ்ச்சியோடுதான் இந்த மாமன்றத்தில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன். என்னை மட்டுமல்ல; இந்த அவையில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களை மட்டுமல்ல; தமிழ்நாட்டின் எட்டுத்திசையிலும் வாழக்கூடிய எத்தனையோ இலட்சோபலட்சம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்களை உருவாக்கியவர்தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். எங்களை எல்லாம் உருவாக்கிவிட்டு அவர் மறைந்தபோது, அவர் வகித்த கழகத் தலைவர் பொறுப்பு என்னுடைய தோளில் சுமத்தப்பட்டது.

‘நான் கலைஞர் அல்ல; அவரைப் போலப் பேசத் தெரியாது; அவரைப் போல எழுதத் தெரியாது; அவரைப் போல உழைக்க முயன்று பார்ப்பேன்’ என்று அப்போது நான் உறுதி அளித்தேன். அந்த உறுதிமொழியை இந்த ஓராண்டு காலத்தில் காப்பாற்றி இருக்கிறேன் என்று சொல்லும் துணிச்சலோடுதான் உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

நூற்றாண்டு பழமை கொண்ட இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இத்தகைய மகிழ்ச்சிக்குரிய மனநிலையுடன் என்னைத் தலைநிமிர்ந்து நிற்க வைத்த கோடிக்கணக்கான

தமிழ்நாட்டு மக்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதே மாமன்றத்தில் நின்று முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றிக் கொண்டு இருந்தார். அரங்கமே அமைதியாகக் கேட்டுக் கொண்டு இருந்தது. ஆனால் அரங்கினுடைய வெளியே, வாசலில் ஏதோ சத்தம் வந்து கொண்டேயிருந்தது. காவலர்களிடம் கண் அசைவில், "என்ன ?" என்று அண்ணா அவர்கள் கேட்டிருக்கிறார். காவலர்கள் அண்ணா அவர்களிடம் ஏதோ சொன்னார்கள். பேரவைத் தலைவருடைய அனுமதி பெற்று அரங்கை விட்டு வெளியில் போன முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஐந்து நிமிடம் கழித்து உள்ளே வந்திருக்கிறார். தனது பேச்சைத் தொடர்வதற்கு முன்னால், "என்னைப் பார்ப்பதற்காக தமிழ்நாட்டின் எங்கோ ஒரு மூலையில் இருந்து எங்களது கழகத் தொண்டர்கள் வந்துள்ளார்கள். நான் இந்த அவைக்குள் நுழைவதற்குக் காரணமான அவர்களை மதித்து வணங்கி, வழியனுப்பி வைத்துவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

தமிழ்நாட்டின் எங்கோ ஒரு மூலையில் இருந்து என்னை இந்த மாமன்றத்துக்குள் இத்தகைய தகுதியோடு நிற்க வைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தோழமைக் கட்சிகளாக மட்டுமில்லாமல், தோழமை உறவுகளாக எங்களோடு எப்போதும் பயணித்துக் கொண்டிருக்கக்கூடிய கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இவர்களால்தான் நான் இங்கு தலைநிமிர்ந்து நிற்கிறேன். அவர்கள் என்மீது வைத்த நம்பிக்கையை இந்த ஓராண்டு காலத்தில் காத்து வந்திருக்கிறேன் என்று உறுதியாக நான் நம்புகிறேன்.

அனைத்துத் தரப்பு மக்களுடைய நலனைக் காத்து, அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, சமச்சீரான வளர்ச்சியை சாதித்துக் காட்டுவதாக இந்த ஓராண்டுக் கழக ஆட்சி திகழ்கிறது. நமது திட்டங்களின் பயன்கள் சென்று சேராதவரே தமிழ்நாட்டில் இல்லை என்ற ஒரு நிலை உருவாகியுள்ளது.

மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயணம் என்ற ஒரு திட்டம் பெண்கள் சமூகத்தில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மட்டும் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போதுகூட, இந்தச் சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்பு, கோபாலபுரத்திற்கு, தலைவர் கலைஞர் அவர்களுடைய இல்லத்திற்குச் சென்று, அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்துவிட்டு, என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாயிடம் ஆசிர்வாதம் வாங்கிவிட்டு, நானும், நம்முடைய அவை முன்னவர் அவர்களும் மற்றும் அமைச்சர் பெருமக்கள் எல்லாம் காரிலே வந்து கொண்டிருந்தபோது, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையிலே ஒரு பேருந்து நிலையத்திலே இறங்கி நின்றபோது, ஒரு பேருந்து வந்தது. 'நீங்கள் எல்லாம் காரிலேயே உட்கார்ந்திருங்கள், நான் அந்தப் பேருந்திலே கொஞ்சம் நேரம் பயணம் செய்துவிட்டு வருகிறேன்' என்று சொல்லி, **29–C** அந்தப் பேருந்தில் ஏறினேன். **29–C** பேருந்து என்னுடைய வாழ்நாளிலே மறக்கமுடியாத பேருந்து. ஏனென்றால், பள்ளிப் பருவத்திலே இருந்தபோது, நான் கோபாலபுரத்திலிருந்து **29–C** மூலம் பள்ளிக்குச் சென்று வந்தேன். அப்போது தலைவர் கலைஞர் அவர்கள், பொதுப்பணித்துறை மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சராகவும் இருந்தார். நான் ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி பேருந்து நிறுத்தத்திலிருந்து, **29–C** பேருந்தைப் பிடித்துத்தான் என்னுடைய பள்ளிக்கு, ஸ்டெர்லிங் சாலையில் இறங்கி, அங்கிருந்து சேத்துப்பட்டிற்கு நடந்து போய், பள்ளிக்குச் சென்று படித்தேன். **29–C** என்ற அந்தப் பேருந்தில்தான் இன்றைக்குக் காலையில் நான் ஏறி பயணித்தேன். அந்தப்

பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த மகளிரிடத்திலே, ‘எப்படி இந்த ஆட்சி நடக்கிறது – ஒரு வருடம் ஆகியிருக்கிறது; இரண்டாவது வருடத்தில் அடியெடுத்து வைக்கிறோம் – உங்களுக்குத் திருப்தியாக இருக்கிறதா ?’ என்று கேட்டேன். ‘ரொம்ப திருப்தியாக இருக்கிறது. உங்களைப் பார்த்ததே அளவுகடந்த மகிழ்ச்சியாக இருக்கிறது.’ என்று சொன்னார்கள். இந்த இலவசப் பயணத்தினால் உங்களுக்கு என்ன இலாபம், எவ்வளவு மிச்சமாகிறது ? என்ற கேள்விகளையெல்லாம் கேட்டேன். அதற்குரிய விளக்கத்தையெல்லாம் சொன்னார்கள்.

ஏற்கெனவே இதுகுறித்து மூன்று வழித் தடங்களில் கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டது. கோயம்பேடு முதல் திருவொற்றியூர் வரை; தாம்பரம் முதல் செங்கல்பட்டு வரை; பிராட்வே முதல் கண்ணகி நகர் வரை பயணம் செய்யக் கூடிய 465 பயனாளிகளிடம் கருத்துக் கேட்கப்பட்டது. மாநிலத் திட்டக் குழுவால் நடத்தப்பட்ட இந்தக் கருத்துக் கேட்பின் வாயிலாக, இந்தத் திட்டத்தால் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலினப் பெண்கள் அதிக அளவிலே பயன்பெற்று வருகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. அதிலும் குறிப்பாகப் பட்டியலினப் பெண்கள் அதிகமாக பயனடைந்திருக்கிறார்கள். இந்தச் சலுகை மூலமாக யார், எவ்வளவு பயனடைந்துள்ளார்கள் என்றும் கேட்கப்பட்டது.

வீட்டு வேலை பார்க்கும் ஒரு பெண், மாதத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் ஊதியம் பெறுவதாகச் சொன்னார். அரசுப் பேருந்துச் சலுகை வழங்கியதன் காரணமாக தனக்கு மாதம்தோறும் 850 ரூபாய் மிச்சமாகிறது என்று அவர் சொன்னார். பொருள்களை விற்பனை செய்யக்கூடிய ஒரு பெண், இந்த மாதம் 9 ஆயிரம் ரூபாய் சம்பாதித்ததாகச் சொன்னார். அரசுப் பேருந்துச் சலுகை வழங்கியதன் காரணமாக இந்த மாதம் 900 ரூபாய் மிச்சமானது என்று சொன்னார். இதுதான் இந்த அரசாங்கத்தினுடைய உண்மையான சாதனை என்று நான் சொல்வேன்.

ஒரு நிறுவனத்தில் பராமரிப்புப் பணியாற்றக்கூடிய ஒரு பெண் மாதம் 9 ஆயிரம் ரூபாய் ஊதியம் பெறுகிறார். அவருக்கு ஆயிரத்து 70 ரூபாய் மாதம்தோறும் மிச்சம் ஆகிறது. இதுதான் இந்த அரசாங்கத்தினுடைய உண்மையான சாதனையாகும். தினக்கூலித் தொழிலாளியாக ஒரு பெண் இருக்கிறார். அவர் 9 ஆயிரம் ரூபாய் மாத ஊதியம் பெறுகிறார். அவருக்கு மாதம் 750 ரூபாய் மிச்சம் ஆகிறது.

அதாவது ஒவ்வொரு பெண்ணுக்கும் சராசரியாக 600 ரூபாயில் இருந்து 1,200 ரூபாய் வரைக்கும் மிச்சம் ஆகிறது. 30.04.2022 வரை 106 கோடியே 34 இலட்சம் பயணங்களை பெண்கள் இலவசமாக மேற்கொண்டுள்ளார்கள். இதுதான் மகத்தான சாதனை. அவர்கள் வாங்கும் மாத வருமானத்தில் 11 விழுக்காடு மிச்சம் ஆகிறது. அன்றாடக் கூலி வேலை பார்ப்பவர்களுக்கு அவர்களது செலவில் 20 விழுக்காடு மிச்சம் ஆகியிருக்கிறது. இப்படி மிச்சமாகும் பணத்தைச் சேமித்து வைப்பதாக அந்தப் பெண்கள் சொல்கிறார்கள். அதாவது, அன்றாடச் செலவுக்கு இல்லை என்ற நிலையில் இருக்கக்கூடிய பெண்கள் சேமிக்கக் கூடியவர்களாக ஆகியிருக்கிறார்கள். 5 ஆயிரம் முதல் 12 ஆயிரம் வரை சம்பாதிக்கக்கூடிய பெண்களுக்கு வாழ்க்கைச் சுமையைக் குறைக்கக்கூடிய திட்டமாக இது அமைந்திருக்கிறது.

ஒரே ஒரு கையெழுத்தின் மூலமாக கோடிக்கணக்கான பெண்களுடைய வாழ்வில் ஒளியேற்ற முடியும் என்பதை நிரூபித்திருக்கும் ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய திராவிட மாடல் ஆட்சி! ஒரே ஒரு திட்டத்தைப் பற்றித்தான் நான் சொன்னேன். இப்படி ஒவ்வொன்றைப் பற்றியும் நான் விரிவாகச் சொல்ல முடியும்.

ஒரே ஒரு கையெழுத்தின் காரணமாக, ஆயிரம் பேருக்கு, பல்லாயிரம் பேருக்கு, இலட்சம் பேருக்கு, பல இலட்சம்

பேருக்கு, கோடிப் பேருக்கு, பல கோடிப் பேருக்கு நன்மைகள் கிடைத்திருக்கிறது. இவை அனைத்தும் ஏதோ வாய்வார்த்தையாக நான் சொல்லவில்லை.

- 4,000 ரூபாய் கொரோனா உதவித் தொகை பெற்ற குடும்பங்கள் 2 கோடியே 9 இலட்சத்து 81 ஆயிரத்து 900.
- கொரோனா கால நிவாரணமாக 13 மளிகைப் பொருள்களைப் பெற்ற குடும்பங்கள் 2 கோடியே 7 இலட்சத்து 77 ஆயிரத்து 535.
- 21 விதமான பொங்கல் பொருள்களை பெற்ற குடும்பங்கள் 2 கோடியே 12 இலட்சத்து 17 ஆயிரத்து 756.
- கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் – 10 கோடியே 83 இலட்சத்து 7 ஆயிரத்து 713 பேர்.
- கொரோனாவில் இறந்த மருத்துவ முன்களப் பணியாளர்கள் குடும்பத்துக்கு வழங்கப்பட்ட நிதி உதவி 79 கோடியே 90 இலட்சம்.
- ஆவின் பால் விலையை 3 ரூபாய் குறைத்த காரணத்தால் பயன் பெறுபவர்கள் 1 கோடி பேர்.
- புதிதாக குடும்ப அட்டை பெற்றவர்கள் 11 இலட்சத்து 47 ஆயிரத்து 844 பேர்.
- புதிதாக மின் இணைப்பினைப் பெற்றவர்கள் 9 இலட்சத்து 91 ஆயிரம் பேர்.
- அகவிலைப்படி உயர்வால் பயனடைந்த அரசு ஊழியர்கள் 9 இலட்சத்து 32 ஆயிரம் பேர். அகவிலைப்படி உயர்வால் பயனடைந்த ஓய்வூதியதாரர்கள் 7 இலட்சத்து 15 ஆயிரம் பேர்.

- நகைக்கடன் தள்ளுபடி பெற்றவர்கள் 22 இலட்சத்து 20 ஆயிரத்து 109 பேர்.
- மகளிர் சுயஉதவிக் குழுக்களால் கடன் பெற்றவர்கள் 54 இலட்சத்து 5 ஆயிரத்து 400 பேர்.
- மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்ததால், அதன்மூலமாகப் பயன்பெற்றவர்கள் 15 இலட்சத்து 88 ஆயிரத்து 309 பேர்.
- புதிதாக உருவாக்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்களில் இணைந்தவர்கள் 4 இலட்சத்து 76 ஆயிரத்து 175 பேர்.
- மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தால் பயன்பெற்றவர்கள் 93 இலட்சத்து 34 ஆயிரத்து 315 பேர்.
- ‘நம்மைக் காக்கும் 48’ திட்டத்தால் பயன்பெற்றவர்கள் 39 ஆயிரத்து 542 பேர்.
- 104 மருத்துவ சேவை மையத்தால் பயன்பெற்றவர்கள் 3 இலட்சத்து 16 ஆயிரம் பேர்.
- 108 அவசர கால ஊர்தியால் பயன்பெற்றவர்கள் 16 இலட்சத்து 41 ஆயிரம் பேர்.
- கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டவர்கள் 1 கோடியே 34 இலட்சம் பேர். கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தால் சிகிச்சை பெற்றவர்கள் 3 இலட்சத்து 43 ஆயிரம் பேர். கலைஞரின் வருமுன் காப்போம் முகாம் மூலம் பயன் பெற்றவர்கள் 8 இலட்சத்து 25 ஆயிரம் பேர். நடமாடும் மருத்துவக் குழு மூலம் சிகிச்சை பெற்றவர்கள் 1 கோடியே 54 இலட்சம் பேர்.

- 124 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் புதிதாக உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் 1 இலட்சத்து 90 ஆயிரம் பேர்.
- குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கொரோனா காலக் கடன் பெற்றவர்கள் 539 பேர்.
- தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மூலம் ஏற்படுத்தப்பட்ட தொழில்கள் மூலமாக வேலை பெற்றவர்கள் 27 ஆயிரத்து 771 பேர். தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடன் பெற்றவர்கள் 124 பேர்.
- கொரோனாவால் உயிரிழந்த முன்களப் பணியாளர் குடும்ப நிவாரணத் தொகை பெற்றவர்கள் – 315 பேர். கொரோனாவால் உயிரிழந்த குடும்பத்துக்கான இழப்பீட்டுத் தொகை பெற்றவர்கள் – 55 ஆயிரத்து 743 பேர். கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கான இழப்பீடு தொகை பெற்றவர்கள் – 10 ஆயிரத்து 824 பேர். தொற்றால் உயிரிழந்த பத்திரிக்கையாளர் குடும்பத்துக்கான நிதியுதவி பெற்றவர்கள் – 16 பேர்.
- 1 இலட்சம் ரூபாய் நிதி உதவி பெற்ற எல்லைப் போராட்ட வீரர்கள் – 76 பேர்.
- மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இழப்பீடு பெற்ற குடும்பங்கள் – 96 ஆயிரத்து 273 பேர். மழை வெள்ளத்தால் பயிர்கள் பாதிக்கப்பட்டு இழப்பீடு பெற்றவர்கள் – 3 இலட்சத்து 59 ஆயிரம் பேர். உதவித் தொகை பெற்ற போக்குவரத்து தொழிலாளர்கள் – 2 ஆயிரத்து 457 பேர்.
- வருவாய்த் துறையால் பட்டா பெற்றவர்கள் – 1 இலட்சத்து 51 ஆயிரம் பேர். இலவச வீட்டு மனைப் பட்டா பெற்றவர்கள் – 24 ஆயிரத்து 883 பேர். இலவச வீட்டு

மனை பெற்ற ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் – 53 ஆயிரம் பேர். புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து இலவச வீட்டுமனைப் பட்டா பெற்றவர்கள் – 16 ஆயிரம் பேர். நத்தம் திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டா பெற்றவர்கள் – 56 ஆயிரம் பேர். இணையவழிப் பட்டா மாறுதல் பெற்றவர்கள் – 19 இலட்சத்து 52 ஆயிரம் பேர். உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பயன்பெற்றவர்கள் – 1 இலட்சத்து 24 ஆயிரம் பேர்.

- வீட்டு வசதி வாரியம் மூலமாக வீடு பெற்றவர்கள் – 6 ஆயிரத்து 323 பேர்.
- மாதம் 3 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை பெறும் கலைஞர்கள் – 1,000 பேர்.
- அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தால் வேலை பெற்றவர்கள் – 24 பேர்.
- ஒரு கால பூஜை கோவில் பூசாரிகளுக்கான உதவித்தொகை பெற்றவர்கள் – 9 ஆயிரத்து 982 பேர்.
- மொட்டை போடும் தொழிலாளர்களுக்கான ஊதியம் பெற்றவர்கள் ஆயிரத்து 744 பேர்.
- இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தால் பயன்பெற்ற பிள்ளைகள் – 30 இலட்சம் பேர்.
- புதிய கைபேசிச் செயலி மூலம், பள்ளிக்குச் செல்ல முடியாத குழந்தைகள் எனக் கண்டறியப்பட்டு, மீண்டும் பள்ளிக்கு அனுப்பப்பட்டவர்கள் 1 இலட்சத்து 80 ஆயிரம் பேர்.
- எண்ணும் எழுத்தும் திட்டத்தால் பயன்பெறும் மாணவர்கள் – 16 இலட்சம் பேர்.

- கட்டாயக் கல்வித் திட்டத்தால் சேர்க்கப்பட்டவர்கள் – 56 ஆயிரம் பேர்.
- உயர்த்திய 1,500 ரூபாய் மாதாந்திர உதவித் தொகை பெற்ற மாற்றுத் திறனாளிகள் – 2 இலட்சத்து 11 ஆயிரம் பேர். இலவசக்கருவிகள் பெற்ற மாற்றுத்திறனாளிகள் – 37 ஆயிரம் பேர். உதவித்தொகை பெற்ற மாற்றுத்திறனாளி மாணவர்கள் 23 ஆயிரத்து 326 பேர். தேசிய அடையாள அட்டை பெற்ற மாற்றுத்திறனாளிகள் 4 இலட்சத்து 82 ஆயிரத்து 518 பேர். வேலைவாய்ப்பு பெற்ற மாற்றுத்திறனாளிகள் 553 பேர்.
- கருவுற்ற மகளிருக்கு நடந்த சமூகப் பாதுகாப்பு வளைகாப்பு நிகழ்ச்சியில் பங்கெடுத்தவர்கள் 90 ஆயிரம் பேர். சொந்தத் தொழில் தொடங்க திருநங்கைகளுக்காக வழங்கப்பட்ட மானியத்தைப் பெற்றவர்கள் 141 பேர்.
- முதியோர் இல்லங்களில் பயன்பெற்ற முதியோர் – 711 பேர்.
- கொரோனாவால் பெற்றோரை இழந்தவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை பெறும் குழந்தைகள் 285 பேர்.
- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தில் மனு கொடுத்து உதவிகள் பெற்றவர்கள் 2 இலட்சத்து 29 ஆயிரம் பேர். உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் நிலப்பட்டா பெற்றவர்கள் 32 ஆயிரத்து 283 பேர். உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் ஒய்வூதியம் பெற்றவர்கள் 30 ஆயிரத்து 455 பேர். தனிநபர் வீடு பெற்றவர்கள் 19 ஆயிரத்து 665 பேர். போட்டித் தேர்வு முகாம்களில் பயிற்சி பெறுபவர்கள் 12 ஆயிரம் பேர்.
- 5 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகை பெற்ற மீனவக் குடும்பங்கள் 1 இலட்சத்து 71 ஆயிரம். சிறப்பு

ஊக்கத் தொகை பெற்ற மீனவக் குடும்பங்கள் – 1 இலட்சத்து 51 ஆயிரம் பேர். மீனவ சேமிப்பு நிவாரணத் திட்டத்தின்கீழ் தொகை பெற்றவர்கள் 3 இலட்சத்து 45 ஆயிரம் பேர்.

- குடிநீர் இணைப்புப் பெற்ற ஊரக வீடுகள் – 14 இலட்சத்து 32 ஆயிரம்.
- பயிற்சி பெற்ற மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் 2 இலட்சத்து 42 ஆயிரம் பேர்.
- ஊரக சுய வேலைவாய்ப்பு நிறுவனம் மூலம் பயிற்சி பெற்ற இளைஞர்கள் – 15 ஆயிரம் பேர். சுய தொழில் தொடங்கிய இளைஞர்கள் – 13 ஆயிரம் பேர்.
- மாவட்ட வேலைவாய்ப்பு முகாம் மூலமாக வேலை பெற்றவர்கள் 32 ஆயிரம் பேர். மிதிவண்டிகள் பெற்ற மாணவ, மாணவியர் 4 இலட்சம் பேர். முதியோர் ஓய்வூதியத் திட்டப்படி பணம் பெற்றவர்கள் 3 இலட்சத்து 263 பேர்.
- தமிழகம் முழுவதும் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் மூலமாக வேலைவாய்ப்பு பெற்றவர்கள் 68 ஆயிரத்து 800 பேர்.
- 7.5 விழுக்காடு இடஒதுக்கீட்டால் பயனடைந்த மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவியர் 437 பேர். 7.5 விழுக்காடு இடஒதுக்கீட்டால் பயனடைந்த பல் மருத்துவ மாணவ, மாணவியர் 107 பேர்.
- பயிர்க்கடன் பெற்றவர்கள் 14 இலட்சத்து 83 ஆயிரத்து 961 பேர். கூட்டுறவுக் கடன் பெற்றவர்கள் 48 இலட்சத்து 93 ஆயிரத்து 174 பேர்.
- டெல்டா மாவட்டத்தில் குறுவை சாகுபடி தொகுப்பு பெற்றவர்கள் 2 இலட்சத்து 87 ஆயிரத்து 401 பேர்.

- காவலர்களுக்கு ஒருநாள் விடுமுறை என்பதால் பயன்பெற்றவர்கள் 63 ஆயிரத்து 77 பேர்.

- பல்வேறு நலத்திட்டங்களைப் பெற்ற இலங்கைத் தமிழர்கள் 92 ஆயிரத்து 669 பேர்.

- பஞ்சுக்கு ஒரு விழுக்காடு வரியைக் குறைத்த காரணத்தால் பயன் பெற்றவர்கள் 3 ஆயிரத்து 52 பேர்.

- மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் – 291 பேர்.

- கொரோனா காலத்தில் உதவி பெற்ற புலம்பெயர் தொழிலாளர்கள் – 1.29 இலட்சம் பேர்.

- உதவித்தொகை பெற்ற அமைப்பு சாராத் தொழிலாளர்கள் – 1.85 இலட்சம் பேர்.

- உரிமை பாதுகாக்கப்பட்டு மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தொழிலாளர்கள் – 5,235 பேர்.

- மீட்கப்பட்ட கொத்தடிமைகள் – 198 பேர்.

- நலத்திட்ட உதவி பெற்ற தொழிலாளர்கள் – 50 ஆயிரம் பேர்.

- உதவித்தொகை பெற்ற வேலைவாய்ப்பற்ற பதிவுதாரர்கள் – 55 ஆயிரம் பேர்.

- உதவித் தொகை பெற்ற மாற்றுத்திறனாளி பதிவுதாரர்கள் – 14,541 பேர்.

2021ஆம் ஆண்டு, மேட்டூர் அணையிலிருந்து நீர் திறக்கப்படுவதற்கு முன்பாக, 67 கோடி ரூபாய் செலவில் 4,213 கி.மீ. நீளத்துக்குத் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுக் கடைமடை வரை பாசன நீர் செல்வது உறுதிசெய்யப்பட்டது. அதேபோல், நடப்பாண்டில் 80 கோடி ரூபாய் செலவில் 4,694 கி.மீ. நீளத்துக்குத் தூர்வாரும் பணிகள் பருவமழைக்கு முன்னதாக நடந்து வருகின்றன.

நீண்ட பட்டியலைச் சொன்னேன். இவற்றின்மூலம் கோடிக்கணக்கான தமிழக மக்கள் இந்த ஓராண்டு காலத்தில் நேரடியாகப் பயனடைந்திருக்கிறார்கள். இந்த ஆட்சியானது தமிழ்நாட்டின் ஒவ்வொரு மனிதருக்கும் நேரடியாகப் பயன் தரக்கூடிய ஆட்சியாகச் செயல்பட்டு இருக்கிறது என்பதைப் பெருமையோடு நான் இங்கே பதிவு செய்கிறேன்.

இந்த ஓராண்டு காலத்தில் மகத்தான முன்னெடுப்புகள் பல செய்யப்பட்டுள்ளன.

75ஆவது சுதந்திர நாள் நினைவுத்தூண், சென்னையில் 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிண்டியில் மாபெரும் மருத்துவமனை, மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம், சென்னையில் கலைஞர் நினைவு மண்டபம், அரசுப் பணியிடங்களில் தமிழ் தகுதித் தேர்வு கட்டாயம், வேளாண்மைத் துறைக்காகத் தனி நிதிநிலை அறிக்கை, இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், நான் முதல்வன் திட்டம், இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48, தமிழ்நாடு ஒலிம்பிக் தங்கப் பதக்கத் தேடல், அறிவுசார் நகரம், சமத்துவபுரங்கள், உழவர் சந்தைகள், அரசு முன் மாதிரிப் பள்ளிகள், பத்திரிகையாளர் நலவாரியம், எழுத்தாளர்களுக்குக் கனவு இல்லம், இலக்கிய மாமணி விருது, கலைஞர் எழுதுகோல் விருது, பேராசிரியர் அன்பழகனார் பெயரில் பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டம், பெருந்தலைவர் காமராசர் பெயரில் கல்லூரிகள் மேம்பாட்டுத் திட்டம், முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு, உங்கள் தொகுதியில் முதலமைச்சர், பெரியார் பிறந்தநாள் ‘சமூகநீதி நாள்’, அம்பேத்கார் பிறந்தநாள் ‘சமத்துவநாள்’, வள்ளலார் பிறந்தநாள் ‘தனிப்பெரும் கருணை நாள்’, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், அன்னைத் தமிழில் அர்ச்சனை, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர், மாவட்டம் தோறும் புத்தகச் சந்தைகள், புத்தகப் பூங்கா அமைக்க நிரந்தர இடம், கோயில் நிலங்கள் மீட்பு, 10 கலை அறிவியல் கல்லூரிகள், 11 புதிய ஐ.டி.ஐ நிறுவனங்கள், காவல் ஆணையம், பொருநை

அருங்காட்சியகம், மீண்டும் மஞ்சப்பை முன்னெடுப்பு – இப்படி ஏராளமான திட்டங்களை சாதித்து வருகிறது தமிழ்நாடு அரசு.

இவை அனைத்தையும், அதன் உள்ளார்ந்த நோக்கம் சிதையாமல் அமல்படுத்திக் காட்டினோம் என்றால் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக உயரும். அப்படி உயர்வதற்கு நான் ஒரு கருவியாகப் பயன்பட்டேன் என்பதுதான் எனக்கு இருக்கக்கூடிய மகிழ்ச்சியாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. அந்தத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தையும் ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றுவோம் என்பதுதான் வாக்குறுதி. ஆனால் இந்த ஓராண்டு காலத்தில் 60 முதல் 70 விழுக்காடு நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை அழுத்தம் திருத்தமாக நான் சொல்ல விரும்புகிறேன்.

இவை அனைத்தையும் பட்டியல் போடுவதற்கு காலநேரம் போதாது. ‘புதிதாக இவர்கள் எதையும் செய்யவில்லை, ஏற்கெனவே இருந்ததைத்தான் பெயர் மாற்றி இருக்கிறீர்கள்’ என்று சிலர் விமர்சிக்கும்போது சிரிப்பாகத்தான் இருக்கிறது. இவர்கள் தெரிந்து பேசுகிறார்களா, தெரியாமல் பேசுகிறார்களா என்பது புரியவில்லை.

நான் கேட்கிறேன்; மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி என்பது ஏற்கனவே இருந்ததா ? கொரோனா கால நிவாரணமாக 4,000 ரூபாய் தரப்பட்டதா ? ஆவின் பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டதா ? பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டதா ? இலங்கைத் தமிழர்களுக்கு 317 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்கள் தீட்டப்பட்டிருந்ததா ? பெரியார் பிறந்த நாள் சமூக நீதி நாளாகக் கொண்டாடப்பட்டதா ? அம்பேத்கர் பிறந்த நாள் சமத்துவ நாளாகக் கொண்டாடப்பட்டதா ?

நெசவாளர்கள் கோரிக்கையை ஏற்று பஞ்சுக்கு ஒரு விழுக்காடு வரி ரத்து செய்யப்பட்டதா ? தமிழ்நாடு ஆதி திராவிடர் பழங்குடியினர் நல ஆணையம் உருவாக்கப்பட்டிருந்ததா ? கூட்டுறவு வங்கிகளில்

பெறப்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதா? மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதா? மக்களைத் தேடி மருத்துவம் சென்றதா? இல்லம் தேடி கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டதா? நம்மைக் காக்கும் 48 திட்டம் இருந்ததா? தமிழ்வழியில் படித்தவருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை இருந்ததா? கல்லூரிகளை நோக்கி வரும் அரசுப் பள்ளி மாணவியருக்கு 1,000 ரூபாய் தரப்பட்டதா? இப்படி என்னால் கேட்டுக்கொண்டே இருக்க முடியும்.

நாங்கள் சொன்னதை செய்திருக்கிறோம்; சொல்லாததையும் இந்த ஓராண்டு காலத்தில் செய்திருக்கிறோம். எல்லா அரசுக்கும் ஒரு நோக்கம், ஒரு பாதை இருக்கும். இந்த அரசுக்கும் ஒரு நோக்கம், ஒரு பாதை இருக்கிறது. அதற்கு 'திராவிட மாடல்' என்று நான் பெயர் சூட்டி இருக்கிறேன்.

'எல்லார்க்கும் எல்லாம்' என்பதுதான் இதனுடைய உள்ளடக்கம். "சமூகத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டு இருக்கிறானே, அவனை உயர்த்துவதுதான் எனது நோக்கம்" என்றார் தந்தை பெரியார் அவர்கள். "நான் சாமானியர்களுக்காக உழைக்கும் சாமானியன்" என்றார் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள். "நான் அடக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக எந்நாளும் உழைப்பேன்" என்றார் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்த மூவரின் சிந்தனைகளையும் உள்ளத்தில் வைத்து செயல்படுவதால்தான், இந்த ஆட்சியை 'திராவிட மாடல்' என்று நாங்கள் அழுத்தந்திருத்தமாகக் கூறிக்கொண்டே இருக்கிறோம்.

'திராவிட மாடல்' எது என்று கேட்டால், அது என்னுடைய இதயத்தில் மட்டுமல்ல; தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் முன்னேற வேண்டும் என்ற முற்போக்கான எண்ணம் கொண்ட அனைவரது உள்ளத்திலும் உள்ளது. இந்தக் கூட்டு எண்ணம்தான் அரசின் இதயத்துடிப்பாக விளங்குகிறது.

இந்த அரசாங்கத்தின் இதயம் என்பது, கொரோனா காரணமாக இடையில் நின்றுபோன கல்வியை மீண்டும் பெற்றுக்கொண்ட 1 இலட்சத்து 73 ஆயிரத்து 792 பள்ளிப் பிள்ளைகளின் இதயத்தில் இருக்கிறது. இந்த அரசாங்கத்தினுடைய இதயம் என்பது, 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தால் பயன்பெற்ற 95 இலட்சம் பேரின் வாழ்க்கையோடு கலந்திருக்கிறது. இந்த அரசாங்கத்தின் இதயம் என்பது, 'நம்மைக் காக்கும் 48' திட்டத்தின் மூலமாக உயிர் பெற்ற 39 ஆயிரம் பேரின் மூச்சில் இருக்கிறது.

'கடலில் கால் நனைக்க முடியவில்லையே' என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த மாற்றுத் திறனாளிகளின் ஏக்கம் போக்க, கடல் வரைக்கும் மரப்பாதை அமைத்தோமே! அதனால், கால் நனைத்து மகிழும் மாற்றுத் திறனாளிகளின் மனதில், இதயத்தில் இந்த அரசு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த அரசாங்கத்தின் இதயம் என்பது, நெஞ்சில் ஏக்கத்துடனும், முகத்தில் சோகத்துடனும் வாழ்ந்து வந்த முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மக்களின் புதிய குடியிருப்புகளில் இருக்கிறது.

தஞ்சை மாவட்டம், களிமேடு கிராமத்து கோயில் திருவிழாவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் 11 பேர் மரணம் அடைந்தார்கள். உடனடியாக நான் அங்கு சென்றேன். 'செத்தவங்களோட சொந்தக்காரங்க வந்ததைப்போல முதலமைச்சர் உடனடியாக வந்துவிட்டார்' என்று அந்த ஊர் மக்கள் சொன்ன சொல்லில் இந்த ஆட்சியினுடைய இதயம் இருக்கிறது.

இந்த அரசாங்கத்தின் இதயம் என்பது, மிகக் கொடூரமான குண்டுவீச்சுக்கு மத்தியில், மரண பயத்தில் வாழ்ந்து வந்த உக்ரைன் நாட்டுக்கு படிக்கச் சென்ற தமிழ்நாட்டு மாணவர்களை மீட்டு வந்ததில் இருக்கிறது.

43 ஆண்டுகள் இல்லாத வகையில் இந்த ஆண்டு நெல் விளைச்சல் அதிகமாகி, பூமி செழித்தது அல்லவா? மண்ணைச்

செழிக்க வைத்த மகிழ்ச்சியில் இருக்கிறது இந்த அரசாங்கத்தின் இதயம்.

மாமல்லபுரத்தில் ஒரு நரிக்குறவப் பெண்ணின் மனதில் நம்பிக்கையை விதைத்ததில், அவரது சுயமரியாதையை நிலைநாட்டியதில் இந்த ஆட்சியினுடைய இதயம் இருக்கிறது.

ஆவடியில் இருளர் இன மக்கள் இல்லத்திற்குச் சென்றபோது அவர்கள் கொடுத்த கறிக்குழம்பு காரமாக இருந்தது. 'இவ்வளவு காரமாகவா சாப்பிடுகிறீர்கள்?' என்று நான் கேட்டேன். 'ஆமாம், இவ்வளவு காரமாக சாப்பிடும் காரணத்தினால்தான் எங்களுக்குக் கொரோனாவே வரவில்லை' என்று அந்த மக்கள் சொன்னார்கள். அது அறிவியல் பூர்வமானதா என்பது வேறு. ஆனால், அந்த உணவின் காரத்தில் அவர்களது அன்பு வெளிப்பட்டது. இந்த அரசும் காரமான அரசுதான். காரம் எப்படி நோய்களில் இருந்து தங்களைக் காக்கும் என்று அந்த மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, அப்படி சமூக நோய்களிலிருந்து காப்பாற்றும் – மக்கள் நம்பும் காரமான அரசுதான் நம்முடைய கழக அரசு.

அவர்கள் வீட்டுக்கு நான் சென்றபோதுகூட தனக்கென எந்த வாய்ப்பு வசதியும் இல்லாத அந்தப் பள்ளி மாணவி, தன்னுடைய குடும்பத்திற்கு எதுவும் கேட்கவில்லை. பக்கத்து வீட்டில், காது கேளாத ஒரு பையனுக்கு உதவி செய்யுங்கள் என்றுதான் கேட்டார். நம்முடைய மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு.நாசர் அவர்கள் அந்தக் குழந்தைக்கு தொடர்ந்து உதவி செய்து கொண்டிருக்கிறார். இத்தகைய விளிம்பு நிலை மக்களுக்குச் செய்த உதவிகளில்தான் இந்த ஆட்சியினுடைய இதயம் இருப்பதாக நான் நினைக்கிறேன்.

"பகுத்தறிவும், பாகற்காயும் கசக்கும். ஆனால், அவை இரண்டும் உடலுக்கு மிக மிக நல்லது" என்றார் தலைவர் கலைஞர் அவர்கள். அத்தகைய காலத்தின் தேவையான 'திராவிட மாடல்' அரசுதான்

இது. அரசு விழாக்களில் அல்லது சாலையில் போகின்றபோது, நிகழ்ச்சிகளுக்குப் போகின்றபோது மக்கள் என்னிடம் மனு கொடுக்கும்போது, சில பேர் சொல்வார்கள். ‘எத்தனையோ தடவை மனு கொடுத்துள்ளேன், ஆனால் உங்கள் கையில் கொடுக்கும்போது நிறைவேறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது’ என்று சாதாரண, சாமானிய மக்கள் சொல்லும்போது– அவர்கள் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கைதான் இந்த ஆட்சிக்கு கிடைத்திருக்கக்கூடிய நற்சான்று, நற்சான்று, நற்சான்று என நான் சொல்கிறேன்.

அரசியலில் மிகச் சிறு வயதிலிருந்தே இருப்பவன் நான். மக்கள் கூட்டத்தைப் பார்த்துப் பார்த்து எனக்குப் பழகிவிட்டது. மக்கள் கூட்டத்தைப் பார்க்கும்போது அவர்கள் மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதை அவர்களது முகம் காட்டிக் கொடுத்துவிடும். இந்த ஓராண்டு காலத்தில் மக்களை நோக்கி நான் செல்லும்போது, அலையைப்போல என்னை நோக்கி மக்கள் வருவதை நான் பார்க்கிறேன். அவர்களது முக மலர்ச்சி என்பது நாட்டில் ஏற்பட்டுள்ள மலர்ச்சியாகத்தான் இருக்கிறது. இதுதான் இந்த ஓராண்டு காலத்தில் நாம் செய்திருக்கக்கூடிய மகத்தான சாதனை.

என்னுடைய கவலையெல்லாம், என்னுடைய பயமெல்லாம் இந்த நம்பிக்கையை எப்போதும் நாம் காப்பாற்ற வேண்டும் என்பதுதான். மக்கள் ஆதரவு பெருகப் பெருக பொறுப்பும், கடமையும் கூடுகிறது. எதிர்பார்ப்பு அதிகம் ஆகிறது. அதனைக் காப்பாற்ற நாம் கடினமாக உழைத்தாக வேண்டும், உழைக்க வேண்டும். அதிகமாக உழைக்க நான் தயாராக இருக்கிறேன். நான் மட்டுமல்ல, இந்த அமைச்சரவையே இன்னும் அதிகமாக உழைக்கத் தயாராக இருக்கிறது.

ஓராண்டு முடிந்து, இரண்டாவது ஆண்டு தொடங்கும் இந்த மகிழ்ச்சிக்குரிய நாளில் மக்கள் மனம் மகிழும் சில அறிவிப்புகளை

நான் வெளியிட இருக்கிறேன். சில மிக முக்கியமான ஐந்து பெரும் திட்டங்களை இந்த மாமன்றத்திற்கு அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

முதலாவது திட்டம். அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இனிமேல் காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்கப்படும். நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்கு செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுகிறார்கள். இதனால் பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்கு கிடைத்திருக்கிறது. பள்ளிகள் மிகத் தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்ப சூழலும் இதற்குக் காரணமாக இருக்கிறது. இதனை மனதில் வைத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை நாம் தீட்டி இருக்கிறோம். முதற்கட்டமாக சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படவுள்ளது. ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும். இதனை உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக வழங்குவோம். படிப்படியாக அனைத்துப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

இரண்டாவது திட்டமானது, ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத தமிழகத்தை உருவாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆட்சிக்கு வந்த பிறகு எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிவரத்தில் கிடைத்த தகவல் மிக மிக மன வேதனையைத் தருவதாக இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள **6** வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைப் பரிசோதித்ததில் அவர்களில் பெரும்பாலானவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்களாக இருந்தார்கள். வயதுக்கேற்ற எடையும் இல்லை; வயதுக்கேற்ற உயரமும் இல்லை. மிக, மிக, மெலிந்து இருக்கின்றார்கள். உடலில் உறுதி இல்லாவிட்டால் அவர்களது எதிர்காலம் என்பது கேள்விக்குறியாக ஆகிவிடும் என்பதை

உணர்ந்து இதற்கென தனியாக ஒரு திட்டத்தைத் தீட்ட நான் ஆலோசனை கூறினேன்.

6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை நலமுடன் வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பரந்துபட்ட அளவில் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்ய இருக்கிறோம். மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு மருத்துவ உதவியும், ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் ஒன்றும் ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், குழந்தைகள் பயனடைவார்கள். தமிழகக் குழந்தைகள் அனைவரையும் திடமான, ஊட்டச்சத்துக் குறைபாடில்லாதவர்களாக மாற்றுவதற்கான திட்டமாக இதனை நாம் வடிவமைத்துள்ளோம்.

மூன்றாவது திட்டம் ‘தகைசால் பள்ளிகள்’ என்ற திட்டம்! ‘Schools of Excellence’ என்று இதற்குப் பெயர். சென்ற ஏப்ரல் மாதம் டெல்லி சென்ற நான், அங்கு டெல்லி அரசின் சார்பில் நடத்தப்படும் மாதிரிப் பள்ளியைப் பார்வையிட்டேன். அப்போது டெல்லியினுடைய முதலமைச்சரே அழைத்துக்கொண்டு சென்று அதையெல்லாம் விளக்கிச் சொன்னார்கள். இதேபோல் தமிழ்நாட்டிலும் உருவாக்கப்படும் என்று அங்கேயே நான் சொல்லிவிட்டு வந்தேன். அந்த அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் தகைசால் பள்ளிகள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலில், முதற்கட்டமாக 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 மாநகராட்சி மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் தகைசால் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும். இப்பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் சீரமைக்கப்படும். அனைத்துக் கட்டடங்களும் நவீனமயமாக்கப்படும். மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளுக்கு

உரிய முக்கியத்துவம் அளிக்கக்கூடிய அதேநேரத்தில், கலை, இலக்கியம், இசை, நடனம், செய்முறை அறிவியல், விளையாட்டு, கைவினைச் செயல்பாடுகள் என அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய கட்டமைப்பு அந்தப் பள்ளியில் உருவாக்கப்படும். மாணவர்களின் பல்வகைத் திறன்களையும் வெளிக்கொண்டு வருவோம். படிப்புடன் சேர்ந்து அவர்களது தனித்திறன்கள் அனைத்தும் வளர்த்தெடுக்கப்படும். அவர்களுடைய ஆளுமைத் திறன் அனைத்தும் மேம்படுத்தப்படும். இந்தவகைப் பள்ளிகளைத் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக விரிவுபடுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதி அளிக்கிறேன்.

நான்காவதாக அறிவிக்கக்கூடிய திட்டமானது நகர்ப்புர மருத்துவ நிலையங்களை அமைக்கும் திட்டம். கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் இருப்பதைப்போல், நகர்ப்புரங்களில் இந்த மருத்துவ நிலையங்கள் அமைய இருக்கின்றன. நகர்ப்புர மக்கள் அரசுப் பொது மருத்துவமனையை நோக்கி வரும்போது மருத்துவமனைகளில் கூட்டம் அதிகமாகி வருகிறது. இந்நிலையை மாற்றி, ஒருங்கிணைந்த, தரமான மருத்துவ சேவைகளை மக்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வழங்கிடும் நோக்கில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள் மற்றும் 63 நகராட்சிப் பகுதிகளில் 708 நகர்ப்புர மருத்துவ நிலையங்கள் புதியதாக ஏற்படுத்தப்படும். இந்த மருத்துவ நிலையங்களுக்கு 180 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். இந்த 708 புதிய நகர்ப்புர மருத்துவ நிலையங்களிலும், காலை 8 மணி முதல் 11 மணி வரையும் மாலை 4 மணி முதல் 8 மணி வரையிலும் இரு வேளைகளிலும் புறநோயாளிகள் சேவைகள் செயல்படுத்தப்படும்.

இந்த மையங்களில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு மருந்தாளுநர் மற்றும் உதவியாளர் ஆகிய பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புர மருத்துவ நிலையங்களிலும் காலையும் மாலையும் ஏழை, எளியோருக்கு இலவச மருத்துவ சேவைகள் கிடைப்பதை உறுதி செய்து, 2030ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் நல்வாழ்வு எனும் இலக்கினை தமிழ்நாடு எட்டும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐந்தாவது திட்டம் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற திட்டம். சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக நான் பல்வேறு ஊர்களுக்குச் சென்றேன்; மக்களைச் சந்தித்தேன்; அவர்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றேன் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அந்த மனுக்களை ஒரு பெட்டியில் வைத்து பூட்டினோம். வெற்றி பெற்றதும் திறப்பேன் என்று வாக்குறுதி அளித்தேன். வெற்றி பெற்றோம். இந்த மனுக்களை பரிசீலிப்பதற்காகவே 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற தனித் துறை உருவாக்கப்பட்டு மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன.

இது மக்களுக்குப் பெரும்பயனைத் தந்துள்ள காரணத்தால், இதே திட்டத்தை மேலும் விரிவுபடுத்தத் திட்டமிட்டிருக்கிறோம். இதனடிப்படையில் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டமானது, தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் நடைமுறைக்கு வரப்போகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 234 தொகுதிகளிலும் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாத அவசியத் தேவைகள் குறித்து அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து பரிசீலனை செய்வார்கள்.

அடுத்து வரும் நிதி ஆண்டுகளில் அவற்றை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்படும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தங்களுடைய தொகுதி மக்களுடைய தேவைகளை அறிந்து, அந்தந்த மாவட்ட ஆட்சியர்களிடம் 10 முக்கியத் திட்டங்கள் குறித்த பட்டியலை நீங்கள் அளிக்க வேண்டும். அந்தப் பட்டியலில் இருக்கக்கூடிய மிக முக்கியமான திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, தற்போது நடைமுறையில் உள்ள அரசுத் திட்டங்களின்கீழ் செயல்படுத்த இயலாத திட்டங்களை, முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இந்தப் பணிகளுக்காக மட்டும் இந்த ஆண்டு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்தத் திட்டம் நேரடியாக, என்னுடைய கண்காணிப்பிலே நடைபெற போகிறது. எனது கொளத்தூர் தொகுதியாக இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு வரவில்லை; இருந்தாலும், அவருக்கு இங்கே நான் சொல்ல விரும்புகிறேன், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் எடப்பாடி தொகுதியாக இருந்தாலும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் போடி தொகுதியாக இருந்தாலும், அனைத்துத் தொகுதிகளுக்கும் சமமாக நடத்தப்படக்கூடிய திட்டங்கள் தீட்டப்படும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

ஆட்சிப் பொறுப்புக்கு வந்து இரண்டாம் ஆண்டு தொடங்கக்கூடிய இந்நாளில் இத்தகைய ஐந்து மாபெரும் மகத்தான திட்டங்களை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தேர்தலுக்கு முன்னதாக திருச்சியில் நம்முடைய நேரு அவர்கள் முன்னின்று நடத்திய மிகப் பெரிய தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம். அந்தக் கூட்டத்தில் நான் நிறைவாக பேசுகிறபோது ஏழு முக்கியமான வாக்குறுதிகளை நான் பிரகடனப்படுத்தினேன்.

வளரும் வாய்ப்புகள்—வளமான தமிழ்நாடு! மகசூல் பெருக்கம், மகிழும் விவசாயி! குடிமக்கள் அனைவருக்கும் குறையாத தண்ணீர்! அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும் உயர்தர மருத்துவம்! எழில்மிகு மாநகரங்களின் மாநிலம்! உயர்தர ஊரகக் கட்டமைப்பு, உயர்ந்த வாழ்க்கைத் தரம்! அனைவருக்கும் அனைத்துமான தமிழகம்! இந்த ஏழு வாக்குறுதிகளை மையமாகக் கொண்டு இந்த ஐந்து திட்டங்களும் தீட்டப்பட்டிருக்கின்றன. நான் கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவேன். இந்த ஓராண்டு காலச் சாதனைகள் என்பவை தனிப்பட்ட என்னுடைய சாதனைகள் அல்ல; இவை அனைத்தும் தனிப்பட்ட என்னால் மட்டும் செய்யப்பட்டது என்று நான் சொல்லமாட்டேன். நான் அப்படி வளர்க்கப்படவில்லை. என்னுடைய அமைச்சரவைத் தோழர்கள் துணையோடு செய்யப்பட்டிருக்கக்கூடிய சாதனைகளாகும். அவர்களின் கரங்கள் இணைந்ததால், கிடைத்த பலத்தால், அடைந்த வெற்றியாகும் இது.

இந்த அவைக்கு மட்டுமல்ல, அரசுக்கும் முன்னவராக இருந்து என்னை வழிநடத்தி கொண்டிருக்கிறார் என்னுடைய ஆருயிர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்கள். அவை முன்னவரும், நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சருமான அண்ணன் திரு.துரைமுருகன் அவர்களுக்கு நான் தனிப்பட்ட முறையிலே இந்த அவையின் மூலமாக நன்றிகூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசுக்கு ஆறு மாபெரும் இலக்குகள் இருக்கின்றன. உள்கட்டமைப்பில் உலகத் தரம்! கல்வி, அறிவாற்றலில் பேராளுமைத் திறம்! அன்றாடத் தேவைகளில் மக்களுக்கு மனநிறைவு! தொய்வு இல்லாத தொழில் வளர்ச்சி! அனைத்து சமூகத்தவர்களுக்குமான மேம்பாடு! நிதி, சட்டம், நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை! ஆகிய ஆறு இலக்குகளைக் கொண்டு இந்த அரசு செயல்பட்டு கொண்டிருக்கிறது.

இந்த இலக்குகளை அடைய என்னோடு தோளோடு தோள் நின்று பணியாற்றக்கூடிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அண்ணன் திரு.துரைமுருகன், திரு.கே.என்.நேரு, திரு.இ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திரு.எ.வ.வேலு, திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், திரு.K.K.S.S.R.ராமச்சந்திரன், திரு.தங்கம் தென்னரசு, திரு.எஸ்.ரகுபதி, திரு.சு.முத்துசாமி, திரு. கே. ஆர். பெரியகருப்பன், திரு. தா. மோ. அன்பரசன், திரு. மு. பெ. சாமிநாதன், திருமதி பி. கீதா ஜீவன், திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு. R. S. ராஜகண்ணப்பன், திரு.கா.ராமசந்திரன், திரு.அர.சக்கரபாணி, திரு.ஏ.செந்தில்பாலாஜி, திரு.ஆர்.காந்தி, திரு.மா.சுப்பிரமணியன், திரு.பி.மூர்த்தி, திரு.எஸ்.எஸ்.சிவசங்கர், திரு.பி.கே.சேகர்பாபு, முனைவர் பழனிவேல் தியாகராஜன், திரு.ஆவடி சா.மு.நாசர், திரு.செஞ்சி K.S. மஸ்தான், திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு.சிவ.வி.மெய்யநாதன், திரு.சி.வி.கணேசன், திரு.த.மனோ தங்கராஜ், திரு.மா.மதிவேந்தன் மற்றும் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் என அனைவரும் தங்களை முழுமையாக ஒப்படைத்துக்கொண்டு எனக்கு துணை நின்று பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றி.

துறை வாரியாக இவர்கள் தீட்டி செயல்படுத்தி வரக்கூடிய திட்டங்கள் அனைத்தும் உன்னதமானவை. தமிழ்நாட்டின் மேன்மைக்கும், உயர்வுக்கும் அடித்தளமாக அமையக்கூடியவை. இவர்களுக்கு உறுதுணையாக செயல்படக்கூடிய நம்முடைய தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் அனைவருக்கும் எனது நன்றியைத் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஓராண்டு காலத்தில் அனைத்தையும் சாதித்துவிட்டேன் என்று நான் சொல்லிக் கொள்ளவில்லை. அப்படி சொல்லிக் கொள்ளவும் மாட்டேன். ஓராண்டு காலத்திற்குள் செய்யக்கூடியதை விட அதிகமாகச் செய்துவிட்டோம் என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். நாம் போகவேண்டிய தூரம் இன்னும் இருக்கிறது

என்பதையும் நான் மனதார ஒப்புக் கொள்கிறேன். இன்னும் வேகமாகச் செல்ல முடியாததற்கு தடையாக இருப்பவை நிதிநிலை நெருக்கடியும், ஒன்றிய அரசாங்கத்தின் சில நிலைப்பாடுகளும். இந்த இரண்டு தடைகள் மட்டும் இல்லாமல் போயிருக்குமானால், இன்னும் பல திட்டங்களை நம்மால் தீட்டி இருக்க முடியும்.

தடைகள் இல்லாத வாழ்க்கை ஏது? எனது வாழ்க்கையில் நான் சந்தித்த தடைகள்தான் என்னைக் கூர்தீட்டி இருக்கிறது, பக்குவப்படுத்தி இருக்கிறது. உறுதியானவனாக என்னை இங்கே நிற்க வைத்திருக்கிறது. மனிதர்களை அடையாளம் காட்டி இருக்கிறது. எனவே இதுபோன்ற தடைகள் காலம் காலமாக இருப்பவைதான். இந்தத் தடைகளை மட்டுமே பேசிக்கொண்டு இருக்கக்கூடிய எதிர்மறைச் சிந்தனை கொண்டவனாக இருக்கக்கூடியவன் அல்ல நான். இந்தத் தடைகளைத் தகர்த்து வெற்றி பெற வேண்டும் என்ற நேர்மறைச் சிந்தனைக் கொண்டவன் நான். அத்தகைய நேர்மறையான சிந்தனைகள்தான் இந்த ஓராண்டு கால வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் என்று நான் மனதார நம்புகிறேன்.

மற்றவர்களின் பலவீனத்தை நம்பி அரசியல் செய்யக்கூடியவன் அல்ல நான். என் பலத்தை நம்பியே நான் அரசியல் செய்ய நினைக்கிறேன். எனது பலம் என்பது எனது இலக்கில் இருக்கிறது. இந்த இலக்கை எப்படியும் நான் அடைவேன்.

“இந்தியாவைப் போல குறிக்கோள் உள்ள நாடு உலகத்தில் இல்லை. அதேநேரத்தில் குறிக்கோளுக்கும் செயல்முறைக்கும் இடையில் பெரிய அகலம் உள்ள நாடும் உலகத்தில் இல்லை” என்று இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் குறிப்பிட்டு காட்டியிருக்கிறார்கள். அப்படி இருக்கக் கூடாது என்பதே என்னுடைய குறிக்கோள். குறிக்கோளும் செயல்முறையும் இணைந்து

பயணிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதனால்தான் நான் செய்யக்கூடிய அறிவிப்புகளைச் செயல்படுத்த அதற்கான கால அவகாசத்தைக் குறிப்பிட்டு 'டேஷ்போர்டு' ஒன்றை உருவாக்கி வைத்திருக்கிறேன். இந்தத் திட்டமிடுதல் இருந்தால் போதும் எந்தத் திட்டத்தையும் செயல்படுத்தி முடித்துக் காட்டலாம்.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் நிச்சயம் நிறைவேற்றிக் காட்டுவேன் என்பதை இந்த மாமன்றத்தில் உறுதியாகச் சொல்கிறேன்.

என்னுடைய இலக்குக்கு 'திராவிட மாடல்' என்று பெயர். அந்த இலக்கை அடைய தந்தை பெரியாரின் கொள்கை வலிமையும், பேரறிஞர் அண்ணாவின் மானுடப்பற்றும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் விடாமுயற்சியும் இனமானப் பேராசிரியரின் பொறுமையும் கொண்டு நான் எந்நாளும் உழைப்பேன்! உழைப்பேன்! உழைப்பேன்! தமிழ்நாட்டைக் காப்பேன்! காப்பேன்! காப்பேன்!

இந்த முதலாண்டு முத்தான தொடக்கமாக அமைந்திருக்கிறது. இரண்டாமாண்டு இணையற்ற ஆண்டாக இருக்கப் போகிறது. இனி எந்நாளும் கழக ஆட்சி கலைஞரின் ஆட்சி என்பதை வரலாற்றில் பதிய வைக்க எனது ஆட்சிப் பயணத்தை உங்கள் அனைவரது வாழ்த்துக்களுடன் தொடர்கிறேன். வாருங்கள் நாம் அனைவரும் இணைந்து நமக்கான தமிழ்நாட்டை அமைப்போம்.

"வாழ்க தமிழ்! வெல்க தமிழ்நாடு!" நன்றி, வணக்கம்!

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெறுவதையொட்டி,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி* ***110****இன்கீழ் அறிவித்து*
*ஆற்றிய உரை –* ***07.05.2022***

# மயிலாடும்பாறை ஆய்வு முடிவின்படி தமிழகத்தில் இரும்பின் பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு விதி 110இன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க விரும்புகிறேன்.

தமிழ்ச் சமூகத்தின் தொன்மை மற்றும் தொடர்ச்சியை உறுதிசெய்து, உலகுக்கு அறிவித்திட தமிழ்நாடு தொல்லியல் துறை எடுத்து வரும் மகத்தான முயற்சிகளை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட பூம்புகார், கொற்கை, அழகன்குளம் உள்ளிட்ட சங்ககாலத் துறைமுக நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைத்த ரோமானிய நாணயங்கள், மெருகூட்டப்பட்ட மட்பாண்டங்கள், அரேபியத் தீபகற்பத்தைச் சார்ந்த அயலகப் பொருட்களை முன்னிறுத்தி, இந்தத் துறைமுகங்கள் வழியே சங்க காலத் தமிழர்கள் கடல்வழி வணிகத்தில் சிறந்து விளங்கினர் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் நம்மால் நிறுவ முடிந்தது.

அதேபோல், அங்கே கிடைத்த அரியவகை சூதுபவள மணிகள், ஒளிர்மிகு நீலமணிகள் கொண்டு கங்கைச் சமவெளி மற்றும் வடமேற்கு இந்தியப் பகுதிகளுடன் தமிழர்கள் உள்நாட்டு வணிகம் மேற்கொண்டிருந்தது உறுதி செய்யப்பட்டது. கீழடி அகழாய்வில் வெளிப்பட்ட கட்டுமானங்கள், தொல்பொருட்களின் செய்நேர்த்தி, தொழில்நுட்பத் திறன், பொறியியல் நுணுக்கம் ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்ததில் சங்ககாலத் தமிழகத்தில் நன்கு முதிர்ச்சியடைந்த நகரப் பண்பாடு செழித்து வளர்ந்திருந்தது என்பதை உலகுக்கு நம்மால் அறிவிக்க முடிந்தது.

அதுமட்டுமல்ல; கீழடி, கொடுமணல் மற்றும் பொருந்தல் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மூலம் தமிழி எழுத்துக்களின் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்று அறிவியல் அடிப்படையில் உறுதிசெய்யப்பட்டது. மேலும், 2,600 ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழ்க் குடிமக்கள் பரவலான எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்கினர் என்ற உண்மையை அறிவுலகம் ஏற்றுக் கொண்டது நமக்கெல்லாம் பெருமையளிக்கக்கூடிய செய்தியாகும்.

அதைத் தொடர்ந்து, சென்ற ஆண்டு சிவகளை பகுதியில் அகழாய்வு செய்தபோது கிடைத்த நெல்மணிகளை பகுப்பாய்வு செய்து, பொருநை ஆற்றங்கரை நாகரிகம், 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. தமிழ்நாடு தொல்லியல் துறை, அகழாய்வுகளை மேற்கொள்வதிலும், தொல்பொருட்களை ஆய்வு செய்வதிலும் பல்வேறு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறது. காந்த அளவியல் பகுப்பாய்வு (Magnometer Survey), ஆளில்லா வான்வழி ஊர்தி ஆய்வு (Unmanned Aerial Survey), தரை ஊடுருவல் தொலையுணர்வு மதிப்பாய்வு (Ground Penetrating Radar Survey) போன்ற புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோல், அகழாய்வுகளில் கிடைக்கக்கூடிய தொல்பொருட்களை ஆய்வு செய்திட **(1)** தொல் தாவரவியல் (Paleo Botany), **(2)** தொல் விலங்கியல் (Paleo Zoology), **(3)** தொல் மரபணு ஆய்வு (Ancient DNA Analysis), **(4)** சுற்றுச்சூழல் தொல்லியல் (Environmental Archaeology), **(5)** மண் பகுப்பாய்வு (Soil Analysis), **(6)** உலோகவியல் (Metallurgy Study), **(7)** கடல்சார் ஆய்வு (Marine Archaeology) போன்ற பல்துறை வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்றிட புகழ்பெற்ற நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறு அறிவியல்வழி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் கிடைத்த ஆய்வு முடிவுகள் சிலவற்றை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

- கீழடிக்கு அருகே அகரம் அகழாய்வுத் தளத்தில் சேகரிக்கப்பட்ட மண்மாதிரிகளை மகரந்தம் மற்றும் பைட்டோலித் முறையில் பகுப்பாய்வு செய்ததில், அங்கே நெற்பயிர்கள் பயிரிடப்பட்டிருப்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

- சிவகளை வாழ்விடப் பகுதியில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்ததில், அங்கே நீர் செல்லும் செங்கல் வடிகாலில் நன்னீர் சென்றுள்ளதாகவும், தேக்கிவைக்கப்பட்ட நீர்நிலையிலிருந்து இந்நீர் கொண்டு வரப்பட்டதாகவும் ஆய்வில் தெரிய வருகிறது.

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, மிக முக்கியமான ஒரு ஆய்வு முடிவை அறிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

கடந்த ஆண்டு, தமிழ்நாடு தொல்லியல் துறையால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மயிலாடும்பாறை என்ற இடத்தில் ஈமச்சின்னங்கள்

மற்றும் வாழ்விடப் பகுதியில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பாறை ஓவியங்கள், புதிய கற்காலக் கருவிகள் என அரியவகை தொல்லியல் அடையாளங்களைக் கொண்ட மயிலாடும்பாறையின் வாழ்விடப் பகுதியில் 104 செ.மீ. மற்றும் 130 செ.மீ. ஆழத்தில் சேகரிக்கப்பட்ட இரண்டு கரிம மாதிரிகள், அமெரிக்காவிலுள்ள ப்ளோரிடா மாநிலத்தின் பீட்டா பகுப்பாய்வுக் கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்தப் பகுப்பாய்வின் AMS (Accelerator Mass Spectrometry) காலக் கணக்கீடு முடிவுகள் தற்போது பெறப்பட்டுள்ளன. அவற்றின் சராசரி மைய அளவீட்டுக் காலம் முறையே கி.மு. 1615 மற்றும் கி.மு. 2172 என்று காலக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதன்மூலம், தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முன்னரே நிலவி வந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மனித இனம் இரும்பின் பயனை உணரத் தொடங்கிய பின்புதான், அடர்ந்த வனங்களை அழித்து வேளாண்மை செய்திடும் போக்கு உருவாகியுள்ளது. அந்தவகையில், தமிழ்நாட்டில் வேளாண்மைச் சமூகம் தொடங்கிய காலம் குறித்தான கேள்விகளுக்கு ஒரு தெளிவான விடை இன்று கிடைத்திருக்கிறது.

மேலும், இந்தியாவில் இரும்புக்காலப் பண்பாடு நிலவிய கங்கைச் சமவெளி, கருநாடகம் உள்ளிட்ட 28 இடங்களில் இதுவரை AMS (Accelerator Mass Spectrometry) காலக் கணக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தற்போது கிடைத்துள்ள மயிலாடும்பாறை ஆய்வு முடிவுகளான, 4,200 ஆண்டுகளுக்கு என்பதே, காலத்தால் முந்தியது என்பது நமக்கெல்லாம் பெருமையளிக்கத்தக்க செய்தியாகும்.

அதேபோன்று, கருப்பு–சிவப்பு பானை வகைகள் **4,200** ஆண்டுகளுக்கு முன்னரே அதுவும் புதிய கற்காலத்தின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையும் அறியமுடிகிறது.

இந்த இரும்புக்காலம் குறித்த முக்கியமான கண்டுபிடிப்பை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பத்மஸ்ரீ திலீப் சக்ரபர்த்தி, புனே டெக்கான் கல்லூரியின் முன்னாள் இயக்குநர் பத்மஸ்ரீ பேராசிரியர் பத்தையா, ஒன்றிய அரசின் தொல்லியல் துறையின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் ராகேஷ் திவாரி, பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் விபா திரிபாதி, கருநாடக பல்கலைக்கழகப் பேராசிரியர் ரவி செட்டார் ஆகிய தலைசிறந்த வல்லுநர்கள் பாராட்டியுள்ளார்கள்.

தமிழ்நாடு தொல்லியல் துறையின் முயற்சிகள் இத்தோடு நின்றுவிடப் போவதில்லை. தொடர்ந்து தமிழர்கள் தடம்பதித்த இந்தியாவின் பிறபகுதிகளிலும், கடல் கடந்து வெற்றி கொண்ட நாடுகளிலும் அகழாய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, கேரளாவின் பட்டணம், கருநாடக மாநிலத்திலுள்ள தலைக்காடு, ஆந்திர மாநிலத்தின் வேங்கி, ஒடிசாவிலுள்ள பாலூர் பகுதிகளில் அகழாய்வு மேற்கொள்ளப்படும் என்ற செய்தியை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, சங்ககாலத் துறைமுகமான கொற்கையில் ஆழ்கடலாய்வின் முதற்கட்டமாக முன்கள ஆய்வு இந்த மாதம் தொடங்கப்பட உள்ளது. மேலும், தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின்போது கண்டெடுக்கப்பட்ட ஏராளமான பானை ஓடுகளில் காணப்படும் குறியீடுகளுக்கும், சிந்துவெளி நாகரிக முத்திரை எழுத்துகளுக்குமான உறவை ஒப்பீடு செய்து, ஆய்வு செய்திடும் திட்டத்தை தமிழ்நாடு தொல்லியல் துறை இந்தாண்டு

முதல் மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் குறிப்பிட்டதைப் போல, இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு, இனி தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் அறிவியல் வழி நிறுவுவதே நமது அரசின் தலையாய கடமை என்று நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதற்கு முத்தாய்ப்பாக தமிழகத்தில் இரும்பின் பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை மயிலாடும்பாறை ஆய்வு முடிவுகள் இன்று நிலை நிறுத்தியுள்ளது நமக்கெல்லாம் பெருமை.

தமிழ்ச் சமூகத்தின் தொன்மை மற்றும் தொடர்ச்சியை உலகறியச் செய்திட எந்நாளும் உழைப்போம் என்று உறுதியளித்து நன்றி கூறி அமைகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் அறிவியல்வழி ஆய்வுகளில் கிடைத்த முடிவுகள் தொடர்பாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன்கீழ் அறிவித்து ஆற்றிய உரை – **09.05.2022***

# மறுகுடியமர்வு கொள்கை விதிமுறைகளோடு விரைவில் வகுக்கப்படும்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூரில் நேற்று நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறித்தும், அதில் கண்ணையா என்பவர் தீக்குளித்து இன்று காலையிலே உயிரிழந்திருக்கிறார் என்பது குறித்தும், சட்டமன்றத்திலே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு கட்சித் தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கமாகக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

மயிலாப்பூரில் ஒரு விரும்பத்தகாத நிகழ்வு நடந்திருக்கிறது. உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இனி வரக்கூடிய காலக்கட்டத்திலே இதுபோன்று ஆக்கிரமிப்புகளை அகற்றக்கூடிய பணியை மேற்கொள்கிற நேரத்தில், முன்கூட்டியே அந்தப் பகுதி மக்களுக்கு மறுகுடியமர்வு செய்யக்கூடிய இடம் குறித்து, அவர்களுடைய கருத்துக்கள் கேட்கப்படும். மேலும், அந்தப் பகுதி மக்கள் பிரதிநிதிகளோடு இதுகுறித்து கலந்துபேசி, ஒரு இணக்கமான சூழ்நிலையை வரக்கூடிய காலக்கட்டத்தில் நிச்சயமாக நாங்கள் ஏற்படுத்துவோம். அவர்களுக்கான புதிய இடத்தில், தேவைப்படும் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்ட பின்னரே அவர்கள் மறுகுடியமர்வு செய்யப்படுவார்கள். இதற்காக மறுகுடியமர்வு கொள்கை ஒன்று, அனைத்து மக்கள் நலன் சார்ந்த அம்சங்களைக் கொண்டு விரைவிலே அதற்குரிய விதிமுறைகளோடு வகுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நீங்கள் தெரிவித்த அனைத்துக் கருத்துக்களோடு, அதைவிட கூடுதல் மனச் சுமையுடனுடம், ஆழ்ந்த துயரத்துடனும் நானும் இதிலே பங்கேற்கிறேன். இந்தச் சம்பவம் கடைசி சம்பவமாக இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம்.

இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, அருகிலேயே, அந்தப் பகுதியிலேயே, அவர்களுக்கு மறுகுடியமர்வு இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று அந்தப் பகுதி மக்கள் கருதுகிறார்கள் என்ற ஒரு நிலையை எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் மந்தைவெளி, மயிலாப்பூர் பகுதிகளிலே கட்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய வீடுகளில், அவர்களுக்கு நிச்சயமாக வீடுகள் ஒதுக்கித் தரப்படும் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதையும் தெரிவித்து அமைகிறேன்.

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
*சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், கோவிந்தசாமி நகர், இளங்கோ தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவது தொடர்பான விவாதத்தின்போது, பதிலளித்து ஆற்றிய உரை –* ***09.05.2022***

# மக்கள் நலனை பாதுகாக்கும் காவல்துறை... காவலர்கள் நலனை பாதுகாக்கும் அரசு...



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 06.04.2022 அன்று நீர்வளத்துறையின் மானியக் கோரிக்கை விவாதமானது தொடங்கப்பட்டது. வரிசையாகப் பல்வேறு துறைகளின் மானியக் கோரிக்கையானது நிறைவேற்றப்பட்டது. நேற்று, எனது கட்டுப்பாட்டில் இருக்கும் உள்துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று இருக்கிறது. இறுதியாக உள்துறை மீதான விவாதம் நடக்கிறது என்றால், அனைத்துத் துறைகளிலும் இது கடைசியானது என்று பொருள் அல்ல.

அனைத்துத் துறைகளுக்கும் இந்தத் துறையானது அடிப்படையானது என்பதால், இறுதியாக விவாதம் நடத்தப்படுகிறது என்று நினைக்கிறேன். உள்துறையானது சரியாகச் செயல்பட்டால் மற்ற துறைகளின் பணிகளும் சிறப்பாகச் செயல்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். அதை

நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என உளப்பூர்வமாக நம்புகிறேன். சட்டம்—ஒழுங்கு சரியாக இருக்கும் மாநிலத்தில்தான் வளர்ச்சி என்பது இருக்கும்.

கடந்த ஓராண்டு காலமாக பல்வேறு துறைகளும் எத்தகைய வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்பதை கடந்த ஒரு மாதகாலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற சட்டமன்ற நடவடிக்கைகளின் மூலமாக நீங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். இத்தகைய அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கு அடித்தளமான அமைதியை உருவாக்கியது உள்துறைதான் என்பதை அனைவருக்கும் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

முன்பு ஒருமுறை சட்டமன்றத்தில் நான் குறிப்பிட்டுச் சொன்னதையே இங்கு மீண்டும் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். “அமைச்சர்கள் அனைவரும் இந்த அரசிடம் என்னவெல்லாம் இருக்கிறது என்பதை விரிவாகப் பேசினார்கள். உள்துறை சார்பில் என்னைக் கேட்டால், எதுவெல்லாம் இல்லை என்பதைத்தான் நான் சொல்ல முடியும்” என்று சொல்லிப் பட்டியலிட்டேன்.

இந்த ஆட்சியில் வன்முறைகள் இல்லை; சாதிச் சண்டைகள் இல்லை; மத மோதல்கள் எழவில்லை; துப்பாக்கிச் சூடுகள் இல்லை; அராஜகங்கள் இல்லை; இதுதான் இந்த ஆட்சியின் மாபெரும் சாதனை; இதுதான் உள்துறையின் மிக முக்கியமான சாதனையாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டு மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கான அடித்தளத்தை அமைத்துத் தந்துள்ளோம். இந்த அமைதியை உருவாக்கிக் கொடுத்தது தமிழ்நாடு அரசினுடைய காவல்துறை. இன்றைக்குத் தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கு சரியாக இருப்பதால்தான், வெளிமாநிலங்களுக்குச் சென்ற தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிற்கு மீண்டும் திரும்பி வந்து

கொண்டிருக்கின்றன. புதிய முதலீடுகள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன.

இந்தியாவிலேயே அமைதியான மாநிலம் தமிழ்நாடு; பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என்ற நற்பெயர் மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசின் ஒரு கை, நிருவாகம் என்றால்; இன்னொரு கை, காவல்துறை. இந்த இரண்டும் முறையாக சரியாகச் செயல்பட்டால், அந்த அரசாங்கம் தலைசிறந்த அரசாங்கமாகப் பெயர் பெறும். அந்தவகையில் காவல் துறைக்குச் சில கட்டளைகளை நான் பிறப்பித்திருக்கிறேன்.

காவல்துறை என்றாலே குற்றங்களைத் தடுக்கும் துறையாக, தண்டனை வாங்கித் தரக்கூடிய துறையாக மட்டும் அனைவரும் நினைக்கிறார்கள். காவல் துறை என்பது குற்றங்களே நடக்காத வகையில் சூழ்நிலையை உருவாக்கித் தரக்கூடிய துறையாக மாறவேண்டும் என்பது என்னுடைய ஆசை; இந்த அரசினுடைய கொள்கை. குற்றங்கள் குறைய வேண்டும் என்பதைவிடக் குற்றமே நடைபெறாத சூழலை உருவாக்கும் துறையாக அது மாற வேண்டும்.

கொலை, திருட்டு, பாலியல் தொந்தரவு, போதை மருந்துகள் வன்முறைச் சம்பவங்கள் ஆகியவைதான் மிகப்பெரிய குற்றங்கள். இவை எந்தச் சூழலிலும் நடைபெறாத நிலையை உருவாக்குவதற்கு காவல் துறை திட்டமிட வேண்டும். எந்தச் சூழலிலும் பொதுமக்களுக்கு அச்சம் தரும் சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அரசியல்ரீதியாகவோ, மதம் மற்றும் சாதி காரணமாகவோ வன்முறைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி திட்டமிட்டு இந்த அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படுத்தும் வகையில் மோதல்கள் உருவாக்க நினைப்பவர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும்.

அதேநேரத்தில், காவல் துறையும் யாராலும் கை நீட்டிக் குற்றம் சொல்ல முடியாத துறையாக இருக்க வேண்டும். எங்கோ ஒரு காவலர் செய்யக்கூடிய தவறு இந்த ஆட்சியின் தவறாக குற்றம் சாட்டப்படும். அவர்மீது நாம் நடவடிக்கை எடுத்தாலும், ஆட்சியின் மீதான கறையாக அந்தச் சம்பவம் பேசப்படும். எனவே, காவல்துறையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் விமர்சனத்துக்கு இடமில்லாமல் தங்கள் பணிகளைச் செய்ய வேண்டும்.

ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்று பாராமல் சட்டத்தின் ஆட்சி நிலை நிறுத்தப்பட வேண்டும். எந்த திசையில் இருந்து அழுத்தம் வந்தாலும், சிபாரிசு வந்தாலும் நீங்கள் சட்டத்தின் பக்கமே நின்று நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரத்தில், அதிகாரிகளும் தவறு செய்துவிடக் கூடாது. தவறு செய்யும் அதிகாரிகளுக்கு இந்த அரசில் இடமில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

போதைப் பொருட்களுக்கு நமது மாணவச் செல்வங்கள் அடிமையாவது மிக மிக கவலையளிக்கிறது. ஆகவே குட்கா விற்பனையைத் தடுத்து நிறுத்துங்கள்; போதைப் பொருட்கள் நடமாட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குங்கள். போதையில் இருந்து இளைய சமுதாயத்தைக் காப்பது இன்றைய சூழலில் மிக முக்கியமானதாக நினைக்கிறேன். எந்த போதை மருந்து நடமாட்டமும் தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது.

கூலிப்படை வைத்துக் கொலை செய்த வழக்குகளை, விசாரணையை விரைந்து முடித்து, கூலிப்படைகளுக்கே முற்றுப்புள்ளி வையுங்கள். கூலிப்படை வைத்திருப்பதைத் தொழிலாகக் கொண்டவர்கள் முழுமையாகத் துடைத்தெறியப்பட வேண்டும்.

தீயணைப்புத் துறையினர் ஆபத்தான கட்டிடங்களை ஆய்வு செய்து பாதுகாப்பினை உறுதி செய்யுங்கள். தீ விபத்துக்களை

விரைந்து சென்று தடுத்திடவும் முன்கூட்டியே நடைபெறாமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊர்க்காவல் படையினரை அதிகம் பயன்படுத்துங்கள்; சமூக நல்லிணக்கப் பணிகளுக்கு அது மிக முக்கியமாக இருக்கிறது. மத துவேஷங்கள், தீவிரவாதச் செயல்களை முளையிலேயே கிள்ளி எறியுங்கள். மதம், சாதி வன்முறையைத் தூண்டும் பேச்சுகள் தடுக்கப்பட வேண்டும். இப்போது இந்த வன்முறைப் பேச்சுக்கள் இணையதளங்களில் அதிகமாகப் பரவி வருகிறது. இம்மாதிரியான ஆட்கள் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

கள்ளச்சாராயச் சாவுகள் இல்லாத தமிழகமாக மாறிட வேண்டும்; அதை உறுதிப்படுத்துங்கள். அமைதி அது ஒன்றே உங்களது குறிக்கோள் என்று தமிழ்நாடு காவல்துறைக்கு நான் கட்டளையிட்டிருக்கிறேன். அப்படித்தான் தமிழ்நாடு காவல்துறையும் செயல்பட்டு வருகிறது. அங்கொன்றும், இங்கொன்றுமாக நடந்த சில சம்பவங்களை வைத்து ஒட்டுமொத்தக் காவல்துறையையும் யாரும் களங்கப்படுத்த வேண்டாம். இது உயிரைப் பணயம் வைத்துப் பாடுபடக்கூடிய காவலர்களைக் கொச்சைப்படுத்தும் செயல் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துறையை மேம்படுத்த வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அதற்காகத்தான் காவல் துறை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.டி. செல்வம் அவர்கள் தலைமையில் இந்த ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. கழக அரசால் அமைக்கப்பட்ட நான்காவது காவல் ஆணையம் இது. அதிலிருந்தே காவல் துறைமீதும், காவலர்கள் மீதும் கழக அரசு எத்தகைய அக்கறையுடன் இருக்கிறது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் உள்துறையின் முதல் மானியக் கோரிக்கையை தாக்கல் செய்து இந்த மாமன்றத்தில் நான் ஆற்றிய உரையிலே, ஐந்து முக்கிய அம்சங்களை முன்வைத்தேன்.

அவை மக்களுடைய பாதுகாப்பு தொடர்புடையவை – மக்களுக்கு காவல்துறை மீது தனி நம்பிக்கையை ஏற்படுத்த அறிவிக்கப்பட்டவை. அந்த ஐந்து அம்சங்கள் என்னவென்றால்,

- ➢ தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும்.
- ➢ சட்டம்–ஒழுங்கைத் திறம்படப் பராமரிப்பதை உறுதிசெய்வதற்கு, குற்றங்களைத் தடுப்பதற்கு முன்னுரிமை கொடுக்கும்.
- ➢ காவல் துறைக்கும் மக்களுக்கும் இடையிலான நல்லுறவே காவல் பணியில் இன்றியமையாத குறிக்கோள் என்பதை முன்னிறுத்தும்.
- ➢ காவலர் குறைதீர்க்கும் செயல்முறைகள் வலுப்படுத்தப்படும்.
- ➢ குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், இணையவழிக் குற்றங்கள் புலன் விசாரணையில் முன்னுரிமை கொடுக்கப்படும்.

இந்த அடிப்படை அம்சங்களைக் கடந்த ஓராண்டில் மிக நேர்த்தியாக கடைப்பிடித்து, சட்டம்–ஒழுங்கை இன்றைக்கு மிகச் சிறப்பாக நிலைநாட்டி வருகிறது இந்த ஆட்சி என்பதை நான் மகிழ்ச்சியோடு, பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசினுடைய நோக்கம் குற்றங்களைத் தடுப்பது. அந்த நடவடிக்கை ஒன்றே, மக்களுக்குக் காவல்துறை மீது நம்பிக்கையைப் பெற்றுத்தரும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருப்பவன் நான்.

அதனால்தான் இன்றைக்கு இந்த ஓராண்டு காலத்தில் மக்களுக்குக் காவல்துறை மீதான நம்பிக்கையை மீட்டெடுத்திருக்கிறோம். ‘இது நம்ம போலீஸ்’ என்ற உணர்வை, பட்டி தொட்டிகளில் உள்ள மக்களிடம் உருவாக்கியுள்ளோம். ‘காவல்துறை நமது நண்பன்’ என்ற உணர்வை ஒவ்வொருவரிடமும்

ஊட்டியிருக்கிறோம். மக்களுக்கும், காவல் துறைக்கும் நல்ல நட்பு இருப்பதால், குற்றங்கள் முன்கூட்டியே தடுக்கப்பட்டுள்ளன. அதனை மீறிக் குற்றங்கள் நடந்தாலும், அதற்குக் காரணமானவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சட்டம்–ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்ட பிறகு, அதைச் சமாளிப்பதைவிட முன்பே அப்படியொரு பிரச்சினை ஏற்படாமல் தடுப்பதே காவல் துறையினுடைய சிறந்த பணி என நம்புபவன் நான். அதனால்தான் குற்றங்களைத் தடுக்க முன்னுரிமை என்று அறிவித்து, அதைச் செயல்படுத்தி இருக்கிறோம். தொடர்ச்சியான ஆய்வுக் கூட்டங்கள் மூலமாகத்தான் குற்றங்களைத் தடுக்க முடியும்.

அந்த வகையில், 761 ஆய்வுக் கூட்டங்களை எஸ்.பி.–க்கள் மாவட்ட அளவில் நடத்தி, இதுகுறித்த ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். சரக அளவிலே 470 கூட்டங்கள் நடத்தி டி.ஐ.ஜி.–க்கள் இதுகுறித்த ஆலோசனைகளை அளித்துள்ளார்கள். மாநகரங்களில் 60 கூட்டங்களைக் காவல் துறை ஆணையர்களும், மண்டல அளவில் 134 ஆய்வுக் கூட்டங்களை ஐ.ஜி.–க்களும், மாநில அளவில் டி.ஜி.பி. உள்ளிட்ட உயரதிகாரிகளும் இதுபோன்ற ஆய்வு கூட்டங்களை நடத்தி, “குற்றத் தடுப்பு” முன்னுரிமை குறித்து அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். இத்துறையின் அமைச்சர் என்ற முறையில்நான் காவல் துறை உயரதிகாரிகளைக் கடந்த 06.05.2022 அன்று அழைத்து பேசி ஆலோசனை வழங்கியிருக்கிறேன்.

மார்ச் 10 முதல் 12 வரை என் தலைமையிலே நடைபெற்ற மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுகுறித்த ஆலோசனைகளை வழங்கியிருக்கிறேன். அந்தக் கூட்டத்தில் திறந்த மனதோடு அதிகாரிகள் பங்கெடுத்துப் பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதனை மனதில் வைத்துப் பல்வேறு திட்டங்களை அரசும் தீட்டி உள்ளது.

“குற்றங்களைத் தடுப்போம் – தவிர்ப்போம்!” என்பதே இந்த அரசின் முழக்கமாக அமைந்திருக்கிறது.

தொழிற்சாலைப் பகுதிகளில் குற்றங்களைத் தடுக்கத் தனி போலீஸ் படை உருவாக்கப்பட்டது. 3 ஆயிரத்து 632 பேர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டு, அவர்கள் “முழுக் காலத்திற்கு” முன்பே வெளியில் செல்வது பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டவர்களில் 2 ஆயிரத்து 483 பேர் முழுக் காலமும் அனுபவிக்காமல், மிக விரைவிலேயே வெளியே வந்த அவல நிலை அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தது. ஆனால், அந்த நிலை மாற்றப்பட்டு அப்படி வெளிவரும் எண்ணிக்கையையும் இந்த அரசு குறைத்திருக்கிறது. குற்றத் தடுப்பிற்கு இது ஒரு வகை. இப்படி அரசு எடுத்த நடவடிக்கைகள் மூலமாக இந்த “Preventive Policing” முன்னுரிமையால், இந்த அரசு பொறுப்பேற்ற ஓராண்டுக் காலத்தில் திருட்டு வழக்குகளில், 53 விழுக்காடு வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 144 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 43 விழுக்காடு சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. உளவுத் துறை, மாவட்டத் தனிப் பிரிவு, மாநகர நுண்ணறிவுப் பிரிவு, உள்ளூர் காவல் துறையினர் அளித்த முன்னெச்சரிக்கை தகவலின் அடிப்படையில், கடந்த ஓராண்டில் 268 கொலைகள் நடைபெறாமல் காவல் துறையினர் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

இதுவரை நடைபெற்ற 185–க்கும் மேற்பட்ட முக்கிய விழாக்களில் பங்கேற்ற 1 கோடியே 8 இலட்சம் பேரின் பாதுகாப்பினை இந்த அரசு உறுதிசெய்து, அவர்கள் திருவிழாக்களைக் கண்டு களித்துவிட்டு பாதுகாப்பாக வீடு திரும்ப வித்திடப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு சில முக்கிய நிகழ்வுகளை இங்கே சுட்டிக்காட்ட வேண்டுமென்றால், மருதுபாண்டியர் ஜெயந்தி விழா, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் குரு பூஜை, இமானுவேல் சேகரன் நினைவு தினம், விநாயகர் சதுர்த்தி விழா, கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள், ரம்ஜான் போன்ற

நிகழ்வுகளின்போது இந்த ஆட்சி மிகச் சிறப்பாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து, சமூக நல்லிணக்கத்தை, சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டியிருக்கிறது.

ஊரக உள்ளாட்சித் தேர்தல் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் போன்றவற்றை அமைதியாக நடத்தி, சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய பாராட்டைப் பெற்றிருக்கிறது.

இந்திய முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் அவர்கள் உள்ளிட்ட 12 பேர் பயணித்த ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளான வேதனைக்குரிய நிகழ்வு நடைபெற்றது. அந்தத் துயரமான நிகழ்வில் நான் உட்பட தமிழகம் முன்னணியில் நின்று களப்பணியாற்றியதை நம் நாடே போற்றியது. நம் இராணுவ அதிகாரிகளே பாராட்டியிருக்கிறார்கள்.

திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஃபாக்ஸ்கான் டெக்னாலஜி தொழிற்சாலை தொடர்பாக ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்திற்கு அமைதி வழியில் ஆக்கப்பூர்வமான தீர்வு கண்டதை அண்டை மாநிலங்களில் தொழிற்சாலை வைத்திருப்போர்கூட பாராட்டினார்கள்.

இப்படி பல்வேறு முக்கிய நிகழ்வுகளில் தமிழ்நாடு காவல் துறை இந்த அரசின்கீழ், எனது தலைமையின்கீழ் மிகவும் திறமையாகச் செயல்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். கொடுங்குற்றங்கள் தொடர்பாகவும் கூலிப்படைகள் விஷயத்திலும் ஈவு இரக்கமின்றி இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அ.தி.மு.க. ஆட்சியில் மே 2020 முதல் ஏப்ரல் 2021 வரை நடைபெற்ற கொலைகள் 1,695. கடந்த ஓராண்டு காலத்தில் நிகழ்ந்துள்ள கொலைகள் 1,558. கொள்ளை (Dacoity) அ.தி.மு.க. ஆட்சியில் 146. தற்போது அது 103 ஆகக் குறைந்துள்ளது.

கூலிப்படைகளின் அட்டகாசத்திற்கு இந்த அரசு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் அ.தி.மு.க. ஆட்சியில் மே 2020 முதல் ஏப்ரல் 2021 வரை 30 கூலிப்படைக் கொலைகள் நிகழ்ந்துள்ளன. ஆனால் இந்த ஆட்சியில் அது 18ஆகக் குறைக்கப்பட்டு கூலிப்படைகளின் ஆதிக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் முற்றிலும் ஒழிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அ.தி.மு.க. ஆட்சியின் கடைசி இரு ஆண்டுகளில் 16 போலீஸ் துப்பாக்கிச்சூடு நடைபெற்றுள்ளது. அதில் ஒன்றுதான் ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூடு சம்பவம். ஆனால், தி.மு.க. ஆட்சியில் அந்த நிலை ஏற்படவில்லை. எங்கும் எந்தச் சூழலிலும் துப்பாக்கிச்சூடு என்பது ஏற்படவே இல்லை.

காவல் நிலையங்களில் ஏற்படக்கூடிய மரணங்களைப் பொறுத்தவரையில் சில விளக்கங்களை திறந்த மனதோடு இந்த அவையில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். என்னிடம் உள்ள புள்ளிவிவரங்களின்படி, 2017ஆம் ஆண்டு எட்டு பேரும், 2018ஆம் ஆண்டு 12 பேரும், 2019ஆம் ஆண்டு 11 பேரும், 2020ஆம் ஆண்டு ஆறு பேரும், 2021ஆம் ஆண்டு ஐந்து பேரும், 2022ஆம் ஆண்டு இதுவரை நான்கு பேரும் உயிரிழந்திருக்கிறார்கள்.

இந்த மரணங்கள் எந்த ஆட்சியில் நடந்திருந்தாலும் அதை நியாயப்படுத்தக் கூடாது, நியாயப்படுத்தவும் முடியாது. காவல்துறையினர் இதுபோன்ற சம்பவங்களில் விழிப்புடன் இருக்குமாறும், விசாரணைக்காகக் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்படக்கூடிய நபர்களைத் தேவையின்றி மனரீதியாகவோ, உடல்ரீதியாகவோ துன்புறுத்தக் கூடாது என்றும், வழக்குகளில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் எதிரிகளைக் காவல் நிலையத்திற்குக் கொண்டுவந்து விசாரிக்கும்போது உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டு நெறிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

கைது செய்யப்பட்டவர்களைக் கையாளும்போது தனிப்பட்ட வெறுப்புணர்ச்சியைக் காட்டக் கூடாது. பெரும்பாலான குற்றங்கள் சந்தர்ப்ப சூழலால் செய்யப்படுவதாக இருக்கிற காரணத்தால், குற்றவாளிகளைத் திருத்தும் முயற்சியைக் காவல்துறையினர் செய்ய வேண்டும்.

அதே நேரத்தில் கொடிய குற்றம் செய்தவர்கள், எளிதாக, பிணையில் வெளிவர இயலாத வகையில் பல்வேறு சட்டப்பிரிவுகளில் கைது செய்ய வேண்டும். குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் அவர்களை வைக்க வேண்டும். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்ற வழிகாட்டுதலின்படி உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும். வழக்குகளில் தேவையற்ற காலதாமதம் கூடாது. குறிப்பிட்ட காலத்திற்குள் புலன்விசாரணை முடிக்கப்பட வேண்டும் என்ற உத்தரவுகளை பிறப்பித்திருக்கிறோம்.

இத்துடன், காவல் துறையினருக்கு உணர்திறன் பயிற்சி (Sensitization Training) மூலம் காவல் நிலையத்தில் குற்றவாளிகளைக் கையாளுவது குறித்தும், அவர்களிடம் அறிவியல் அடிப்படையில் புலன்விசாரணை மேற்கொள்வது குறித்தும் அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. இதன்பொருட்டு, அவ்வப்போது இப்பயிற்சிகளைக் காவல் துறையினருக்கு அளிக்க திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஒருவரைக் கைது செய்வது குறித்தும், அவரை விசாரணை செய்வது குறித்தும் காவல் துறையினருக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தபோதிலும், காலமாற்றத்திற்கு ஏற்றவாறு இத்திறன்களை மேம்படுத்தக்கூடிய வகையில், போலீஸ் கான்ஸ்டபில்களுக்கும், அதிகாரிகளுக்கும் காவல் உயர் பயிற்சியகங்களிலும், காவல் பயிற்சிப் பள்ளிகளிலும் கூடுதலாக உரிய விழிப்புணர்வும், போதிய பணியிடைப் பயிற்சியும் வழங்கப்பட வேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை.

இப்போது நிகழ்ந்துள்ள லாக்–அப் மரணங்களில் எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவீர்கள். இந்த அரசு எப்போதும் எதையும் மறைக்க முயலுவதில்லை. எங்களைப் பொறுத்தவரையில் லாக்–அப் குற்றங்கள் இனி நடக்காமல் இருப்பதற்கான உறுதியான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தி.மு.க. ஆட்சியில், குற்றங்கள் குறைந்துள்ளன என்பதற்கு இன்னொரு முக்கிய ஆதாரமாக ஒன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சியின் கடைசி ஓராண்டில் **12** இலட்சத்து **74** ஆயிரத்து **36** முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டன. ஆனால் தி.மு.க. ஆட்சியில் அது பெருமளவு குறைந்து **8** இலட்சத்து **66** ஆயிரத்து **653** முதல் தகவல் அறிக்கைகள் மட்டுமே பதிவாகியிருக்கின்றன என்றால், இந்த ஆட்சியில் குற்றங்கள் குறைந்திருக்கிறது அல்லது முன்கூட்டியே தடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

மாநிலத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இக்குற்றங்களில் ஈடுபடுவோர்மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழும், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் போக்சோ சட்டத்தின்கீழும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, வழக்குகளை விரைந்து நடத்தி முடித்து, நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுத்தர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் போக்சோ சட்டத்தின்கீழ் கடந்த 2021ஆம் ஆண்டு மே மாதம் முதல் இவ்வாண்டு (2022) மார்ச் மாதம் வரை 4,496 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 3,441 வழக்குகளில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பெண்களுக்கெதிரான குற்றங்களில் மானபங்கம் தொடர்பாக 1,053 வழக்குகளும், பெண் கடத்தல் தொடர்பாக 547 வழக்குகளும், பாலியல் பலாத்காரம் தொடர்பாக 416 வழக்குகளும், போக்சோ பாலியல் பலாத்காரம் தொடர்பாக 3,350 வழக்குகளும் தாக்கலாகியிருக்கின்றன. பெண்களுக்கெதிரான குற்றங்கள், குறிப்பாக வரதட்சணை சம்பந்தமான கொலைகள், பாலியல் கொடுமைகள், மானபங்க வழக்குகள் போன்றவை தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கையுடன் முன்வந்து புகார்களை அளித்து வருகிறார்கள்.

தி.மு.க. ஆட்சி பெண்களுக்கெதிரான குற்றங்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையில், பாதிக்கப்பட்ட பெண்கள், மாணவிகள் அச்சமின்றிப் புகார்களை அளித்து வருகிறார்கள். கிராமங்களில் விழிப்புணர்வு கமிட்டிகள்மூலம் இதுபோன்ற குற்றங்கள் நிகழாமல் முன்கூட்டியே தகவல் அறிந்து தடுக்கப்படுகிறது. போக்சோ சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த ஒவ்வொரு வகுப்பறையிலும் 1098 என்ற சிறார் உதவி எண் ஒட்டப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குழந்தைகள் மீதான குற்றத் தடுப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த ஒலி, ஒளி கட்டமைப்போடு கூடிய இரண்டு பல்நோக்குப் பயன்பாட்டு விழிப்புணர்வு வாகனங்கள் தொடங்கி வைக்கப்பட்டன.

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்து அவர்களுக்கு உதவிட போக்சோ சட்டத்தின்கீழ் நிதியும் உருவாக்கப்பட்டது. இதன் தாக்கம், குற்ற நிகழ்வுகள்

குறைந்துள்ளதில் எதிரொலிக்கிறது. குழந்தைகள் மற்றும் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை குற்றங்களைப் பொறுத்தமட்டில், போக்சோ சட்டத்தின்கீழ் **4,496** வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. பதிவு செய்வது முக்கியமல்ல; குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதுதான் மிக முக்கியம். அந்த வகையில் பார்த்தால், பதிவு செய்யப்பட்ட வழக்குகளில், அதிகமான எண்ணிக்கையில், அதாவது, **3,441** வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு இன்றைக்கு நீதிமன்ற விசாரணைக்கு வந்துவிட்டது. பாலியல் குற்றங்களில் எடுக்கப்படும் விரைவான நடவடிக்கைக்கு ஒரு எடுத்துக்காட்டை மட்டும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேலூர் மாவட்டம், காட்பாடி அருகில் பெண் மருத்துவர் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட விவரம் வேறு ஒரு வழக்கு விசாரணையின்போது தெரியவந்தது. அதைத் தொடர்ந்து பீகாரில் உள்ள அந்தப் பெண்ணிடம் **22.03.2022** அன்று வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் மின்னஞ்சல் வாயிலாக புகார் பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அன்றையதினமே குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட அவர்கள் **15.04.2022** அன்று குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டார்கள். குற்றவாளிகள் மீது **23.04.2022** அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, **04.05.2022** அன்று வழக்கு விசாரணையே துவங்கிவிட்டது. பாலியல் குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டு, **32** நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, இந்த வழக்கில் தமிழ்நாடு காவல்துறை சாதனை படைத்திருக்கிறது. இதுதான் எனது தலைமையிலான அரசின்கீழ் உள்ள காவல்துறை,

தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களான மாவா, குட்கா, ஹன்ஸ் போன்ற பொருட்களைப் பதுக்கி வைத்து விநியோகம் செய்பவர்கள், கடைகளில் விற்பனை செய்பவர்கள் மற்றும் கஞ்சா போன்ற போதைப் பொருட்களை விற்பவர்கள்,

கடத்துபவர்கள் ஆகியோரைக் கண்காணித்து திடீர் சோதனைகளை நடத்தி, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, தொடர்புடையோர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் விற்பனை மற்றும் பயன்பாடு காலங்காலமாக இருந்து வருகின்றபோதிலும், கடந்த சில ஆண்டுகளில் இவற்றைப் பயன்படுத்துவது அதிகரித்து வருவதை அறிந்த இந்த அரசு, சட்டத்திற்குப் புறம்பாகக் குற்றங்களில் ஈடுபடுவோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதன் பேரில், கஞ்சா மற்றும் குட்கா உள்ளிட்டவை கடந்த ஆண்டுகளைவிட, இந்த ஓராண்டு காலத்தில் அதிகளவு பறிமுதல் செய்யப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கஞ்சா பயிரைப் பயிரிடுவது குறித்து, குறிப்பாக அண்டை மாநிலங்களில் இது அதிகளவு பயிரிடப்படுவதாகவும், தமிழ்நாட்டில் சில மலைப்பிரதேசங்களில் பயிரிடப்படுவதாகவும் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், அம்மாநிலக் காவல் துறையினருடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அப்பயிர்களை அழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்குற்றத்தில் ஈடுபடுவோர்மீது தடுப்புக்காவல் சட்டப்பிரிவுகளின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, அக்குற்றவாளிகள் மீண்டும் கஞ்சா பயிரிடுதல், கடத்துதல் மற்றும் விற்பனையில் ஈடுபடுவதைத் தவிர்க்கக்கூடிய வகையில், அவர்களுக்கு மாற்றுத் தொழிலில் ஈடுபட உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், கஞ்சா மற்றும் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதால், சமூகத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் எதிர்கால சந்ததியினருக்கு நேரக்கூடிய பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இந்தப் போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபடுவோருக்கு

போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தில் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுவது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதுதவிர, இக்குற்றங்களில் ஈடுபடுவோர், அவர்களது கூட்டாளிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பெயரில் இருக்கக்கூடிய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும், போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 2021ஆம் ஆண்டு மே முதல் 2022ஆம் ஆண்டு மார்ச் வரை, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பாக, 7,931 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 10,837 நபர்கள் கைது செய்யப்பட்டதோடு, அவர்களுள் 648 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

அவர்களிடமிருந்து, ரூபாய் 31 கோடியே 76 இலட்சத்து 89 ஆயிரத்து 140 மதிப்புள்ள 43 ஆயிரத்து 228 கிலோ போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இதேபோன்று, குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பாக, 35 ஆயிரத்து 38 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 36 ஆயிரத்து 293 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களுள் 720 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். அவர்களிடமிருந்து, 66 கோடியே 67 இலட்சத்து 56 ஆயிரத்து 249 ரூபாய் மதிப்புள்ள 3 இலட்சத்து 84 ஆயிரத்து 972 கிலோ போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

மாநிலத்தில் முக்கிய நகரங்களில், குறிப்பாகப் பள்ளி, கல்லூரிகளுக்கு அருகில் இருக்கக்கூடிய கடைகளில் சரக காவல்துறையினர் அடிக்கடி சோதனைகள் மேற்கொண்டு, தடை செய்யப்பட்ட கஞ்சா, குட்கா, புகையிலை உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை செய்பவர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது வழக்குகள் பதிவுசெய்து கடும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறார்கள்.

இத்துறைக்குப் பொறுப்பேற்றதும் கூறிய முதல் அறிவுரை – “பள்ளி, கல்லூரி வளாகங்களில் குட்கா, கஞ்சா விற்பனைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வையுங்கள் என்று அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிறேன். தமிழ்நாட்டில் தெருவுக்குத் தெரு குட்கா, கஞ்சா என்ற நிலையை அறவே ஒழிக்க வேண்டும்!” என்பதுதான். அதன் அடிப்படையில் காவல்துறை செயல்பட்டு வருகிறது. கஞ்சா விற்பனை செய்வோரின் – சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் நான் உத்தரவிட்டேன். குறிப்பிட்ட சில வழக்குகளை உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், தேனி மாவட்டம் ஓடைப்பட்டிகாவல் நிலைய எல்லையில் கஞ்சா விற்ற பூபாலன் உள்ளிட்ட 8 பேரினுடைய வங்கிக் கணக்கு முடக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம், ஆஸ்டின்பட்டி காவல் நிலைய எல்லையில் கஞ்சா விற்ற ஜெயக்குமார் உள்ளிட்ட 7 பேரின் நிலத்துடன் கூடிய 4 வீடுகள், 2 இரு சக்கர வாகனங்கள், 29 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி காவல் நிலைய எல்லை கஞ்சா வழக்கில் நவீன் குமார் உள்ளிட்ட 5 பேரின் நிலத்துடன் கூடிய 6 வீடுகள், 60 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. “ஒழிப்பு” ஒருபுறம், “விழிப்புணர்வு இன்னொரு புறம்” என்று குட்கா, கஞ்சா பற்றிய நடவடிக்கையை இந்த அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை ஒழிக்க 256 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. உயர்கல்வித் துறையில் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் “போதைத் தடுப்பு கிளப்” (Anti-Drug Clubs) அமைக்க ஏற்கனவே அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஆட்சிப் பொறுப்பேற்றதும் சட்டமன்றத்தில் அளித்த வாக்குறுதியின்படி, கல்வி நிறுவனங்கள் இருக்கக்கூடிய 200 மீட்டர் தொலைவிற்குள் போதைப் பொருட்கள் விற்பவர்களுக்கு 3 வருடம் முதல் 10 வருடம் வரை சிறைத்தண்டனை விதிக்கவும்,

ஒரு இலட்சம் முதல் 2 இலட்சம் வரை அபராதம் விதிக்கவும், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடைச் சட்டம், 1985இல் உரிய திருத்தங்கள் செய்யத் தேவையான கருத்துருக்கள் ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அதன்மீது ஒப்புதல் பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, இந்த அரசு குட்கா, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை ஒழிக்க இன்னும் கடுமையான நடவடிக்கைகளை வரும் நாட்களில் எடுக்கும் என்ற உறுதியை இந்த அவைக்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாலைப் பாதுகாப்பில் இந்த அரசு மிக முக்கியக் கவனம் செலுத்தி வருகிறது. "நம்மைக் காக்கும் 48" என்ற திட்டம் – உயிர்காக்கும் திட்டம். அந்த திட்டத்தின் மூலமாக சாலை விபத்துகளைக் குறைக்க காவல்துறையின் சார்பில் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் விளைவாக, விபத்து மரணங்கள் இந்த ஆட்சியில் குறைந்துள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் மரணத்தை ஏற்படுத்தும் விபத்துகள் 15,290–ஆக இருந்துள்ளது. தற்போது அது 14,203–ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் 15,967–ஆக இருந்த விபத்து மரணங்கள், தற்போது 14,845–ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதெல்லாம் உண்மையான தகவல்கள்! ஏதோ சென்ற ஆட்சியில் "விபத்துக்களை" "விபத்து மரணங்களை" குறைக்க செய்யப்பட்ட புள்ளிவிவர மோசடிகள் போல் அல்ல! என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறை மக்களுக்காகச் செயல்படும்போது, இந்த அரசும் இரவு பகல் பாராமல் பணியாற்றக்கூடிய காவல்துறையினருக்காகச் செயல்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது. அதை மனதில் வைத்துதான் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பல்வேறு நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த நிதிநிலை அறிக்கையின்போது காவல்துறைக்கு அறிவிக்கப்பட்ட **44** அறிவுப்புகளில் **39–க்கு** அரசாணை வெளியிடப்பட்டு விட்டது.

நான் துவக்கத்திலேயே சொன்னதுபோல் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சி.டி.செல்வம் அவர்கள் தலைமையில் காவலர்களுக்கு நலத்திட்டங்கள் உருவாக்க புதிய காவல் ஆணையம் அமைக்கப்பட்டது. இரண்டாம்நிலைக் காவலர்கள், தீயணைப்புக் காவலர்கள், சிறைக் காவலர்கள் உள்ளிட்ட பணிகளுக்கு **11,150** பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

காவலர்கள் தங்கள் உடல்நலனைப் பேணிக் காத்திடவும், தங்கள் குடும்பத்தாருடன் போதிய நேரம் செலவிடவும் இரண்டாம்நிலைக் காவலர் முதல் தலைமைக் காவலர்கள் வரையிலான ஆளிநர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் ஓய்வு வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டு அது அரசாணையாக்கப்பட்டு, கடந்த ஆறு மாதங்களில் **63** ஆயிரத்து **77** பேர் வார ஓய்வினைப் பெற்று பயன் அடைந்துள்ளார்கள்.

சென்னைப் பெருநகர ஆயுதப்படைக் காவல் ஆளிநர்களின் நலன் கருதி சென்னை பெருநகரக் காவலில் செயல்படும் CLAPP செயலி மூலம், இதுவரை **2,566** காவல் ஆளிநர்கள் தற்செயல் விடுப்பும், **2,188** காவல் ஆளிநர்கள் வாராந்திர விடுப்பும், **494** காவல் ஆளிநர்கள் மருத்துவ விடுப்பும், **252** காவல் ஆளிநர்கள் ஈட்டிய விடுப்பும் என, மொத்தம் **5,590** காவல் ஆளிநர்கள் இச்செயலி மூலம் விடுப்பு பெற்று பயன்பெற்றுள்ளார்கள்.

தமிழக காவல்துறையினரின் மரபைப் போற்றும் வகையில் **6** கோடியே **47** இலட்ச ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு காவல் அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது. காவலர் முதல் துணைக் கண்காணிப்பாளர் வரை வழங்கப்படும் குடியிருப்பின் இட அளவு **100** சதுர அடியிலிருந்து **220** சதுர அடியாக உயர்த்தி வழங்கப்பட்டது.

காவலர்களின் வாரிசுகள் **800** பேருக்கு **2020**ஆம் ஆண்டு வரையிலான கருணை அடிப்படையில் வேலை வழங்கப்பட்டது.

தலைமைச் செயலகத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது இறந்த பெண் தலைமைக் காவலர் கவிதா குடும்பத்திற்கு **25** இலட்சம் ரூபாய் நிதியும், விபத்தில் காயமடைந்த காவலர் முருகன், தீயணைப்புப் படை வீரர் செந்தில்குமார் ஆகியோருக்கு தலா **5** இலட்சம் ரூபாயும் வழங்க உத்தரவிடப்பட்டது. பணியில் இருந்தபோது இறந்த நவல்பட்டு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பூமிநாதனுக்கு **1** கோடி ரூபாய் நிதியுதவியும், அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணியும் வழங்க உத்தரவிடப்பட்டது.

இந்த ஓராண்டில் குற்றங்களை நடைபெறவிடாமல் அரசு தடுத்திருக்கிறது. திருவிழாக்களில் மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்திருக்கிறது. காவல்துறைக்கும், மக்களுக்கும் ஒரு நல்லுறவை ஏற்படுத்தி, தமிழ்நாடு காவல்துறை மீது மக்களுக்கு இப்போது மிகப்பெரிய நம்பிக்கை வந்திருக்கிறது. கூலிப்படையினர் எங்கோ ஓடி மறைந்தனர் – ஒழிந்தனர் என்ற அளவிற்கு மாநிலத்தை விட்டு விரட்டப்பட்டுள்ளார்கள். சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்பட்டு, எவ்வித பாரபட்சமின்றி காவல்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

எவ்வித அரசியல் குறுக்கீடுகளும் இல்லாமல் காவல்துறை சுதந்திரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு நிலைநாட்டப்பட்டுள்ளது. எத்தனை சக்திகள் முயன்றாலும் சாதி மத மோதல் இன்றி, சமூக நல்லிணக்கத் தோட்டமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டு இருக்கிறது. மத மோதல்களை ஏற்படுத்துவோர் யாராக இருந்தாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இனிமேலும் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்படும்.

மத துவேஷங்களுக்கு தமிழ் மண்ணில் இடமளிக்க முடியாது. அப்படி முயலுவோர் சட்டத்தின் தண்டனையை நிச்சயம் அனுபவிக்கக்கூடிய சூழலை இந்த அரசு நிச்சயம் உருவாக்கும். வலைத்தள யுகத்தின் ஆபத்துக்களை அறிந்து இந்த அரசு அவற்றைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுவும் தொடரும்.

நான் வெளியூர் பயணங்களுக்கு செல்லும்போது காவல் நிலையங்களிலும் தீயணைப்பு நிலையங்களிலும் திடீர் ஆய்வு நடத்துவதை வழக்கமாக வைத்திருக்கிறேன்.

அப்படி ஆய்வு நடத்தும்போது மக்களுக்கான சேவைகள் என்ன என்பது குறித்தும், காவலர்களுக்கான தேவைகள் குறித்தும் நான் கேட்டறிந்து அதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரை மக்களின் நலனைக் காவல்துறையினர் பாதுகாக்கிறார்கள். ஆகவே, காவலர்களின் நலனை இந்த அரசு பாதுகாக்கும் என்று இந்த மாமன்றத்தில் உறுதியோடு நான் பதிவுசெய்கிறேன். விரைவில் புதிய காவலர் ஆணையத்தின் பரிந்துரைகள் கிடைக்கும். அப்படி கிடைத்ததற்கு பிறகு, அதன் மூலம் காவல்துறையினருக்குப் பல நன்மைகளும் கிடைக்கும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நேற்றைய தினம் உள், மதுவிலக்கு, மற்றும் ஆயத்தீர்வைத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியங்களில் பங்கேற்று பேசியிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.சேலம் ராஜேந்திரன் மற்றும் திரு.வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் காவல்துறையின் நடவடிக்கைகளையும் அரசின் சாதனைகளையும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி சொல்கிறேன்.

அதைத் தொடர்ந்து பேசிய, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவர் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள் சி.சி.டி.வி. பராமரிப்பு குறித்து ஒன்றை சொன்னார். தனி நிதி உருவாக்கவேண்டும் என்றார்.

சென்னையில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி–க்களை பராமரிக்க ஏற்கனவே அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மாநிலத்தின் பிற பகுதியில் உள்ள சிசிடிவி–க்களைப் பராமரிக்கவும் வருங்காலங்களில் நிச்சயமாக போதுமான நிதி ஒதுக்கப்படும்.

அதேபோல், நம்முடைய மதிப்பிற்குரிய மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார். கடவுச் சீட்டுக்கு விண்ணப்பம் செய்பவர்கள் விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு வரவேண்டும் என்ற நிலையை மாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார். அதேபோல், கல்பாக்கம் அணு உலைக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்கள் மீது போடப்பட்டு இருக்கக்கூடிய வழக்கினை ரத்து செய்ய கோரிக்கை வைத்தார்.

தற்போது, கையடக்கக் கணினி மூலம் காவலர்கள் அவரது வீட்டிற்கே சென்று விபரங்களைப் பெறும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. சில சமயங்களில் வீட்டில் ஆட்கள் இல்லாதபோது அவர்களை காவல் நிலையத்தை தொடர்பு கொள்ளச் செய்யும் நிலை எற்படுகிறது. அதுதான் உண்மை. வரும் காலங்களில் கடவுச்சீட்டு விசாரணைக்காக காவல்நிலையத்திற்கு வர வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலை கட்டாயம் ஏற்படுத்தப்படும். கூடங்குளம் அணு உலைக்கு எதிராக போராடியவர்கள் மீது வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

அதுபோலவே கல்பாக்கம் அணு உலைக்கு எதிராக போராடியவர்கள் மீது போடப்பட்டு இருக்கக்கூடிய வழக்குகளை

திரும்பப் பெறக்கூடிய சூழ்நிலையை அரசு தலைமை வழக்கறிஞரிடம் ஆலோசனை பெற்று இக்கோரிக்கை நிச்சயமாக பரிசீலிக்கப்படும்.

அதேபோல் விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன் அவர்கள் கூடுதல் காவலர் நியமனங்களைப் பற்றி இங்கே பேசினார். விரைவில், 3 ஆயிரம் புதிய காவலர்கள் தேர்வு செய்யப்பட உள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். பரம்வீர் சிங் சைனி வழக்கை அவர் சுட்டிக்காட்டியது போல், அனைத்து காவல் நிலையங்களிலும் சிசிடிவி கேமிரா வைக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார், ‘‘கோயில் திருவிழாக்களில் கரகாட்ட நிகழ்ச்சிகள், கச்சேரிகள், சினிமா மெல்லிசைப் பாடல்களை பாடுவது போன்றவை முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளன’’ என்று குறிப்பிட்டார். இது தொடர்பாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஆபாச நடனங்களைத் தடுக்க உயர்நீதிமன்றம் சில வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்திருக்கிறது. அதைத்தான் அரசு கடைப்பிடித்து வருகிறதே தவிர கரகாட்ட நிகழ்ச்சிகள், கச்சேரிகள், சினிமா மெல்லிசை பாடல்களை பாடுவதற்கு காவல்துறை எந்த தடையும் விதிக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற கட்சித் தலைவர் ஜி.கே. மணி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார், ‘‘அரசுப் பணியில் பெண்களுக்கு 40 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருந்தாலும் இப்போது வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் பெண்களுக்கு குறைவான இடமே கொடுக்கப்பட்டுள்ளது’’ என்று சுட்டிக்காட்டினார். ‘‘காவல்துறை நியமனங்களுக்கான தேர்வுகளை பொறுத்தவரைக்கும் பெண்களுக்கான இடஒதுக்கீடு நிச்சயமாக

உறுதி செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து அவர் பேசுகிறபோது இன்னொன்றையும் சொன்னார், போதைப் பழக்கத்திற்கு இளைஞர்கள் அடிமையாவதை தடுக்கவும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க பரிந்துரைத்தார். அந்த அடிப்படையில், சமூகநலத்துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, தமிழ்நாடு காவல்துறையில் உள்ள போதைத் தடுப்புப்பிரிவு ஆகியவை இணைந்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ஓர் ஆய்வு நடத்தி பாதிக்கப்பட்ட இளைஞர்களின் மறுவாழ்விற்கும் மீண்டும் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதை தடுக்கவும், தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ள கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற கட்சியினுடைய தலைவர் கு.செல்வப்பெருந்தகை அவர்கள் காவலர் மனநல பயிற்சி குறித்து பேசினார்.

சென்ற நிதி நிலை அறிக்கையிலேயே காவல்துறையினரின் மன அழுத்தத்தை போக்க பத்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ‘‘அண்ணா நிருவாகப் பயிற்சி கல்லூரி’’ மூலம் பயிற்சிகள் நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிஞ்சான்குளத்தில் பிரச்சினைக்குரிய 25 சென்ட் நிலத்தைப் பொறுத்தமட்டில் அந்த வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

அரசு இப்பிரச்சினையை கவனமாக கையாண்டு வருகிறது. இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் முடிவெடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அ.தி.மு.க.வைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் பேசும்போது, பொள்ளாச்சியில் இருந்த பழங்கால காவலர் குடியிருப்பு இடிக்கப்பட்டுள்ளது குறித்து பேசினார். அது உண்மை தான். அதை கட்டித்தர வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார். அதே இடத்தில் **266** புதிய காவலர் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதை அவருக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து பேசினார். ஏறக்குறைய இரண்டு மணிநேரத்திற்கும் மேல் பேசியிருக்கிறார். பாலியல் குற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களை நேற்றைய தினம் இங்கே பட்டியலிட்டார். ஆனால் அவற்றில் எல்லாம் காவல்துறை உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. இதே மன்றத்தில் அது குறித்த விவரங்கள் ஏற்கெனவே கூறப்பட்டு இருக்கிறது.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குற்றச்சாட்டுகளை சொன்னாரே தவிர அதன் மீது உடனடியாக காவல்துறை எடுத்த நடவடிக்கையை சொல்லாமல் விட்டுவிட்டார். இந்த அரசைப் பொறுத்தவரை தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகிறது.

இன்னொன்றையும் அவர் குறிப்பிட்டார். காவல்துறை மீது அச்ச உணர்வு போய் விட்டது என்று ஒரு கருத்தை சொன்னார். அது கடந்த 10 ஆண்டுகளில் இருந்த நிலைமை. நிச்சயமாக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அந்த நிலை இல்லை. உண்மையைச் சொல்லப் போனால் காவல்துறை கம்பீரமாக மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் துறையாக மாறியிருக்கிறது. “ஆப்பரேஷன் கஞ்சா வேட்டை என்று தி.மு.க. ஆட்சியில்தான் டிஜிபி அறிவித்தார்” என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

என்ன செய்வது ! அப்படியொரு நிலைமையைத்தானே உங்களின் ஆட்சியில் விட்டுச் சென்றீர்கள்! அதைக் கட்டுப்படுத்தி ஒழித்து மாணவர்கள், இளைஞர்களைக் காப்பாற்றவே அந்த வேட்டை நடத்தப்பட்டு இருக்கிறது. இனியும் கூட நடத்தி அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் வளர்த்து விடப்பட்ட போதைப் பொருள் கலாச்சாரத்திற்கு நிச்சயமாக நாங்கள் முற்றுப்புள்ளி வைப்போம்.

அ.தி.மு.க. நிருவாகிகள், தொண்டர்கள் மீது உண்மைக்கு மாறான வழக்குகளும், அ.தி.மு.க. தகவல் தொழில்நுட்பப் பிரிவைச் சார்ந்த நிருவாகிகள் மீது தேவையில்லாமல் வழக்குகள் பதிவு செய்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருக்கிறார். அப்படி முடிவு செய்து நடவடிக்கை எடுத்திருந்தால் அ.தி.மு.க.வின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினர் செய்யும் அவதூறு, அநாகரீகப் பிரச்சாரங்களுக்கு தினமும் ஒரு வழக்குப் போட வேண்டியதிருக்கும்.

தி.மு.க.வின் தகவல் தொழில்நுட்ப பிரிவினரின் மீது போட்ட உண்மைக்கு மாறான வழக்குகள் போல் நிச்சயமாக இப்போது அ.தி.மு.க.வினர் மீது போடுவதில்லை. எனது ஆட்சியில் முழுக்க முழுக்க கருத்து சுதந்திரம் அளிக்கப்பட்டாலும் அது அநாகரீக எல்லையைத் தாண்டும்போது சில உண்மையான வழக்குகள்தான் போடப்பட்டுள்ளதே தவிர உண்மைக்கு மாறான வழக்குகள் ஒன்று கூட இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சமுதாயத்தின் நலனே முக்கியம் எனக் கருதி, தங்களது குடும்பங்களைப் பிரிந்து, இரவு பகல் பாராமல், கண்துஞ்சாமல் பணியாற்றும் காவல் துறையினரின் அர்ப்பணிப்பு உணர்வு என்பது உள்ளபடியே பாராட்டுக்குரியது. அனைவருக்குமான ‘திராவிட மாடல்’ வளர்ச்சியின் அடித்தளமாகச் சமூக நல்லிணக்கம், சமூகநீதி, சமநீதி, சட்டநீதி ஆகியவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றைக் காக்க காவல்துறை துணைபுரிய வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை மாநிலத்தின் அமைதியே முக்கியம். அமைதிமிகு தமிழகம்தான், வளமிகு தமிழகமாக மாற முடியும். எனது கட்டுப்பாட்டில் வரும் காவல்துறையில் பொறுப்போடு பணியாற்றும் தமிழக உள்துறைச் செயலாளர், காவல் தலைமை இயக்குநர், சட்டம் ஒழுங்கு ஏடிஜிபி – நுண்ணறிவு ஏடிஜிபி, காவல் துறை டிஜிபிக்கள் – ஏடிஜிபிக்கள், சென்னை மாநகர ஆணையர் உள்ளிட்ட காவல் ஆணையர்கள், மாவட்ட எஸ்.பிக்கள்– உள்ளிட்ட அனைத்து காவலர்களது முழு அர்ப்பணிப்பு உணர்வுதான் உள்துறையின் சீரான செயல்பாட்டுக்குக் காரணம். எனவே அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வருங்காலங்களில் இன்னும் சிறப்பாகச் செயல்பட வேண்டும், அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும், நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். உங்களது ஒவ்வொரு நொடியிலும் மக்களின் நல்வாழ்வு கலந்துள்ளது என்ற எண்ணத்தோடு நீங்கள் அனைவரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஏப்ரல் 6ஆம் நாள் அன்று தமிழ்நாடு சட்டமன்றம் கூடியது. இன்றுடன் இந்தக் கூட்டத் தொடர் முடிவடைய போகிறது. இந்த 22 அலுவல் நாட்களுக்கும் அவை நடவடிக்கைகள் குறித்து ஒரு வரியில் சொல்வதாக இருந்தால் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்பதை மனப்பூர்வமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஜனநாயகத்தின் அரங்கேற்ற மேடைதான் சட்டமன்றங்கள். நாம் ஜனநாயகத்தையும், மக்களாட்சியையும் எப்படி மதிக்கிறோம் என்பதன் விரிவடைந்த காட்சிகள்தான் இந்த அவையினுடைய நடவடிக்கைகள். அந்த வகையில் தமிழ்நாடு சட்டமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடரானது ஜனநாயக நெறிமுறைகளின் படியும், மக்களாட்சியின் மாண்பைக் காக்கும் வகையிலும் நடைபெற்றுள்ளது.

சொல்லாடலில் சூடும் சுவையும் இருக்கலாம். அதேநேரத்தில் நாகரிகமும் பண்பாடும் எப்போதும் நழுவிவிடக் கூடாது. அதை மறந்துவிடவும் கூடாது. அதை துறந்துவிடவும் கூடாது" என்றார் முத்தமிழறிஞர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அத்தகைய சொல்லாடல் அரங்கமாகத்தான் இந்த அரங்கம் இருந்தது. நாகரிகம் நடமாடியது. பண்பாடு தவழ்ந்தது. மோதிக் கொண்டோம் – சொற்களால்! வாதிட்டுக் கொண்டோம் – வார்த்தைகளால்!

இத்தகைய பண்பாட்டை எந்நாளும் நாம் காக்க வேண்டும் என்று இரண்டு பக்கம் இருப்பவர்களும் உறுதி எடுத்துக் கொள்வோம். இந்தளவுக்கு அவையானது ஆக்கப்பூர்வமாக நடைபெறக் காரணமாக அமைந்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் மனதார, உளமாரப் பாராட்டுகிறேன்! அவர் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியவர். இன்றைய தினம், பேரவைத் தலைவராக மட்டுமல்ல, நமக்கெல்லாம் தலைமை ஆசிரியரைப் போல அவர் நடந்து கொண்டார்.

உருவத்தால் மட்டுமல்லாமல் உள்ளத்தாலும் உயர்ந்தவர் நமது பேரவைத் தலைவர் அவர்கள்! எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல ஆளும்கட்சி உறுப்பினர்களையும் அவர் வார்த்தைகளால் வழிநடத்தினார். அவருக்கு துணையாக நம்முடைய பேரவையினுடைய துணை சபாநாயகர் அவர்களும், அவர்களுக்கு துணையாக இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய சட்டப்பேரவைச் செயலாளர், அதேபோல சட்டப்பேரவையினுடைய அலுவலர்கள், அத்தனைபேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஆளும்கட்சி உறுப்பினர்களைவிட எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அதிகமாகப் பேசுவதற்கு வாய்ப்புத் தரப்பட்டதாகவே நான் கருதுகிறேன்.

அது உள்ளபடியே எனக்கு மனநிம்மதியை தருகிறது. இத்தகைய பரஸ்பர புரிதலோடு நாட்டு மக்களுக்கு நாம் நன்மையைச் செய்ய வேண்டும்.

அந்த வகையில் அரசுக்கு ஆக்கப்பூர்வமான பல்வேறு ஆலோசனைகளை வழங்கியிருக்கக்கூடிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கும் மனதார என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆளுங்கட்சியினுடைய கொறடா, எதிர்க்கட்சியினுடைய கொறடா, அதேபோல் நம்முடைய அவை முன்னவர் அத்தனைபேருக்கும் நான் நன்றி சொல்கிறேன். பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்றக் கட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நான் மனதார நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் அரசாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது. தேர்தலுக்கு முன்பு இருந்ததை விட, மக்கள் ஆதரவை அதிகம் பெற்ற அரசாக வளர்ந்தும் வருகிறது. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பது தேர்தல் களத்தில்தான். சட்டமன்றத்துக்குள் மக்களுக்கான நன்மையைப் பற்றி நாம் சிந்திக்கும்போது நாம் அனைவரும் ஒரே கட்சிதான். அதுதான் மக்கள் கட்சி.

மக்களைக் காக்க, மக்களாட்சி மாண்பைக் காக்க மக்கள் இட்ட கட்டளையை மனதில் ஏந்தி எந்நாளும் உழைப்போம் என்பதைச் சொல்லி; அனைவர்க்கும் இதயமார்ந்த வாழ்த்துக்களைச் சொல்லி விடைபெறுவதற்கு முன்னால் மொத்தமுள்ள 78 அறிவிப்புகளில், அதில் சில அறிவிப்புகளை நான் தலைப்புச் செய்தியாக இங்கே அறிவிக்கிறேன்.

- பொதுமக்களிடையே போதைப் பொருட்கள் உபயோகம் மற்றும் புழக்கத்தைத் தடுக்கும் வகையில், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவுடன்

இணைக்கப்பட்டு “போதைப் பொருள் தடுப்பு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவாக” மறுசீரமைக்கப்படும்.

- வெளிமாநில குற்றவாளிகள் மற்றும் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுவோரை கட்டுக்குள் கொண்டுவர ஒருங்கிணைந்த சுங்கச்சாவடி கண்காணிப்பு மையம் **9** கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.
- மாநகரங்களில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் நடமாடும் ஆளில்லா விமான அலகு (Drone) காவல் படைப்பிரிவு விரிவுபடுத்தப்படும்.
- சென்னை பெருநகரக் காவலில் **3** வழித்தடங்களில் போக்குவரத்து ஒழுங்குமுறைக் கண்காணிப்பு மண்டலம் (Traffic Regulation Observed Zone) அமைக்கப்படும்.
- சென்னை அசோக் நகரில் செயல்பட்டு வரும் காவலர் பயிற்சிக் கல்லூரி (PTC) வண்டலூர் அருகே உள்ள உயர் காவல் பயிற்சியக வளாகத்திற்கு (Tamil Nadu Police Academy) மாற்றப்படும்.
- காவல்துறையில் உள்ள தொழில்நுட்ப பிரிவில் பணியாற்றும் அனைத்து ஆளிநர்களுக்கும் இடர்ப்படி தொகை உயர்த்தி வழங்கப்படும்.
- நுண்ணறிவுப் பிரிவில் மற்ற பிரிவினருக்கு வழங்கப்படுவதைப்போல திட்டமிட்ட குற்ற நுண்ணறிவுப் பிரிவு (OCIU) ஆளிநர்களுக்கும் **5** விழுக்காடு சிறப்பு ஊதியம் அளிக்கப்படும்.
- காவல் ஆளிநர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை **30** இலட்சம் ரூபாயிலிருந்து **60** இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

- சென்னை பெருநகர காவல்துறையில் பணிபுரியும் பெண் ஆய்வாளர்கள், பெண் சார்பு ஆய்வாளர்கள் மற்றும் பெண் காவலர்களுக்கான பணி – வாழ்க்கை சமநிலை குறித்த பயிற்சி "ஆனந்தம்" என்கிற திட்டத்தின் மூலமாக வழங்கப்படும்.

- தீயணைப்புத் துறை மற்றும் சிறைத்துறை பணியாளர்களுக்கு காவல்துறை மருத்துவமனைகளில் மருத்துவம் பார்க்கும் வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

- சமூக ஊடகங்களைக் கண்காணிக்க மாநில காவல் தலைமையகத்தில், சமூக ஊடக மையம் (Social Media Centre) அமைக்கப்படும்.

- தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை பணிகளை செவ்வனே மேற்கொள்ள மாநிலத்திலுள்ள 11 காவல் சரகங்களிலும் தலா ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவி ஏற்படுத்தப்படும்.

- மாநில கணினிசார் குற்றப்புலனாய்வு பிரிவிற்கு காவலர் பயிற்சிக் கல்லூரி வளாகத்தில் கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு தலைமையிடக் கட்டடம் கட்டப்படும்.

- திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் பாதுகாப்புப் பணிக்கு வரும் காவலர்கள் தங்குவதற்கு 12 கோடி ரூபாய் செலவில் பாளையம் (Barracks) கட்டப்படும்.

- கடலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் 203 புதிய காவலர் குடியிருப்புகள் கட்டப்படும்.

- 4,631 காவலர் குடியிருப்புகளில் ஏற்பட்ட பழுதுபார்ப்புப் பணிகளுக்காக 20 கோடி ரூபாய் சிறப்பு நிதி நடப்பாண்டில் வழங்கப்படும்.

- தொழில்நுட்ப நுண்ணறிவுப் பிரிவில் தரவுகளை சேமித்து வைக்கவும், விரிவாக்கம் செய்யவும் பயன்படும் வன்பொருள் வாங்கப்படும்.
- சென்னைத் தலைமை ஆய்வகத்தில் ஆய்வுத் திறனை வலுப்படுத்த LC-MS எனும் அதிநவீன ஆய்வுக் கருவி வாங்கப்படும்.
- காவல்துறைப் பணியாளர்களுக்கு இடர்ப்படி உயர்த்தி வழங்கப்பட்டதைப் போன்று தீயணைப்பு பணியாளர்களுக்கும் இடர்ப்படி உயர்த்தி வழங்கப்படும்.
- தீயணைப்புப் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மிகைப்பணி ஊதியம் உயர்த்தி வழங்கப்படும்.
- விழுப்புரம் மாவட்டம் – அன்னியூர், மதுரை மாவட்டம் – திருப்பரங்குன்றம், விருதுநகர் மாவட்டம் – ஏழாயிரம்பண்ணை, சென்னை புறநகர் மாவட்டம் கொளத்தூர், செங்கல்பட்டு மாவட்டம் காலவாக்கம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் – கண்ணமங்கலம் ஆகிய 6 இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் 11 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.
- 37 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 50 புதிய நீர்தாங்கி வண்டிகள்.
- தீ மற்றும் உயிர் மீட்புப் பணிகளில் புதிய தொழில்நுட்ப நுணுக்கங்களை செயல்படுத்தத் தேவையான திட்டங்களையும், புதிய பயிற்சி முறைகளையும் பரிந்துரைக்கும் நோக்கத்துடன் ‘தீ ஆணையம்’ (Fire Commission) ஒன்று புதிதாக அமைக்கப்படும்.

மீதமுள்ள அறிவிப்புகளை நான் இந்த அவையில் படித்ததாகப் பதிவு செய்து அதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கூறிய அறிவிப்புகள் அடங்கியுள்ள "அறிவிப்பு புத்தகம்" அச்சிடப்பட்ட பிறகு எனது அலுவலகத்தில் சந்தித்த சில காவலர்கள், காவல்துறை அதிகாரிகள் சில கோரிக்கைகளை என்னிடத்தில் எடுத்து வைத்தார்கள். அதை மனதில் வைத்து, அதிகாரிகளோடு நான் கலந்து பேசி, – இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள அறிவிப்பு புத்தகத்தில் உள்ளவற்றையும் தாண்டி மூன்று புதிய அறிவிப்புகளை இப்போது நான் வெளியிட விரும்புகிறேன்.

- இரவுப் பணிக்குச் செல்லும் பணியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக – இரவு ரோந்துப் பணிக்கு செல்லும் அனைத்து காவல் ஆளிநர்கள் மற்றும் காவல் ஆய்வாளர் வரையிலான அதிகாரிகளுக்கு சிறப்புப் படியாக மாதம் 300 ரூபாய் வழங்கப்படும்.

- ஏற்கெனவே காவல் ஆளிநர்களுக்கு வார விடுமுறை அளிக்கும் நடைமுறை பின்பற்றப்படுவதை தொடர்ந்து தற்போது 15 நாட்களுக்கு ஒரு முறை உதவி ஆய்வாளர்கள் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்கு ஒரு நாள் விடுப்பு (OFF) வழங்கப்படும். இதனால் 10 ஆயிரத்து 508 பேர் பயனடைவார்கள்.

- இணையவழி சூதாட்டத்தில் ஈடுபட்டுப் பலரும் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வதற்கான காரணங்களை அறியும் பொருட்டு மாநில குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் கண்காணிப்பாளர் (எஸ்.பி) தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்று அமைக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ள, கோரிக்கை எண். 22 காவல் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான வெட்டுத் தீர்மானங்களையும், கோரிக்கை எண். 23 மீது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் குறித்து வெட்டுத் தீர்மானங்களையும் நான் படித்துப் பார்த்தேன். அவை விதிகளுக்குட்பட்டு இருக்கும்பட்சத்தில்

நிச்சயமாக, உறுதியாக நிதிநிலைமைக்கு ஏற்ப படிப்படியாக நிறைவேற்ற அரசு உறுதியாகப் பரிசீலிக்கும்.

எனவே, நான் ஏற்கனவே கூறியது போல மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறைகளின் தேவைகளை, கோரிக்கைகளை இந்த அரசு உறுதியாக உரிய முறையில் நிறைவேற்றித் தரும். அவற்றுக்குப் போதிய விளக்கங்களை என்னுடைய பதிலுரையிலும் அளித்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் என்னுடைய அந்த விளக்கத்தை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்!

---

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காவல் துறை*
*மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து*
*ஆற்றிய உரை – **10.05.2022***

"மக்களிடம் செல்; மக்களோடு வாழ் என்று எங்களை
ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள்
சொன்னதைத் தாரக மந்திரமாக நாங்கள் எங்கள் உள்ளத்தில்
ஏற்றுக் கொண்டு அந்தப் பணியைத் தொடர்ந்து
நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

வெளியீடு:
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை